கடவுள் துணை.

# பிராமதருமம்.

இஃது
வேதமுதலியகிரந்தங்களிலுள்ளமுக்கியவாக்கியங்களடங்கியதாய்;
சிறந்த பிரமவாதியும் ஆதிபிராமஸமாஜ பிரதான
ஆசாரியருமாகவெழுந்தருளியிருக்கும்

## தேவேந்திரநாத டாகரவர்கள்

வங்கபாஷையி லியற்றி அச்சிட்ட பிரதியை யநுசரித்து
ஆதிபிராமஸாமாஜிகர்களில் ஒருவராகிய தெலுங்கரும்
சென்னை வேதஸமாஜ கவுரவகாரியதரிசியுமான

## செ. ஸ்ரீதரநாயுடு அவர்களால்

பலபாகவதர்களுடைய வேண்டுதல்பற்றி
இயற்றிப்பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.
தத்துவபோதினி அச்சுக்கூடம்:
பிராமாப்தம் - ௪0.
சுக்கில௵.

கர்பிரைட்.
1870

137 / 170
225489

# மூலவாக்கிய அட்டவணை.

## கண்டம் - க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அணோரணீ... | கூக. | ஏஷதேவோ.. | ருக. | நாஸ்த்யக்ருத. | ரு௦. |
| அத்ருஷ்ட........ | எஎ. | ஏஷஸர்வேஶ்வர | ருஎ. | நாஸ்த்யக்ரா..... | சகூ. |
| அத்ரேஶ்யா... | ககங. | ஏஷஸர்வேஷு | கூஎ. | நஸந்த்ருஶோ... | க௦கூ. |
| அநந்தாநாம... | கஙகூ. | ஏஷாஸ்ய.... | கூ. | நாயமாத்மா... | கூஅ. |
| அநேஜதே..... | ஙகூ. | ஓம்ப்ரஹ்ம..... | க. | நாவிரதோ... | கஙடு. |
| அபாணிபாதோ... | கரு. | ஓமிதிப்ரஹ்ம... | கூ௦. | நாஹம்மந்யே... | ஙஉ. |
| அபாணி...... | கூஎ. | ஓமித்யே....... | கூக. | நித்யா........ | எக. |
| அபஹதபாப்மா.... | கூகூ. | ஸோஹ்யவா.. | கூ. | நேதம்....... | கஙஅ. |
| அவிஜ்ஞா...... | ருஅ. | தம்வேத்யம்.... | கூச. | நேதஶ்ஶ.... | க௦ரு. |
| ஆகாஶோ.... | கஉஎ. | தஸ்மாத்வா. | கூஉ. | நேஹநாநா. | கஉஅ. |
| ஆத்மாநமே.... | அ௦. | தத்ஸ்ருஷ்ட்வா.... | அஎ. | பராஸ்யஶக்தி. | எகூ. |
| ஆத்மாவா....... | அக. | ததைக்ஷத...... | அகூ. | பாராயண..... | க௦அ. |
| ஆநந்தாத்த்யே... | ங. | தத்யதா..... | கங. | ப்ரணவோ... | கூச. |
| இதம்வா...... | க௦. | தத்ராவ்ருத... | உச. | ப்ராணஸ்ய... | ருங. |
| இஹசேத...... | ஙச. | தந்நிர்ஜாதா... | கச. | ப்ராணோ.... | சரு. |
| இஹைவ..... | அரு. | ததேஜதி.... | ஙஎ. | ப்ருஹத்வா...... | சகூ. |
| உமாம்ராவா.... | ஙரு. | தமேதம்வே | எஅ. | பயாதஸ்யா... | கங. |
| உத்திஷ்டத...... | கூக. | தமேதம்ப்ர. | க௦௦. | பீஷாஸ்மா.... | உரு. |
| ருதம்......... | கககூ. | தத்ஸர்வம்.. | ருஉ. | மஹாநுப... | ககூ. |
| ஏகமேவா.. | ருச. | தபஸா...... | க௩௦. | மாத்ருதே...... | கசச. |
| ஏகோதே... | க௦ங. | தமீஶ்வராணாம். | ச௦. | மாஹம்ப்ரஹ்ம.. | கூங. |
| ஏகோவஶீ... | எ௦. | தம்வேத்யம்... | கஅ. | யச்சக்ஷு....... | கஉகூ. |
| ஏதஜ்ஜ்ஞே...... | க௫௦. | தஸ்யஹவா... | கஉஅ. | யஸ்மாத்.... | கஉ௦. |
| ஏதத்வை... | கூஎ. | த்ருஷந்தம்... | கூங. | யஸ்யாக்ஷம்... | கூஅ. |
| ஏதஸ்யாக்ஷ்யா. | ககூ. | த்வாஸப்ர... | எங. | யத்ஸத்த்வே... | ககூ. |
| ஏதஸ்யாநி... | உ௦. | திவ்யோஹ்யா... | கககூ. | யதோவா.... | உ. |
| ஏத*ப்ர... | உக. | யஜ்ஞர.... | கசஉ. | யதோ*க்ஷர.. | அ. |
| ஏதஸ்ய*வா | கஅ. | தமக்ஷரம்... | சஎ. | யதோ*க... | ச. |
| ஏதத்ஸா...... | கஉ. | நஜாயதே... | ருகூ. | யயாகாமீ.... | கஙஉ. |
| ஏமேதம்... | கசஎ. | நதத்ர.... | உஅ. | யயாமௌநீ. | க௦உ. |
| ஏஷஹ்யேவ... | கருச. | நதஸ்ய... | சச. | யதவிஶ்வ...... | கூ௦. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யதாதா.... | உக. | யொவா*சுஸா. | உங. | ஸத்யஂவத... | கசக. |
| யதாவஶ்யஂ... | எரு. | யொவா*சுஷி. | உஉ. | ஸத்யாந..... | கச0. |
| யதாஸவெ... | எஉ. | ரவொமவெ... | ரு. | ஸவாத்மா... | ஙக. |
| யதாமெஹ்ய... | எ. | விஜ்ஞாநஸா... | கஙரு. | ஸமவ்ர்யா..... | கருக. |
| யதிதம்........ | உகூ. | விஜ்ஞாநாதா... | கருஉ. | ஸஹமவஃ..... | ககஅ. |
| யதிமந்யஸெ... | ஙக. | விமுக்தமுக்த. | கூச. | ஸமாநெ..... | எச. |
| யதெதத்... | கஉகூ. | வ்யக்ஷ்ஹ்வ... | க0க. | ஸமெபாம..... | கூஉ. |
| யந்நஸா..... | ங0. | வெதாஹ..... | கசகூ. | ஸமொதமெ... | கஙகூ. |
| யஶாயமெஷி. | கருங. | ஶ்யுயா..... | கசங. | ஸயொந்ய... | எகூ. |
| யஃஸவ..... | சஉ. | ஶ்ரவணாயா... | க0எ. | ஸவத்வா.. | கூரு. |
| யஸாதவர்ஷ. | ருரு. | ஶாஜொதா... | கஙஎ. | ஸவஸ்யவஶீ. | ருகூ. |
| யஸ்யாமதம்... | ஙங. | ஶ்ரணதே... | கசஅ. | ஸவரதிஶ... | க0ச. |
| யஸ்மி*ஹவதி. | கஙச. | ஶ்ரொயஶ்வ..... | கஙக. | ஸவரநந... | கூகூ. |
| யஸ்மி*ஹவத்ய | கஙங. | ஶ்ரொத்ரஸ்ய. | உஎ. | ஸவெஂத்ரிய. | அஅ. |
| யஸ்மிவஸவ... | ஙஅ. | ஸவாவாய.... | ககசு. | ஸவாசுய..... | அஉ. |
| யாந்நவஷ்யா | கசரு. | ஸஷநெதி. | ககச. | ஸவிஶ்வா... | கஉஉ. |
| யாத்யஸா.... | கசகூ. | ஸஷஸவ. | ககரு. | ஸவ்ர்ஜ்ஞ..... | கஉக. |
| யாமெஜவா... | அச. | ஸதநயொ... | கஉங. | ஸமெதாந... | கஉரு. |
| யெநாஹம்.... | க0கூ. | ஸதவொ.... | கக. | ஹிரணயெ... | சங. |
| யொமெவா... | கருஉ. | ஸத்யஂஜ்ஞாந... | சக. | | |
| யொமெவொ. | கூரு. | ஸத்யமெவ.... | கக0. | | |


## கண்டம் - உ.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| அஜ்ஞாதவதி... | உங. | அந்யாயாஸ.. | கூகூ. | ஏகஃப்ரஜா... | கஉஉ. |
| அதிவாதா... | அ. | அநெந்யாந்ய.... | ரு0. | ஏகொயமெ... | ககச. |
| அதந்தாநா..... | ககஎ. | அாத்மதா.... | கஅ. | ஏகொஹமெ.... | ருஅ. |
| அஹிம்ஸ்தந்த்ர.. | ருக. | அவிஸவாத... | கூச. | ஔஷ்தயம்...... | எச. |
| அயமெதம்... | அஎ. | அஸெஜாஷ... | ச0. | கந்யாமெ... | உக. |
| அந்நஃமவ. | எங. | இந்த்ரியாணாம் | கூகூ. | க்ஷாமாவஶீ.... | அஅ. |
| அநமஶிமெ.... | அஉ. | இந்த்ரி*ஜ... | கூகூ. | காதஃக்ர்த... | கூரு. |
| அநஸுயா... | அரு. | இந்த்ரி*ஹி... | கூஎ. | காமஃ...... | கூ0. |
| அந்யாநுவதி... | கூக. | ஏகஸவ...... | க0கூ. | க்ருஷாவா... | ககக. |





| | | | | | |
|---|---|---|---|---|---|
| கெஶ்ரயஃ...... | எஅ. | ப்ரஜ்ஞயா..... | எகூ. | யஸ்யவ...... | ஙஉ. |
| ம்ரணம்... | ரு. | ப்ரஜ்ஞாத... | க0எ. | யஸ்யவிதாநு.. | ருஎ. |
| த்ருஹஸஃ....... | உ0. | பதிவ்ரிய... | கரு. | யஸ்யாதா..... | க0கூ. |
| மாயெவா.... | கங. | பாதத்வெ... | ககரு. | யஸ்மிந். ...... | கூஉ. |
| தயாதித்யம்... | கக. | ப்ராஜ்ஞாய... | க0ரு. | யாதஷ்ய...... | உஉ. |
| தவாசஷா... | ககஉ. | ப்ராப்யா... | ஙகூ. | யாமெவவ..... | ங0. |
| தஸாத்ரம்... | கஉச. | பாத்ரஸ்ய.... | கூஎ. | யெபாபா... | க0ச. |
| திஷ்டம்மெ... | ககஅ. | பாபதந்த... | க0ங. | யொந்யயா... | ருஉ. |
| தாஜஃ........ | எக. | பாபம்ஷ... | ககக. | வமெக்ஷ்ரமெ... | க0க. |
| தாநாநத... | கூஅ. | பார்ஷ்ய... | ககசூ. | விபதிஷ்ட..... | கூஉ. |
| தெயமாத..... | எஉ | ப்ரியெநா..... | சச. | விநஃ........ | சகூ. |
| யமவத்...... | க0அ. | ப்ரியொஹ.... | ருச. | ஶ்ருஃ.......... | எரு. |
| யமகாயம்... | கூரு. | உதவமம்..... | ஙஎ. | ஶ்ருத்யாநதா... | எக. |
| யமதித்யஃ.... | ஙங. | பாவராம.... | ஙரு. | ஶ்ராவயெ...... | ச. |
| யமஂமமெநஃ. | கஉ0. | பஹமெவா...... | கூங. | ஸத்யஂத்ரத... | சஎ. |
| யுக்திஃஷ்டமா... | அங. | ப்ரஹ்மதி....... | உ. | ஸத்யமெவ.... | சஅ. |
| யமாரமெர்ள... | ஙச. | ஹ்ராதாமெஜ்ய.. | எ. | ஸதாஂமத..... | கூங. |
| நகந்யாயா... | உச. | ஹ்ராதாமெஜ. | ககூ. | ஸஜ்ஞாவாஸ... | சரு. |
| நமெநவிஸ... | கச. | மாதாம...... | ங. | ஸஜ்ஞமெமா... | கஉ. |
| நஜாதகா... | கூஅ. | மாத்ருவஸ...... | கூ0. | ஸமெஜாஷம்... | ஙகூ. |
| நதமெயதா... | க00. | ஜாநஂஹி....... | எஎ. | ஸமக்ஷதஶ... | ருரு. |
| நமெதநவ்ர..... | உரு. | மித்ரத்ராக... | அக. | ஸம்விஹக்ர... | கூகூ. |
| நயமெவஷீ..... | கக0. | த்ரஷபமிம... | கஉங. | ஸவஂவா.... | உஅ. |
| நதித்யம்..... | சஉ. | மொஹஜாம... | கூக. | ஸவராவயவ.. | கூ. |
| நவிஂஹதி... | ரு0. | மெநாநந..... | உகூ. | ஸவெதமெ... | அகூ. |
| நாநாநமெவ... | உஎ. | யம0ஷதி.... | அ0. | ஸ்த்ரீஹிஹ. | ககூ. |
| நாமிநமெத. | ஙஅ. | யஜ்ஞமெ....... | கூச. | ஸீயம்யமஃ.... | சகூ. |
| நாமெதஹி.. | கஉக. | யஜ்ஞஸ்யாண... | ருகூ. | ஸ்வவதமம்.... | சக. |
| நாஸிஸத்ய... | ருங. | யதாமுதம். | ருகூ. | ஸ்வமவா.... | சங. |
| ந்யாயெயா..... | எ0. | யமெதவா...... | அகூ. | ஸ்வர்க்கஃ...... | ஙக. |
| நிஷெவமெ... | ககங. | யதாநக..... | க0உ. | ஸ்வகெஷ...... | கஎ. |
| மொரதிஶ்ய... | உகூ. | யம்மதா...... | கூ. | ஹ்ரீமாநு...... | அச. |

ஓம் தத்ஸத்.

---

# பிராம்மதருமம்.

## கண்டம் - க.

### அத்தியாயம் - க.

க

க. ஓம் ப்ரஹ்மவாதிநோ வதந்தி.

(பதப்பிரிவு.) ஓம், ப்ரஹ்மவாதிநஃ, வதந்தி.

(பதவுரை.) ஓம்=ஓம், ப்ரஹ்மவாதிநஃ=பிரமவாதிகள், வதந்தி=உரைக்கின்றனர்.

(பொழிப்புரை.) பிரமவாதிகளுரைக்கின்றனர்.

(விசேஷஉரை.) பிரமஞானமென்னும் மேன்மையாகிய தீ அனைவருடைய உள்ளங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றது. எல்லோருடைய கருத்திலும் பிரமத்தின் அளவற்ற அருளுடைமை அழிவற்ற எழுத்துகளால் எழுதப்பட்டிருக்கின்றது. உலகப்படைப்பாகிய காரியத்தின் ஆலோசனையினால் அந்தத்தீயை எழச்செய்தாற்றான் அளவற்றஅருளையே திருமேனியாகஉடைய வள்ளலினது தரிசனம்கிடைக்கும். அவர் தனது மிகத்தூய்மையான அருள்வடிவத்தை மனிதனுக்குப்புறம்பாகிய படைப்பிலும் மனிதனது மானஸபடத்திலும் பதித்துவைத்திருக்கின்றார். நற்புத்தியுடையவர்களும் பாப

யில்லாச்செயலுடையவர்களுமாகி எந்தமஹாத்துமாக்கள் அவனையறியவல்லவராகின்றனரோ அந்தப்பாக்கியவான்களனைவருமே பிரமஞானிகள். யார் இவ்விதமாக உணர்ந்து பிறருக்குபதேசிக்கின்றனரோ அவர்கள் பிரமவாதிகள். பிரமஞானிகளும் பிரமவாதிகளும் ஆகிறவர்கள், இன்னதேசத்திலாவது, இன்னகாலத்திலாவது, இன்னஜாதியிலாவது பிறந்தவர்களாயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லை. எந்தநாட்டுப் பிரமவாதிகளுக்கும் பிரமவிஷயமான உபதேசந்தருவதற்கு அதிகாரமுண்டு. பாரதவருஷத்தின் (ஹிந்துதேசத்தின்) முற்காலத்திய பிரமவாதிகளாகிய இரிஷிகள் பிரமவிஷயமாய் எந்த உண்மையான தத்வங்களையும் ஆத்மபிரத்யயஸித்தமான ஸத்தியங்களையும் உபதேசித்துச் சென்றனரோ அவைகளனைத்துமே இந்தப்பிராம்மதருமத்தின் முதற்கண்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையினுற்றான் துவக்கத்தில் "பிரமவாதிகளுரைக்கின்றனர்" என்றிருக்கிறது.

௨

யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந
ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்
விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம. ... ... (௨.)

(ப-பி.) யத꞉, வை, இமாநி, பூதாநி, ஜாயந்தே, யேந, ஜாதாநி, ஜீவந்தி, யத், ப்ரயந்தி, அபிஸம்விசந்தி.

(ப-உ.) யத꞉=எதனிடத்திருந்து, இமாநி=இந்த, பூதாநி=பொருள்கள், ஜாயந்தே=உண்டாகின்றனவோ, யேந=எதனால், ஜாதாநி=உண்டானவை, ஜீவந்தி=நிலைபெற்றிருக்கின்றனவோ, (முடிவில்) யத்=எதை, ப்ரயந்தி=நோக்கிச்சென்று, அபிஸம்விசந்தி=அடைகின்றனவோ, தத்=அதை, விஜிஜ்ஞாஸஸ்வ=விசேஷமாக அறியவிரும்புங்கள், தத்=அது, ப்ரஹ்ம=பிரமம்.

(பொ-உ.) எதனிடத்திலிருந்து (சிதசிதாத்மகமாகிய) பொருள்கள் உண்டாகின்றனவோ, உண்டானவை எதனால் நிலைபெற்றிருக்கின்றனவோ, (முடிவில்) எதை நோக்கிச் சென்று அடைகின்றனவோ அதை விசேஷமாயறியவிரும்புங்கள். அது பிரமம்.



(வி-உ.) நிலையியற்பொருளாகவும் இயங்கியற்பொருளாகவுமிருக்கிற இவ்வஸ்துக்களெல்லாம் யாரால் படைக்கப்பட்டனவோ, யாருடைய ஆதரவாலிருக்கின்றனவோ, யார்கருதின் அவற்றின் ஒரு அம்சமும் இராதோ; அவரே பிரமம், அவரே ஸத்தியஸ்வரூபி, அவரே நமதுபிரபு, எல்லாம்வல்ல அந்தப்பரமேச்வரர் ஸத்தியகாமர், ஸத்தியஸங்கல்பர்; அவர் எதைக்கருதுகிறாரோ அது ஆகின்றது. எந்தப்பூர்ணபுருஷனுடையசக்தியிலிருந்து இந்தஸகலவஸ்துக்களும் உண்டாகி அதனதன் சக்தியைப் பெறுகின்றனவோ அவர் அவற்றை அழிக்கவேண்டுமெனக்கருதின் அவை அதனின்சக்தியுடன் அந்த எல்லாம்வல்லவஸ்துவின்சக்தியில் லயமாகி அவரிடத்திலேயே மறுபடியும் சென்றுவிடலாம். அப்போதவற்றின்குறியும் எங்கும் தென்படாது. படைத்துக்காத்தழிக்க வல்லவர் கேவலம் கடவுளொருவரே. நமக்குச்சிலவஸ்துக்கள்கிடைக்கின் நாம் அவற்றின் குணங்களையறிந்து அவற்றிற்கியன்றவாறு ஒன்றுடனொன்றைச்சேர்த்து ஓர் அபூர்வமான யந்திரத்தைச் செய்யவல்லோம் உண்மையே; ஆனால் ஒரு மணலணுவையும் படைக்கவாவது அழிக்கவாவது வல்லவரல்லம். படைத்தளித்தழிக்கும் வல்லமை, தனக்கு ஒப்புயர்வுள்ள இரண்டாவதுவஸ்துவற்ற கடவுளொருவரிடத்திலேயே யுள்ளது.

௩

ஆநந்தாத்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே
ஆநந்தேந ஜாதாநி ஜீவந்தி ஆநந்தம் ப்ரயந்த்ய
பிஸம்விசந்தி. ... ... (௩.)

(ப-பி.) ஆநந்தாத், ஹி, ஏவ, கலு, இமாநி, பூதாநி, ஜாயந்தே, ஆநந்தேந, ஜாதாநி, ஜீவந்தி, ஆநந்தம், ப்ரயந்தி, அபிஸம்விசந்தி.

(ப-உ.) கலு=நிச்சயமாய், ஆநந்தாதேவ=ஆநந்தரூபனிடத்திலிருந்தே, இமாநி பூதாநி=இப்பொருள்கள், ஜாயந்தே=பிறக்கின்றன, ஜாதாநி=பிறந்தவை, ஜீவந்தி=நிலைபெற்றிருக்கின்றன, ஆநந்தம்=ஆந்தரூபனை, ப்ரயந்தி=நோக்கிச்சென்று, அபிஸம்விசந்தி=அடைகின்றன.

(பொ - உ.) நிச்சயமாய் இவ்வுயிர்கள் ஆநந்தரூபனிடத்திலிருந்தே உண்டாகின்றன. உண்டானவை ஆநந்தரூபனிலேயே நிலைபெற்றிருக்கின்றன. ஆநந்தரூபனையே நோக்கிச் சென்றடைகின்றன.

(வி - உ.) படைத்தளித்தழிக்கவல்ல பரமேச்சுவரனுக்கு இணையாக யாதொருபெயருமில்லை. முற்காலத்திருந்த பிரமவாதிகள் தமக்குள் நிரதிசயனாகியும், மகானாகியும், எங்கும் நிறைந்தவனாகியும், ஸர்வகதனாகியும் நன்மையே வடிவாகவுடையவனாகியும் இருக்கிறபுருஷனை ஸாக்ஷாத்தாகஅடைந்து, அதனாலுண்டானகுற்றமற்ற பேரின்பத்தை யனுபவித்து அவரை ஆநந்தஸ்வரூபனென்று வெளியிட்டனர். நாமும் அவரது அன்பில் மூழ்கினவர்களாகி நம்மிலும் பேரின்பரஸம் பெருகிற்றானால் அப்பொழுது நாமும் அவரை ஆநந்தஸ்வரூபனென்று சொல்வம்.

௪

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ; ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந. ... ... (௪.)

(ப - பி.) யத꞉, வாச꞉, நிவர்த்தந்தே, அப்ராப்ய, மநஸா ஸஹ; ஆநந்தம், ப்ரஹ்மண꞉, வித்வாந், ந பிபேதி, குதஶ்சந.

(ப - உ.) அப்ராப்ய=அடையக்கூடாமல், வாச꞉=வாக்கு, மநஸா ஸஹ=மநதுடன், யத꞉=எதினின்று, நிவர்த்தந்தே=திரும்புகின்றதோ, ப்ரஹ்மண꞉=அந்தப்பிரமத்தினது, ஆநந்தம்=ஆநந்தரூபத்தை, வித்வாந்=அறிந்தவர், குதஶ்சந=ஒன்றிலிருந்தும், ந பிபேதி=அஞ்சுதலடையார்.

(பொ - உ.) வாக்கு மநதுடன் எதை அடையக்கூடாமல் திரும்புகின்றதோ, அப்பிரமத்தினது ஆநந்தரூபத்தை அறிந்தவர் ஒன்றுக்கும் அஞ்சார்.

(வி - உ.) அளவற்றஞானத்தையே வடிவாகக்கொண்ட பரமேச்சுவரன், எவ்விதஅளவுக்கும் அடங்கினபொருளன்று. அவர்



ஜடப்பொருளுமன்று, பரிமிதஞானத்தையுடைய சித்துப்பொருளுமன்று. ஆனதால் மிதஞானத்தையுடைய மநது அவரை முற்றும் அடையமாட்டாது. ஆனதுபற்றி வாக்கும் அவரை குறைவறசொல்லமாட்டாது. மநது அவரைநினைப்பதற்காகச்சென்று திரும்புகின்றது. வாக்கு அவரை வருணிக்கச்சென்று பின்னிடுகின்றது. அவ்வரம்பற்றபுருஷனை மநதிற்குமநதென்றும், வாக்குக்குவாக்கென்றும், எல்லாஞானப்பொருளுக்கும் ஞானத்தைத்தருபவனென்றும், யாவற்றிற்கும் காரணனென்றும் நிச்சயித்துச்சொல்லலாகும். யார் இந்தநிர்விசேஷனாகியும் ஸர்வவியாபியாகியுமிருக்கிற ஆநந்தஸ்வரூபனை தம்முள்ளத்தில் ஒவ்வொருகணமும் நேருய்அடைந்து பேராநந்தத்தைப்பெறுகின்றனரோ அவர்களது எல்லாவிருப்பங்களும் முடிவுறுகின்றன. அவர்கள் தமது மிக அன்பனுடைய செயற்கையால் திருப்தி அடைந்து விரும்பியபேறுகளைப் பெற்றவர்களாகின்றனர். அவர்கள், அவரைச்சரணடைந்து, அவரைப்பற்றிய அடியவர்களாகி, அவருக்கன்பாகியகாரியங்களைச் செய்வதிலேயே சென்றிருப்பார்கள். அவர்கள் உலகத்தார்செய்யும் தூற்றுதலுக்காவது, பொறுத்துமுடியாத அவமாநத்திற்காவது, தகாத திரஸ்காரத்திற்காவது, விலக்கவரியதுன்பத்திற்காவது பயந்து அக்காரியங்களைவிட்டுப் பின்விடார்கள். மிகவும்பிரியனாகிய அவருடைய கட்டளைகளை நிறைவேற்றும்நிமித்தம் உயிரைக்கொடுப்பதும் அவர்கள் விஷயத்தில் ஸாதாரணகாரியம், ஆனதுபற்றி அவர்களை யார் பயமுறுத்தவல்லார்! அவர்கள் உயிரைக்கொடுத்தவனிடத்தில் உயிரை அர்ப்பிதஞ்செய்து, பயம்நீங்கினவர்களாகின்றனர். யாவரையுங் கொல்லுவதும் பயந்தருவதுமாகிய மரணமும் அவர்களைப் பயப்படுத்தமுடியாது.

௫

ரஸோ வை ஸ꞉; ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி. ... ... ... (௫.)

(ப - பி.) ரஸ꞉, வை, ஸ꞉; ரஸம், ஹி, ஏவ, அயம், லப்த்வா, ஆநந்தீ, பவதி.

(ப - உ.) ஸ꞉=அவர் (பரமாத்மா), ரஸ꞉=ஆநந்தகாரணர், அயம்=இது (ஜீவாத்மா), ரஸம்ஹ்யேவ=ஆநந்தகாரணனையே, லப்த்வா=அடைந்து, ஆநந்தீ பவதி=சுகத்தைப்பெறுகிறது.

(பொ - உ. பரமாத்மா ஆநந்தகாரணன், ஜீவாத்மா ஆநந்தகாரணனையேயடைந்து ஆநந்தத்தைப்பெறுகின்றது.

(வி - உ.) எந்தஜீவன் நன்மையேவடிவாகக்கொண்ட அவரது பிரேமரஸத்தையடைந்து பேரானந்தத்தில் மூழ்கியிருக்கின்றதோ அந்தஜீவனது வாக்கு அவரை ரஸஸ்வரூபனென்றுசொல்லி எழுகின்றது.

௬

கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத் யதேஷ
ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்; ஏஷ ஹ்யேவா
நந்தயாதி. ... ... ... (௬.)

(ப - பி.) க:, ஹி, ஏவ, அந்யாத், க:, ப்ராண்யாத், யத், ஏஷ:, ஆகாஶே, ஆநந்த:, ந, ஸ்யாத்; ஏஷ:, ஹி, ஏவ, ஆநந்தயாதி.

(ப - உ.) ஆநந்த:=ஆநந்தரூபன், ஆகாஶே=வெளியில், யத் ந ஸ்யாத்=இராவிடில், க:=யார், அந்யாத்=அசைவர், க:=யார், ப்ராண்யாத்=உயிர்வாழ்வர், ஏஷ:ஹிஏவ=இவரே, ஆநந்தயாதி=இன்பத்தைத்தருகிறார்.

(பொ - உ.) வெளியில் ஆநந்தஸ்வரூபனாகிய பரமாத்துமா இராவிடில் யாருக்குச்சரீரஅசைவுஉண்டாகும்? யார் உயிர்வாழ்வர்? இவரே அவரவரதுசெய்கைக்குத்தக்க இன்பத்தைத்தருகிறார்.

(வி - உ. பரமாத்மாயிருப்பதினாலேயே இந்த ஒப்பற்ற உலகம் உண்டாயிற்று. மேலும் உயிர்களனைத்தும் உயிர்வாழ்வதற்குரிய உபகரணங்களைப்பெற்றிருக்கின்றன. அவரிராவிடில் இவையொன்றும் ஆகா. யாவற்றையும்படைத்து, யாவற்றிற்கும் இருப்பிடமாகி நன்மையையே ஸ்வரூபமாகக்கொண்ட பரமேச்சுவரன் இவ்வுலகத்தைப்படைக்காமலும் இவ்விதநியமங்களைக்கிரமமாய்ஏற்படுத்தாமலுமிருக்கின், இம்மண்ணுலகமேது! இவ்விண்ணுலகமேது? இவ்வியங்கியற்கைப்பொருளனைத்துமேது! அவற்றின் கிரியாகலாபங்களும், சுகசவுபாக்கியங்களுமெவ்விடம்? யாவருக்கும் இன்பத்தைத்தருபவர் அவரே. நன்மையையே வடிவாகக்கொண்டு யாவையும் காக்குமீசன் நம்மில் யாவருடைய சுகத்தையுங் கருதி எதெதில் எவ்வகையாகிய சுகத்தை வைத்தனரோ, நாம் அததில் அந்தந்த விதமான சுகத்தை அடைந்து கிருதார்த்தர்களாகிறோம். உலகத்தின் அழகைப்பார்த்தல், உண்பதற்கினிய அந்நரசத்தைப் பருகுதல், தாய்தந்தையரது அன்பையும உறவினரது நட்பையும் பெறுதல், கல்விகற்றல், தருமம்புரிதல், இவைமுதலியவைகளில் எந்தெந்தமார்க்கத்தில் எந்தெந்தவிதமாகச்சுகத்தையடைகின்றோமோ அவையாவும் அவருடைய பிரஸாதத்தினால். ஆ அ! அவரது கருணை என்னே! அவர் கேவலம் விஷயங்களின்மூலமாய் பலவிதமான இன்பங்களைத்தந்து நம்மைப்பாராமல் விட்டுவிடவில்லை. நாம்விரும்பின் அவர் தன்னையே நமக்குத்தந்து நமதுள்ளத்தைக் குளிரவைத்து, கருத்தை நிறைவேற்றி ஆலசயைத்தணியச்செய்கிறார். சாந்தமானஇயற்கையையுடைய விவேகிகள் விஷயசுகத்தில் திருத்தியடையாமல் ஒவ்வொருகணமும் அவரையடைய விரும்புகின்றனர். அவர் விரைவில் அவர்களது உள்ளத்தில் குடிபுகுந்து, அவர்களது கண்களிரண்டிலும் சோகத்தினால்வருகிற ஜலததைத் துடைத்து, அமுதமழைப்பொழிந்து உலர்ந்திருக்கும் அவர்களது உள்ளமாகியதாமரையை மலரச்செய்கின்றார். ஆகா! யார் ஒரு கணப்பொழுதேனும் அமுதவடிவனாகிய அந்தப்பூர்ணபுருஷனை தம்முள்ளத்தில் நேராய் அடைந்து குற்றமற்ற ஆநந்தத்தைப்பெறுகின்றனரோ, அவர்களே அவரது மகிமையை அறிகின்றனர்.



௭

யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருஶ்யே'நா
த்ம்யே'நிருக்தே'நிலயநே'பயம்
ப்ரதிஷ்டாம் விந்ததே; அத ஸோ'பயம் கதோ
பவதி. ... ... ... ... (௭.)

(ப - பி.) யதா, ஹி, ஏவ, ஏஷ:, ஏதஸ்மிந், அத்ருஶ்யே, அநாத்ம்யே, அநிருக்தே, அநிலயநே, அபயம், ப்ரதிஷ்டாம், விந்ததே; அத, ஸ:, அபயம், கத:, பவதி.

(ப - உ.) அத்ருஶ்யே=வெளியிந்திரியங்களுக்குத் தோன்றாதவரும், அநாத்ம்யே=உடலற்றவரும், அநிருக்தே=சொல்லுக்கடங்காதவரும், அநிலயநே=ஆதாரமற்றவருமாகிய, ஏதஸ்மிந்=இவரி (பிரமத்தினி)டத்தில், யதா=எப்பொழுது, ஏஷ:=இவன் (உபாஸ

கன்), அபயம்=அஞ்சுதலின்றி, ப்ரதிஷ்டாம்விந்ததே=தியானத்தினால் நிலைபெறுகிறானே, அத=பிறகு, ஸ:=அவன், அபயம்கத:=பயமற்றவன், பவதி=ஆகிறான்.

(பொ - உ.) வெளியிந்திரியங்களுக்குத் தோன்றாதவரும், உடலற்றவரும், சொல்லுக்கடங்காதவரும், ஆதாரமற்றவருமாகிய பிரமத்தினிடத்தில் உபாஸகன் எப்பொழுது பயமின்றி தியானத்தினால் நிலைபெற்றிருக்கிறானோ அப்பொழுதவன் பயமற்றவனாகிறான்.

(வி - உ.) குழந்தைகளுக்கு அச்சமுண்டாயின் தாயின்மார்பையடைந்து அச்சத்தை நீக்கிக்கொள்வதுபோல நாம் அமுதவடிவனாகிய புருஷனது எங்கும்பரவியிருக்கின்ற மார்பைப்பற்றிக்கொண்டு கவலை மிகுதியாக நிறைந்த இந்தஸம்ஸாரத்தின் கவலையைவிட்டு காப்பையடைகிறோம். அப்பொழுது நாம்கவலையற்றவர்களாகி, தான்புலப்படாமல் யாவற்றையும் புலப்படுத்திக்கொள்ளுகிறவரும், தனக்கோராதாரமுமின்றி தான் யாவற்றிற்கும் ஆதாரமாயும் ஆசிரயமாயுமிருப்பவருமாகிய பரமேச்சுவரொருவனையே நண்பனெனவும் துணைவனெனவும் அறிந்து அவரிடத்து நம்மை ஸமர்ப்பித்திருக்கிறோம். மேலும் அவரது கட்டளையின்படி செல்கின்றவர்களாகி விருப்பத்துடன் அவராற்காட்டப்பட்ட வழியில் ஸஞ்சாரஞ்செய்துகொண்டிருக்கிறோம்.

அ

யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ;
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் நபிபேதி
கதாசந. ... ... (அ)

(ப - பி.) யத:, வாச:, நிவர்த்தந்தே, அப்ராப்ய, மநஸா ஸஹ; ஆநந்தம், ப்ரஹ்மண:, வித்வாந், நபிபேதி, கதாசந.

(ப - உ.) அப்ராப்ய=அடையமாட்டாமல், மநஸா ஸஹ=மனதுடன், வாச:=வாக்கு, யத:=எதிலிருந்து, நிவர்த்தந்தே=திரும்புகின்றதோ, ப்ரஹ்மண:=அந்தப்பிரமத்தினது, ஆநந்தம்=ஆநந்தத்தை, வித்வாந்=அறிந்தோர், கதாசந=ஒருபொழுதும், நபிபேதி=அஞ்சார்.



(பொ - உ.) மனதுடன் வாக்கு எதை அடையமாட்டாமல் எதிலிருந்து திரும்புகின்றதோ அந்தப்பிரமத்தின் ஆநந்தத்தையறிந்தவர் ஒருபொழுதும் அஞ்சார்.

(வி - உ.) பரமேச்சுவரனுடைய நல்லதன்மையில் யாருக்கு நம்பிக்கையில்லையோ, மேலும் யார் அவரது உண்மையான கருத்தை யறிந்திலரோ, அவர்கள் குறைவற நல்லநோக்கத்துடன் ஒழுங்காக வமைக்கப்பட்டிருக்கிற இவ்வுலகத்தினிடையேயிருந்தும் இருளடைந்தவீட்டுக்குள்ளிருக்கின்றவர்களைப்போல் அச்சத்துடனிருக்கின்றனர்; ஆனால் நன்மைக்கிருப்பிடமாகிய பரமேச்சுவரனது நன்மையென்னும் ஒளி இவ்வுலகமுழுமையும்நிறைந்திருப்பதை யார் பார்க்கின்றனரோ அவர்கள் ஒருபொழுதும்அச்சத்தைப்பெறார்கள்.

கூ

ஏஷாஸ்ய பரமாகதிரேஷாஸ்ய பரமாஸம்
பதேஷாஸ்ய பரமோலோக ஏஷாஸ்ய
பரம ஆநந்த:; ஏதஸ்யைவாநந்தஸ்யாந்யா
நிபூதாநி மாத்ராமுபஜீவந்தி. ... (கூ)

(ப - பி.) ஏஷா, அஸ்ய, பரமாகதி:, ஏஷா, அஸ்ய, பரமாஸம்பத், ஏஷ:, அஸ்ய, பரம:, லோக:, ஏஷ:, அஸ்ய, பரம:, ஆநந்த:; ஏதஸ்ய, ஏவ, ஆநந்தஸ்ய, அந்யாநி, பூதாநி, மாத்ராம், உபஜீவந்தி.

(ப - உ.) அஸ்ய=இதற்(ஜீவாத்மாவுக்)கு, ஏஷா=இது (பரமாத்மா), பரமாகதி:=சிறந்தபதவி, அஸ்ய=ஜீவனுக்கு, ஏஷா=பரமாத்துமா, பரமாஸம்பத்=சிறந்த செல்வம், அஸ்ய=ஜீவனுக்கு, ஏஷ:=பரமாத்மா, பரம:லோக:=சிறந்தஉலகம், அஸ்ய=ஜீவனுக்கு, ஏஷ:=பரமாத்மா, பரம:ஆநந்த:=சிறந்தஆநந்தம், ஏதஸ்ய ஆநந்தஸ்ய ஏவ=இப்பேரானந்தத்தினுடைய, மாத்ராம்=அம்சத்தை, அந்யாநி=இதரமாகிய, பூதாநி=(சித்துப்) பொருள்கள், உபஜீவந்தி=அநுபவிக்கின்றன.

(பொ - உ.) பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த பதவி, பாமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்தசெல்வம், பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்தஉலகம், பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த ஆநந்தம். இப்பேராநந்தத்தின் அம்சத்தையே வேறுவேறு உயிர்கள் அநுபவிக்கின்றன.

(வி - உ.) எத்தனைவிதமான நற்பதவிகளிருக்கின்றனவோ அவற்றிற்கிடையில் பரமேச்சுரரே, நமது சிறந்த பதவி; அவரை அடைதலே புண்ணியத்தின்முடிவாகிய பயன். எத்தனைவகையான செல்வங்களிருக்கின்றனவோ அவற்றில் பரமேச்சுவரனைப்பெறுதலே மேலானசெல்வம்; இச்செல்வத்தை யார் பெற்றாரோ, அவர் வேறெந்தச்செல்வத்தையும் செல்வமாக நினைக்கார். எத்தனை எத்தனை உலகங்களிருக்கின்றனவோ அவற்றில் பரமேச்சுவரரே நமக்குச் சிறந்த அடைக்கலஸ்தாநமாகிய சிறந்த உலகம்; அவரிடத்தில் யார் வஸிக்சின்றனரோ, அவர்கள் வேறுசில அநித்தியபரிமித உலகங்களிலுள்ள நிலையற்றவும் நிறைவற்றவுமான சுகங்களை விரும்பார். எத்தனைவிதமான ஆநந்தங்களிருக்கின்றனவோ அவற்றில் பரமேச்சுவரனை அடைதலே நமது பேராநந்தத்திற்கு விஷயம்; இந்தப்பிரமத்தைப் பெறுதலாலுண்டாகும் பேராநந்தத்தை மதிக்கின், ஜீவர்களடையும் வேறுவேறு ஆநந்தங்களின் தொகுப்பு ஒரு அம்சமாத்திரமாகின்றது. ஆயினும் அந்த அம்சமாத்திரமான ஆநந்தத்தைப்பெற்று உயிர்களனைத்தும் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

---

## அத்தியாயம் - உ.

௧0

ஐதம்வாஅக்ரஆஸீத்நைவகிஞ்சிநாஸீத்; ஸதேவ
ஸௌம்ய இதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்;
ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மாஜரோமரோ
ம்ருதோபயஃ. ... ... (க.)

(ப - பி.) இதம், ந, அக்ரே, ந ஏவ கிஞ்சித், ஆஸீத், ஸத், ஏவ, ஸௌம்ய, இதம் அக்ரே, ஆ- ஸீத், ஏகம், ஏவ, அத்விதீயம்; ஸஃ, ஏவ, ஏஷஃ, மஹாந், அஜஃ, ஆத்மா, அஜரஃ, அமரஃ, அம்ருதஃ, அபயஃ.



(ப - உ.) இதம்=இதற்கு, (உலகத்திற்கு), அக்ரே=முன்பு, ந ஏவ கிஞ்சித் ஆஸீத்=ஒன்றுமிருந்ததில்லை, ஸௌம்ய=ஓ பிரியசிஷியனே! இதம் அக்ரே=இதற்கு (உலகமுண்டாவதற்கு) முன், ஸதேவ=கேவலம் ஸத்ஸ்வரூபியாயும், ஏகம் ஏவ=ஒன்றேயானவருமான, அத்விதீயம்=(படைப்புக்குமுன்) இரண்டாவதுபொருளற்றவர், ஆஸீத்=இருந்தார், ஸஃ=அவர், ஏஷஃ=இந்த, மஹாந்=சிறந்தவர், அஜஃ=பிறப்பற்றவர், ஆத்மா=பரமாத்மா, அஜரஃ=மூப்பற்றவர், அமரஃ—சாவற்றவர். அம்ருதஃ=நித்தியர், அபயஃ=பயமற்றவர்.

(பொ - உ.) இவ்வுலகமுண்டாவதற்குமுன்ஒன்றுமிருந்ததில்லை. ஓபிரியசிஷியனே! உலகமுண்டாததற்குமுன் கேவலம் ஸத்ஸ்வரூபியும் ஒருவருமான அத்துவிதீயர் இருந்தார். அவரிந்தச் சிறந்தவர், பிறப்பற்றவர், பரமாத்மா, மூப்பற்றவர், சாவற்றவர், நித்தியர், பயமற்றவர்.

(வி - உ.) படைப்பதன்முன்னம் ஒரே ஸத்துப்பொருளாகிய பிரமமிருந்தது, அதுவன்றி இரண்டாவதுபொருளில்லை; படைப்பின்பின்னரும், சேதநாசேதநங்களாகிய எல்லாப்பொருள்களும் கேவலம் ஒன்றேயாகிய அவரையே பற்றிக்கொண்டிருக்கின்றன; இதனாற்றான் அவர் ஒருவரான அத்விதீயரென்று சொல்லப்பட்டார். யார் ஸத்ஸ்வரூபியாகிய ஒன்றான அத்விதீயரோ, அவர் சேதநப்பொருள்; அவர் தன்னைத்தானறிகிறார்; இந்தஹேதுவைப்பற்றி அவர் ஆத்துமாவென்னும் பதத்தினாற்சொல்லப்படுகிறார். ஆனால் அவ்வாத்மா நம்மைப்போல் தாழ்வுற்றதன்று; இதைத் தெரிவிக்கும் நிமித்தம் அவர் பிறப்பற்றவரென்றும், சிறந்தஆத்மாவென்றும், மூப்பற்றவரென்றும், சாவற்றவரென்றும், நித்தியரென்றும், பயமற்றவரென்றும் பிறகு சொல்லப்பட்டார். ஜீவாத்மா எப்படி பரமாத்மாவினிச்சையால் பரிமிதசக்திபெற்று அவரிடத்திலுண்டாகி அவரதுகருத்தின்படி அவரைப்பற்றிக்கொண்டே உயிர்வாழ்கின்றதோ அப்படியே அவர் கருத்துள்ளளவும் உயிர்வாழும்; பரமாத்துமாவினது ஸ்வரூபம் அப்படியன்று; அவர் ஸ்வயம்பு, ஸ்வதந்திரர், நித்தியர், பரிபூரணர்.

கக

ஸ தபோ'தப்யத ஸ தபஸ்தப்த்வா இதம் ஸ
ர்வமஸ்ருஜத யதிதம் கிஞ்ச. ... ... (உ)

(ப - பி.) ஸ:, தப:, அதப்யத, ஸ:, தப:, தப்த்வா, இதம், ஸர்வம், அஸ்ருஜத, யத், இதம், கிஞ்ச.

(ப - உ.) ஸ:=அவர், தப:=படைப்புவிஷயமான ஆலோசனையை, அதப்யத=செய்தார், ஸ:=அவர், தப:=படைப்புவிஷயமான ஆலோசனையை, தப்த்வா=செய்துகொண்டே, யதிதம் கிஞ்ச=எவ்வளவுஸ்வல்பமாயிங்கேயிருக்கின்றனவோ, இதம்ஸர்வம்=இவையாவற்றையும், அஸ்ருஜத=படைத்தார்.

(பொ - உ.) அவர் உலகத்தைப்படைக்கும் விஷயமாக ஆலொசனைசெய்தார். ஆலோசனைசெய்துகொண்டே இங்கே எவ்வளவுஸ்வல்பமாயிருக்கின்றனவோ இவையாவற்றையும் படைத்தார்.

(வி - உ.) படைத்தற்குமுன் பிரமம்தவிர வேறொருபொருளும் இருந்ததில்லை. ஆனதால் அவர் சாதாரணமாக வஸ்துக்கள்செய்கிறவர்களைப்போல ஒரு முதற்பொருளைத் துணையாகக்கொண்டு ஒன்றையும் படைக்கவில்லை. அவர் படைத்தலென்னும் செய்கைவிஷயமாகக்கருதினார். கருதிக்கொண்டே இவையாவுமாகிய உலகத்தைப் படைத்தார். நாம், மண் கல் உலோகம் முதலியவைகளைக்கொண்டு வேறுபொருள்களைச் செய்யமாட்டுவோம். ஆனால் அவற்றைப் படைப்பென்றுசொல்லத்தகாது வேறொருமுதற்பொருளின் துணையின்றி தனதிச்சையால் ஒருபொருளை உண்டுபண்ணும் செய்கையின் பெயர் படைப்பு. அதுபற்றி நமக்கொருபொருளையும்படைக்கும் வல்லமை இல்லை. படைக்கும் வல்லமை கேவலம் ஒன்றாகிய பரமாத்மாவினிடத்திலேயே யிருக்கின்றது; அவர் தனியாக தனக்கியற்கையான ஞானம் வல்லமை செய்கை இவைகளைக்கொண்டு சேதநாசேதநங்களாகிய எல்லாப்பொருள்களையும்படைத்து இவ்வியப்பாகிய உலகயந்திரத்தை உண்டாக்கினார்.



கஉ

ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மந: ஸர்வேந்த்ரி
யாணி ச; கம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதிவீ
விச்வஸ்ய தாரிணீ. ... ... (ரு.)

(ப - பி.) ஏதஸ்மாத், ஜாயதே, ப்ராண:, மந:, ஸர்வேந்த்ரியாணி, ச, கம், வாயு:, ஜ்யோதி:, ஆப:, ப்ருதிவீ, விச்வஸ்ய, தாரிணீ.

(ப - உ.) ஏதஸ்மாத்=இவரில், ப்ராண:=பிராணன், மந:=மநது, ஸர்வேந்த்ரியாணிச=எல்லாஇந்திரியங்களும், கம்=வானம், வாயு:=காற்று, ஜ்யோதி:=தீ, ஆப:=நீர், விச்வஸ்யதாரிணீ=யாவற்றையும் தாங்கிக்கொண்டிருக்கிற, ப்ருதிவீ=பூமி, ஜாயதே=உண்டாகின்றன.

(பொ - உ.) இவரில் பிராணனும், மநசும், எல்லாஇந்திரியங்களும், வானமும், காற்றும், தீயும், யாவற்றையுந்தாங்கிக்கொண்டிருக்கிற பூமியும் உண்டாகின்றன.

(வி - உ.) உலகம்படைத்தற்கு வேண்டிய நீர், காற்று, தீமுதலிய உபகரணங்களும், பிராணம், மநசு, எல்லாப்பொறிகள் இவற்றை கேவலம் அந்த எல்லாம்வல்ல பூரணபுருடனே தான் விரும்பிப் படைத்தார்.

கங

பயாதஸ்யாக்னிஸ்தபதி பயாத்தபதி ஸூ
ர்ய:; பயாதிந்த்ரச்ச வாயுச்ச ம்ருத்யுர்தாவதி
பஞ்சம:... ... ... ... (சு)

(ப - பி.) பயாத், அஸ்ய, அக்னி:, தபதி, பயாத், தபதி, ஸூர்ய:; பயாத், இந்த்ர:, ச, வாயு:, ச, ம்ருத்யு:, தாவதி, பஞ்சம:.

(ப - உ.) அஸ்ய=இவரது, பயாத்=பயத்தினால், அக்னி:=தீ, தபதி=வெப்பத்தைத்தருகின்றது, ஸூர்ய:=சூரியன், தபதி

=ஒளியைத்தருகிருன், பயாத்=பயத்திஞல், இந்த்ரஶ்ச=மேகமு(ம்), வாயுஶ்ச=காற்றும், பஞ்சம:=ஐந்தாவதான, ம்ருத்யு:=மரணமும், தாவதி=சஞ்சரிக்கின்றன.

(பொ - உ.) இவரது பயத்திஞலே தீ வெப்பத்தைத்தருகின்றது. இவரது பயத்திஞல் சூரியன் ஒளியைத்தருகிருன். இவரது பயத்திஞல் மேகமும் காற்றும் ஐந்தாவதானமரணமும் சஞ்சரிக்கின்றன.

(வி - உ.) யாவற்றையும் நடத்துபவராகிய பரமேச்வரரது கருத்தின்படி தீ வெப்பதைத் தருகின்றது; சூரியபிம்பம் ஒளியைத்தருகின்றது; மேகம் மழைபெய்கின்றது; காற்று அசைகின்றது; மரணம் உண்டாகின்றது. ஒருபொருளும் அவரதுகருத்தையும் அவரது நியமத்தையும் மீறமாட்டாது, சந்திரன் சூரியன் முதலிய கிரக நக்ஷத்திரங்கள், நீா, காற்று இவைஜடப்பொருள்களாயிருந்தும் அவருக்கஞ்சின சித்துப்பொருள்களைப்போல தன்தன் செய்கைகளில் சென்றுகொண்டிருக்கின்றன.

—o—

## அத்தியாயம் - ங.

கச

தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்;
தஸ்மை ஸவித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரஶா
ந்தசித்தாய ஶமாந்விதாய யேநாக்ஷரம் புரு
ஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ
ப்ரஹ்மவித்யாம்... ... ... ...(க)

(ப - பி.) தத், விஜ்ஞாநார்த்தம், ஸ:, குரும், ஏவ, அபிகச்சேத்; தஸ்மை, ஸ:, வித்வாந், உபஸந்நாய, ஸம்யக், ப்ரஶாந்தசித்தாய, ஶமாந்விதாய, யேந, அக்ஷரம், புருஷம், வேத, ஸத்யம், ப்ரோவாச, தாம், தத்வத:, ப்ரஹ்மவித்யாம்.

(ப - உ) ஸ:=அவர் (பிரமவிஷயமாகத் தெரிந்துகொள்ள வேண்டியவர்) தத்=அதை (பிரம்ஹத்தை) விஜ்ஞாநார்த்தம்=விசேஷமாயறியும்பொருட்டு, குரும் ஏவ=பிரமநிஷ்டரான ஆசாரியனையே, அபிகச்சேத்=அடைவார். ஸ: வித்வாந்=(ஆசாரியனுகிய) அந்தஞானி, உபஸந்நாய=வந்த, ஸம்யக்=செவ்வையாக, ப்ரஶாந்தசித்தாய=காமக்குரோததோஷங்களிராதவரும், ஶமாந்விதாய=சமகுணத்தோடுகூடிய(பொறிவழிசெல்லாத)வருமான, தஸ்மை=அவர் (அந்தபிரமஜிஜ்ஞாஸுவின்) பொருட்டு, யேந=எதனுல் (எந்தஞானத்தால்), அக்ஷரம்=அழிவற்றவரும், புருஷம்=பூரணரும், ஸத்யம்=ஸத்ஸ்வரூபியும் ஆனவனை, வேத=அறிகிருர்களோ, தாம் ப்ரஹ்மவித்யாம்=அந்தப் பிரமஞானத்தை, ப்ரோவாச=சொல்வார்.



(பொ - உ.) பிரமத்தையறிய விருப்பமுள்ளவர் பிரமத்தை விசேஷமாக அறியும்பொருட்டு பிரமநிஷ்டரான ஆசாரியனை அடைவார். ஆசாரியனுகிய அந்தஞானி காமக்குரோதாதி தோஷங்களற்றவரும், சமகுணத்தோடு கூடியவருமாகவந்த சிஷ்யன்பொருட்டு, எந்த ஞானத்திஞல் அழிவற்றவரும் பூரணரும் ஸத்ஸ்வரூபியுமானவனை அறிகிருர்களோ அந்தப்பிரமஞானத்தை உபதேசிக்கிருர்.

(வி - உ,) யாவரும் மனதையடக்கி காமக்குரோதாதி குணங்களின்றி பிரமவிஷயமான உபதேசம் பெற்றுக்கொள்ளும்பொருட்டு பிரமஞானியாகிய ஆசானிடத்திற்குப் போகவேண்டும்; அந்த ஆசான் எந்த ஜாதியிற் பிறந்தவர்களானுலுஞ் சாந்தகுணத்தைப்பெற்றுப்பிரமஞானவிருப்பமுடையவர்களாகி அவரிடத்திறகுவந்தவர்களுக்கு வேண்டிய உபதேசந்தந்து அவர்களை அலக்ஷியம்செய்யாமல் இருத்தல்வேண்டும்.

கரு

அபரா ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவே
தோऽதர்வவேதஶ்ஶிக்ஷாகல்போ வ்யாகரணம்
நிருக்தம்ச்சந்தோ ஜ்யோதிஷமிதி; அத பரா
யயா ததக்ஷரமதிகம்யதே. ... ... (உ)

(ப - பி.) அபரா, ருக்வேத:, யஜுர்வேத:, ஸாமவேத: அதர்வவேத:, ஶிக்ஷா, கல்ப:, வ்யாகரணம், நிருக்தம், சந்த:, ஜ்யோதிஷம், இதி; அத, பரா, யயா, தத், அக்ஷரம், அதிகம்யதே.

(ப - உ.) ருக்வேத:—இருக்குவேதமும், யஜுர்வேத:—யஜுர்வேதமும், ஸாமவேத:—ஸாமவேதமும், அதர்வவேத:—அதர்வவேதமும், ஶிக்ஷா—சுருதியைஉச்சரிக்கும்முறைமையைச்சொல்லும்நூலும், கல்ப:—வைதிகச்சடங்குகளையியற்றுமுறைமையைக்கூறும் நூலும், வ்யாகரணம்—சொல்லிலக்கணநூலும், நிருக்தம்—சுருதியிலுள்ள கடினபதங்களுக்குப் பொருள்கூறும் நூலும், சந்த:—யாப்பிலக்கணநூலும், ஜ்யோதிஷ:—வேள்விமுதலியசடங்குகள்செய்யும் காலத்தைக்குறிக்கும் நூலும், இதி—என்பவை, அபரா—சிறந்த வித்தியைகளன்று, அத—பிறகு, யயா—எதனால், அக்ஷரம்—அழிவற்ற பொருளை, அதிகம்யதே—அறிகிறார்களோ, ஸா—அது, பரா—சிறந்தவித்தியை.

(பொ - உ.) இருக்குவேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ், சோதிடம் இவை சிறந்தவித்தியைகளன்று. அழிவற்றபொருளை எதனாலறிகிறார்களோ அதுவே சிறந்தவித்தியை.

(வி - உ.) கடவுளினது தன்மையையும் அவரது கருத்தையும் பற்றிய ஞானத்தைப்பெறுவது மனிதனது முக்கியபுருஷார்த்தம். எந்தக்கல்வியைக்கற்றால் மிகவும் விரும்பத்தக்க அந்த ஞானரத்தினத்தைப்பெறலாமோ அதுவே உண்மையானகல்வி அதுவே உயர்ந்தகல்வி; அதற்கு வேறான யாவும் உயர்ந்த வித்தைகளன்று. இக்காரணத்தினால் இருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், சந்தஸ், சோதிடம் இவையெல்லாம் சிறப்பற்றவித்தைகளென்றுகூறப்பட்டன. இருக்கு, யஜுஸ், ஸாமம், முதலியவற்றில் எந்தெந்தப் பிரிவுகள், மேலும் வேறெந்த எல்லாவித்தைகள் பிரமவிஷயமாக உண்மையான தத்வோபதேசத்தைச் செய்கின்றனவோ அவையே சிறந்தவித்தைகள். அவை யாவரும் வாசிக்கத்தக்கவை.

கசு

யத்தத்ரேஶ்ய மக்ராஹ்ய மவர்ணமசக்ஷு:
ஶ்ரோத்ரந்ததபாணிபாதந்நித்யம்விபும்ஸ
ர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயா யத்பூ
தயோநிம்பரிபஶ்யந்திதீரா:. (கசு)



(ப - பி.) யத், தத், அத்ரேஶ்யம், அக்ராஹ்யம், அகோத்ரம், அவர்ணம், அசக்ஷு:ஶ்ரோத்ரம், அபாணிபாதம், நித்யம், விபும், ஸர்வகதம், ஸுஸூக்ஷ்மம், தத், அவ்யயம், யத், பூதயோநிம், பரிபஶ்யந்தி, தீரா:.

(ப - உ.) யத்—எது, அத்ரேஶ்யம்—ஞானேந்திரியங்களாலறியக்கூடாததோ, அக்ராஹ்யம்—கருமேந்திரியங்களாலடையப்படாததோ, அகோத்ரம்—பிறப்பில்லாததோ, அவர்ணம்—வெண்மைமுதலிய வர்ணங்களிராததோ, அசக்ஷு:ஶ்ரோத்ரம்—கண்ணும்காதும் இல்லாததோ, தத்—அந்த, அபாணிபாதம்—கையும்காலுமில்லாததும், நித்யம்—என்றுமுள்ளதும், விபும்—எங்குமுள்ளதும், ஸர்வகதம்—யாவற்றிலும் நிறைந்ததும், ஸுஸூக்ஷ்மம்—அதி சூக்குமமானதும், தத்—அந்த, அவ்யயம்—அழிவற்றதும், யத்—இப்படிப்பட்ட லக்ஷணங்களையுடைய, பூதயோநிம்—பொருள்களுக்குப்பிறப்பிடமாகிய பொருளை, தீரா:—விவேகிகள், பரிபஶ்யந்தி—எங்கும் பார்க்கின்றனர்.

(பொ - உ.) யார் ஞானேந்திரியங்களுக்கவிஷயரோ, கருமேந்திரியங்களுக் கதீதரோ, பிறப்பற்றவரோ, வருணமற்றவரோ, கண்காதுகளில்லாதவரோ அந்த கைகால்களற்றவரும், என்றுமுள்ளவரும், எங்குமுள்ளவரும், யாவற்றிலுமுள்ளவரும் அதிசூக்குமமான தன்மையுடையவரும், அழிவற்றவரும், எல்லாபொருள்களுக்கும் பிறப்பிடமுமானவரை, விவேகிகள் எங்கும் பார்க்கின்றனர்.

(வி - உ.) அவர் படைப்புக் கதீதமாகியபொருள். கண்களாலும் பார்க்கப்படமாட்டார், கைகளாலும் கவரப்படமாட்டார், அவர் ஒருபொறிக்கும் புலப்படமாட்டார்; ஆயினும் பிரமபாராயணர்களாகிய விவேகிகள் அந்த எல்லாப்பூதங்களுக்கும் காரணமானவரை இந்தப் படைப்புக்கிடையில் எங்கும் அடைகின்றனர்.

க௭

𑌏𑌤𑌦𑍍𑌵𑍈𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂𑌗𑌾𑌰𑍍𑌗𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌅
𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑌿; 𑌅𑌸𑍍𑌥𑍂𑌲𑌮𑌨𑌣𑍍𑌵 𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌮𑌦𑍀𑌰𑍍𑌘𑌮 𑌮
𑌲𑍋𑌹𑌿𑌤 𑌮𑌸𑍍𑌨𑍇𑌹 𑌮𑌚𑍍𑌛𑌾𑌯𑌮𑌤𑌮𑍋, 𑌵𑌾𑌯𑍁
𑌨𑌾𑌕𑌾𑌶 𑌮𑌸𑌙𑍍𑌗 𑌮𑌰𑌸 𑌮𑌗𑌨𑍍𑌧 𑌮𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍍𑌕 𑌮
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰 𑌮𑌵𑌾𑌗 𑌮𑌨𑍋𑌤𑍇𑌜𑌸𑍍𑌕 𑌮𑌪𑍍𑌰𑌾𑌣 𑌮
𑌮𑍁𑌖𑌮𑌮𑌾𑌤𑍍𑌰𑌂. ... ... (க௪.)

(ப - பி.) 𑌏𑌤𑌤𑍍, 𑌵𑍈, 𑌤𑌤𑍍, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂, 𑌗𑌾𑌰𑍍𑌗𑌿, 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃, 𑌅𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑌿, 𑌅𑌸𑍍𑌥𑍂𑌲𑌂, 𑌅𑌨𑌣𑍁, 𑌅𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌂, 𑌅𑌦𑍀𑌰𑍍𑌘𑌂, 𑌅𑌲𑍋𑌹𑌿𑌤𑌂, 𑌅𑌸𑍍𑌨𑍇𑌹𑌂, 𑌅𑌚𑍍𑌛𑌾𑌯𑌂, 𑌅𑌤𑌮𑌃, 𑌅𑌵𑌾𑌯𑍁𑌃, 𑌅𑌨𑌾𑌕𑌾𑌶𑌂, 𑌅𑌸𑌙𑍍𑌗𑌂, 𑌅𑌰𑌸𑌂, 𑌅𑌗𑌨𑍍𑌧𑌂, 𑌅𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍍𑌕𑌂, 𑌅𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂, 𑌅𑌵𑌾𑌕𑍍, 𑌅𑌮𑌨𑌃, 𑌅𑌤𑍇𑌜𑌸𑍍𑌕𑌂, 𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑌂, 𑌅𑌮𑍁𑌖𑌂, 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌂.

(ப - உ.) 𑌗𑌾𑌰𑍍𑌗𑌿=ஓ கார்க்கி! 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃=பிரமஞானிகள் 𑌅𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑌿=(எதைப்)பணிகின்றனரோ, 𑌏𑌤𑌤𑍍=இது, 𑌤𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂=அந்த அழிவற்ற பொருள், [அது] 𑌅𑌸𑍍𑌥𑍂𑌲𑌂= தூலப்பொருளன்று, 𑌅𑌨𑌣𑍁=அணுப்பொருளுமன்று, 𑌅𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌂=குறுகினதுமன்று, 𑌅𑌦𑍀𑌰𑍍𑌘𑌂=நீண்டதுமன்று, 𑌅𑌲𑍋𑌹𑌿𑌤𑌂=வருணமுள்ளதுமன்று, 𑌅𑌸𑍍𑌨𑍇𑌹𑌂=திரவப்பொருளுமன்று, 𑌅𑌚𑍍𑌛𑌾𑌯𑌂=நிழலன்று, 𑌅𑌤𑌮𑌃=இருளன்று, 𑌅𑌵𑌾𑌯𑍁𑌃=காற்றன்று, 𑌅𑌨𑌾𑌕𑌾𑌶𑌂=ஆகாயமன்று, 𑌅𑌸𑌙𑍍𑌗𑌂=சுகதுக்கமற்றது, 𑌅𑌰𑌸𑌂=இரசேந்திரியமற்றது, 𑌅𑌗𑌨𑍍𑌧𑌂=கிராணேந்திரியமற்றது, 𑌅𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍍𑌕𑌂=கண்ணற்றது, 𑌅𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂=காதற்றது, 𑌅𑌵𑌾𑌕𑍍=வாக்கற்றது, 𑌅𑌮𑌨𑌃=மிதமாகிய மனதற்றது, 𑌅𑌤𑍇𑌜𑌸𑍍𑌕𑌂=உஷ்ணமற்றது, 𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑌂=உடலுக்குரிய பிராணவாயுவற்றது, 𑌅𑌮𑍁𑌖𑌂=முகமற்றது, 𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌂=உவமையற்றது.



(பொ - உ.) ஓ கார்க்கி! பிரமஞானிகள் யாரைப்பணிகிறார்களோ அவர் இந்த அழிவற்ற புருஷன். அவர் தூலரன்று, அணுவன்று, குறுகினவரன்று, நீட்சியுடையவருமன்று. அவர் வருணமுள்ள பொருளன்று, திரவப்பொருளன்று, அவர் நிழலன்று, இருளன்று, காற்றன்று, ஆகாயமன்று. சுகதுக்கமற்றவர், இரஸநேந்திரியமற்றவர், கிராணேந்திரியமற்றவர், கண்ணற்றவர், காதற்றவர், வாக்கற்றவர், மிதமாகிய மனதற்றவர், உஷ்ணமற்றவர், பிராணவாயுவற்றவர், முகமற்றவர் அவருக்கு ஒப்பில்லை.

(வி - உ.) அவர் தூலரன்று, அணுவன்று, குறுகினவரன்று, நீண்டவரன்று, அவருக்கொரு பரிமாணமுமில்லை. அவர் அலோஹிதர், அவருக்குச்செகப்புமுதலிய ஒருவர்ணமுமில்லை. அவர் திரவப்பொருளன்று, அவர் நீரைப்போன்ற வஸ்துவன்று, அவர் காற்றன்று, காற்று ஸம்பந்தமான பொருளுமன்று. அவர் இரஸமுமன்று, கந்தமுமன்று, இவையாவும் வெளியரங்கமான ஜடப்பொருளின் தன்மைகள், அவர் ஒருபோதும் ஜடப்பொருளன்று; ஆனதால் இவையாவும் கிஞ்சித்தேனும் அவரிடத்தில்லை, அவர் ஜடவஸ்துவன்று, நம்மைப்போல் ஜடசரீரத்தோடு கூடியவருமன்று, அவரிடத்தில் சாரீரிகபிராணவாயுவுமில்லை, அவரிடத்தில் முகாதிஅங்கங்களுமில்லை, நமக்கும் சரீரத்திற்கும் எப்படி பரஸ்பரஸம்பந்த மிருக்கிறதோ, மேலும் இந்த ஸம்பந்தத்தினால் எப்படிபார்க்கிறோமோ கேட்கிறோமோ வார்த்தைசொல்லுகிறோமோ கடவுளப்படி ஒருடலோடுகூடிய ஜீவனன்று, ஆனதால் நம்மைப்போல அவர் கண்ணினால் பார்க்கிறதில்லை. அவர் கண்ணற்றவர், காதற்றவர், வாக்கற்றவர், அவர் மிதமாகிய நினைப்பற்றவர், அவர் உடலில்லாத சிற்றறிவினருமன்று. அவரிடத்தில் சிற்றறிவைச்சேர்ந்த காரிய மொன்றுமில்லை. அவர் அஸங்கர் ஸாம்ஸாரிக சுகதுக்கங்களிலழுந்தினவரன்று. அவர் ஜடப்பொருளுமன்று சிற்றறிவினையுடைய சித்துப்பொருளுமன்று, அப்படியாயின் அவர் நிழல், இருள், வெளி இவற்றைப்போன்று ஓர் பொருளல்லாதவரா? இல்லை. அவர் நிழல், வெளி, இருளைப்போல் ஒருபொருளல்லாதவரன்று; அவர் நித்தியமாகிய ஸத்தியவஸ்து. அவர் அளவற்ற தன்மையுடையவர், அவர் ஞானமே வடிவாகக்கொண்டவர், அவருக்கு ஒப்பில்லை. ஜடப்பொருளுக்கு எப்படி ஞானப்பொருளுயர்ந்ததோ அதுபோல சாதாரணமான ஞானப்பொருளைவிட ஞானத்தையேவடிவாகஉடைய

பரமாத்துமா பலமடங்கு உயர்ந்தவர். அவரது ஞானம் படைக்கப்பட்ட சித்துப்பொருளினது ஞானத்தைப்போன்றதன்று. ஞானக்கிரியைகள் அவரிடத்தில் இயற்கையிலுள்ளவை. ஒருவஸ்துவை யறியும்பொருட்டு அந்த எல்லாமறிந்தபுருஷனுக்குப் பொறிகளுடைய ஸகாயம் ஆவசியகமில்லை. முன் நடந்த விஷயங்களையறியும்பொருட்டும் அவருக்கு ஞாபகசக்தி ஆவசியகமில்லை. அவர் ஒரு காலத்திலேயேயாவற்றையு மறிகிறார். நமக்கிருப்பதுபோல அவருக்கு சினமில்லை, பகையில்லை, வெறுப்பில்லை, துயரமில்லை. அவருக்கு நமக்கிருப்பதுபோல மிதமாகிய தயையும், நட்பும், அன்பும், சந்தோஷமுமில்லை. அவர் நன்மையே வடிவாக உடையவர், அவரது அந்த நல்லதன்மையி லடங்கியிருக்கிற, நட்பு அருள் அன்பு அவரிடத்திநின்று வெளிப்பட்டு உலகத்தை க்ஷேமமாக வைத்துக்கொண்டிருக்கின்றன; அவர் நமது மாநஸிக விருத்தியைப்போன்ற அருள், நட்பு, அன்பு இவைகளைப் பலமடங்கு கடந்தவர்; நமதன்பு அவரது அளவற்ற அன்பின் அம்சமாத்திரமாகவுள்ளது.

௧௮

ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி
ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:. (௫)

(ப - பி.) ஏதஸ்ய, வை, அக்ஷரஸ்ய, ப்ரஶாஸநே, கார்கி, ஸூர்யாசந்த்ரமஸௌ, வித்ருதௌ, திஷ்டத:.

(ப - உ.) ஏதஸ்ய வை அக்ஷரஸ்ய=இவ்வழிவற்றபுருஷனது, ப்ரஶாஸநே=கட்டளையால், கார்கி=ஓ! கார்க்கி!, ஸூர்யாசந்த்ரமஸௌ=சூரியசந்திரபிம்பங்கள், வித்ருதௌ=தாங்கப்பட்டு, திஷ்டத:=இருக்கின்றன.

(பொ - உ.) இவ்வழிவற்ற பொருளினது நியமத்தால், ஓ கார்க்கி! சூரிசந்திர பிம்பங்கள் தாங்கப்பட்டிருக்கின்றன.

(வி - உ.) அவரது கட்டளையால் சூரியபிம்பம் சோதிமண்டலத்திற்கு நடுவே விளக்கைப்போலிருந்து, அதற்குட்பட்டிருக்கிற



பூலோகத்தையும், மற்ற கிரகாதிகளாகிய வேறுலோகங்களையும், தனதொளியால் பிரகாசிக்கச்செய்கின்றது, தனதுசக்தியால் அதைதை அதனதன் மார்க்கத்தில் ஆகர்ஷித்துவைக்கின்றது. மேலும் ஒளியைத்தருவதினால் பசு பறவை முதலிய ஜந்துக்களையும், மரம் கொடிமுதலிய உத்பிஜங்களையும் உயிர்ப்பையடைந்திருக்கச் செய்கிறது. யாவற்றிலும் இரமணீயமான அமுதம்போன்ற கிரணங்களையுடைய சந்திரபிம்பம் அவரது நியமத்தில் கட்டுப்பட்டே வெறும் வெளியில் ஸஞ்சரிக்கின்றது. மேலும் ஒவ்வொரு இரவிலும் புதியபுதிய உருவம்பூண்டு யாவருடைய அந்தக்கரணங்களையும் மலரச்செய்கின்றது. அதனது மநோஹரமான ஒளியைத்தருவதால் உத்பிஜங்கள் வளப்பமான தன்மையுடனும் வன்மையுடனுமிருக்கின்றன.

௧௯

ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி
த்யாவாப்ருதிவ்யௌ வித்ருதே திஷ்டத:. (௬)

(ப - பி.) ஏதஸ்ய, வை, அக்ஷரஸ்ய, ப்ரஶாஸநே, கார்கி, த்யாவாப்ருதிவ்யௌ, வித்ருதே, திஷ்டத:.

(ப - உ.) ஏதஸ்ய அக்ஷரஸ்ய=இவ்வழிவற்ற புருஷனது, ப்ரஶாஸநே=நியமத்தினால், கார்கி=ஓ கார்க்கி!, த்யாவாப்ருதிவ்யௌ=விண்ணுலகமண்ணுலகங்கள், வித்ருதே=தாங்கப்பட்டு, திஷ்டத:=இருக்கின்றன.

(பொ - உ.) இவ்வழிவற்றபொருளினது நியமத்தால் மண்ணுலகவிண்ணுலகங்களும் தாங்கப்பட்டிருக்கின்றன.

(வி - உ.) மண்ணுலகந்தவிர சூரியசந்திரகிரக நக்ஷத்திராதி ஒளியையுடைய எத்தனைஉலகங்களிருக்கின்றனவோ அவற்றின்தொகுப்புக்கு பொதுப்பெயர் விண்ணுலகம். நமதுபாதத்துக்கடியிலிருக்கிற மண்ணுலகமும் நமது தலைமீதிருக்கிற விண்ணுலகமும் யாவும் அந்த நன்மையே வடிவாகக்கொண்ட ஸர்வரக்ஷகனுடைய நியமத்தினால் நியதமாக காக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் ஒரு அணுவளவும் அவரது நியமத்திற்குப் புறம்பாகாது.

௨௦

ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி
நிமேஷா முஹூர்த்தா அஹோராத்ராண்ய
ர்த்தமாஸா மாஸா ருதவ: ஸம்வத்ஸரா இதி வி
த்ருதாஸ்திஷ்டந்தி. ... ... (௭).

(ப - பி.) ஏதஸ்ய, வை, அக்ஷரஸ்ய, ப்ரஶாஸநே, கார்கி, நிமேஷா:, முஹூர்த்தா:, அஹோராத்ராணி, அர்த்தமாஸா:, மாஸா:, ருதவ:, ஸம்வத்ஸரா:, இதி, வித்ருதா:, திஷ்டந்தி.

(ப - உ.) ஏதஸ்யவை அக்ஷரஸ்ய=இவ்வழிவற்ற புருஷனுடைய, ப்ரஶாஸநே=நியமத்தினால், கார்கி=ஓ கார்க்கி!, நிமேஷா:=நிமிஷங்களும், முஹூர்த்தா:=முகூர்த்தங்களும், அஹோராத்ராணி=இராப்பகல்களும், அர்த்தமாஸா:=பக்ஷங்களும், மாஸா:=மாதங்களும், ருதவ:=பருவங்களும், ஸம்வத்ஸரா:=வருடங்களும், வித்ருதா:=நியமத்தில்வைக்கப்பட்டிருக்கின்றன.

(பொ - உ.) ஓ! கார்க்கி! இவ்வழிவற்றபுருஷனுடைய நியமனத்தினால் நிமிஷங்களும் முகூர்த்தங்களும் அகோராத்திரிகளும் பக்ஷங்களும் மாதங்களும் பருவங்களும் வருடங்களும் நியமத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

(வி - உ) அந்தந்தகாலங்களில் இயற்கையாக உண்டாகிற ஸகலகாரியங்களும் அவரது நியமத்தினாலேயே உண்டாகின்றன. அவரது கடக்கக்கூடாத நியமங்களுக்குப்புறம்பாக சிறிதுகாரியமும் ஸம்பவிக்கமாட்டாது.

௨௧

ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி
ப்ராச்யோ'ந்யா நத்ய: ஸ்யந்தந்தே ஶ்வேதேப்ய:
பர்வதேப்ய: ப்ரதீச்யோ'ந்யா:. ... (௮)

(ப - பி.) ஏதஸ்ய, வை, அக்ஷரஸ்ய, ப்ரஶாஸநே, கார்கி,



ப்ராச்ய:, அந்யா:, நத்ய:, ஸ்யந்தந்தே, ஶ்வேதேப்ய:, பர்வதேப்ய:, ப்ரதீச்ய:, அந்யா:.

(ப - உ.) ஏதஸ்ய வை அக்ஷரஸ்ய=இவ்வழிவற்றபுருஷனது, ப்ரஶாஸநே=நியமத்தினால், கார்கி=ஓ கார்க்கி!, ப்ராச்ய:=கிழக்குதிக்கை நோக்கி ஓடுகிற, அந்யா: நத்ய:=வேறு ஆறுகளும், ப்ரதீச்ய:=மேற்குநோக்கிச்செல்லுகிற, அந்யா:=வேறு (ஆறுகளும்), ஶ்வேதேப்ய: பர்வதேப்ய:=(பனியினால்) வெண்மையாயிருக்கின்ற மலைகளிலிருந்து, ஸ்யந்தந்தே=பெருகுகின்றன.

(பொ - உ.) இவ்வழிவற்ற பொருளினது நியமத்தினால் ஓ! கார்க்கி! கிழக்குதிக்கை நோக்கி ஓடுகிற வேறுஆறுகளும், மேற்றிசையை நோக்கி ஓடுகிற வேறு ஆறுகளும் பனியினால் வெண்மையா யிருக்கின்ற மலைகளிலிருந்து பெருகுகின்றன.

(வி - உ.) மிகுந்தநன்மையேவடிவாகக்கொண்ட கடவுளினது நியமத்தினால் விரைவாக ஓடுகிற ஆறுகளனைத்தும் உயர்ந்த மலைகளினின்று வெள்ளமாகப் பெருகி எண்ணிறந்த உயிர்களுக்கு மிகுந்த உபகாரம் செய்வனவாயும், நன்மையைத்தருவனவாயும் இருக்கின்றன. பார்வைக்குப் புறம்பாகி அறியப்படாத யாதொருமலையின் தெரியாதயாதொரு இடத்தில்சேருகிற நீர்த்திரளை நாம் அதினின்று அநேகயோஜனை தூரத்திலிருந்தும் ஆயாஸமின்றி யடைகிறோம்.

௨௨

யோவா ஏதத் அக்ஷரம் கார்க்யவிதித்வாஸ்மிந்
லோகே ஜுஹோதி யஜதே தபஸ்தப்யதே
பஹூநி வர்ஷஸஹஸ்ராண்யந்தவதேவா
ஸ்ய தத்பவதி. ... ... ... (௯.)

(ப - பி.) ய:, வை, ஏதத், அக்ஷரம், கார்கி, அவிதித்வா, அஸ்மிந், லோகே, ஜுஹோதி, யஜதே, தப:, தப்யதே, பஹூநி, வர்ஷஸஹஸ்ராணி, அந்தவத், ஏவ, அஸ்ய, தத், பவதி.

(ப - உ.) கார்கி=ஓ கார்க்கி!, ய:=யார், ஏதத்=இந்த, அக்ஷரம்=அழிவற்றபுருஷனை, அவிதித்வா=அறியாமல், பஹூநிவ

வர்ஷஸஹஸ்ராணி = அநேகாயிரம் வருடங்கள், அஸ்மிந்லோகே = இவ்வுலகத்தில், ஜுஹோதி = ஹோமம்செய்கின்றனோ, யஜதே = வேள்விசெய்கின்றனோ, தபஸ்தப்யதே = தவம்புரிகின்றனோ, அஸ்ய = அவனுக்கு, அந்தவத் ஏவ தத் = அழிந்துபோகிறபயனே, பவதி = உண்டாகிறது.

(பொ - உ) ஓ! கார்க்கி! யார்இவ்வழிவற்ற புருஷனையறியாமல் அநேகாயிரம்வருடங்கள் ஓமம், வேள்வி, தவம் இவைகளைச்செய்யினும் அவர்களுக்கு அழிவுள்ளபயனே உண்டாகின்றது.

(வி - உ.) மங்களவடிவனாகிய பரமேச்வரனை உள்ளத்தில் நேராகஅறிந்து, அவரிடத்து அன்பையுண்டாக்கிக்கொள்ளவேண்டும். அவரது மகிமையை அறிந்தும், கேள்வியுற்றும், அவரது திருப்பணிசெய்வதில் சேரவேண்டும்; அப்படியாயின் அவரது சேர்க்கையாலுண்டாகிற அழிவற்றபயனைப்பெறலாகும். அவரை அறியாமல் மனதை வேறேஇடத்தில் செலுத்தி, விடயங்களில் விருப்பமுற்றவனாகி வெளியாடம்பரங்களுடன் இரவும்பகலும் அவரை உபாசிக்கினும், அல்லது உலகத்திற்கு மகிழ்ச்சியுண்டாக்கத்தக்க வீணான வேள்விமுதலிய செய்கைகளிலேயே உடலையும் மனதையும் விழுந்திருக்கும்படிசெய்யினும், அல்லது மானம் மரியாதை யசசு கீர்த்தி இவைகளைப் பெறவிரும்பி தமக்குள்ள பொருளையெல்லாம் செலவழிக்கினும், கடவுளிடத்து அவருக்குச் சிறிதும் சம்பந்தமுண்டாகமாட்டாது, ஆனதால் அவருக்கு அழிவற்றபயன் உண்டாவதில்லை. யார் கடவுள்விஷயமான ஞானத்தினாலும் அவரிடத்துள்ள அன்பினாலும், அவருக்கன்பாகிய காரியங்களைச் செய்யவெண்ணி அவரால் நியமிக்கப்பட்ட தருமங்களைப்புரிகின்றனரோ, அவரிடத்தில் தருமத்தின் எல்லாலக்ஷணங்களும் கிடைக்கின்றன. மேலும் அவர்கள் என்றும் மிகுதியும் விரும்பத்தக்க அழிவற்ற பிரமாநந்தத்தை அநுபவித்துக்கொண்டேயிருக்கின்றனர்.

௨௩

யோவா ஏதத³க்ஷரம் கா³ர்க்³யவிதி³த்வாஸ்மா
ல்லோகாத் ப்ரைதி ஸ க்ருபண: ; அத² ய ஏ
தத³க்ஷரம் கா³ர்கி³ விதி³த்வாஸ்மால்லோகாத்
ப்ரைதி ஸ ப்³ராஹ்மண:. ... (௧௦.)



(ப - பி.) ய:, வை, ஏதத், அக்ஷரம், கார்கி, அவிதித்வா, அஸ்மாத், லோகாத், ப்ரைதி, ஸ:, க்ருபண:; அத, ய:, ஏதத், அக்ஷரம், கார்கி, விதித்வா, அஸ்மாத், லோகாத், ப்ரைதி, ஸ:, ப்ராஹ்மண:.

(ப - உ.) கார்கி = ஓ கார்க்கி! ய: = யார், ஏதத் அக்ஷரம் = இவ்வழிவற்ற புருஷனை, அவிதித்வா = அறியாமல், அஸ்மாத் லோகாத் = இவ்வுலகத்தி லிருந்து, ப்ரைதி = போகின்றனோ, ஸ: = அவன், க்ருபண: = தீனன், கார்கி = ஓ கார்க்கி! ய: = யார், ஏதத் அக்ஷரம் = இவ்வழிவற்ற புருஷனை, விதித்வா = அறிந்து, அஸ்மாத் லோகாத் = இந்தஉலகத்தைவிட்டு, ப்ரைதி = போகின்றரோ, ஸ: = அவர், ப்ராஹ்மண: = பிராம்மணர்.

(பொ - உ.) ஓ கார்க்கி! யார் இவ்வழிவற்ற புருஷனையறியாமல் இவ்வுலகத்தைவிட்டு நீங்குகின்றனோ அவன் அதிதீனன். ஓ கார்க்கி! யார் இந்த அழிவற்றபுருஷனை யறிந்து இவ்வுலகத்தைவிட்டு நீங்குகிறரோ அவர் பிராம்மணர்.

(வி - உ.) பூமண்டலத்தில் எத்தனை உயிர்க ளிருக்கின்றனவோ, அவற்றில் மனிதனே பிரமஞானத்தைப்பெறுதற்கு அதிகாரி. சிறப்புள்ள யாவற்றிலும் சிறந்தகடவுளையும், அவரால் நியமிக்கப்பட்ட தருமங்களின் தொகுப்பையும், அறியும் அதிகாரம் இருக்கிறதென்றே மனிதன்பெயருக்கு இவ்வளவு சிறப்பிருக்கின்றது. யார் இந்த மிகச்சிறந்த மனிதப்பிறப்பைப்பெற்றும் அவரை அறியக்கூடாமல் போகின்றனரோ அவர்களிலும் நிர்ப்பாக்கியர்கள் வேறு யாரிருக்கின்றனர்? மிகுந்த அன்பிற்குரிய கடவுளையடைந்து சொல்லிமுடியா வாநந்தத்தை யநுபவித்தும் அச்சுவையைக் கிரகிக்கவும் யார் சக்தியற்றவனாகிறனோ அவனிலும் தீநன் வேறு யாவன்? அவனே இரக்கத்துக்குப் பாத்திரனாகிய அதிதீனன், அவனது பிறப்பு பளுவைச்சுமக்கும் பசுபிறப்பு. மேலும் யார் அவரையறிந்து இவ்வுலகத்தைவிட்டு அப்புறப்படுகின்றரோ; அவரே மிகுந்த பாக்கியவான், அவரேமனிதர்களுக்குள் சிறந்தவர், அவரேபிராம்மணர்.

௨௪

தத்3வா ஏதத3க்ஷரம் கா3ர்க்3யத்3ருஷ்டம் த்3ரஷ்ட்ரு
அஶ்ருதம் ஶ்ரோத்ரு அமதம் மந்த்ரு அவிஜ்ஞாதம் வி
ஜ்ஞாத்ரு ஏதஸ்மிந்நு க2ல்வக்ஷரே கா3ர்க்3யாகாஶ
ஓதஶ்ச ப்ரோதஶ்ச. ... ... (௧௧)

(ப - பி.) தத், வை, ஏதத், அக்ஷரம், கா3ர்கி3, அத்3ருஷ்டம், த்3ரஷ்ட்ரு, அஶ்ருதம், ஶ்ரோத்ரு, அமதம், மந்த்ரு, அவிஜ்ஞாதம், விஜ்ஞாத்ரு, ஏதஸ்மிந், உ, க2லு, அக்ஷரே, கா3ர்கி3, ஆகாஶ:, ஓத:, ச, ப்ரோத:, ச.

(ப - உ.) கா3ர்கி3=ஓ கார்க்கி!, ஏதத் அக்ஷரம்=இவ்வழிவற்றபுருஷன், அத்3ருஷ்டம்=பார்வைக்குப புலப்படமாட்டார், த்3ரஷ்ட்ரு=தான்பார்ப்பார், அஶ்ருதம்=செவிக்கு விஷயமாகமாட்டார், ஶ்ரோத்ரு=தான்கேட்பார், அமதம்=நினைப்புக்கு விஷயமாகமாட்டார், மந்த்ரு=தான் நினைப்பார், அவிஜ்ஞாதம்=அறியப்படமாட்டார், விஜ்ஞாத்ரு=தான் அறிவார், ஏதஸ்மிந் அக்ஷரே=இந்த அழிவற்ற புருஷனிடத்தில், கா3ர்கி3=ஓ கார்க்கி! ஆகாஶ:=ஆகாயம், ஓத: ச ப்ரோத: ச=எங்கும்வியாபித்திருக்கின்றது.

(பொ - உ.) ஓ கார்க்கி! இவ்வழிவற்றபுருஷர் பார்வைக்குப்புலப்படார், பார்ப்பார், செவிக்குப்புலப்படமாட்டார் கேட்பார், நினைவுக்கு அகப்படார், தான் நினைப்பார், இவ்வழிவற்ற புருஷரிடத்தில் ஓ கார்க்கி! ஆகாயம் ஓதப்புரோதமாகப் பரவியிருக்கின்றது.

(வி - உ.) நாம் பார்ப்பது கேட்பது நினைப்பது முதலிய சகல செய்கைகளால் எந்தச் சிறிது விஷயங்களைத் தெறிந்துகொள்ள மாட்டுவோமோ அவற்றை அவர் அறிந்துகொள்ளமாட்டுவார். மேலும் நாம் எவற்றையறிய நமக்கு வல்லமையில்லையோ, அவற்றையும் அவர் அறிவார். ஆனால் அவர் யாருடையவும் பார்வை கேள்வி மநசு புத்தி இவைகளுக்கு விஷயமாகார். அவர் தன்னைத்தான் எப்படி அறிகிறாரோ அப்படி யாரும் அவரை அறியவல்லவரல்லர்.



அளவற்ற ஸ்வரூபத்தை புத்தி அளவுசெய்து அறியவல்லதன்று. இவ்வெல்லையற்ற அழிவற்றப்புருஷனால் ஆகாசம்வியாபிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஸர்வவியாபியாகிய பரமேச்வரன் இல்லாத இடமில்லை.

௨௫

பீ4ஷாஸ்மாத்3வாத: பவதே பீ4ஷோதே3தி ஸூ
ர்ய: பீ4ஷாஸ்மாத3க்3நிஶ்சேந்த்3ரஶ்ச ம்ருத்யுர்தா4
வதி பஞ்சம:. ... ... ... (௧௨)

(ப - பி.) பீ4ஷா, அஸ்மாத், வாத:, பவதே, பீ4ஷா, உதே3தி, ஸூர்ய:; பீ4ஷா, அஸ்மாத், அக்3நி:, ச, இந்த்3ர:, ச, ம்ருத்யு:, தா4வதி, பஞ்சம:.

(ப - உ.) அஸ்மாத் பீ4ஷா=இவரது பயத்தினால், வாத:=காற்று, பவதே=வீசுகின்றது, அஸ்மாத் பீ4ஷா=இவரது பயத்தினால், ஸூர்ய:=சூரியபிம்பம், உதே3தி=உதிக்கின்றது, அக்3நி: ச=அக்கினியும், இந்த்3ர: ச=மேகமும், பஞ்சம:=ஐந்தாவதாக, ம்ருத்யு:=மரணமும், தா4வதி=தன்தன் செயலில் செல்லுகின்றது.

(பொ - உ.) இவரது பயத்தினால் காற்றுவீசுகின்றது, இவரது பயத்தினால் சூரியபிம்பம் உதிக்கின்றது, இவரது பயத்தினால் தீயும், மேகமும், ஐந்தாவதாக மரணமும் தன்தன் செயலில் செல்லுகின்றன.

(வி - உ.) நன்மையையே வடிவாகக்கொண்ட இவ்வழிவற்ற புருஷனது நியமத்தினால் காற்று, சூரியன், தீ, மேகம், மரணம் முதலியவை யாவும் சேர்ந்து இவ்வுலகத்திற்கு உபகார சாதநமாககாரியங்களில் நியதமாக பிரவர்த்திக்கின்றன.

௨௬

யதி3த3ம் கிஞ்ச ஜக3த்ஸர்வம் ப்ராண ஏஜதி
நி:ஸ்ருதம்; மஹத்3ப4யம் வஜ்ரமுத்3யதம் ய ஏதத்
விது3ரம்ருதாஸ்தே ப4வந்தி. ... (௧௩)

(ப - பி.) யத், இத³ம், கிஞ்ச, ஜக³த், ஸர்வம், ப்ராணே, ஏஜதி, நிஃஸ்ருதம், மஹத்³ப⁴யம், வஜ்ரம் உத்³யதம், ய꞉, ஏதத், விது³꞉, அம்ருதா꞉, தே, ப⁴வந்தி.

(ப - உ.) யதி³த³ம் கிஞ்ச=இதோயிருக்கிற, ஜக³த்ஸர்வம்=உலகமுழுதும், நிஃஸ்ருதம்=(பரமாத்துமாவினிடத்திலிருந்து) வெளிப்பட்டதாகி, ப்ராணே=பிராண ஸ்வரூபனாகிய பரமாத்துமாவிலேயே, ஏஜதி=அசைந்துகொண் டிருக்கின்றது, உத்³யதம் வஜ்ரம்=அவர் இடிக்கிற இடியைப்போல, மஹத்³ப⁴யம்=மிகவும் பயங்கரமானவர், ய꞉=யார், ஏதத்=இந்தவஸ்துவை, விது³꞉=அறிகின்றனரோ, தே=அவர்கள், அம்ருதா꞉=நித்தியபதவி யுடையவர்கள், ப⁴வந்தி=ஆகின்றனர்.

(பொ - உ.) இதோ இருக்கிற உலகமுழுதும் பரமாத்துமாவினிடத்திலிருந்து வெளிப்பட்டதாகி பிராணஸ்வரூபனாகிய அவரிலேயே அசைந்துகொண்டிருக்கின்றது. இடிக்கிற இடியைப்போல் அவர் மிகவும் பயங்கரமானவர். இந்த வஸ்துவை அறிகிறவர்கள் நித்தியபதவி யுடையவர்களாகின்றனர்.

(வி - உ.) கடவுள் இவ்வுலகத்திற்குப் பிராணன்; அவரிடத்திலிருந்தே எல்லாம் உண்டாகி அவரைப்பற்றிக்கொண்டே யாவும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. யாரும் அவரது கருத்தை மீறி நடக்கவல்லவரல்லர். யாரும் அவரது நியமத்தினாலேயே தமதுதமது செய்கைகளில் நியோகிக்கப்பட்டிருக்கின்றனர். யார்பாபத்தில் விருப்பமுடையவர்களாகி அவரால் நியமிக்கப்பட்ட தருமமாகிய எல்லையைக்கடந்து செல்லுகின்றனரோ அவர்களுக்கவர் இடிக்கிற இடியைப்போல் அதிபயங்கரமானவராகிறார். யார் கடவுளை அறிகின்றனரோ அவர்கள் நித்தியபதவியைப்பெற்று அழிவற்ற பிரமாநந்தத்தை யனுபவிக்கின்றனர்.

---



# அத்தியாயம் - ச.

## உஎ

ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் மனஸோமனோய
த்³வாசோஹவாசம்; ஸஉப்ராணஸ்ய ப்ராண
ஶ்சக்ஷுஷஶ்சக்ஷு꞉. ... ... (க.)

(ப - பி.) ஶ்ரோத்ரஸ்ய, ஶ்ரோத்ரம், மனஸ꞉, மன꞉, யத், வாச꞉, ஹ, வாசம்; ஸ꞉, உ, ப்ராணஸ்ய, ப்ராண꞉, சக்ஷுஷ꞉, சக்ஷு꞉.

(ப - உ.) யத்=எது, ஶ்ரோத்ரஸ்ய=செவிக்கு, ஶ்ரோத்ரம்=செவியோ; மனஸ꞉=மனதிற்கு, மன꞉=மனதோ, வாச꞉=வாக்குக்கு, வாச꞉=வாக்கோ, ஸ꞉=அவர் (கடவுள்), ப்ராணஸ்ய=பிராணத்திற்கு, ப்ராண꞉=பிராணம், சக்ஷுஷ꞉=நேத்திரத்திற்கு, சக்ஷு꞉=நேத்திரம்.

(பொ - உ.) யார் செவிக்குச் செவியும் மனதுக்கு மனதும் வாக்குக்கு வாக்குமோ, அவர் பிராணனுக்குப் பிராணன் கண்ணுக்குக் கண்ணு.

(வி - உ.) பரமேச்வரனிடத்திலிருந்தே கண் காது வாக்கு மனது பிராணன் இவை அதனதன் சக்தியைப் பெறுகின்றன. மேலும் அவரை ஆதாரமாககொண்டே அவை அந்த சக்திகளையெல்லாம் தனது தனது சக்தியுடன் சேர்க்கக்கூடியவையாக இருக்கின்றன; ஆனதினாற்றான் அவர் செவிக்குச்செவியென்றும், மனதிற்கு மனதென்றும், வாக்குக்கு வாக்கென்றும், கண்ணுக்கு கண்ணென்றும் சொல்லப்பட்டார். அவர் கண்ணுக்குக் கண்ணாயினும் தானே கண்ணல்லர். காதுக்குக் காதாயினும் தானேகாதல்லர், மனதிற்கு மனதாயினும் அவர் மனதல்லர். அவர் அபரிமித ஞானஸ்வரூபி. அவர் யாவற்றிற்கும் காரணர், பேறும் ஆதாரமானவர்.

உஅ

ந தத்ர சக்ஷுர்கச்சதி ந வாக்கச்சதி நோ மநோ
ந வித்மோ ந விஜாநீமோ யதைதத நுசிஷ்யாத் அந்யதேவ தத்விதிதாதத் அவிதிதாதயி; இதி ஶுஶ்ரும பூர்வேஷாம் யே நஸ்தத்வ்யாசசக்ஷிரே. ... ... (உ.)

(ப - பி.) ந, தத்ர, சக்ஷு:, கச்சதி, ந வாக், கச்சதி, நோ மந:, ந வித்ம:, ந விஜாநீம:, யதா, ஏதத், அநுசிஷ்யாத், அந்யத், ஏவ, தத், விதிதாத், அதோ, அவிதிதாத், அதி; இதி, ஶுஶ்ரும, பூர்வேஷாம், யே, ந:, தத், வ்யாசசக்ஷிரே.

(ப - பி.) தம், துர்தர்ஶம், கூடம், அநுப்ரவிஷ்டம், குஹாஹிதம், கஹ்வரேஷ்டம், புராணம்; அத்யாத்மயோகாதிகமேந, தேவம், மத்வா, தீர:, ஹர்ஷஶோகௌ, ஜஹாதி.

(ப - உ.) துர்தர்ஶம்=கஷ்டத்தினாலறியப்படத்தக்கவரும், கூடம்=அதிசூக்ஷுமமாக, அநுப்ரவிஷ்டம்=யாவற்றிலுமிருப்பவரும், குஹாஹிதம்=ஆத்துமாக்களிலிருப்பவரும், கஹ்வரேஷ்டம்=அதிஸங்கடஸ்தானங்களிலிருப்பவரும், புராணம்=புராதனருமான, தம்=அந்த, தேவம்=தேவனை, தீரா:=விவேகிகள், அத்யாத்மயோகாதிகமேந=உள்ளத்தை விஷயங்களினின்று பிறித்து பரமாத்துமாவினிடத்தில் இருக்கச்செய்யும் சாதனத்தினால், மத்வா=அறிந்து, ஹர்ஷஶோகௌ=சுகதுக்கங்களை, ஜஹாதி=விடுகின்றனர்.

(பொ - உ.) மிகவருத்தத்தினால் அறியப்படத்தக்கவரும், எல்லாப்பொருள்களிலும் அதிசூக்ஷுமமாகப் பிரவேசித்திருக்கிறவரும், ஆத்துமாக்களிலிருப்பவரும், அதிஸங்கடஸ்தானங்களிலுமிருப்பவரும், புராதனருமான அந்தத்தேவனை உள்ளத்தை விஷயங்களினின்று நீக்கி பரமாத்துமாவினிடத்தில சேர்த்துவைக்கும் சாதனையினால் விவேகிகளறிந்து சுகதுக்கங்களை விட்டுவிடுகின்றனர்.

(வி - உ.) அவர் வருத்தத்தினாலறியப்படத்தக்கவர். விஷய மோகத்தினால்நசித்தஞானத்தையுடையவர்கள் அவரைஒருபோதும் அறியவல்லவரல்லர்; அவர் தரிசனசாத்திரங்களைப்படிக்கட்டும், தருமநூல்களைப்படிக்கட்டும், அவர்களது உள்ளங்களிலுள்ள ஐயம் ஒருபோதும் நீங்குவதில்லை, அவர்களது ஞானம் ஒருபொழுதும்திருப்தியடைவதில்லை. ஸத்தியத்திற்கு ஸத்தியம் அவர்களுக்கருகில் நிழலைப்போல விளங்கிக்கொண்டிருக்கும். கட்டையில் எப்படிமறைந்திருக்கின்றதோ அதுபோல எல்லாப்பொருள்களிலும் அவர் சூக்குமமாகப்பிரவேசித்துமறைந்திருக்கிறார்; தூய்மையானசத்துவகுணமுடையவர்களும் பிரமநிஷ்டர்களுமானவர்களுடைய நிருமல ஞானத்திறந்து அந்தச்சிறந்ததேவதை எறிக்கப்பட்டகட்டையினின்று வெளிப்பட்டுப்பிரகாசிக்கிற தீயைப்போலவிளங்குகிறார். அவர் ஆத்மாவுக்கு அந்தராத்துமா, அவர் ஆத்துமாக்களிலெப்பொழுதும் குடிகொண்டிருக்கிறார். அவர் ஆகாயத்தில் ஓதப்புரோதத்தன்மையாகவிருக்கிறார். அவர் மலைகளின் குகைகளிலும், இமயம் கைலாயம்முதலிய மலைகளின் உச்சிகளிலும், மிகுதியான காட்டுத்தீயினிடத்திலும், பயங்கரமானசமுத்திரத்தின் அலைகளிடத்திலும், ஜநசஞ்சாரமில்லாததும் போவதற்குக்கஷ்டமுமானஇடங்களிலும் அவர்எப்பொழுதும் வீற்றிருக்கிறார். அவர் நமதுநேரானதந்தை, அவர் நமதுஅழிவற்ற பாட்டன். விவேகிகள் அத்தியாத்மயோகத்தினால் அந்த அறிவதற்கரிய பரமாத்துமாவை அறிந்து இன்பதுன்பங்களைவிட்டு நீங்குகின்றனர். பரமாத்துமாவினிடத்தில் ஜீவாத்துமா சேர்ந்திருப்பதே அத்தியாத்மயோகமென்றுசொல்லப்படும். அத்தியாத்துமயோகத்தில் எப்பொழுதுநமதுகருத்து அவர்கருத்துடன்சேருகின்றதோ எப்பொழுது அறிவு அவரது ஸத்திய ஸுந்தர மங்களஸ்வரூபத்தை அறிந்து திருப்தியடைகின்றதோ, அப்பொழுது உள்ளம் அவருக்கு அன்பென்னும்காணிக்கைசெலுத்தி ஆநந்தக்கடலில்மூழ்கி விடயஇச்சையினாலுண்டாகும் இன்பதுன்பங்களிலிருந்துநீங்குகின்றது. எவ்வளவுதூரம் நமதுகருத்து அவர்கருத்தோடும், நமதுஅறிவு அவரறிவோடும், நமதுஅன்பு அவர் அன்போடும்சேருகின்றதோ அவ்வளவுக்குநமக்கும் அவருக்குமுள்ளசம்பந்தம் அதிகஉறுதியுமுள்ளதாகின்றது. மேலும் அவ்வளவுக்கு அவரது தூய்மையானஸாமீப்பியத்தைப்பெற்றுத்தூய்மையுடையவர்களாகிறோம். இப்படிப்பட்டயோகத்தினாலேயே அவரை நாம்அறியவல்லோம், இப்படிப்பட்டயோகத்தினாலேயே அவரால்கட்டளையிடப்பட்ட தருமானுஷ்டானத்தினால மறுமை பலத்தைப்பெறுகிறோம். இவ்விதமானயோகத்தினாலேயே முக்தியின்பம்கிடைக்கிறது, இவ்விதமான யோகத்தினாலேயே முக்தி கிடைக்கிறது.



௫௯

ப்ராணஸ்ய ப்ராணமுத சக்ஷுஷஶ்சக்ஷுருத
ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் மநஸோ யே மநோ
விது: ; தே நிசிக்யுர் ப்ரஹ்ம புராணம்
அக்ர்யம். ... ... ... (எ)

(ப - பி.) ப்ராணஸ்ய, ப்ராணம், உத, சக்ஷுஷ:, சக்ஷு:, உத, ஶ்ரோத்ரஸ்ய, ஶ்ரோத்ரம், மநஸ:, மந:, யே, விது: ; தே, நிசிக்யு:, ப்ரஹ்ம, புராணம், அக்ர்யம்.

(ப - உ.) யே=யார். ப்ராணஸ்ய=உயிருக்கு, ப்ராணம்=உயிராகவும், உத=அப்படியே, சக்ஷுஷ:=கண்ணுக்கு, சக்ஷு:=கண்ணாகவும், உத=அப்படியே, ஶ்ரோத்ரஸ்ய=செவிக்கு, ஶ்ரோத்ரம்=செவியாகவும், மனஸ:=மனதுக்கு, மன:=மனதாகவும், விது:=(பிரமத்தை) அறிகின்றனரோ, தே=அவர்கள், புராணம்=புராதனனும், அக்ர்யம்=மேலோனுமான, ப்ரஹ்ம=பிரமத்தை, நிசிக்யு:=நிச்சயமாகவறிகின்றனர்.

(பொ - உ.) யார் பிரமத்தை உயிருக்குயிராகவும், கண்ணுக்குக்கண்ணாகவும், செவிக்குச்செவியாகவும், மனதிற்குமனதாகவும் அறிகின்றாரோ அவர்களே புராதனனும் மேலோனுமானபிரமத்தை நிச்சயமாக அறிகின்றனர்.

(வி - உ.) யார் இவனை யாவருக்கும் ஞானத்தைக்கொடுப்பவனென்றும், காரணனென்றும், ஆதாரமானவனென்றும் அறிகின்றனரோ அவர்கள் இவனை நிச்சயமாக அறிகின்றனர்.

௫௪

ஏகதைவாநுத்ரஷ்டவ்யமேதத் அப்ரமேயம்
த்ருவம்; விரஜ:பர ஆகாஶாதஜ ஆத்மா
மஹாந்த்ருவ:. ... ... ... (௭)

(ப - பி.) ஏகதா, ஏவ, அநுத்ரஷ்டவ்யம், ஏதத், அப்ரமேயம், த்ருவம்; விரஜ:, பர:, ஆகாஶாத், அஜ:, ஆத்மா, மஹாந், த்ருவ:.

(ப - உ.) அப்ரமேயம்=ஒப்பற்றதும், த்ருவம்=அழிவற்றதுமான, ஏதத்=இதை (பிரமத்தை), ஏகதா ஏவ=ஒன்றாகவே, அநுத்ரஷ்டவ்யம்=அறியத்தக்கது, (அவர்), விரஜ:=பாபகுணமற்றவர், ஆகாஶாத்=ஆகாயத்தைவிட, பர:=சூக்குமமானவர், அஜ:=பிறப்பற்றவர், ஆத்மா=பரமாத்துமா, மஹாந்=பெரியவர், த்ருவ:=நித்தியமானவர்.



(பொ - உ.) ஒப்பற்றவரும் அழிவற்றவருமான கடவுளை ஒருவனென்றறியத்தக்கது. அவர் நிருமலமானவர், ஆகாயத்தைவிட சூக்குமமானவர், பிறப்பற்றவர், பரமாத்துமா, பெரியவர், நித்தியமானவர்.

(வி - உ.) கடவுள் ஒருவர், மேலும் ஒப்பற்றவர்; அவரோடு ஒப்பிடத்தக்க ஒருபொருளுமில்லை. அவர் எல்லாப்பொருள்களிலும் வேறானவர். அவர் ஆகாயத்தைக்கடந்தவர். அவர் ஆகாயத்தினிடையேயிருந்து தனக்குரிய சகலகாரியங்களையும் நியமனம்செய்கிறார்.

௫௫

யஸ்மாதர்வாக்ஸம்வத்ஸரோ(அ)ஹோபி: ப
ரிவர்ததே; தத்தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி
ராயுர்ஹோபாஸதே(அ)ம்ருதம். ...(௮)

(ப - பி.) யஸ்மாத், அர்வாக், ஸம்வத்ஸர:, அஹோபி:, பரிவர்ததே; தத், தேவா:, ஜ்யோதிஷாம், ஜ்யோதி:, ஆயு:, ஹி, உபாஸதே, அம்ருதம்.

(ப - உ.) யஸ்மாத்=யாருடைய நியமத்தால், அர்வாக் ஸம்வத்ஸர:=வருடமாகிய காலம், அஹோபி:=இராப்பகல்களாகிய தினங்களால், பரிவர்ததே=நடந்துகொண்டு வருகின்றதோ, ஜ்யோதிஷாம்=ஒளிக்கு, ஜ்யோதி:=ஒளியாகவும், ஆயு:=ஆயுளுக்குக் காரணமும், அம்ருதம்=நித்தியமுமான, தத்=அதை (அந்தக்கடவுளை), தேவா:=தேவதைகள், உபாஸதி=உபாசிக்கின்றனர்.

(பொ - உ.) யாருடையநியமத்தினால் வருஷகாலம் இராப்பகல்களாகிய தினங்களால் சென்றுகொண்டுவருகின்றனவோ அந்த ஒளிக்கு ஒளியும் ஆயுளுக்குகாரணமும் அழிவற்றதுமானகடவுளை தேவதைகள் உபாஸிக்கின்றனர்.

(வி - உ.) வேறுவேறு உலகங்களில் மனிதர்களைவிட ஞானத்திலும் தருமத்திலும் அன்பிலும் மிகுந்து எவ்வளவு உயிர்களிருக்கின்றார்களோ அவர்கள் யாவரும் பிரமத்தை நியதமாக உபாஸனை செய்கிறார்கள். எப்படி தேவர்கள் அவரை உபாசிக்கின்றனரோ அவ்விதமாக மனிதர்களுக்கும் அவரைஉபாசிக்க அதிகாரமுண்டு. இது நமக்குள்ள சாதாரணமான கௌரவமும் சாதாரணமான செல்வமுமன்று.

௫௯

സൎവ്വസ്യവശീസൎവ്വസ്യേശാനഃസൎവ്വസ്യാ
ധിപതിഃ ; സ നസാധുനാകൎമ്മണാഭൂയാന്നോ
ഏവാസാധുനാകനീയാൻ. ... (௯)

(ப - பி.) സൎവ്വസ്യ; വശീ, സൎവ്വസ്യ, ഈശാനഃ, സൎവ്വസ്യ, അധിപതിഃ, സഃ, ന, സാധുനാ, കൎമ്മണാ, ഭൂയാൻ, നോ, ഏവ, അസാധുനാ, കനീയാൻ.

(ப - உ.) സൎവ്വസ്യവശീ=யாவற்றையும் தன்வசமாக உடையவர், സൎവ്വസ്യ ഈശാനഃ=யாவற்றையும் நடத்துகிறவர், സൎവ്വസ്യ അധിപതിഃ=யாவற்றிற்கும் தலைவர், സഃ=அவர், സാധുനാ കൎമ്മണാ=நல்லசெய்கையால், ന ഭൂയാൻ=பெருமையடையப்போவதில்லை, അസാധുനാ കൎമ്മണാ=தீய்ய செய்கையால், ന കനീയാൻ=சிறுமையடையப் போவதுமில்லை.

(பொ - உ.) யாவும் கடவுளதுவசமாகவிருக்கின்றன. அவர் யாவற்றையும் நியமிப்பவர் மேலும் யாவற்றிற்குந்தலைவர். நல்லசெய்கையால் அவருக்குப்பெருமையும் தீய்யசெய்கையால் அவருக்குச்சிறுமையும் உண்டாவதில்லை.

(வி - உ.) கடவுள் எதை எந்த நியமத்தில் வைத்தாரோ அது அந்த நியமத்திலேயேயிருக்கின்றது; எதுவும் அவரது நியமத்தைக் கடக்கவல்லதன்று. அவர் ஸர்வேச்வரர், யாவற்றையும் நியமிப்பவர், யாவற்றிற்குந்தலைவர். மனிதர்கள் எப்படி நல்லசெய்கையால் உயர்வும், தீய்யசெய்கையால் தாழ்வும் பெறுகின்றனரோ



அப்படி அவரதுநிலை மாறுவது சம்பவமன்று. அவருடைய ஸ்வரூபம் எதைவிட சிறந்ததென்பதொன்றில்லையோ அவ்வளவு சிறந்ததும், மேலும் மாறுதலடைந்து தாழ்ந்தநிலைக்கு வரக்கூடாததெதுவோ அவ்வளவு மாறுவியற்கையுடையதுமாகவிருக்கின்றது.

௫௭

ഏഷസൎവ്വേശ്വരഏഷ ഭൂതാധിപതിരേ
ഷഭൂതപാലഏഷ സേതുൎവ്വിധരണ
ഏഷാംലോകാനാമസംഭേദായ. ...(௧௰)

(ப - பி.) ഏഷഃ, സൎവ്വേശ്വരഃ, ഏഷഃ, ഭൂതാധിപതിഃ, ഏഷഃ, ഭൂതപാലഃ, ഏഷഃ, സേതുഃ, വിധരണഃ, ഏഷാം, ലോകാനാം, അസംഭേദായ.

(ப - உ.) ഏഷഃ=இவர் (கடவுள்), സൎവ്വേശ്വരഃ—ஸர்வேச்வரர், ഏഷഃ=இவர் (கடவுள்), ഭൂതാധിപതിഃ=எல்லாப்பொருள்களுக்குந் தலைவர், ഏഷഃ=இவர், ഭൂതപാലഃ=எல்லாப்பொருள்களையுங்காப்பவர், ഏഷാംലോകാനാം=இவ்வுலகங்களினது, അസംഭേദായ=நிலை தப்பாமலிருக்கும்பொருட்டு, ഏഷഃ സേതുഃ=ஸேதுஸ்வரூபியாகிய இவர், വിധരണഃ=யாவற்றையுந் தாங்கிநிற்கிறார்.

(பொ - உ.) இவர் யாவற்றிற்குமீச்வரர், இவர்எல்லாப்பொருள்களுக்குந் தலைவர், இவர் எல்லாப்பொருள்களையுங்காப்பவர், இவர் இவ்வுலகங்கள் தன்னிலைவிட்டுமாறாதபடி ஸேதுவைப்போல யாவற்றையுந்தாங்கிக்கொண்டிருக்கிறார்.

(வி - உ.) பிரஜாபாலகராகிய பரமேச்வரர் ஒருவிதத்திலும் ஒருகாரியமும் அவரைமீறிநடந்து உலகம் ஒரு கெட்டநிலையை யடையும்படி நேரிடாதவண்ணம் உறுதியான நியமங்களை ஏற்படுத்தி இவ்வுலகராஜ்யத்தைக்காத்துவருகிறார். உலகம் தன்னிலைவிட்டு மாறி கெடாதவண்ணம் ஸேதுவைப்போல இவையாவற்றையுந் தாங்கிக்கொண்டிருக்கிறார்.

௫௮

யஸ்மிந்த்யௌ: ப்ருதிவீ சாந்தரிக்ஷமோதம்
மந: ஸஹ ப்ராணைஶ்ச ஸர்வை:; தமே
வைகம் ஜாநத ஆத்மாநமந்யா வாசோ விமுஞ்
சதாம்ருதஸ்யைஷ ஸேது:. ... (௧௧)

(ப - பி.) யஸ்மிந், த்யௌ:, ப்ருதிவீ, ச, அந்தரிக்ஷம், ஓதம், மந:, ஸஹ, ப்ராணை:, ச, ஸர்வை:; தம், ஏவ, ஏகம், ஜாநத, ஆத்மாநம், அந்யா:, வாச:, விமுஞ்சத, அம்ருதஸ்ய, ஏஷ:, ஸேது:.

(ப - உ.) யஸ்மிந்=இவரிடத்தில், த்யௌ:=விண்ணுலகமும், ப்ருதிவீச=மண்ணுலகமும், அந்தரிக்ஷம்=ஆகாயமும், மந:ஸஹ=மனதுடன், ஸர்வை: ப்ராணை:ச=எல்லாக்கரணங்களும், ஓதம்=நிலைப்பட்டிருக்கின்றன, ஏகம்=ஒருவராகிய, தம்=அந்த, ஆத்மாநம்=பரமாத்துமாவையே, ஜாநத=அறியுங்கள், அந்யா: வாச:=அவருக்குப்புறம்பாகியவார்த்தைகளை, விமுஞ்சத=விடுங்கள், அம்ருதஸ்ய=மோக்ஷமார்க்கத்திற்கு, ஏஷ: ஸேது:=இவர் ஸேதுஸ்வரூபி.

(பொ - உ.) இவரிடத்தில் விண்ணுலகமும், மண்ணுலகமும், ஆகாயமும், மநதுடன் எல்லாப்பொறிகளும் நிலைப்பட்டிருக்கின்றன. ஒன்றாகிய அந்தப்பரமாத்துமாவை அறியுங்கள், அவருக்குப்புறம்பாகியவார்த்தைகளை விடுங்கள், மோக்ஷமார்க்கத்திற்கு இவர்ஸேதுவைப்போன்றவர்.

(வி - உ.) இவரே யாவற்றிற்கும் இரக்ஷகர். இவரே யாவற்றிற்கும் ஆதாரமானவர். இவரை அறியுங்கள், புறம்பான வார்த்தைகளைவிட்டுவிடுங்கள். இவரைவிட்டு ஒருவார்த்தையும் சொல்லாதேயுங்கள், ஒரு விஷயத்தையும் நினையாதேயுங்கள், ஒருகாரியத்தையும் செய்யாதேயுங்கள்; நன்றாக இவருடைய சரணடைந்திருங்கள்; அப்பொழுது பாபதாபமோகங்களிலிருந்து விடுபட்டு அழியாப்பதவியை யடைவீர்கள். இவர் அழியாப்பதவியை அடைவிக்கும் மார்க்கத்திற்கு ஸேதுவைப்போன்றவர்.



௫௯

நஜாயதே ம்ரியதே வா விபஶ்சிந்நாயம் குதஶ்
சிந்நபபூவ கஶ்சித். ... ...(௧௭)

(ப - பி.) ந, ஜாயதே, ம்ரியதே, வா, விபஶ்சித், ந, அயம், குதஶ்சித், ந, பபூவ, கஶ்சித்.

(ப - உ.) அயம்=இது (பரமாத்துமா), நஜாயதே=பிறக்கிறதில்லை, ம்ரியதேவா=இறக்கிறதுமில்லை, விபஶ்சித்=எல்லாமறிந்தது, நகுதஶ்சித்=ஒன்றிலிருந் துண்டாவதுமில்லை, நபபூவகஶ்சித்=ஒன்றாகஆவதுமில்லை.

(பொ - உ.) இந்தப்பரமாத்துமாவுக்குப்பிறப்பில்லை, இறப்புமில்லை; இவர்எல்லாமறிந்தவர். இவர் ஒன்றிலிருந்துண்டாவதுமில்லை, ஒன்றாக ஆவதுமில்லை.

(வி - உ.) பிறப்பிறப்புகளாகிய விகாரங்களற்றவரும், பிழையும் தவறும் இல்லாதவரும், தூய்மையுள்ளவரும், பாபமற்றவருமாகிய பரமாத்துமாவிடத்திலிருந்து இவையாவும் உண்டாயிற்று, ஆனால் தாமொன்றுமல்லர். பால் எப்படி தயிராகின்றதோ, மண் எப்படி வேறுருவத்தைப்பூண்டு எப்படி குடமாகின்றதோ, பொன் வேறுநிலையைப்பெற்று எப்படி குண்டலமாகின்றதோ, அதுபோல அவர் ஒரு பொருளாகபரிணமிக்கிறதில்லை. கயற்றினிடத்திற் பாம்பென்னுமயக்கமும், கானலினிடத்தில் நீரென்னுமயக்கமும், முத்துச் சிப்பியினிடத்தில் வெள்ளி என்னுமயக்கமும் எப்படி உண்டாகிறதோ அதுபோல கடவுளிடத்தில் ஒருமயக்கம் நமக்குத்தோன்றி இவ்வுலகம் விளக்கத்தைப்பெற்றிருக்கிறதென்பதுமில்லை. அவர் இந்த உலகத்தை எல்லாம்படைத்தார். உலகம் பொருண்மையால் கடவுளினும் வேறானதே. அவர் அசித்துப்பொருளுமன்று, பரிமிதமாகிய சித்துப்பொருளுமன்று. அவர் நம்மால் தொழப்படத்தக்கவரும் உபாசிக்கப்படத்தக்கவருமாகவிருக்கிறார். நாமனைவருமோ அவரது சேவகர்களும் உபாஸகர்களுமாக விருக்கிறோம்.

௩0

𑌯𑌦𑌰𑍍𑌚𑌿𑌮𑌦𑍍𑌯𑌦𑌣𑍁𑌭𑍍𑌯𑍋𑌽𑌣𑍁 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾
𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌲𑍋𑌕𑌿𑌨𑌶𑍍𑌚; 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑌦𑌮𑍃-
𑌤𑌂 𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿. ...(கரு)

(ப-பி.) 𑌯𑌤𑍍, 𑌅𑌰𑍍𑌚𑌿𑌮𑌤𑍍, 𑌯𑌤𑍍, 𑌅𑌣𑍁𑌭𑍍𑌯𑌃, 𑌅𑌣𑍁, 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍, 𑌲𑍋𑌕𑌾𑌃, 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌃, 𑌲𑍋𑌕𑌿𑌨𑌃, 𑌚; 𑌤𑌤𑍍, 𑌏𑌤𑌤𑍍, 𑌸𑌤𑍍𑌯𑌂, 𑌤𑌤𑍍, 𑌅𑌮𑍃𑌤𑌂, 𑌤𑌤𑍍, 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂, 𑌸𑍌𑌮𑍍𑌯, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿.

(ப-உ.) 𑌯𑌤𑍍==எது, 𑌅𑌰𑍍𑌚𑌿𑌮𑌤𑍍==ஞானஒளியையே வடிவாக உடையதோ, 𑌯𑌤𑍍==எது, 𑌅𑌣𑍁𑌭𑍍𑌯𑌃==அணுவிலும், 𑌅𑌣𑍁==அணுவோ, 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍==எதனிடத்தில், 𑌲𑍋𑌕𑌾𑌃==உலகங்களும், 𑌲𑍋𑌕𑌿𑌨𑌃 𑌚==உலகத்தாரும், 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌃==நிலைப்படுத்தப்பட்டிருக்கின்றனரோ, 𑌤𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍==அந்தஇதுவே, 𑌸𑌤𑍍𑌯𑌂==ஸத்தியஸ்வரூபி, 𑌤𑌤𑍍==அது, 𑌅𑌮𑍃𑌤𑌂==அழிவற்றது, 𑌤𑌤𑍍—அது, 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂—அறியப்படத்தக்கது, 𑌸𑍌𑌮𑍍𑌯==பிரிய சிஷியனே!, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿==ஞானத்தினால் அறியக்கடவாய்.

(பொ-உ.) யார் ஞானஒளியையே வடிவாக உடையவரோ, யார் அணுவிலும் அதிசூக்குமமானவரோ, யாரிடத்தில் உலகங்களும் உலகத்தவரும் நிலைப்படுத்தப்பட்டிருக்கின்றனரோ அவரோ ஸத்தியஸ்வரூபி அவரோ யழிவற்றவர். அவரோ ஞானத்தினால்அறியப்படத்தககவர். ஓபிரியசிஷியனே! நீ யவரை ஞானத்தினால் அறியக்கடவாய்.

(வி-உ.) ஓஅன்பனே! உனதுகருத்தை யாவற்றிற்கும் உள்ளுக்குள்ளாகவிருக்கிற பரமாத்துமாவினின்று வேறுசெய்யவேண்டாம். அவரினின்று அதை வேறுபடுத்தி தாழ்ந்தநிலைக்கு வந்துவிடவேண்டாம்; ஆனால் அதைத் தூய்மைப்படுத்தி அவரது ஸமீபத்திற்குக்கொண்டுபோகக்கடவாய், கருத்தை ஒருவழிப்படுத்தி அதனால் பரமாத்துமாவையறியக்கடவாய். மேலும் இந்த அத்தியாத்துமயோகத்தினாலுண்டாகும் பேரானந்தத்தை அனுபவிக்கக்கடவாய்.



௩௧

𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌃 𑌶𑌰𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌲𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌶𑌰
𑌵𑌤𑍍 𑌤𑌨𑍍𑌮𑌯𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍. ... ... (க௬)

ப-பி. 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃, 𑌧𑌨𑍁𑌃, 𑌶𑌰𑌃, 𑌹𑌿, 𑌆𑌤𑍍𑌮𑌾, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌤𑌤𑍍 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂, 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨, 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂, 𑌶𑌰𑌵𑌤𑍍, 𑌤𑌨𑍍𑌮𑌯𑌃, 𑌭𑌵𑍇𑌤𑍍.

(ப-உ.) 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃==ஓங்காரம், 𑌧𑌨𑍁𑌃==வில்லைப்போன்றதென்றும், 𑌆𑌤𑍍𑌮𑌾==உயிர், 𑌶𑌰𑌃==அம்பைப்போன்றதென்றும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮==பிரமம், 𑌤𑌤𑍍 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂==அதற்குலக்ஷியஇடமென்றும், 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇==சொல்லப்படுகின்றது, 𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨==தவறுதலில்லாதகருத்தினால், 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂==(பிரமம்)அறியப்படத்தக்கது, 𑌶𑌰𑌵𑌤𑍍==அம்புலக்ஷியவஸ்துவினால் சூழப்படுவதுபோல, 𑌤𑌨𑍍𑌮𑌯𑌃==ஜீவன் கடவுளினாற்சூழப்பட்டதாக, 𑌭𑌵𑍇𑌤𑍍==ஆகக்கடவது.

(பொ-உ.) பிரணவம் வில்லினிடத்ததென்றும். அம்பு உயிரினிடத்ததென்றும், பிரமம் அதற்கு லக்ஷிய இடமானதென்றும் சொல்லப்படுகிறது. பிரமம் தவறுதலில்லாத கருத்தினால் அறியப்படத்தக்கது. ஜீவன் அம்பைப்போல லக்ஷியவஸ்துவினாற் சூழப்படக்கடவது.

(வி-உ.) ஓங்காரத்தைப் பிரணவமென்று சொல்லுகின்றனர். ஓங்காரத்திற்குப்பொருள் படைத்தளித்தழிக்கவல்ல தலைவன்; இது பிரமத்தைக்குறிக்கும்மொழி. ஜீவாத்துமாவை அம்பினிடமாகக்கற்பனைசெய்து ஓங்காரமொழியை வில்லாகக் கற்பனைசெய்து, எப்படி ஒருகுறியினிடத்தில் அம்பை எய்வதற்கு வில்லு அவசியமாகின்றதோ, அதுபோல பிரமத்தை லக்ஷியமாக வைத்துக்கொண்டு ஆத்மாவை அதற்குஸமீபப்படுத்தும்நிமித்தம் பிரஹ்மப்பிரதிபாதகமானசொல் மிகவும் உபகாரமென்றுஅறியலாகின்றது. யாருடைய கருத்து பிரமமென்னும் லக்ஷியத்தையறிந்து அதிற்சென்றிருக்கிறதோ அவர்கள் தாம் கடவுளால் சூழப்பட்டிருப்பதுபோல இவ்வுலகமுழுமையும் அவரால் சூழப்பட்டிருக்கிறதென்றறிகிறார்கள்.

ஸூ ௨

ஸமே ஶுசௌ ஶர்க்கராவஹ்நிவாலுகா விவ
ர்ஜிதே ஶப்தஜலாஶ்ரயாதிபி꞉ ; மநோநுகூ
லே ந து சக்ஷுபீடநே குஹாநிவாதா
ஶ்ரயணே ப்ரயோஜயேத். ... ... (௧௫)

(ப - பி.) ஸமே, ஶுசௌ, ஶர்க்கராவஹ்நிவாலுகாவிவர்ஜிதே, ஶப்தஜலாஶ்ரயாதிபி꞉, மநோநுகூலே, ந, து, சக்ஷுபீடநே, குஹாநிவாதாஶ்ரயணே, ப்ரயோஜயேத்.

(ப - உ.) ஸமே=(மேடுபள்ளமில்லாமல்) சமமாகவும், ஶுசௌ=சுத்தமாகவும், ஶர்க்கராவஹ்நிவாலுகாவிவர்ஜிதே=சிறுமணலும் ரூடேறியமணலுமிராததாகவும், ஶப்தஜலாஶ்ரயாதிபி꞉=ஓசை நீர் இருப்பிடம்முதலியவைகளால், மநோநுகூலே=கருத்திற்குஇன்பந்தருவதும், ந சக்ஷுபீடநே=பார்வைக்குவெறுப்பானபொருள்களில்லாமலிருக்கிறதுமான, குஹாநிவாதாஶ்ரயணே=போதுமானகாற்றுவருகிற தனித்தஇடத்தில், ப்ரயோஜயேத்=கருத்தைப்பிரமத்தினிடத்தில் செலுத்தத்தக்கது.

(பொ - உ.) மேடுபள்ளமில்லாமல் ஸமமாகவும், சுத்தமாகவும், சிறுமணலும் ரூடேறியமணலும் இராததாகவும், ஓசை நீர் இருப்பிடம் முதலியவைகளால் கருத்திற்கின்பந்தருவதாகவும், பார்வைக்கு வெறுப்பானபொருள்களில்லாமலுமிருக்கிற போதுமானகாற்றுவருகிற தனித்தஇடத்தில் கருத்தைப் பிரமத்தினிடத்தில் செலுத்தத்தக்கது.

(வி - உ.) எவ்விடத்திலிருக்கின் கருத்து நன்றாகவிருக்குமோ மேலும் தூய்மையானஅந்தப்புருஷனிடத்திற்கு ஆயாசமின்றி கருத்துச்செல்லுமோ அவ்விடத்திலுட்கார்ந்து உபாஸனைசெய்யத்தக்கது. கெட்டமணம் வீசுகிறதும், அனல்வீசுகிறதும், சுத்திசெய்யப்படாததும் அசுத்தமானதுமானஇடத்தில்உட்காரின் கருத்தில் மாசுண்டாம், மேலும் வேண்டியபடி ஈச்வரனிடத்திலும் சிந்தனைசெல்லாது. ஆனால் எந்தஇடம் மிகவும் தனித்தும் சுத்தமாயும், சுத்திசெய்யப்பட்டும், கூளையிடப்பட்டும், குளிர்ச்சியாயும் ஸமமாயுமிருக்கிறதோ, எவ்விடத்தில் நன்னீருளதோ. எவ்விடத்தில் காற்றினால் தீங்கில்லையோ, எவ்விடத்தில் பரவைகளினது இனிய ஓசை கேட்கப்படுகிறதோ, எவ்விடத்தில் கண்ணுக்கருவருப்பானவிஷயங்களில்லையோ அப்படிப்பட்டஇடத்தைவிட வேறெந்தஇடத்தில் கருத்து மிகவுந்தூய்மையாகக்கூடும்! இதனால் இப்படிப்பட்ட தூய்மையும் சுகமுமானவிடத்தில் உட்கார்ந்து உபாஸனை செய்யவேண்டியது பிரமவாதிகளினதுகருத்து. எந்தஇடத்தில் கருத்து நன்றாகவும் தூய்மையாகவும் கலக்கமற்றும் இருக்கக்கூடுமோ அப்படிப்பட்ட இடத்தில் உபாஸனைசெய்யவேண்டும்; காரணமென்னவெனில் கருத்து கலக்கப்பட்டு நிலைகுலைந்து மலினப்படுமாயின் தூய்மையான ஸ்வரூபமுடைய ஈச்வரனது உபாஸனை கிரமமாய் நிறைவுறாது.

ஸூ ௩

த்ரிருந்நதம் ஸ்தாப்ய ஸமம் ஶரீரம் ஹ்ருதீந்த்ரியா
ணி மநஸா ஸந்நிவேஶ்ய ; ப்ரஹ்மோடுபேந
ப்ரதரேத வித்வாந் ஸ்ரோதாம்ஸி ஸர்வாணி
பயாவஹாநி. ... ... (௧௬)

(ப - பி.) த்ரிருந்நதம், ஸ்தாப்ய, ஸமம், ஶரீரம், ஹ்ருதி, இந்த்ரியாணி, மநஸா, ஸந்நிவேஶ்ய ; ப்ரஹ்மோடுபேந, ப்ரதரேத, வித்வாந், ஸ்ரோதாம்ஸி, ஸர்வாணி, பயாவஹாநி.

(ப - உ.) த்ரிருந்நதம்=மார்பு கழுத்து தலையாகிய மூன்றுறுப்பும் நிமிறவிருக்கிற, ஶரீரம்=உடலை, ஸமம்=சமானமாக, ஸ்தாப்ய=வைத்து, ஹ்ருதி=உள்ளத்தில், இந்த்ரியாணி=கண் முதலியவிந்திரியங்களை, மநஸா=மனதோடு, ஸந்நிவேஶ்ய=சேர்த்து, ப்ரஹ்மோடுபேந=பிரமமென்னும் ஓடத்தினால், வித்வாந்=ஞானி, பயாவ

ஹாநி=அச்சத்தைத்தரும், ஸ்ரோதாம்ஸி ஸர்வாணி=சம்சாரக்கடலினது வெள்ளத்தை, ப்ரதரேத=கடக்கின்றார்.

(பொ - உ.) மார்பு கண்டம் தலை ஆகிய மூவ்வுறுப்புகளும் நிமிரும்படி உடலைவைத்துக்கொண்டு ஞானிகள் சம்சாரமென்னும் கடலினது அச்சத்தைத்தரத்தக்க வெள்ளத்தை பிரமமென்னும் ஓடத்தினாற்கடக்கின்றனர்.

(வி - உ.) முன்னர் எப்படி உபாஸனைக்குரிய இடவிஷயமாய்ச்சொல்லப்பட்டதோ அதுபோல உபாஸநாகாலத்தில் இவ்விதமாக உட்காரவேண்டுமென்பதிவ்வசனத்தினாற்பெறப்படுகின்றது. மார்பு கழுத்து தலை இவைகளை நிமிரவைத்துக்கொண்டு சாதாரணமாய் உட்காரின் உடலுக்குமுள்ளத்திற்குமொருவிகாரமுமுண்டாவதில்லை; ஆனதினாற்றான் உபாஸநாகாலத்திலிவ்விதமாயுட்கார்ந்துகொண்டு பொறியின்செயல்களையும் மனதின்செயல்களையு முள்ளத்திலடக்கல்வேண்டும். அவைகளைப் பலவிதமான வெளிவிடயச் செய்கைகளிலிருந்து பிரித்து மனதுடனாத்துமாவை பரமாத்துமாவினிடத்தில் நிறுத்தல்வேண்டும். மேலுமுள்ளத்தினன்பை யவரிடத்திற்செலுத்தி உய்யவேண்டும்.

---

## அத்தியாயம் - அ.

சூ ச

விஶ்வதஶ்சக்ஷுருத விஶ்வதோமுகோ விஶ்வ
தோபாஹுருத விஶ்வதஸ்பாத்; ஸம்பா
ஹுப்யாம் தமதி ஸம்பதத்ரைர்த்யாவா
பூமீ ஜநயந்தேவ ஏக:. ... (க)

(ப - பி) விஶ்வதஶ்சக்ஷு:, உத, விஶ்வதோமுக:, விஶ்வதோபாஹு:, உத, விஶ்வதஸ்பாத்; ஸம், பாஹுப்யாம், தமதி, ஸம், பதத்ரை:, த்யாவாபூமீ, ஜநயந், தேவ:, ஏக:.



(ப - உ.) விஶ்வதஶ்சக்ஷு:=எங்குங்கண்ணுடையவர், விஶ்வதோமுக:=எங்கும்முகமுடையவர், விஶ்வதோபாஹு:=எங்குங்கையுடையவர், விஶ்வதஸ்பாத்=எங்குங்காலுடையவர் [அவர்], பாஹுப்யாம்=(மனிதர்களைக்) கைகளோடும், பதத்ரை:=(பறவைகளை) இறக்கைகளோடும், ஸம் தமதி=சேர்க்கிறார், தேவ: ஏக:=ஒருகடவுளே, த்யாவாபூமீ=மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும், ஜநயந்=படைத்தவர்.

(பொ - உ.) எங்கும் அவரதுகண், எங்கும் அவரது முகம், எங்கும் அவரதுகை, எங்கும் அவரதுகால், அவர் மனிதரது உடலுக்குக் கைகளையும் பறவைகளினது உடலுக்கு இறக்கைகளையும் சேர்த்துவைத்திருக்கிறார். ஒன்றாகிய கடவுளே மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் படைத்தார்.

(வி - உ.) எங்கும் அவரதுகண்; அவர் யாவற்றிற்கும்சாக்ஷி; யாவற்றினது உள்ளும்புறமும் அவர் ஸமமாய்ப்பார்க்கிறார். இருளடைந்த இரவினது கோரமாகியஇருளும் அவரது பார்வையை மறைக்க வல்லதன்று. எங்கும் அவரதுமுகம்; பாபிகள் அவரதுமுகம் கொடுமையாயிருக்கவும் புண்ணியவான்கள் அவரதுமுகம் குளிர்ந்திருக்கவுங் காண்கின்றனர். எங்கும் அவரதுகை, இவ்வுலகத்தில் எல்லாகாரியங்களிலும் அவரதுவல்லமையும் கௌசலமுமே விளங்குகின்றன. எங்குமவரது அடிகளிருக்கின்றன. அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் மனிதஉடல்களுக்குக் கைகளைச்சேர்த்திருக்கிறார். மேலும் அவர் பக்ஷிஉடல்களுக்கு இறக்கைகளைச்சேர்த்திருக்கிறார். அததற்குரிய தொழிலைச்செய்யவும் அததற்குவேண்டியசுகத்தைப்பெறவும் எதற்கெவ்வகையான உறுப்புப்பயனோ அதற்கவ்வகையான உறுப்பை யருளியிருக்கிறார். உயர்வொப்பான இரண்டாவதற்ற பரமேச்வரரே மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் சிருஷ்டிசெய்திருக்கிறார்.

சூ ரு

ஸர்வத:பாணிபாதம் தத் ஸர்வதோக்ஷி
ஶிரோமுகம்; ஸர்வத:ஶ்ருதிமல்லோகே
ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி. ... ... (உ)

(ப - பி.) ஸர்வத꞉ பாணி பாதம், தத், ஸர்வதோऽக்ஷிஶிரோமுகம், ஸர்வத꞉, ஶ்ருதிமத், லோகே, ஸர்வம், ஆவ்ருத்ய, திஷ்டதி.

(ப - பி.) ஸர்வத꞉பாணிபாதம்=எங்குங்கைகாலுடையவர், ஸர்வதோऽக்ஷிஶிரோமுகம்=எங்கும் கண் தலை முகமுடையவர், ஸர்வத꞉ஶ்ருதிமத்=எங்குஞ்செவியையுடையவர், லோகே=உலகத்தில், ஸர்வமாவ்ருத்ய=எங்கும்பரவி, திஷ்டதி=இருக்கிறார்.

(பொ - உ.) எங்கும் அவரதுகைகால்கள், எங்குமவரது கண் தலை முகம், எங்குமவரது செவி. அவ்ருலகெல்லாம் பரவி இருக்கிறார்.

(வி - உ.) அவரெங்குமிருப்பதை யறிந்து ஓ மானிடர்களாகிய எல்லோரே! நற்செய்கைபுரிதற்குள்ளக்கிளர்ச்சியுடையவர்களாகுங்கள், மேலும் பாவத்தொழிற்புரிதற்கஞ்சுங்கள்.

கூகூ

ஸர்வாநநஶிரோக்ரீவ꞉ ஸர்வபூதகுஹாஶய꞉ ;
ஸர்வவ்யாபீ ஸ பகவாம்ஸ்தஸ்மாத்
ஸர்வகத꞉ ஶிவ꞉. ... ... (ரு)

(ப - பி.) ஸர்வாநநஶிரோக்ரீவ꞉, ஸர்வபூதகுஹாஶய꞉, ஸர்வவ்யாபீ, ஸ꞉, பகவாந், தஸ்மாத், ஸர்வகத꞉, ஶிவ꞉.

(ப - பி.) ஸர்வாநநஶிரோக்ரீவ꞉=எங்கும் முகம் தலை கழுத்து இவைகளையுடையவர், ஸர்வபூதகுஹாஶய꞉=எல்லா உயிர்களது உள்ளங்களிலும் இருப்பவர், ஸ꞉=அந்த, பகவாந்=கடவுள், ஸர்வவ்யாபீ=எங்குமிருப்பவர், தஸ்மாத்=ஆனதால், ஸர்வகத꞉=எதிலுமுள்ளவர், ஶிவ꞉=நன்மையேவடிவாகவுடையவர்.

(பொ - உ.) அவர் முகம் தலை கழுத்து எங்குமிருக்கின்றன, அவர் எல்லா உயிர்களினது உள்ளங்களிலு மிருப்பவர் அந்தக்கடவுள் எங்குமிருப்பவர், ஆனதால் அவர் எதிலும்உள்ளவர் நன்மையையே வடிவாகஉடையவர்.

(வி - உ.) சர்வவியாபியும் சர்வசாக்ஷியுமாகிய பரமேச்வரர் எல்லாருடைய உள்ளங்களிலும் எப்பொழுதுமிருக்கிறார். அவர் எல்லாஉயிர்களினது நன்மையைக்கருதி இவ்விசித்திரமானபடைப்பைச் செய்தருளினார். யார் எவ்வளவு சிறிது நன்மையைப் பெறுகின்றாரோ அவர் அந்த மங்களஸ்வரூபியிடத்திருந்தே பெறுகின்றார். அவர் நமக்கு ஞானத்தைத் தருபவர், சுகத்தைத் தருபவர், முத்தியைத் தருபவர் ; அவர் நமதெல்லா நன்மைகளுக்கு மிருப்பிடமானவர்.

கூஎ

அபாணிபாதோ ஜவநோ க்ரஹீதா பஶ்ய
த்யசக்ஷு꞉ ஸ ஶ்ருணோத்யகர்ண꞉ ; ஸ வேத்தி
வேத்யம் ந ச தஸ்யாஸ்தி வேத்தா தமாஹுர
க்ர்யம் புருஷம் மஹாந்தம். ... (சு)

(ப - பி.) அபாணிபாத꞉, ஜவந꞉, க்ரஹீதா, பஶ்யதி, அசக்ஷு꞉, ஸ꞉, ஶ்ருணோதி, அகர்ண꞉ ; ஸ꞉, வேத்தி, வேத்யம், ந, ச, தஸ்ய, அஸ்தி, வேத்தா, தம், ஆஹு꞉, அக்ர்யம், புருஷம், மஹாந்தம்.

(ப - உ) அபாணிபாத꞉=கையும் காலும் இல்லாதவர், (ஆயினும்) ஜவந꞉=தூரமாய்செல்பவர், க்ரஹீதா=கையிக்குரிய கிரகிக்குந்தொழிலைச் செய்பவர், அசக்ஷு꞉=கண்ணில்லாதவர் [ஆயினும்] பஶ்யதி=பார்க்கிறார், ஸ꞉=அவர், அகர்ண꞉=காதற்றவர், (ஆயினும்) ஶ்ருணோதி=கேட்கிறார், ஸ꞉=அவர், வேத்யம்=அறியத்தகுந்ததை, வேத்தி=அறிகிறார், தஸ்யவேத்தா=அவரையறிந்தவர், நசாஸ்தி=இல்லை, தம்=அவரை, அக்ர்யம்=முதன்மையானவரென்றும், புருஷம்=பூரணரென்றும், மஹாந்தம்=பெரியவரென்றும், ஆஹு꞉=உரைக்கின்றனர்.

(பொ - உ.) அவருக்கு கையில்லை ஆயினும் கிரகிக்கிறார்; அவருக்கு காலில்லை ஆயினும் நடக்கிறார்; அவருக்கு கண்ணில்லை ஆயினும் பார்க்கிறார்; அவர் அறியத்தக்க யாவையும் அறிகிறார், ஆனால் அவரைமுற்றும் அறிந்தவரில்லை; அவரை யாவற்றிற்கும் முதன்மையானவரென்றும், பூரணரென்றும், பெரியவரென்றும் உரைக்கின்றனர்.

(வி - உ.) பரிமிதமாகிய இச்சிற்றுயிர்களுக்கு இருப்பதுபோல அவருக்கு கைகால்முதலிய ஒரு அவயவமும் இல்லை; ஆனால் கைகால்முதலியவைகளினு லாகவேண்டிய தொழில்கள் அவரது கருதற்கரிய வல்லமையினால் சாதாரணமாய் நிறைவேறுகின்றன.

௬௮

யஏஷஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம்
புருஷோ நிர்மிமாண:; ததேவ ஶுக்ரம்
தத்ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே; தஸ்மிந்
லோகா: ஶ்ரிதா: ஸர்வே ததுநாத்யேதி க
ஶ்சந. ... ... ... ... (௫)

(ப - பி.) ய:, ஏஷ:, ஸுப்தேஷு, ஜாகர்தி, காமம் காமம், புருஷ:, நிர்மிமாண:; தத், ஏவ, ஶுக்ரம், தத், ப்ரஹ்ம, தத், ஏவ, அம்ருதம், உச்யதே; தஸ்மிந், லோகா:, ஶ்ரிதா:, ஸர்வே, தத், உ, ந, அத்யேதி, கஶ்சந.

(ப - உ.) ய: ஏஷ: புருஷ:=எந்த இந்தப்புருஷன், ஸுப்தேஷு=உயிர்கள் உறங்கிக்கொண்டிருக்கையிலும், ஜாகர்தி=விழித்திருந்துகொண்டு, காமம்காமம்=அவற்றிற்கு வேண்டியவற்றை, நிர்மிமாண:=படைத்துக்கொண்டிருக்கின்றதோ, தத் ஏவ=அதுவே, ஶுக்ரம்=சுத்தமானது, தத்=அது, ப்ரஹ்ம=பிரமம். தத் ஏவ=அதுவே, அம்ருதம்=அழிவற்றதென்று, உச்யதே=சொ



ல்லப்படுகின்றது, தஸ்மிந்=அவரிடத்தில், ஸர்வே லோகா:=எல்லா உலகங்களும், ஶ்ரிதா:=பற்றிக்கொண்டிருக்கின்றன, தத்=அது, கஶ்சந=ஒருபொழுதும், ந அத்யேதி=அதிக்கிரமிக்கப்படுவதில்லை.

(பொ - உ.) எந்தப்பூரணபுருஷர் எல்லா உயிர்களும் உறங்கிகொண்டிருக்கையிலும் தான் விழித்துக்கொண்டிருந்து அவைகளுக்கு வேண்டிய யாவற்றையும் படைத்துக்கொண்டிருக்கின்றாரோ அவர் சுத்தர், அவர் பிரமம், அவர் அழிவற்றவரென்று சொல்லப்படுகிறார். யாரும் அவரை அதிக்கிரமிக்கமாட்டார்கள்.

(வி - உ.) நாம் விழிப்புக்காலத்திலேயும் உறங்கிகொண்டிருக்கிறோம், அவர் எப்பொழுதும் விழிப்பாகவேயிருந்து நமக்கு பலவிதமாய் பயன்படத்தக்க யாவற்றையும் பகர்ந்துதருகிறார். நாம் நமக்கு நன்மையானதைமுடிக்கும் உழைப்பில் வெறுப்படையும் காலத்தும் அவர் வெறுப்படைவதில்லை. அவர் நமக்கு ஓய்வில்லாது நன்மையைச் செய்துகொண்டேயிருக்கிறார்.

௬௯

அணோரணீயாந் மஹதோமஹீயா நாத்மா
ஸ்ய ஜந்தோர்நிஹிதோ குஹாயாம்; தம
க்ரதும் பஶ்யதி வீதஶோகோ தாதுப்ரஸா
தாந்மஹிமாநமாத்மந:. ... ... (௬)

(ப - பி.) அணோ:, அணீயாந், மஹத:, மஹீயாந், ஆத்மா, அஸ்ய, ஜந்தோ:, நிஹித:, குஹாயாம், தம், அக்ரதும், பஶ்யதி, வீதஶோக:, தாதுப்ரஸாதாத், மஹிமாநம், ஆத்மந:.

(ப - உ.) ஆத்மா=பரமாத்துமா, அணோ:=சிறிதிலும், அணீயாந்=மிகவும்சிறியவர், மஹத:=பெரிதிலும், மஹீயாந்=மிகப்பெரியவர், அஸ்ய ஜந்தோ:=இவ்வுயிர்களுடைய, குஹாயாம்=உள்ளங்களில், நிஹித:=இருக்கிறவர், அக்ரதும்=விடயபோகவிருப்பமற்

றவராயுள்ள, தம் ஆத்மானம்=அந்தக்கடவுளையும், மஹிமானம்= அவரது மகிமையையும், தாது꞉=கடவுளினது, ப்ரஸாதாத்=அருளால், வீதஶோக꞉=துயரமற்றவர், பஶ்யதி=பார்க்கின்றார்.

(பொ - உ.) பரமாத்துமா சிறிதிலும் சிறிது. பெரிதிலும் பெரிது. அவர் உயிர்களினது உள்ளங்களில் உறைந்துகொண்டிருக்கிறார். துயரமற்றவர்கள் விடயபோகவிருப்பமற்ற கடவுளையும் அவரது மகிமையையும் அவரது அருளால் பார்க்கின்றனர்.

(வி - உ.) ஜீவாத்துமாவிலும் அவர் மிக சூக்குமமானவர் மேலும் எல்லையற்ற விசும்பிற்கும் அவர் பெரிதானவர். அவரைப் பார்ப்பதற்கு தூரத்தில் செல்லவேண்டியதில்லை, அவர் நம்மிலும் நம்முள்ளத்திலும் கருத்திலும் குடியிருக்கிறார். அவர் போகவிருப்பமற்றவர், நித்தியதிருத்திபெற்ற ஆநந்தஸ்வரூபி. எந்த அடியார் அவரைத்தரிசிக்கிறாரோ அவருக்குப் பிறகு துயரம்உண்டாவதில்லை; அவரது அன்பில்மூழ்கினவருக்குப் பிறகு ஒருகுறைவும் இருப்பதில்லை.

எ0

ஏகோ வஶீ ஸர்வபூதாந்தராத்மா ஏகம்
ரூபம் பஹுதா ய꞉ கரோதி; தமாத்மஸ்தம்
யே(அ)னுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வ
தம் நேதரேஷாம். ... ... (எ)

(ப - பி.) ஏக꞉, வஶீ, ஸர்வபூதாந்தராத்மா, ஏகம், ரூபம், பஹுதா, ய꞉, கரோதி; தம், ஆத்மஸ்தம், யே, அனுபஶ்யந்தி, தீரா꞉, தேஷாம், ஸுகம், ஶாஶ்வதம், ந, இதரேஷாம்.

(ப - உ.) ய꞉=யார், ஏக꞉=ஒருவரோ, வஶீ=யாவற்றையும் தம்வசமாயுடையவரோ, ஸர்வபூதாந்தராத்மா=எல்லாஉயிர்களுக்கும் உள்ளேயிருப்பவரோ, ஏகம்ரூபம்=ஒருருவத்தை, பஹுதா=பலவிதமாக, கரோதி=செய்கிறாரோ, தம்=அவரை, ஆத்மஸ்தம்



=தம்மிலிருப்பவராக, யே தீரா꞉=எந்தத்தீரர்கள், அனுபஶ்யந்தி= பார்க்கின்றனரோ, ஶாஶ்வதம்=நித்தியமாகிய, ஸுகம்=சுகம், தேஷாம்=அவர்களுடையது, ந இதரேஷாம்=பிறருடையதன்று.

(பொ - உ.) யார் ஒருவரோ, தம்வயமுடையவரோ, எல்லா உயிர்களுள்ளு மிருப்பவரோ, ஒருருவத்தை பல உருவாகச்செய்பவரோ, அவரைத் தம்மிடத்திருப்பவராகப்பார்க்கிற விவேகிகளுடையதே நித்தியசுகம் அது பிறருடையதன்று.

(வி - உ.) யாவும் அவருடைய வசத்தில் இருக்கின்றன, அவர் யாவற்றிற்கும் நியந்தை. அவர் நாமனைவராகிய ஆன்மாக்களுள்ளு மிருக்கிறார். அவர் ஒருவராயிருந்தும் வேறு யாருடைய துணையும் பற்றமல் இவ்விசித்திரமாகிய உலகத்தைப்படைத்தார்; அவர் நித்தியமாகிய தனது ஸ்வரூபத்தில் மாறுபடாமல் இருந்துகொண்டே ஒருருவத்தைப் பல உருவாகச்செய்கின்றார்; தான் வேறொரு பொருளாகத் திரிவதில்லை. இப்படி ஒருவர் நியந்தாவாகவும் எல்லாப்பொருள்களுக்கும் அந்தராத்துமாவாகவும் இருப்பவரை தமக்குள் யார் நேராய் அடைந்து அவருடன் சேர்க்கையைப் பெறுகின்றனரோ; அவர்களடையும் விடயாதீத நித்தியசுகத்தை வேறு யாரும் ஒருபோதும் அடையார்.

எக

நித்யோ(அ)நித்யானாம் சேதனஶ்சேதனானா
மேகோ பஹூனாம் யோ விததாதி காமான்; த
மாத்மஸ்தம் யே(அ)னுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஶா
ந்தி꞉ ஶாஶ்வதீ நேதரேஷாம். ... (அ)

(ப - பி.) நித்ய꞉, அநித்யானாம், சேதன꞉, சேதனானாம், ஏக꞉, பஹூனாம், ய꞉, விததாதி, காமான், தம், ஆத்மஸ்தம், யே, அனுபஶ்யந்தி, தீரா꞉, தேஷாம், ஶாந்தி꞉, ஶாஶ்வதீ, ந, இதரேஷாம்.

(ப - உ.) ய꞉=யார், அநித்யானாம்=அநித்தியமானபொருள்களுக்குள், நித்ய꞉=நித்தியரோ, சேதனானாம்=சித்துப்பொருள்

களுக்கெல்லாம், சேதந:=ஞானத்தைத்தருபவரோ, ஏக:=ஒருவராயிருந்துகொண்டு, பஹூநாம்=யாவருக்கும், காமாந்=வேண்டியவற்றை, விதயாதி=கொடுக்கிறாரோ, தம்=அவரை, ஆத்மஸ்தம்=தம்முள்ளிருப்பவராக, யே தீரா:=எந்தவிவேகிகள், அநுபஶ்யந்தி=பார்க்கின்றனரோ, ஶாஶ்வதீ=அழிவற்ற, ஶாந்தி:=சாந்தி, தேஷாம்=அவருடையதே, ந இதரேஷாம்=பிறருடையதன்று.

(பொ - உ.) யார் எல்லா அநித்தியப்பொருள்களுக்குள் நித்தியரோ, எல்லா ஞானப்பொருள்களுக்கும் ஞானத்தைத்தருபவரோ, ஒருவராயிருந்தும் யாவருக்கும் வேண்டியவற்றைக்கொடுக்கிறாரோ. அவரைத் தம்முள் இருப்பவராகக்காண்கிற தீரர்களுடையதே அழிவற்ற சாந்தி அது வேறு யாருடையதுமன்று.

(வி - உ.) இவ்வுலகத்தின்கண்ணேயுள்ள எல்லாப்பொருள்களும் அநித்தியங்கள்; கேவலம் அவரொருவரே நித்தியர், அவர் சித்துப்பொருள்களுக்கெல்லாம் ஞானத்தைக்கொடுத்துப் படைத்தார்; அவர் அவைகளுக்கு உணவைத்தந்து காப்பாற்றிவருகிறார்; இந்த எண்ணிறந்த உயிர்களுக்கு வேண்டியதனைத்தையும் அவரொருவரே பூர்த்திசெய்கிறார். இவ்வொரு மண்ணுலகத்திலேயே அவரால் காக்கப்படவேண்டிய உயிர்களெத்தனை இவ்வொவ்வொரு உயிருக்கும் வேண்டியவை எத்தனை. அவர் ஒருவரே இவ்வெல்லாவற்றிற்கும் வேண்டியவற்றைத் தகுந்தபடி கொடுத்துவருகிறார்; அவர் ஒரு அற்பமாகிய புழுவுக்கு வேண்டியதையும் மறப்பதில்லை. யாவருக்கும் நண்பரும், நன்மையே வடிவாகக் கொண்டவருமான இம்மிகச்சிறந்த தேவதையை யார் தமமுள்ளமாகியகோயிலில் நேராய் தரிசனை செய்கின்றாரோ அவரது மனத்திருத்தியென்னும் தடாகம் ஒருபொழுதும் காய்ந்துபோவதில்லை, எப்பொழுதும் நிறைந்திருக்கின்றது, அவர்களுக்கே நித்தியசாந்தி கிடைக்கின்றது.

௭௨

யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹ
க்ரந்தய: ; அத மர்த்யோ(அ)ம்ருதோ பவத்யே
தாவதநுஶாஸநம். ... ... (௰)



(ப - பி.) யதா, ஸர்வே, ப்ரபித்யந்தே, ஹ்ருதயஸ்ய, இஹ, க்ரந்தய:, அத, மர்த்ய:, அம்ருத:, பவதி, ஏதாவத், அநுஶாஸநம்.

(ப - உ.) யதா=எப்பொழுது, இஹ=இவ்வாழ்க்கையிலேயே, ஹ்ருதயஸ்ய=உள்ளத்தினது, ஸர்வே=எல்லா, க்ரந்தய:=பாபமாகிய முடிச்சிகள், ப்ரபித்யந்தே=அவிழ்ந்துபோகின்றனவோ, அத=அப்பொழுது, மர்த்ய:=மனிதன், அம்ருத:=அழிவற்ற பதவியைப் பெற்றவன், பவதி=ஆகிறான், ஏதாவத்=இதுவே, அநுஶாஸநம்=உபதேசம்.

(பொ - உ.) இவ்வாழ்க்கையிலேயே எப்பொழுது உள்ளத்தினது பாபமாகிய முடிச்சிகளனைத்தும் அவிழ்ந்துபோகின்றனவோ அப்பொழுது மனிதன் அழிவற்ற நிலையைப் பெறுகிறான். இதுதான் உபதேசம்.

(வி - உ.) அஞ்ஞானமும் மோகமும் நமதுள்ளத்திலுள்ள முடிச்சுகள். பாபவிருப்பமும் அஞ்ஞானமுமாகிய உள்ளத்திலுள்ள முடிச்சிகளனைத்தையும் அழிக்காவிடின் மிகத் தூய்மையையுடைய புருஷனை அடைவது சம்பவமன்று. மிகவருத்தத்துடன் நீக்கத்தக்க இவ்வுள்ளத்தின் முடிச்சுகளனைத்தும் நீங்கியபொழுது, எந்த நல்ல வழியைப்பற்றின் சிறந்த பிதாவுக்கருகேசென்று ஒரு பயமுமின்றி அவருடன் பேரானந்தத்தில் அழிவற்ற வாழ்க்கையைப் பெறுவோமோ அவ்வழிப்போக்கர்களானோமென்றும், மரணத்தைக்கடந்த பரமபுருஷனை அடைந்தனமென்றும் அறியக்கடவோம். இது அநுசாஸநம் இது உபதேசம்.

—————00—————

## அத்தியாயம் - ௯.

௭௩

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம்
வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே; தயோரந்ய: பி
ப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி.()

(ப - உ.) த்வா, ஸுபர்ணா, ஸயுஜா, ஸகாயா, ஸமாநம், வ்ருக்ஷம், பரிஷஸ்வஜாதே, தயோ:, அந்ய:, பிப்பலம், ஸ்வாத்வத்தி, அநச்நந், அந்ய:, அபிசாகசீதி.

(ப - உ.) த்வா=இரண்டு, ஸுபர்ணா=அழகானபரவைகள், ஸயுஜா=இரட்டையாகவும், ஸகாயா=தோழமையுடனும், ஸமாநம்=ஒரு, வ்ருக்ஷம்=மரத்தில், பரிஷஸ்வஜாதே=குடியிருக்கின்றன, தயோ:=அவைகளுள், அந்ய=ஒன்று, பிப்பலம்=செய்கைகளின் பயனை, ஸ்வாத்வ=எப்படி உண்டாகின்றதோ அப்படி, அத்தி=அனுபவிக்கின்றது, அந்ய:=வேறொன்று, அநச்நந்=அனுபவிக்காமலே, அபிசாகசீதி=பார்த்துக்கொண்டுமாத்திரமிருக்கின்றது.

(பொ - உ.) இரண்டு அழகான பரவைகள் இரட்டையாகவும் தோழமையுடனும் குடியிருக்கின்றன. அவைகளுள் ஒன்று செய்கைகளின் பயன்களை யனுபவிக்கின்றது. மற்றொன்று பார்க்காமல் அனுபவித்துக்கொண்டுமாத்திரம் இருக்கின்றது.

(வி - உ.) இரண்டழகிய பரவைகள் ஜீவாத்துமாவும் பரமாத்துமாவும்; பரமான்மாவினது அழகின் விளக்கத்தைப்பெற்று ஜீவான்மாவும் அழகுடையதா யிருக்கின்றது. ஜீவாத்துமா அதற்குள்ளேயிருக்கிற பரமாத்துமாவுடன் எப்பொழுதும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கின்றது. அவற்றிற் கிடையில் சிறிதிடமும் இல்லை; அவை இரண்டும் ஒருடலின் கண்ணே யிருக்கின்றன மேலும் அவை இரண்டும் தோழமையாயிருக்கின்றன. பரமாத்துமா ஜீவாத்துமாவினிடத்தில் சாக்ஷிரூபமாயிருந்துகொண்டு அதனது செய்கைக்குரிய பயன்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றது, ஜீவாத்துமா அதைப்பெற் றனுபவிக்கின்றது. பரமாத்துமா அனபுவைத்து ஜீவாத்துமாவைக் காத்துவருகின்றது, ஜீவாத்துமா இம்மையி லிருந்துகொண்டு பரமாத்துமாவினிடத்தில் பிரீதியுடன் அதற்குப் பிரீதியாகிய காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றன. பரமாத்துமா படைப்பது, ஜீவாத்துமா படைக்கப்பட்டது; பரமாத்துமா நியமிப்பது, ஜீவாத்துமா நியமத்துக்குள்ளடங்கியது; பரமாத்துமா செய்கைக்குரிய பயனைத்தருவது, ஜீவாத்துமா அதை யநுபவிப்பது;



பரமாத்துமா ஒன்றே நமக்குத்துணை. நாம் அவரது அருளால் விடயசுகங்களையும் ஆன்மசுகத்தையும் பேரின்பத்தையும் அனுபவிக்கின்றனம். ஜீவாத்துமா இவ்வுடலாகிய கூட்டின்கண்ணேயிருந்துகொண்டும் அனைத்திற்கும் அன்னைபோன்ற கடவுளினது அருளாகிய மார்பினிடத்து போஷிக்கப்பட்டு பருவம்வந்தபொழுது இவ்வுடலை விட்டுநீங்கி அவரைப்பின்பற்றி அவருடன்எப்பொழுதும்சஞ்சரிக்கும்.

எசு

ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ(அ)நீ
சயா சோசதி முஹ்யமாந: ; ஜுஷ்டம் யதா
பச்யத்யந்ய மீசமஸ்ய மஹிமாந மிதிவீத
சோக:. ... ... ... (உ)

(ப - பி.) ஸமாநே, வ்ருக்ஷே, புருஷ:, நிமக்ந:, அநீசயா, சோசதி, முஹ்யமாந: ; ஜுஷ்டம், யதா, பச்யதி, அந்யம், ஈசம், அஸ்ய, மஹிமாநம், இதி, வீதசோக:.

(ப - உ.) ஸமாநே வ்ருக்ஷே=ஒருமரத்தில், புருஷ:=ஜீவன், நிமக்ந:=இருந்துகொண்டு, அநீசயா=தீநத்தன்மையில், முஹ்யமாந:=முழுகினவனாகி, சோசதி=துயரப்படுகிறான், ஜுஷ்டம்=யாவரால் தொழப்பட்டவனும், அந்யம்=வேறொருவனுமாகிய, ஈசம்=ஈசனையும், அஸ்ய=அவனது, மஹிமாநம்=மஹிமையையும், யதா=எப்பொழுது, பச்யதி=பார்க்கிறானோ, [அப்பொழுது] இதி வீதசோக:=துயரமற்றவனாகிறான்.

(பொ - உ.) ஜீவாத்துமா சரீரத்திலிருந்துகொண்டு தீனத்தன்மையில் மூழ்கியதாகித் துயரப்படுகின்றது; ஆனால் எப்பொழுது யாவராலுந்தொழப்பட்ட ஈசனையும் அவரதுமகிமையையும் பார்க்கின்றதோ அப்பொழுது துயரமற்றதாகின்றது.

(வி - உ.) எதுவரையில் நாம் பரமேச்வரனை மறந்து கேவலம் விடயசுகத்தை யடையும் நிமித்தம் ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்

கின்றோமோ அதுவரையில் நமக்கடிக்கடி துயரமுண்டாகும்; ஆனால் அன்புடன் எப்பொழுது யாவராலும் தொழப்படும் பரமேச்வரனையும் அவரது மகிமையையுங் கண்டு மேலும் அவரால் நியமிக்கப்பட்ட தருமத்தைச் சிரத்தையுடன் முடிக்க விருக்கிறோமோ அப்பொழுது ஒரு துயரமும் உண்டாவதில்லை, பேரானந்தம் உண்டாகின்றது.

எரு

யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்த்தாரம்
ஈஶம் புருஷம் ப்ரஹ்மயோநிம்; ததா வி
த்வாந்புண்யபாபே விதூய நிரஞ்ஜந: ப
ரமம் ஸாம்யமுபைதி; மஹாந்தம் விபுமா
த்மாநம்மத்வா தீரோ ந ஶோசதி. ... (ங)

(ப - பி.) யதா, பஶ்ய:, பஶ்யதே, ருக்மவர்ணம், கர்த்தாரம், ஈஶம், புருஷம், ப்ரஹ்மயோநிம்; ததா, வித்வாந், புண்யபாபே, விதூய, நிரஞ்ஜந:, பரமம், ஸாம்யம், உபைதி, மஹாந்தம், விபும், ஆத்மாநம், மத்வா, தீர:, நஶோசதி.

(ப - உ.) யதா=எப்பொழுது, பஶ்ய:=ஞானி, ருக்மவர்ணம்=ஸ்வப்பிரகாசனாகவும், கர்த்தாரம்=உலககருத்தாவாகவும், ஈஶம்=நியந்தாவாகவும், புருஷம்=பூரணனாகவும், யோநிம்=காரணஸ்வரூபனாகவுமிருக்கிற, ப்ரஹ்ம=பிரமத்தை, பஶ்யதே=தரிசிக்கிறாரோ, ததா=அப்பொழுது, வித்வாந்=ஞானி, புண்யபாபே=புண்ணியபாவங்களை, விதூய=விடுத்து, நிரஞ்ஜந:=கசடற்ற, பரமம்=உயர்ந்த, ஸாம்யம்=பதவியை, உபைதி=அடைகிறார், மஹாந்தம்=மஹானும், விபும்=வியாபகனுமாகிய, ஆத்மாநம்=பரமாத்துமாவை, மத்வா=சிந்தித்து, தீர:=விவேகி, நஶோசதி=துக்கிக்கிறதில்லை.



(பொ - உ.) எப்பொழுது ஞானி ஸ்வப்பிரகாசனாகவும், உலகத்தின் கருத்தாவாகவும், நியந்தாவாகவும், காரணஸ்வரூபியாகவும்இருக்கிறபிரமத்தைத் தரிசிக்கிறாரோ அப்பொழுது அவர் புண்ணியபாபங்களிலிருந்து நீங்கி கல்மஷமற்ற உயர்ந்த பதவியைப்பெறுகிறார்; விவேகி மஹானும் ஸர்வவியாபியுமான பரமாத்துமாவை அறிந்து பிறகு துயரப்படுகிறதில்லை.

(வி - உ.) எப்பொழுது ஞானத்தைப் பெற்ற பிரமநிஷ்டராகிய பிரமோபாஸகர் தனது ஞானக்கண்ணினால் பிரமத்தை நேரே தரிசிக்கிறாரோ அப்பொழுது அவர் பிரமத்தையடைந்து பாபத்திலிருந்து நீங்குகிறார். மேலும் புண்ணியத்தின் பயனை விரும்பி யாதொருசெய்கையும் செய்வதில்லை. அவர் விடயசம்பந்தமற்றவராகி உலகத்தினது நன்மையின்பொருட்டும் கடவுளினது அன்பின்பொருட்டும் கடவுளுக் கன்பான காரியங்களைச்செய்கிறார். எப்பொழுது பிரபுவானவர் உள்ளத்திலெழுந்தருளுகிறாரோ அப்பொழுது மனோவிருத்திகளனைத்தும் அடங்குகின்றன, அப்பொழுது சித்தம் ஸமத்தன்மையைப்பெற்றுத்தூய்மையுடனிருக்கின்றது, விவேகிகள் கடவுளையடைந்துபின்புதீனத்தன்மையில்மூழ்கித்துயரப்படுவதில்லை.

எசா

பரமேவாக்ஷரம் ப்ரதிபத்யதே ஸ யோ ஹ
வை தத³ச்சாயமஶரீரமலோஹிதம் ஶுப்ர
மக்ஷரம் வேதயதே. ... ... (ச)

(ப - பி.) பரம், ஏவ, அக்ஷரம், ப்ரதிபத்யதே, ஸ:, ய:, ஹ, வை, தத், அச்சாயம், அஶரீரம், அலோஹிதம், ஶுப்ரம், அக்ஷரம், வேதயதே.

(ப - உ.) ய:=யார், அச்சாயம்=இருளற்றவராகவும், அஶரீரம்=உடலற்றவராகவும், அலோஹிதம்=வருணமற்றவராகவும், ஶுப்ரம்=தூய்மையானவராகவும், அக்ஷரம்=அழிவற்றவராகவுமிருப்பவரை, வேதயதே=அறிகிறாரோ, ஸ:=அவர், பரம் ஏவ அக்ஷரம்=அழிவற்றவரையே, ப்ரதிபத்யதே=அடைகிறார்.

(பொ - உ.) யார் அந்த இருளற்றவராகவும் வருணமற்றவராகவும் தூய்மையானவராகவும் அழிவற்றவராகவுமிருப்பவரை அறிகிறாரோ அவரந்தச்சிறந்தவரும் அழிவற்றவருமானவரை அடைகிறார்.

(வி - உ.) பரமேச்வரர் எப்பொழுதும் எங்கும் இருக்கிறார். தூய்மையான சித்தமுடையவர்களாகி அவரை அறிந்தாற்றான் அவரை அடையலாகும்.

எஎ

அத்ருஷ்டமவ்யவஹார்யமக்ராஹ்யமலக்ஷணமசி
ந்த்யமவ்யபதேஶ்யமேகாத்மப்ரத்யயஸாரம்
ப்ரபஞ்சோபஶமம் ஶாந்தம் ஶிவமத்வைதம்.()

(ப - பி.) அத்ருஷ்டம், அவ்யவஹார்யம், அலக்ஷணம், அசிந்த்யம், அவ்யபதேஶ்யம், ஏகாத்மப்ரத்யயஸாரம், ப்ரபஞ்சோபஶமம், ஶாந்தம், ஶிவம், அத்வைதம்,

(ப - உ.) அத்ருஷ்டம்=அவர் கண்ணால் காணப்படாதவர், அவ்யவஹார்யம்=வியவகரிக்கப்படக்கூடாதவர், அக்ராஹ்யம்=கருமேந்திரியங்களினால் கவரப்படமாட்டாதவர், அலக்ஷணம்=பரிமிதமானலக்ஷணமற்றவர், அசிந்த்யம்=கருதிமுடியாதவர், அவ்யபதேஶ்யம்=சொல்லிமுடியாதவர், ஏகாத்மப்ரத்யயஸாரம்=தானொருவனுனென்பதற்கு உயிர்களினது ஆத்துமப்பிரத்யயத்தையே பிரமாணமாக உடையவர், ப்ரபஞ்சோபஶமம்=ஸம்ஸாரதருமங்களைக்கடந்தவர், ஶாந்தம்=சாந்தமானவர், ஶிவம்=மங்களஸ்வரூபி, அத்வைதம்=ஒன்றானவர்

(பொ - உ.) கடவுள் கண்ணால்காணப்படாதவர், கருமேந்திரியங்களாற்கவரப்படாதவர், வியவஹரிக்கப்படக்கூடாதவர், பரிமிதமான லக்ஷணமற்றவர், கருத்திலடங்காதவர், சொல்லிமுடியாதவர், உயிர்களினது ஆத்துமப்பிரத்தியயத்தையே த



ன்னிருத்தலுக்குப் பிரமாணமாக உடையவர், ஸம்ஸாரதருமத்தைக்கடந்தவர், சாந்தமானவர், மங்களஸ்வரூபி, ஒப்புயர்வான இரண்டாவதற்றவர்.

(வி - உ.) அவ்விறுதியற்ற ஞானத்தையே வடிவாகக்கொண்ட பரமேச்வரர் கண்களுக்குப் புலப்படத்தக்கவரன்று, அவரைக்கைகளால் பற்ற முடியாது, அவரைக் கருத்தினால் கருதவும்முடியாது, அவரைப்பரிமிதப்பொருளைப்போல விசேஷமாகவறியவுங்கூடாது, கேவலம் நிருமலமான ஸகஜஞானத்தினாற்றான் அவர் விளங்குவார். மேலும் ஒரு ஆத்துமப்பிரத்தியயத்தினுடைய பலத்தில்தான் ஞானத்திற்கு விளங்குகிற ஸத்திய சுந்தர மங்களஸ்வரூபியாகிய புருஷனது இருத்தலில் நாம் நம்புகிறோம். ஞானம் எந்த இயற்கையான அழிவுமிறுதியுமற்ற பூரணனை விளக்குகின்றதோ ஆன்மா அந்தப்பூரணபுருஷனது இருத்தலில் நம்புகின்றது. ஞானத்தினால் உண்மை விளங்குகின்றது. ஆன்மாவுக்கு அவ்வுண்மையில் நம்பிக்கையுண்டாகின்றது. ஆனதினால் இந்த ஸ்வபாவஸித்தமாகியஆத்துமப்பிரத்தியயமே அவரதுஅஸ்தித்வத்தின்பிரமாணத்தை நிலைநிறுத்துவதற்கு ஒன்றான ஏது. எப்பொழுது ஆத்துமப்பிரத்தியயஸித்தமாகிய இறுதியற்றபுருஷன் ஸஹஜஞானத்தினால் விளங்குகிறாரோ அப்பொழுது புத்தி அவரது உலகப்படைப்பிலுள்ள கௌசலத்தைக் காண்பித்து அவரது விசேஷ ஞானத்தைத் தெரிவிக்கின்றது, மேலும் உலகத்திலுள்ள நன்னோக்கத்தினது நியமங்களைக் காண்பித்து அந்த நியந்தாவின் நல்ல தன்மையை விளக்குகின்றது. நமது பரிமிதபுத்தியால் அம்முடிவற்றபுருஷனை முழுதும் அறியக்கூடாவிட்டாலும் அந்தப்புத்தி ஸஹஜஞானத்தை மிகவும் போஷிக்கின்றது. ஆனதால் பிரமஜிக்கியாஸுக்களான முமுக்ஷுக்கள் உலகத்திலுள்ள காரியங்களை உள்ளும்புறமுமாலோசிப்பதினால் புத்தியைப்பரிசுத்தப்படுத்த ஒருபொழுதும் அலக்ஷியம் செய்யக்கூடாது. புத்தி செவ்வையாகப் பரிசுத்தப்பட்டால் ஸகஜஞானத்தினுடையவும் ஆத்துமப்பிரத்தியயத்தினுடையவும் அதிகாரத்தையும் நோக்கத்தையும் நாம் விசேஷமாக அறியவல்லவர்களாவோம்.

உலகம் யாரால் படைக்கப்பட்டு யாருடைய நியமங்களுக்குள்ளாகி இருக்கின்றதோ அவர் எல்லா உலகதருமத்தையுங் கடந்தவர். இராகம் த்வேஷம் முதலிய மனோவிருத்திகளொன்றும் அவரிடத்திலில்லை; ஆனதால் அவர் சாந்தர், அவர் மங்களஸ்வரூபி, அ

வர் யாவற்றின் நன்மையையும்நோக்கி இவ்வுலகத்தை நியதமாகப் பாலித்துவருகிருர். அவருக்கு ஒப்பாவது உயர்வாவதான இரண்டாவதுபொருளில்லை. அவர் அத்துவிதியர்.

எஅ

தடெ-தசு வெ-யஃ வெ-த்ராசுவெ-யொவித்தா
சு வெ-யொ உ-ந்ஸாசுஸவ-ஸாசு சுதொர தா
ாயடியரா-த்ரா. ... ... (அ)

(ப - பி.) தசு, ஏதசு, வெ-யஃ, வு-த்ராசு, வெ-யஃ, வித்தசு, வெ-யஃ, சுந்ஸாசு, ஸவஸாசு, சுதாதரம், யசு, சுயம், ஆத்ரா.

(ப - உ.) யசு=எந்த, சுயம்=இந்த, ஆத்ரா=பரமாத்துமா, ஸவஸாசு=யாவற்றிலும், சுதாதரம்=அதிக நெருங்கியதோ, தசு=அந்த, ஏதசு=இது (பிரமம்), வெ-யஃ=அன்பிற்குறியது, வு-த்ராசு=புதல்வனிலும், வெ-யஃ=அன்பிற்குரியது, வித்தசு=பொருளிலும், வெ-யஃ=அன்பிற்குரியது, சுந்ஸாசு=வேறு யாவற்றிலும், வெ-யஃ=அன்பிற்குரியது.

(பொ - உ.) யாவற்றிற்கும் அதிக நெருக்கியவராயிருக்கிற எந்தப்பரமாத்துமாவோ அந்தஇவர் புத்திரனைவிடவும்பிரியர், பொருளைவிடவும் பிரியர் வேறு யாவற்றைவிடவும்பிரியர்.

(வி - உ.) அவரைவிட நெருங்கிய மிக அன்புள்ளாநண்பர் நமக்கு வேறு யாருமில்லை.

எகூ

ஸயொந்யாரா-த்ரநவ்ரியம்ஸு-வாணம்ஸு-
யாசு வ்ரியம்ரொத்ஸ்யதீதி ஈரஸ்ஸுரொஹத
யெவஸ்யாசு. ... ... (எ)



(ப - பி.) ஸஃ, யஃ, சுந்யம், ஆத்ரநஃ, வ்ரியம், ஸு-வாணம், ஸு-யாசு, வ்ரியம், ரொத்ஸ்யதி, ஈதி ; ஈரஸ்ஸுரஃ, ஹ, தயா, ஏவ ஸ்யாசு.

(ப - பி.) ஆத்ரநஃ=பரமாத்துமாவைவிட, சுந்யம்=வேருன தை, வ்ரியம்=பிரியமானதென்று, ஸு-வாணம்=சொல்லுகிறவர்களுக்கு, யஃ ஸஃ=யாரோ அ(பிரமத்தைப்பிரியமென்றுசொல்லுகிற) வர், வ்ரியம்=[உங்களுக்குப்] பிரியமானது, ரொத்ஸ்யதிஈதி=அழிகிறதென்று, ஸு-யாசு=சொல்லுகின்றனர், ஈரஸ்ஸுரஃ=(இப்படி சொல்ல அவர்) அதிகாரி, தயா ஏவ=அப்படியே, ஸ்யாசு=ஆகின்றது.

(பொ - உ.) யார் பரமாத்துமாவைவிடவேருனதைப்பிரியமானதென்று சொல்லுகிருரோ அவரை நோக்கி பிரமப்பிரியவாதி உங்களுக்குப் பிரியமானது அழியுமென்று சொல்லுகிருர். அவருக்கிப்படிசொல்ல அதிகாரமுண்டு. உண்மையில் அவர் சொல்லுகிறபடியே ஆகின்றது.

(வி - உ.) மக்கள் மனைவி பொருள் சுற்றத்தார் யாவும் அநித்தியம். இந்த ஸம்ஸாரத்தினது ஸகல பிரியவஸ்துக்களிலிருந்தும் ஒருகாலத்திலில்லாவிட்டாலும் வேறொருகாலத்தில் நீங்கவேண்டிவரும், ஆனல் யாவற்றைவிட அதிக நெருங்கியவரும் மிக அன்பிற்குரியவருமான பரமாத்துமாவை விட்டு இம்மையிலும் மறுமையிலும் ஒருபொழுதும் நீங்குவதில்லை. பரமேச்வரனுக்கு வேருனதை அன்பிற்குரியதென்று யார் உரைக்கின்றனரோ அவரன்பு செய்வது அவசியம் அழியுமென்னும் வாக்கியம் ஐயமற்றது. விடயவிருப்பத்தில் விசேஷ மூடத்தன்மை பெற்றிருக்கிறவர்களுக்கும் இப்படி உபதேசிக்கவேண்டிய அதிகாரம் ஒவ்வொரு ஞானியாகிய பிரமோபாஸகருக்குமுண்டு. மேலும் யார் அவருடைய உபதேசத்தைப் பெற்றுக்கொள்ள வில்லையோ அவர்களுக்குத் துயரமுண்டாகின்றது. யாவருக்கும் அதிகநெருங்கியவரும் நன்மையேவடிவாகக்கொண்டிருக்கிறவருமான பரமாத்மாவே யாவற்றிலும் அதிகப்பிரியமானவர், அ[வ]ரிடத்து அன்புசெய்யின் அவரது அன்பிற்குரிய

எல்லாவற்றினிடத்தும் அன்புசெய்தல்வேண்டும், மேலும் இவ்வுலகஸம்ஸாரத்தின் நன்மையின் நிமித்தம் அவர் யாராரிடத்தில் மிகுந்த பிரீதியும் நட்பும் செய்யும்படி கட்டளையிட்டிருக்கின்றாரோ அவர்களிடத்தில் தகுந்த பிரீதியும் நட்பும் வைக்கவேண்டும். ஆனால் பரமாத்துமாவினிடத்தில்தவிர வேறு யாதொருபொருளினிடத்தில் அதிக அன்புவைத்து அதில் மூழ்கிக்கிடப்பது தூய்மையுடன் கூடிய அன்பின் ஸ்வரூபமன்று.

௮௦

ஆத்மானமேவ ப்ரியமுபாஸீத; ஸய ஆத்மா
நமேவ ப்ரியமுபாஸ்தே நஹாஸ்ய ப்ரியம் ப்ர
மாயுகம் பவதி. ... ... (௮)

(ப - பி.) ஆத்மாநம், ஏவ, ப்ரியம், உபாஸீத; ஸ:, ய:, ஆத்மாநம், ஏவ, ப்ரியம், உபாஸ்தே, ந, ஹ, அஸ்ய, ப்ரியம், ப்ரமாயுகம், பவதி.

(ப - உ.) ஆத்மாநம் ஏவ=பரமாத்மாவையே, ப்ரியம்=அன்பாக உபாசித்தல்வேண்டும், ய:=யார், ஸ: ஆத்மாநம் ஏவ=பரமாத்துமாவையே, ப்ரியம்=அன்பாக, உபாஸ்தே=உபாசிக்கின்றனரோ, அஸ்ய=அவரது, ப்ரியம்=அன்பானவிஷயம், ப்ரமாயுகம் அழிவு, ந பவதி=ஆவதில்லை.

(பொ - உ.) பரமாத்துமாவை அன்பாக உபாசித்தல்வேண்டும். யார் பரமாத்துமாவை அன்பாக உபாசிக்கின்றாரோ அவருக்கன்பானது (பரமாத்துமா) ஒருபோதும் அழிவதில்லை.

(வி - உ.) யார் நமதுகருத்தாகியநிலத்தில் அன்பென்னும்மலரின் அதிக அழகிய மொக்கையுண்டாக்கினாரோ முயர்ச்சியினால் அதை மலரச்செய்து அதனாலவரை அருச்சித்தல்வேண்டும். அழிவற்றபரமேச்வரர் யாருக்குப் பிரியமானவரோ அவருக்குப் பிரியமானது ஒருபொழுதும் அழிவதில்லை. அவருக்குப் பிரியமான கடவுளிடத்திலிருந்து அவர் எப்போதாயினும் பிரிவார்களென்பது சம்பவமன்று.



௮௧

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்
தவ்யோ நிதித்யாஸிதவ்ய:. ... (௯)

(ப - பி.) ஆத்மா, வை, அரே, த்ரஷ்டவ்ய:, ச்ரோதவ்ய:, மந்தவ்ய:, நிதித்யாஸிதவ்ய:.

(ப - உ.) ஆத்மா=பரமாத்துமா, த்ரஷ்டவ்ய:=பார்க்கப்படத்தக்கவர், ச்ரோதவ்ய:=கேழ்க்கப்படத்தக்கவர், மந்தவ்ய:=பரிசீலிக்கப்படத்தக்கவர், நிதித்யாஸிதவ்ய:=நிச்சயமாகத் தியானிக்கப்படத்தக்கவர்.

(பொ - உ.) பரமாத்துமாவினது தரிசனமும், சிரவணமும், மனனமும் நிதித்தியாஸனமும் செய்தல்வேண்டும்.

(வி - உ.) பரமாத்துமாவை தரிசித்தல்வேண்டும் என்றால் அவர் செய்தருளிய இவ்வுலகப்படைப்பினால் அவரது ஞானத்தையும் சத்தியையும் மகிமையையும் அறிதல்வேண்டும். யாவற்றிற்கும்உயிரைப்போன்றிருக்கிற அவரை எங்குமுள்ளவராகத்தெரிந்துகொள்ளல்வேண்டும். மேலும் ஞானிகளாகிய ஆசாரியர்களிடத்தில் அவரது மகிமையை வெளியிடுகிற உபதேசவாக்கியங்களனைத்தையும் மிகுந்த அன்புடன் கேட்டல்வேண்டும். உலகத்தில் அவரது மகிமையைக் கண்ணுற்று மேலும் ஆசாரியர்களிடத்தில் அவரது பெருமையைக்கேள்வியுற்று இவையனைத்தையும் மறுபடியும் ஆலோசித்து அவரைக்கருதல்வேண்டும். பிறகு அவரை நிச்சயமாக தியானித்தல்வேண்டும். அவரிருத்தலில் ஐயமற்றவர்களாகி அவரிடத்து ஆத்துமசமர்ப்பணம் செய்தல்வேண்டும்.

௮௨

ஸவா அயமாத்மா ஸர்வேஷாம் பூதாநாமதி
பதி: ஸர்வேஷாம் பூதாநாம் ராஜா. (௧௦)

(ப - பி.) ஸ:, வை, அயம், ஆத்மா, ஸர்வேஷாம், பூதாநாம், ராஜா.

(ப - உ.) ஸ: வா அயம் ஆத்மா=அப்படிப்பட்ட இந்தப்பரமாத்துமா, ஸர்வேஷாம் பூதாநாம்=எல்லாஉயிர்களுக்கும், அதிபதி:=தலைவர், ஸர்வேஷாம் பூதாநாம்=எல்லா உயிர்களுக்கும், ராஜா=அரசர்.

(பொ - உ.) அப்படிப்பட்ட இந்தப்பரமாததுமா எல்லாஉயிர்களுக்கும் தலைவர் எல்லாஉயிர்களுக்கும் அரசர்.

(வி - உ.) அவர் யாவற்றையும் நியமமாகவைத்திருக்கிறார், தகுந்தபடி இரக்ஷிப்பும் சிக்ஷிப்பும் நியதமாகக் கொடுத்துவருகிறார்.

அ௩

தத்யதா ரதநாபௌ ச ரதநேமௌ சாரா:
ஸர்வே ஸமர்பிதா:; ஏவமேவாஸ்மிந்நாத்ம
நி ஸர்வாணி பூதாநி ஸர்வே தேவா: ஸ
ர்வே லோகா: ஸர்வே ப்ராணா: ஸர்வ ஏ
த ஆத்மந: ஸமர்பிதா:. ... (௧௧)

(ப - பி.) தத், யதா, ரதநாபௌ, ச, ரதநேமௌ, ச, அரா:, ஸர்வே, ஸமர்பிதா:; ஏவம், ஏவ, அஸ்மிந், ஆத்மநி, ஸர்வாணி, பூதாநி, ஸர்வே, தேவா:, ஸர்வே, லோகா:, ஸர்வே, ப்ராணா:, ஸர்வே, ஏதே, ஆத்மந:, ஸமர்பிதா:.

(ப - உ.) யதா=எப்படி, ரதநாபௌ ச=சக்கிரத்தினதுகுடத்திலும், ரதநேமௌ ச=சுத்துவட்டைவளவிலும், அரா: ஸர்வே=ஆரைக்கால்களனைத்தும், ஸமர்பிதா:=வைக்கப்பட்டிருக்கின்றனவோ, ஏவம் ஏவ=இவ்விதமாக, அஸ்மிந் ஆத்மநி=இந்தப்பரமாத்துமாவிடத்தில், ஸர்வாணி பூதாநி=எல்லாபொருள்களும், ஸர்வே தேவா:=எல்லாதேவதைகளும், ஸர்வே லோகா:=எல்லாஉலகங்களும், ஸர்வே ப்ராணா:=சகல பிராணிச்செயல்களும், ஸர்வ ஏத ஆத்மந:=இவ்வெல்லாஉயிர்களும், ஸமர்பிதா:=வைக்கப்பட்டிருக்கின்றன.



(பொ - உ.) எப்படி சக்கிரத்தின்குடத்திலும் வட்டைச்சுற்றிலும் எல்லா ஆரைக்கால்களும் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதுபோல பரமாத்துமாவினிடத்தில் சகலபொருள்களும் சகலதேவதைகளும் சகலஉலகங்களும் சகல அசைவுசெய்கைகளும் இவ்வுயிர்களனைத்தும் வைக்கப்பட்டிருக்கின்றன.

(வி - உ.) நீர், காற்று, தீமுதலியபொருள்களனைத்தும்; வேறுஉலகங்களில் வாழ்கின்றவர்களும் மனிதர்களைவிட மேலானவர்களுமான தரும ஜீவிகளாகிய உயிர்களனைவரும்; சூரியன், சந்திரன், கிரகம், நக்ஷத்திரம், பூமிமுதலிய உலகங்களனைத்தும்; உயிர்களினது காற்றுசம்பந்தமாகிய செய்கைகளனைத்தும் மேலும் எண்ணிறந்த உலகங்களிலிருக்கும் எண்ணிக்கையற்ற ஆன்மாக்களனைத்தும் இந்தப்பரமாத்துமாவைப் பற்றிக்கொண்டிருக்கின்றன.

அ௪

யுஜே வாம் ப்ரஹ்ம பூர்வ்யம் நமோபி: ஸு
ராதிஸம் விஶ்வத: ஸ ஏவ யத: ஜாதா
நி புவநாநி விஶ்வா. ... (௧௨)

(ப - பி.) யுஜே, வாம், ப்ரஹ்ம, பூர்வ்யம், நமோபி:, ஸுராதிஸ, ஸம், விஶ்வத:, ஸ ஏவ, யத:, ஜாதாநி, புவநாநி, விஶ்வா.

(ப - உ.) வாம்=உம்முடையவும் எம்முடையவுமாகிய, பூர்வ்யம்=பழமையானவராகிய, ப்ரஹ்ம=பிரமத்தை, நமோபி:=நமஸ்காரங்களினால், யுஜே=தியானிக்கிறேன், ஸுராதிஸ=ஓ! முதலுமிறுதியுமற்றவனே!, யத:=எதனிடத்திலிருந்து, புவநாநி விஶ்வா=எல்லாஉலகங்களும், ஜாதாநி=பிறக்கின்றனவோ, (அப்படிப்பட்ட) ஸம்=நீ, விஶ்வத:=வியாபகத்துவத்தினால், ஸ ஏவ=இருக்கிறாய்.

(பொ - உ.) நான் நமஸ்காரபூர்வமாக உங்களுடையவும் எங்களுடையவும்பழமையானவராகியபிரமத்தைத்தியானிக்கி

றேன். ஓ முதலுமீறுமற்றவரே! நீர் யாவற்றிலும் வியாபித்திருக்கிறீர். உம்மிடத்திலிருந்து எல்லாஉலகங்களும் உண்டாகியிருக்கின்றன.

(வி - உ.) பிரமவாதிகளாகிய ஆசாரியர் மாணுக்கரைநோக்கிச் சொல்லுகின்றார். நான் நமஸ்காரங்களால் உங்களுடையவும் எம்முடையவுமான பழமையாயுள்ள பிரமத்தை தியானிக்கிறேன்; நீங்களும் என்னுடன் அவரை தியானியுங்கள்.

அரு

𑌇𑌹𑍈𑌵𑌸𑌨𑍍𑌤𑍋𑌽𑌥𑌵𑌿𑌦𑍍𑌮𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑌂 𑌨𑌚𑍇𑌦<br>
𑌵𑍇𑌦𑌿𑌰𑍍𑌮𑌹𑌤𑍀𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌿𑌃; 𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑌮𑍃𑌤𑌾<br>
𑌸𑍍𑌤𑍇𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌅𑌥𑍇𑌤𑌰𑍇 𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵𑌾𑌪𑌿<br>
𑌯𑌨𑍍𑌤𑌿. ... ... ... (கரு)

(ப - பி.) 𑌇𑌹, 𑌏𑌵, 𑌸𑌨𑍍𑌤𑌃, 𑌅𑌥, 𑌵𑌿𑌦𑍍𑌮𑌃, 𑌤𑌤𑍍, 𑌵𑌯𑌂, 𑌨, 𑌚𑍇𑌤𑍍, 𑌅𑌵𑍇𑌦𑌿𑌃, 𑌮𑌹𑌤𑍀, 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌿𑌃; 𑌯𑍇, 𑌏𑌤𑌤𑍍, 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌅𑌮𑍃𑌤𑌾𑌃, 𑌤𑍇, 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿, 𑌅𑌥, 𑌇𑌤𑌰𑍇, 𑌦𑍁𑌃𑌖𑌂, 𑌏𑌵, 𑌅𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿.

(ப - உ.) 𑌇𑌹𑍈𑌵=இவ்விடத்திலேயே, 𑌸𑌨𑍍𑌤𑌃=இருந்தும், 𑌅𑌥=பிறகு, 𑌵𑌯𑌂=நாம், 𑌤𑌤𑍍=அதை (பிரமத்தை), 𑌵𑌿𑌦𑍍𑌮𑌃=அறிகிறோம், 𑌨𑌚𑍇𑌤𑍍 𑌅𑌵𑍇𑌦𑌿𑌃=அறிந்திலமாயின், 𑌮𑌹𑌤𑍀 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑌿𑌃=மிகுந்தகெடுதியுண்டு, 𑌯𑍇=யார், 𑌏𑌤𑌤𑍍=இதை [பிரமத்தை], 𑌵𑌿𑌦𑍁𑌃=அறிகின்றனரோ, 𑌤𑍇=அவர்கள், 𑌅𑌮𑍃𑌤𑌾𑌃=அழிவற்றபதவியுடையவர்கள், 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿=ஆகின்றனர், 𑌅𑌥=பிறகு, 𑌇𑌤𑌰𑍇=பிறர், 𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵=துயரத்தையே, 𑌅𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿=அடைகின்றனர்.

(பொ - உ.) இவ்விடத்திருந்தும் நாம் அவரை அறிகின்றோம். நாமவரை அறியாவிடின் மிகுந்த கெடுதியுண்டாகும். யார் இவரை அறிகின்றனரோ அவர்கள் அழிவற்றபதவியைப் பெறுகின்றனர்; பிறர் துயரத்தையே அடைகின்றனர்.



(வி - உ.) என்ன ஆச்சரியம்! நாமிவ்விடத்திருந்தும் அவரை அறிகின்றோம், இந்த இருள்மயமாயிருக்கிற ஸம்ஸாரத்தில் மூழ்கினவர்களாயும் மறைக்கப்பட்டவர்களாயுமிருந்தும் நமது ஞானக்கண் அந்த உண்மைஞானச்சுடரைக் காணக்கூடியதாயிருக்கிறது. மேலும் நம்முள்ளம் அவரிடத்தில் தூய்மையான அன்பைவைத்துப்பாபதாபங்களிலிருந்து மீட்பைப்பெறுகின்றது. இதைவிட வியக்கத்தக்கது வேறென்ன இருக்கிறது! இதனாலேதான் நாம் பாக்கியவான்களாயிருக்கிறோம். அவர் இம்மண்ணுலகத்தில் எத்தனைவகையான உயிர்களைப் படைத்திருக்கின்றனர், அவற்றிற்கெல்லாம் இவ்விதமான வல்லமையையும் அதிகாரத்தையும் தரவில்லை, நம்மிடத்தில் கிருபைசெய்து இவையனைத்தையும் தந்தார். இதனால் நாம் கிருதார்த்தர்களாகிறோம். இதனாலேதான் நாம் எல்லாசெல்வத்தையும் அடைந்திருக்கின்றோம். நாம் அவரை இம்மையில் அறியக்கூடாவிடினும் அவருடன் இடைவிடாத நித்தியசம்பந்தத்தை உறுதிப்படுத்திக்கொள்ளக் கூடாவிடினும் அப்பொழுது நாம் முடிவற்ற நியகிலைமையைஅடைவோம். அப்படியாயின் இந்தஸம்ஸாரமாகிய துயரக்கடலில் விழுந்து வேறெவ்விடத்தில்புக்கிடம்பெறுவோம்; உலகத்தாரால் கடுமையாய் நடத்தப்பட்டு எவ்விடத்தில் குளிர்ச்சியைப்பெறுவோம்? மரணபயத்திலிருந்து நம்மை யார்மீட்பார்கள்?

அசா

𑌤𑌤𑍋𑌯𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌰𑌂 𑌤𑌦𑌰𑍂𑌪𑌮𑌨𑌾𑌮𑌯𑌂;<br>
𑌯𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑌮𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌥𑍇𑌤𑌰𑍇<br>
𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵𑌾𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿. ... ... (கசா)

(ப - பி.) 𑌤𑌤𑌃, 𑌯𑌤𑍍, 𑌉𑌤𑍍𑌤𑌰𑌤𑌰𑌂, 𑌤𑌤𑍍, 𑌅𑌰𑍂𑌪𑌂, 𑌅𑌨𑌾𑌮𑌯𑌂; 𑌯𑍇, 𑌏𑌤𑌤𑍍, 𑌵𑌿𑌦𑍁𑌃, 𑌅𑌮𑍃𑌤𑌾𑌃, 𑌤𑍇, 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿, 𑌅𑌥, 𑌇𑌤𑌰𑍇, 𑌦𑍁𑌃𑌖𑌂, 𑌏𑌵, 𑌅𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿.

(ப - உ.) 𑌯𑌤𑍍=எது, 𑌤𑌤𑌃𑌉𑌤𑍍𑌤𑌰𑌤𑌰𑌂=(𑌤𑌤𑌃, காரியத்தைவிட; 𑌉𑌤𑍍𑌤𑌰𑌂, காரணம்; 𑌉𑌤𑍍𑌤𑌰𑌤𑌰𑌂, காரணத்திற்குக்காரணம்.) காரணத்திற்குக்காரணமானதோ, 𑌤𑌤𑍍=அது [அந்தப்பிரமம்], 𑌅𑌰𑍂𑌪𑌂=உருவற்றது, 𑌅𑌨𑌾𑌮𑌯𑌂=நோயுந்துயரமுமற்றது, 𑌯𑍇=யார்,

ஏதத்=இதை (பிரமத்தை), விது꞉=அறிகின்றனரோ, தே=அவர்கள், அம்ருதா꞉=அழிவற்றபதவியுடையவர்கள், பவந்தி=ஆகின்றனர், அத=பிறகு, இதரே=பிறர், து꞉கமேவ=துயரத்தையே, அபியந்தி=அடைகின்றனர்.

(பொ - உ.) யார் காரணத்திற்குக் காரணரோ அவர் உருவற்றவர் நிராமயர். யார் இவரை அறிகின்றனரோ அவர் அழிவற்றபதவியைப் பெறுகின்றனர்; பிறர் துயரத்தையே அடைகின்றனர்.

(வி - உ.) இவ்வுலகத்தில் எந்தஸகலகாரணங்களிலிருந்தெந்த ஸகலகாரியங்களுமுண்டாகின்றனவோ அந்தச்சகலகாரணங்களுக்கும் காரணர் பிரமம். அவர் உருவற்றவர் நிராமயர். யார் இவரை ஞானக்கண்ணினால் பிரத்தியக்ஷப்படுத்திக்கொள்வதினால் இவருடன் பிரிபடாத சம்பந்தத்தை உண்டாக்கிக் கொள்ளுகின்றனரோ, அவர்கள் அழிவற்ற பதவியைப் பெறுகின்றனர். பிறர் ஒருவரும் இந்த ஸம்ஸாரத்துயரத்தைக் கடக்கவல்லவரல்லர்.

அஎ

தத꞉ பரம் ப்ரஹ்ம பரம் ப்ருஹந்தம் யதாநி
காயம் ஸர்வபூதேஷு கூடம்; விஶ்வ
ஸ்யைகம் பரிவேஷ்டிதாரமீஶம் தம் ஜ்ஞாத்வா
அம்ருதா பவந்தி. ... ... (கரு)

(ப - பி.) தத꞉, பரம், ப்ரஹ்ம, பரம், ப்ருஹந்தம், யதா, நிகாயம், ஸர்வபூதேஷு, கூடம்; விஶ்வஸ்ய, ஏகம், பரிவேஷ்டிதாரம், ஈஶம், தம், ஜ்ஞாத்வா, அம்ருதா꞉, பவந்தி.

(ப - உ.) தத꞉=எல்லாகாரியத்திற்கும், பரம்=காரணராகிய, பரம்ப்ரஹ்ம=பரப்பிரமம், ப்ருஹந்தம்=பெரியவர், ஸர்வபூதேஷு=எல்லாப்பூதங்களிலும், யதாநிகாயம்=உடலுக்கிடையில், கூடம்=மறைந்திருப்பவர், விஶ்வஸ்ய=உலகத்தினது, ஏகம்பரிவேஷ்டிதாரம்=ஒன்றான சூழ்ந்திருப்பவராகிய, தம் ஈஶம்=அந்த ஈசனை, ஜ்ஞாத்வா=அறிந்து, [உலகத்தார்] அம்ருதா꞉=அழிவற்ற பதவியுடையவர்கள், பவந்தி=ஆகின்றனர்.

(பொ - உ.) சகலகாரியங்களுக்கும் காரணராகிய பரப்பிரமம் யாவற்றிற்கும் பெரியவர், அவர் சகலபூதங்களிலும் உடலுக்கிடையில் மறைந்திருப்பவர். இவ்வுலகத்தைச் சூழ்ந்திருக்கிற ஒருவராகிய அவ்வீசனை அறிந்து உலகத்தார் அழிவற்றபதவியைப் பெறுகின்றனர்.

(வி - உ.) அவரிடத்திலிருந்து இவ்வுலகமெல்லாம் படைக்கப்பட்டது. ஆனதால் அவர் எல்லாக்காரியங்களுக்கும் காரணர் மேலும் பெரியவர். அவர் உள்ளும் புறமும் எல்லாஇடங்களிலும் எப்பொழுதும்இருக்கிறார். அப்படியிருந்தும் அவரை யாரும்கண்களால் பார்க்கமுடியாது. காரணமென்னவெனில் அவர் ஞானமே வடிவாக உடையவர்; ஞானத்தை வடிவாகஉடையவரை ஞானத்தினால் அறியலாகும். யார் இவரை அறிகின்றனரோ அவர்கள் இவருடன் நித்தியவாழ்க்கையைப் பெறுகின்றனர்.

அஅ

ஸர்வேந்த்ரியகுணாபாஸம் ஸர்வேந்த்ரியவி
வர்ஜிதம்; ஸர்வஸ்ய ப்ரபுமீஶாநம் ஸர்வ
ஸ்ய ஶரணம் ஸுஹ்ருத். ... ... (கசு)

(ப - பி.) ஸர்வேந்த்ரியகுணாபாஸம், ஸர்வேந்த்ரியவிவர்ஜிதம்; ஸர்வஸ்ய, ப்ரபும், ஈஶாநம், ஸர்வஸ்ய, ஶரணம், ஸுஹ்ருத்.

(ப - உ.) ஸர்வேந்த்ரியகுணாபாஸம்=யாரால் எல்லாப்பொறிகளும் விளக்கத்தைப் பெறுகின்றனவோ அவர் என்றால் அப்படிப்பட்ட பிரமம், ஸர்வேந்த்ரியவிவர்ஜிதம்=எல்லாப்பொறிகளுமற்ற

வர், ஸர்வஸ்ய=யாவற்றிற்கும், ப்ரபும்=பிரபு, ஈசானம்=தலைவர், ஸர்வஸ்ய=யாவற்றிற்கும், சரணம்=அடைக்கலமானவர், ஸுஹ்ருத்=நண்பர்.

(பொ - உ.) அவரால் எல்லாப்பொறிகளுடையபண்புகளும் விளக்கத்தைப்பெறுகின்றன. அவர் எல்லாப்பொறிகளுமற்றவர், அவர் யாவற்றிற்கும் பிரபு, யாவற்றிற்கும் தலைவர், யாவற்றிற்கும் அடைக்கலமானவர், யாவற்றிற்கும் நண்பர்.

(வி - உ.) அவர் நமக்கு ஞானத்தையும், சுகத்தையும், வல்லமையையும் தரக்கருதி நமது பொறிகளை அதற்குத் தகுந்த பலகுணங்களால் அலங்கரித்தார். கண்ணினால் உலகாதிபதியினது உலக அரசின் அதிசயப்பான அழகையும், நோக்ககத்தையும்பார்த்துத் திருப்தியடைகிறோம்; காதினால் பறவைகளினது இன்பமான ஒலி, நல்ல இனிமையானசங்கீதத்தின்ஓசை, பிரமகுணகீர்த்தனம் இவைகளைக்கேட்டுஇன்பமடைகிறோம்; நாவினால் உண்டல் தின்றல் நக்கல் பருகல்களுக் குள்ளான பலவித நல்ல உணவுகளைக்கொண்டுச் சுகிக்கிறோம்; மூக்கினால் பலவிதமான நல்ல மணமுடைய மலர்களின் இன்பமான மணத்தைக் கிரகித்து சந்தோஷிக்கிறோம்; எல்லா உறுப்புகளிலும் பரவியிருக்கிற ஸ்பரிச இந்திரியத்தினால் நல்ல குளிர்ச்சி பொருந்திய மந்தமாருதத்தின் வீசுதலினால் குளிர்ச்சியைப் பெற்று நமது சுகமாகிய ஸரோவரத்தை நிறப்புகிறோம்; எல்லாநன்மைகளுக்கும் இருப்பிடமாகிய பரமேச்வரர் ஒருவரே இவையாவற்றிற்கும் காரணர். அவர் இந்தப் பொறிகளுக்கு எவ்விதமான வல்லமையைத் தந்தாரோ அதற்குத் தக்கவாறு அதற்குரியவிடயங்களனைத்தையும் அவற்றிற்குப்பயன்படும்படி படைத்ததினாலேயே நாம் அவரால் அருளப்பட்ட சுகத்தில் சுகிகளாயிருக்கிறோம். நமக்கு அவரால் இரண்டுகைகள் அருளப்பட்டதனால் நாம் கையினால் கிரகிக்கப்படத்தக்க பொருள்களனைத்தையும் பற்ற வல்லமையுள்ளவர்களாக விருக்கிறோம். அவர் நமக்கு வாகிந்திரியத்தை அருளினதால் நமதுள்ளத்தினது கருத்துகளனைத்தையும் வெளியிட்டு சுகிகளாகிறோம். அவர் நமது ஒவ்வொரு இந்திரியத்தையும் சுகத்தின் களஞ்சியத்திற்கு ஒவ்வொருவாயிலாக ஏற்படுத்தியிருக்கிறார். நமது ஒவ்வொரு ஞானேந்திரியமும், கருமேந்திரிமுயம் ஒவ்வொரு இன்பவடிவுடைய ஊற்றாகி இடைவிடாமல் இன்பவாரியைவெளி



யிடுகின்றது; மேலும் அதனால் எல்லா நன்மைகளுக்கும் ஒன்றான இருப்பிடமாக விளங்குகிறவராகிய உலகரக்ஷகரது அற்புத மகிமையை விளக்குகின்றது.

அவர் உயிர்களினது நன்மையின்பொருட்டே இந்த மிகவியப்பாகிய பொறிகளனைத்தையும் படைத்தார். மேலும் அவராலேயே இப்பொறிகளின் பண்புகளனைத்தும் விளக்கத்தைப் பெறுகின்றன; ஆனால் அவர் தான் எந்தப்பொறியையும் உடையவரல்லர். அவரது ஞானத்தின்பொருட்டு ஒரு ஞானேந்திரியமும் வேண்டியதில்லை. அவரது கருமத்தின் பொருட்டு ஒரு கருமேந்திரியமும் பயன்படாது; அவர் கண்காதற்றவராயிருந்தும்யாவற்றையும்பார்க்கிறார், யாவற்றையும்கேட்கிறார். மேலும்கைகாலற்றவராயிருந்தும் எல்லாவிடங்களிலுஞ் செல்லுகிறார், யாவற்றையும் பற்றுகிறார். இவர் யாவருக்கும் பிரபு, யாவருக்கும் ஈச்வரர், யாவருக்கும் ஆச்ரயர், யாவருக்கும் நண்பர்.

அகூ

மஹாந் ப்ரபுர்வை புருஷ: ஸத்வ
ஸ்யைஷ ப்ரவர்த்தக:; ஸுநிர்மலாமிமாம் ப்ரா
ப்திம் ஈசாநோ ஜ்யோதிரவ்யய:. (கஎ)

(ப - பி.) மஹாந், ப்ரபு:, வை, புருஷ:, ஸத்வஸ்ய, ஏஷ:, ப்ரவர்த்தக:; ஸுநிர்மலாம், இமாம், ப்ராப்திம், ஈசாந:, ஜ்யோதி:, அவ்யய:.

(ப - உ) மஹாந்புருஷ:=(இந்த) மகாபுருஷர், ப்ரபு:=பிரபு, ஜ்யோதி:=ஞானஒளியையே வடிவாக உடையவரும், அவ்யய:=அழிவற்றவருமாகிய, ஏஷ:=இந்த, ஈசாந:=ஈச்வரர், ஸுநிர்மலாமிமாம்ப்ராப்திம்=அதிநிர்மலமாகியஇந்தச்சாந்தியைநோக்கி, ஸத்வஸ்ய=தருமத்தினது, ப்ரவர்த்தக:=பிரவர்த்திப்பிக்கிறவர்.

(பொ - உ.) இந்த மஹாபுருஷர் யாவருக்கும் பிரபு. ஞானத்தையே வடிவாக உடைய ஈச்வரர் இந்த நிருமலமான சாந்தியை நோக்கி தருமத்தின் பிரவர்த்தகரானார்.

(வி - உ.) நன்மையையே வடிவாகக்கொண்ட இந்த மஹாபுருஷன் நமக்கு கேவலம் இந்திரியசுகங்களைத்தந்து நம்மைப்பசுக்களைப்போல ஸம்ஸாரத்தில் கட்டுப்படுத்தியிருக்கவில்லை, ஆனால் விலையறப்பெற்ற தருமத்தைத் தந்து நம்மை ஸ்வாதீனராக்கி யிருக்கின்றார். அவர் விஷயசுகத்தைவிட ஆயிரம்பங்கதிகமான ஆன்மப்பிரசாதத்தைநோக்கியும், நமது அதிநிருமலமாகியசாந்தியை உத்தேசித்தும் தானே தருமப்பிரவர்த்தகரானார். அவர் நமதுஉள்ளத்தில் நல்லபுத்தியையும் தருமபலத்தையும் உண்டாக்குகின்றார். நாம் அவரது பிரசாதத்தினால் தருமபலத்தினால் ஸ்வாதீனமுள்ளவர்களாகி முத்திக்கு அதிகாரிகளாகிறோம்.

---

## அத்தியாயம் - கக.

௯0

ஓமிதி ப்ரஹ்ம ஸர்வேऽஸ்மை தேவா பலிமா
ஹரந்தி; மத்யே வாமநமாஸீநம் விஶ்வே தேவா
உபாஸதே. ... ... ... (க)

(ப - பி.) ஓம், இதி, ப்ரஹ்ம, ஸர்வே, அஸ்மை, தேவா:, பலிம், ஆஹரந்தி; மத்யே, வாமநம், ஆஸீநம், விஶ்வே, தேவா:, உபாஸதே.

(ப - உ.) ஓமிதி=ஓம்என்பதினால் விளங்குகிறவர், ப்ரஹ்ம=பிரமம், அஸ்மை=இவர் (பிரமத்தின்) பொருட்டு, ஸர்வேதேவா:=எல்லாதேவதைகளும், பலிம்=பூஜையை, ஆஹரந்தி=செய்கின்றனர், மத்யே=உலகத்திற்கிடையிலிருந்து, வாமநம்=எல்லோராலும் பூஜிக்கப்படத்தக்க பரமாத்துமாவை, விஶ்வேதேவா:=எல்லாதேவதைகளும், உபாஸதே=உபாசிக்கின்றனர்.

(பொ - உ.) ஓம் என்கிறஎழுத்தினால் விளங்குகிறதெது வோ அது பிரமம். சகலதேவதைகளும் அதைபூஜிக்கின்றனர்.



உலகத்தினிடையேயிருக்கும் பூஜிக்கப்படத்தக்க பரமாத்துமாவை எல்லாதேவதைகளும் நியதமாக உபாஸிக்கின்றனர்.

(வி - உ.) உலகத்தின் இந்த ஒன்றான கருத்தன் எப்படி ஈச்வரன், மஹேச்வரன், பரமேச்வரன், பரமாத்துமா, பரப்பிரமம் இந்தச் சொற்களுக்கு விஷயரோ, அதுபோல அவர் ஓம் என்னுஞ்சொல்லுக்கும்விஷயர் யார் படைத்தளித்தழிக்கவல்லவொருவரோ; அவரே ஈச்வரர். அவரே பிரமம். அவரே ஓங்காரத்தினால் விளக்கப்படுகிற மாஹாபுருஷர் பூமியைவிட அதிகமேலான உலகங்களில் வாழ்கிற தேவதைகள் நியதமாக அவரை ஆராதனைசெய்கின்றனர். நாம் பெருமையானதும் மேலானதுமான பதவியை விரும்பின் நாம் தேவதைகளைப்போல அந்த விசுத்தமங்களஸ்வரூபருக்கு எப்பொழுதும் ஆதீனமாகி அவரைப்பற்றிக்கொண்டு அவரிடத்திலுள்ள அன்பை விருத்தியும் விகஸிக்கவும்செய்து அவரது உபாஸனையில் விருப்பமுடனிருத்தல் வேண்டும்.

௯க

ஓமித்யேவம் த்யாயத ஞாநரூபம் ஸ்வஸ்திவ: பாரா
ய தமஸ: பரஸ்தாத்; ஓங்காரேணைவாயத
நேநாந்வேதி வித்வாந் யத்தச்சாந்தமஜரமம்ருதமப
யம் பரஞ்ச. ... ... ... (உ)

(ப - பி.) ஓம், இதி, ஏவம், த்யாயத, ஞாநரூபம், ஸ்வஸ்தி, வ:, பாராய, தமஸ: பரஸ்தாத்; ஓங்காரேண, ஏவ, ஆயதநேந, அந்வேதி, வித்வாந், யத், தத், சாந்தம், அஜரம், அம்ருதம், அபயம், பரம், ச.

(ப - உ.) ஓம் இதி ஏவம்=ஓங்காரத்தை யவலம்பித்தே, ஞாநரூபம்=ஞானத்தை வடிவாகக்கொண்ட பரப்பிரமத்தை, த்யாயத=தியானியுங்கள், தமஸ: பரஸ்தாத்=அஞ்ஞானவிருளைவிட்டு, பாராய=நீங்குவதற்கு, வ:=உங்களுக்கு, ஸ்வஸ்தி=நிர்விக்கினமுண்டாவதாக, வித்வாந்=ஞானி, ஓம் காரேண=ஓங்காரமென்னும், ஆயதநேந ஏவ=சாதநத்தினாலேயே, யத் தத்=அந்த, சாந்தம்

=சாந்தனாகவும், 𑌅𑌜𑌰𑌂=மூப்பற்றவனாகவும், 𑌅𑌮𑍃𑌤𑌂=சாவற்ற வனாகவும், 𑌪𑌰𑌂=நிரதிசயனாகவுமிருக்கிறவனை, 𑌸𑌮𑍇𑌤𑌿=அடைகின்றார்.

(பொ - உ.) ஓங்காரப்பிரதிபாத்தியமான பிரமத்தைத் தியானியுங்கள், அஞ்ஞானஇருளிலிருந்து நீங்குவதில் உங்களுக்கு குவிர்விக்கினமுண்டாவதாக. ஞானி ஓங்காரசாதனத்தைக்கொண்டே அந்த சாந்தரும், மூப்பற்றவரும், சாவற்றவரும், பயம் நீங்கியவரும், நிரதிசயருமானவரை அடைகின்றார்.

(வி - உ.) தூய்மையும் எழுச்சியுமுடைய ஞானத்தினால் அந்த ஓங்காரப் பிரதிபாத்தியமான பிரமத்தைத் தியானியுங்கள்; அப்பொழுது நிச்சயமாக நீங்கள் ஸம்ஸாரத்தின் அஞ்ஞானவிருளிலிருந்து நீங்குவீர்கள், மேலும் சாந்தரும், மூப்பற்றவரும், சாவற்றவரும், பயமற்றவரும், நிரதிசயருமான பிரமத்தை யடைவீர்கள்.

௧௨

𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀
𑌮𑌹𑌿 𑌧𑌿𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍. ... (௫)

(ப - பி.) 𑌤𑌤𑍍, 𑌸𑌵𑌿𑌤𑍁𑌃, 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂, 𑌭𑌰𑍍𑌗𑌃, 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯, 𑌧𑍀𑌮𑌹𑌿, 𑌧𑌿𑌯𑌃, 𑌯𑌃, 𑌨𑌃, 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍.

(ப - உ.) 𑌯𑌃=யார், 𑌨𑌃=நமக்கு, 𑌧𑌿𑌯𑌃=புத்திவிருத்திகளை, 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍=பிரேரேபிக்கிறாரோ, 𑌤𑌤𑍍=அந்த, 𑌸𑌵𑌿𑌤𑍁𑌃=ஜகத்தைப்படைத்த, 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯=தேவனுடைய, 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂=பூஜியமாகக் கொள்ளத்தக்கதான, 𑌭𑌰𑍍𑌗𑌃=ஞானமும் வல்லமையையும் ஆகிய சக்தியை, 𑌧𑍀𑌮𑌹𑌿=தியானிக்கின்றோம்.

(பொ - உ.) நமது புத்திவிருத்திகளை யார் பிரேரேபிக்கின்றாரோ ஜகத்தை உண்டுபண்ணினவராகிய அந்தத்தேவனுடைய பூஜியமாகக் கொள்ளத்தக்கதான ஞானமும் வல்லமையுமான சக்தியை தியானிக்கின்றோம்.



(வி - உ.) யார் இவ்வுலகத்தைப் படைத்தாரோ அவர் தாய்தந்தைகளைப்போல யாவற்றையுங்காக்கிறார், அவரது கருதிமுடியாத ஞானமும் மிகுதியான வல்லமையும் உலகத்தில் வாழ்கின்ற எண்ணிறந்த உயிர்களுக்கு நன்மை விளைவிப்பதிலேயே சென்றுகொண்டிருக்கின்றன. அவர் நமது தருமவழிக்குத்துணையாக புத்திவிருத்திகளனைத்தையும் அடிக்கடி பிரேரேபிக்கிறார்.

௧௩

𑌮𑌾𑌹𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌰𑌾𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌮𑌾 𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌰𑌾
𑌕𑌰𑍋𑌦𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑌣𑌮𑌸𑍍𑌤𑍁. ... (௪)

(ப - பி.) 𑌮𑌾, 𑌅𑌹𑌂, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌨𑌿𑌰𑌾𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂, 𑌮𑌾, 𑌮𑌾, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑍋𑌤𑍍, 𑌅𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑌣𑌂, 𑌅𑌸𑍍𑌤𑍁.

(ப - உ.) 𑌮𑌾=என்னை (உபாஸகனை), 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮=பிரமம், 𑌮𑌾 𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑍋𑌤𑍍=நிராகரிக்கவில்லை, 𑌅𑌹𑌂=நான், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮=பிரமத்தை, 𑌮𑌾 𑌨𑌿𑌰𑌾𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂=நிராகரிக்காமலிருப்பேனாக, 𑌅𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑌣𑌂=என்னால் [பிரமம்] விடப்படாமை, 𑌅𑌸𑍍𑌤𑍁=உண்டாவதாக.

(பொ - உ.) பிரமம் என்னைவிடவில்லை, நான் பிரமத்தைவிடாமலிருப்பேனாக. என்னால் பிரமம் விடப்படாமலிருப்பாராக.

(வி - உ.) அருள்வடிவனாகிய உலகத்தந்தை ஒருகாரியத்திலும் நம்மை மறந்திருக்கவில்லை. நாம் ஒவ்வொருநிமிஷமும் அவரது அருள்வாரியைப் பெறுகிறோம். மேலும் ஒவ்வொருதரம் மூச்சு உள்ளே கொள்ளுகையிலும் அவரது அருளென்னும் காற்றையே உட்கொள்ளுகிறோம். அவர் நம்மை ஒருகாரியத்திலும் மறந்திருக்கவில்லை, ஒருகாலத்திலும் மறந்திருக்கவில்லை, அவர் நம்மை எப்பொழுதும் அருட்பார்வையால் பார்க்கிறார். ஆனதால் நாம் அவரை மறவாமலிருப்போமாக. அவரதுசெய்நன்றியையறிந்து, எப்பொழுதும் அவருடைய அருளாகிய அமுதத்தைப் பருகுவோமாக. அவர் அருளியிட்ட கட்டளைகளனைத்தையும் சந்தோஷமாக நிறைவேற்றுவதில் பிரவர்த்திப்போமாக.

௬௯

தம் வேத்யம் புருஷம் வேத யதா மா வோ ம்ருத்யு: பரிவ்யதா:. ... ... (ரு)

(ப - பி.) தம், வேத்யம், புருஷம், வேத, யதா, மா, வ:, ம்ருத்யு:, பரிவ்யதா:.

(ப - உ.) வ:=உங்களை, ம்ருத்யு:=மரணம், யதா மா பரிவ்யதா:=பீடிக்காதபடி, தம்=அந்த, வேத்யம்=அறியத்தக்க, புருஷம்=புருஷனை, வேத=அறியுங்கள்.

(பொ - உ.) மரணம் உங்களைப் பீடிக்காதபடி அந்த அறியத்தக்க புருஷனை அறியுங்கள்.

(வி - உ.) அந்த அழிவற்றபுருஷனை அறியுங்கள். அவர்மீது யாவற்றின்மீதிலும் தம்மீதிலும் உள்ளதைவிட அதிக அன்பை வையுங்கள். அப்பொழுது உங்களது மரணபீடை ஒழிந்துவிடும். யார் பிரமத்தை யடைகின்றனரோ, யார் பிரமத்துடன் நித்தியவாழ்வைப் பெறுகின்ருரோ; அவர் இங்கேயிருந்தும் ஸம்ஸாரத்தைக் கடக்கிறார், மேலும் மரணமென்னும்பயத்திலிருந்து விடுபட்டுக் காப்பைப்பெறுகிருர். அவரிடத்தில் குறைவுநிலறயாகின்றது. விப்தூ சம்பத்துக் காதாரமாகவும், மரணம் அழிவற்றபதவிக்குப் படியாகவும் கொள்ளப்படுகின்றது.

௬௫

யோ தேவோ அக்னௌ யோ அப்ஸு யோ விஶ்வம் புவனமாவிவேஶ; ய ஓஷதீஷு யோ வனஸ்பதிஷு தஸ்மை தேவாய நமோ நம:. (௬)

(ப - பி.) ய:, தேவ:, அக்னௌ, ய:, அப்ஸு, ய:, விஶ்வம், புவனம், ஆவிவேஶ, ய:, ஓஷதீஷு, ய:, வனஸ்பதிஷு, தஸ்மை, தேவாய, நம:, நம:.



(ப - உ.) ய:=எந்த, தேவ:=தேவன், அக்னௌ=தீயிலும், ய:=யார், அப்ஸு=நீரிலும், ய:=யார், விஶ்வம் புவனம்=எல்லா உலகங்களிலும், ய:=யார், ஓஷதீஷு=செடிகளிலும், வனஸ்பதிஷு=மரங்களிலும், ஆவிவேஶ=பிரவேசித்திருக்கிருரோ, தஸ்மை=அந்தத்தேவன் பொருட்டு, நம: நம:=நமஸ்காரம் நமஸ்காரம்.

(பொ - உ.) எத்தேவன் தீயிலும், நீரிலும், செடிகளிலும், மரங்களிலும், எல்லா உலகத்திலும்பிரவேசித்திருக்கிருரோ அத்தேவன்பொருட்டு நமஸ்காரம் நமஸ்காரம்.

(வி - உ.) யார் தீயினிடையேயிருந்து அதை நியமத்தில் வைத்திருக்கின்ருரோ, எல்லையற்ற கடலின் அதிபயங்கரமான அலைகளினிடத்து வீற்றிருக்கிருரோ; யாருடைய அருளால் வேனிற்காலத்தின் திருப்திகரமான மழைத்தாரையால் உயிர்களும் செடிகளும் மரங்களும் விளக்கத்தைப் பெற்றிருக்கின்றனவோ; யார் மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலும், இடைவெளியிலும், எல்லாவிடங்களிலும் தாமாய்விளங்கிக்கொண்டிருக்கிருரோ அந்தத்தேவதையை அடிக்கடி நமஸ்கரிக்கிருேம்.

---

## அத்தியாயம் - கக.

௬௬

அஶப்தமஸ்பர்ஶமரூபமவ்யயம் ததாரஸம் நித்யமகந்தவச்ச யத்; அநாத்யநந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே. ... ... ... (க)

(ப - பி.) அஶப்தம், அஸ்பர்ஶம், அரூபம், அவ்யயம், ததா, அரஸம், நித்யம், அகந்தவத், ச, யத்; அநாதி, அநந்தம், மஹத:, பரம், த்ருவம், நிசாய்ய, தம், ம்ருத்யுமுகாத், ப்ரமுச்யதே.

(ப - உ.) யத்=எது, அசப்தம்=சத்தமற்றதோ, அஸ்பர்சம்=பரிசிக்கத்தக்கபண்பற்றதோ, அரூபம்=உருவற்றதோ, அவ்யயம்=அழிவற்றதோ, ததா=அவ்வாறகவே, அரஸம்=இரஸநேந்திரியத்திற்கு விஷயமாகிய பண்பற்றதோ, நித்யம்=என்றமுள்ளதோ, அகந்தவத்=மணமற்றதோ, அநாதி=முதலற்றதோ, அநந்தம்=ஈறற்றதோ, மஹத:=பெரிதிலும், மஹத்=பெரியதோ, த்ருவம்=நித்தியமானதோ, தம்=அதை, நிசாய்ய=அடைந்து, ம்ருத்யுமுகாத்=மரணத்தின்வாயினின்று, ப்ரமுச்யதே=நீங்குகின்றனர்.

(பொ - உ.) எது சத்தமற்றதோ, பரிசிக்கத்தக்க பண்பற்றதோ, உருவமற்றதோ, அழிவற்றதோ, இரஸநேந்திரியத்திற்கு விஷயமான பண்பற்றதோ, என்றுமுள்ளதோ, மணமற்றதோ, முதலற்றதோ, ஈறற்றதோ, பெரிதிலும் பெரியதோ, நித்தியமானதோ, அதை யடைந்து மரணத்தின் வாயிலிருந்து நீங்குகின்றனர்.

(வி - உ.) படைப்புக்கதிதமாகிய ஞானத்தையே வடிவாகக் கொண்ட பரமேச்வரர் ஒருபொழுதும் செவி மெய் முதலிய பொறிகளுக்குப் புலப்படத்தக்கவரல்லர். அவர் உருவற்றவர், வேறுபாடற்றவர், என்றுமுள்ளவர், பெரியவர். அவரை அறிந்தால் மரணத்தின்வாயிலிருந்து விடுபட்டு பிரமமென்னும் வீட்டிற்குடிபுகுந்து எக்காலத்திலும் மேன்பதவியைப் பெற்றுக்கொண்டிருப்பார்.

கூள

ஏஷஸர்வேஷு பூதேஷு கூடோத்மா
ந ப்ரகாசதே; த்ருச்யதே த்வக்ர்யயாபு
த்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்சிபி:. ... (உ)

(ப - பி.) ஏஷ, ஸர்வேஷு, பூதேஷு, கூடாத்மா, ந, ப்ரகாசதே; த்ருச்யதே, து, அக்ர்யயா, புத்த்யா, ஸூக்ஷ்மயா, ஸூக்ஷ்மதர்சிபி:.



(ப - உ.) ஸர்வேஷு பூதேஷு=எல்லாப் பூதங்களிலும், கூடாத்மா=மறைந்திருக்கிற, ஏஷ:=இவர் (பரமாத்துமா), ந ப்ரகாசதே=[தூய்மையற்ற கருத்திற்கு] விளங்குவதில்லை, ஸூக்ஷ்மயா=சூக்குமவஸ்துக்களைப்பார்க்கவல்ல, ஸூக்ஷ்மதர்சிபி:=சூக்குமதிருஷ்டியையுடையவர்களால், அக்ர்யயா=ஒருவழிப்பட்ட, புத்த்யா=புத்தியினுல், த்ருச்யதே து=பார்க்கப்படுகிறர்.

(பொ - உ.) எல்லாப்பூதங்களிலும் மறைந்திருக்கிற இந்தப் பரமாத்துமா தூய்மையற்ற கருத்திற்கு விளங்குவதில்லை. சூக்குமப்பொருள்களைப் பார்க்கவல்ல சூக்குமப்பார்வையுள்ளவர்களால் ஒருவழிப்பட்டக் கருத்தினுல் பார்க்கப்படுகிறர்.

(வி - உ.) பரமாத்துமா எல்லோருடைய வல்லமையின் வல்லமையிலும், எல்லோருடைய கருத்துகளிலும், எல்லோருடைய உள்ளங்களிலும் மறைவாகப்பிரவேசித்திருக்கிறர்; விடயவிருப்பத்தில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு அவர் விளங்கார். சூக்குமமான பார்வையையுடைய விவேகிகள் ஒருவழிப்பட்ட தூய்மையான புத்தியினுல் அந்த ஞானவடிவரான பரமேச்வரரை ஞான ஒளியில் பார்க்கவல்லார்.

கூஅ

நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ நமேதயா ந
பஹுநா ச்ருதேந; யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா வ்ருணுதே தநூம் ஸ்வாம். ... ... (௩)

(ப - பி.) ந, அயம், ஆத்மா, ப்ரவசநேந, லப்ய:, ந, மேதயா, ந, பஹுநா, ச்ருதேந; யம், ஏவ, ஏஷ, வ்ருணுதே, தேந, லப்ய:, தஸ்ய, ஏஷ:, ஆத்மா, வ்ருணுதே, தநூம், ஸ்வாம்.

(ப - உ.) அயமாத்மா=இப்பரமாத்துமா, ப்ரவசநேந=நல்லசொற்களினுல், ந லப்ய:=பெறப்படமாட்டார், ந மேதயா=விசே

ஷபுத்தியினாலுமில்லை, ந பஹுநா ஶ்ருதேந=பலகேள்வியினாலுமில்லை, யமேவ=யாரை (பரமாத்துமாவை) யே, வ்ருணுதே=விரும்புகிற, ஏஷ:=(சாதகர்யாரோ) இவர், தேந=அவரால், லப்ய:=பெறப்படுகிறார், ஏஷ:(=பரமாத்துமா)இவர், தஸ்ய=(அந்தச்சாதகருக்கு) அவருக்கு, ஸ்வாம்=தனது, தநூம்=தன்மையை, விவ்ருணுதே=விளங்கச்செய்கிறார்.

(பொ - உ.) இப்பரமாத்துமா நல்லசொற்களினால் பெறப்படமாட்டார், புத்தியினாலுமில்லை, பலகேள்வியினாலுமில்லை; யார் அவரை விரும்புகிறார்களோ அவர்களால் அவர் பெறப்படுகிறார். பரமாத்துமா அப்படிப்பட்டவருக்குத் தனது தன்மையை விளங்கச்செய்கிறார்.

(வி - உ.) அவரை யடைய வேண்டுமென்னும் விருப்பமும் முயற்சியும் இராவிடின்; நல்லபுத்தியிருக்கினும், மேலும் நல்ல உபதேசவாக்கியங்களைக் கேட்கினும், எதனாலும் அவரை அடையக்கூடாது. யார் தாகங்கொண்ட வழிப்போக்கரைப்போல கவலையுடையவராகி தனிமையில் அவரை விரும்புகின்றனரோ அவர்கள் முன்பாகவே பரமாத்துமா தனதுஸ்வருபத்தை விளக்குகிறார். அப்பொழுது அந்தச்சாதகர் விரும்பியதைப் பெற்றவராகி தூய்மையுடையவரும் திருத்தியுடையவரும் ஆகிறார்.

ககச

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோத
த; க்ஷுரஸ்ய தாரா நிஶிதா துரத்யயா
துர்கம் பதஸ்தத் கவயோ வதந்தி. ... (ச)

(ப - பி.) உத்திஷ்டத, ஜாக்ரத, ப்ராப்ய, வராந், நிபோதத; க்ஷுரஸ்ய, தாரா, நிஶிதா, துரத்யயா, துர்கம், பத:, தத், கவய:, வதந்தி.

(ப - உ.) உத்திஷ்டத=(ஓ! உயிர்களே!) எழுந்திருங்கள், ஜாக்ரத=அஞ்ஞானத்தூக்கத்தைவிட்டுவிழித்துக்கொள்ளுங்கள், வராந்=பிரமநிஷ்டராகிய சிறந்த ஆசாரியனை, ப்ராப்ய=அடைந்து, நிபோதத=ஞானத்தை யடையுங்கள், தத்பத:=அந்த (பிரமோபாஸனா) மார்க்கத்தை, கவய:=விவேகிகள், நிஶிதா=தீட்டப்பட்ட, க்ஷுரஸ்ய=கத்தியினது, தாரா=முனையைப்போல, துரத்யயா=செல்வதற்கரிதானதால், துர்கம்=நடப்பதற்குக் கடினமானதென்று, வதந்தி=உறைக்கின்றனர்.



(பொ-உ.) ஓ! உயிர்களே! எழுந்திருங்கள், அஞ்ஞானத்தூக்கத்தைவிட்டு விழித்துக்கொள்ளுங்கள். பிரமநிஷ்டராகிய சிறந்த ஆசாரியரிடத்திற்குச் சென்று ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். விவேகிகள் இந்தவழியை தீட்டப்பட்ட கத்திமுனையைப்போல செல்வதற்கரிதானதால் நடப்பதற்குக்கடினமானதென்று உறைக்கின்றனர்.

(வி - உ.) ஓ! உயிர்களே! எழுந்திருங்கள், அஞ்ஞானத்தூக்கத்தைவிட்டு விழிப்படையுங்கள்; இன்னும் எவ்வளவுகாலம் அவரை விட்டிருப்பீர்கள், இன்னம் எவ்வளவுநாள் அந்தப் பெருஞ் செல்வத்தை மறந்திருப்பீர்கள். காலம் செல்லுகின்றது, சாவுசமீபிக்கின்றது, மந்தத் தன்மையையும் சோம்பலையும் ஒழித்துவிடுங்கள்; சிறந்த ஞானிகளாகிய ஆசான்களுக் கருகே சென்று எல்லா விருப்பங்களையும் முடிப்பதற்குறிய கருவியானவரும் மிகுந்த அன்பிற்குறியருமானவரை அறியுங்கள். ஆயிரம் நூல்களை வாசிப்பதினால் ஆகாததும் சிறந்த ஆசானது சொல்லினாலாகும். ஈச்வரனிடத்திற்குப்போகும்வழியையப்பற்றவேண்டுமாயின் அறிவைத் தூய்மைப்படுத்தல்வேண்டும், பொறிகளை வசப்படுத்தல்வேண்டும், பொறுமையைப் பழக்கப் படுத்தல்வேண்டும், தருமக் கருத்துகளனைத்தையும் வளர்த்தல்வேண்டும் மேலும் கடவுளிடத்துள்ள அன்பில் கருத்தை ஆழ்த்தல்வேண்டும்; ஆனதால் இவ்வழி செல்வதற்கு மிகக்கடினமானவழி. ஆயினும் கடவுளுடைய அருளாலும் சாதகனது விருப்பத்தினாலும் இவ்வருத்தமானவழியும் எளிதானவழியாகும்.

க௦௦

ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி
ஶாந்த உபாஸீத. ... ... (ரு)

(ப - பி.) தத், ஏதத், ப்ரஹ்ம, அபூர்வம், ஏதத், அம்ருதம், அபயம், சாந்தா:, உபாஸீத.

(ப - உ.) தத்=அந்த, ஏதத்=இந்த, ப்ரஹ்ம=பிரமம், அபூர்வம்=தனக்குமுற்காலத்திலொருபொருளையுமுடையதன்று, ஏதத்=இது, அம்ருதம்=அழிவற்றது, அபயம்=பயமற்றது, சாந்தா:=சாந்தராக, உபாஸீத=(இதை) உபாஸனைசெய்யுங்கள்.

(பொ - உ.) எது அந்தப்பிரமமோ அதற்குமுன் ஒன்றுமில்லை; அது அழிவற்றது, பயமற்றது சாந்தராகி அதை உபாஸியுங்கள்.

(வி - உ.) யார் இவை யாவற்றிற்கும் காரணரோ அவருக்கு ஒருகாரணமுமில்லை; அவர் முதலும் ஈறும் அற்றவர், அழிவற்றவர் எங்கும்நிறைந்தவர். அந்தப் பயமற்றவரது சரணடையின் வேறொருபயமுமிராது சாந்தராக அவரது உபாஸனையைச் செய்யுங்கள். சாந்திதான் கடவுளிடத்துள்ள அன்பிற்கு இருப்பிடம். எப்பொழுது மனது நிருமலமாகி அசைவற்ற தடாகத்தைப்போல சாந்தமாகவிருக்கின்றதோ, அப்பொழுதுதான் உள்ளத்தில் கடவுளினது ஸ்வரூபம்விளங்கும்; அப்படியிராமல், மிகுந்த பொருளவாவினும் புகழவாவினும், பொறிகள் வழிஎல்லாம் சென்று மனம் தூய்மையற்றிருக்கினும், மிகத் தூய்மையானதாகிய பிரமாநந்தத்தை அநுபவிக்க வல்லமையிராது. ஆனதால் சாந்தராக அவரை உபாஸியுங்கள்.

——oo——

## அத்தியாயம் - ௧௩.

௧௦௧

வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேக:; தே
நேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம். (௧)

(ப - பி.) வ்ருக்ஷ:, இவ, ஸ்தப்த:, திவி, திஷ்டதி, ஏக:; தேந, இதம், பூர்ணம், புருஷேண, ஸர்வம்.

(ப - உ.) ஏக:=இரண்டாவதற்ற (பரமாத்துமா), வ்ருக்ஷ: இவ=விருக்ஷத்தைப்போல, ஸ்தப்த:=நிச்சலமாக விருந்துகொண்டு திவி=ஸ்வப்பிரகாசமகிமையில், திஷ்டதி=வீற்றிருகின்றது, இதம் ஸர்வம்=இவை யாவும், தேந புருஷேண=அந்தப் புருஷனால், பூர்ணம்=நிறைந்திருக்கிறது.



(பொ - உ.) அத்துவிதீயனாகிய பரமாத்துமா விருக்ஷத்தைப்போல நிச்சலமாகவிருந்துகொண்டு ஸ்வப்பிரகாசமாகிய மகிமையில் வீற்றிருக்கிறார். அந்தப் பூரணபுருஷனால் இவை யாவும் நிறைந்திருக்கின்றன.

(வி - உ. இவ்வுலகாதிபதியைப் பற்றிக்கொண்டு உலகமாகிய சக்கிரம் எப்பொழுதும் சுழன்றுக்கொண்டும் மேன்மேலும் விருத்தியடைந்துகொண்டும் அவரது நன்னோக்கங்களனைத்தையும் முடிக்கின்றது. அவர் ஸாக்ஷியாகவும், நியந்தாவாகவும், எப்பொழுதும் நிச்சலமாயிருந்துகொண்டு தன்னால்கருதப்பட்ட நன்மைகள் விளைவதில் ஐயமற்றிருக்கிறார். ஆற்றுப்பெருக்கினால் ஆற்றங்கரையிலிருக்கிற கிராமங்களும் நகரங்களும் மூழ்கிப்போகின்றன, அநேகதேசங்களும் பிரதேசங்களும் வெள்ளத்திலடித்துக்கொண்டுபோகின்றன, மிகுதியானகாற்றும் அதிபயங்கரமான பூகம்பமும்உண்டாகி அநேகலக்ஷம் உயிர்களை சாவின்வாயில் விழச்செய்கின்றன; ஆனால் சருவஞ்ஞரும் நன்மைக்கே இருப்பிடமுமாகிய பரமேச்வரர் தற்காலத்திற்கு துன்பத்தைத் தருவதாகத்தோற்றுகிற இக்காரியங்களனைத்தையும் பிற்காலத்தின்அநுகூலத்திற்காகச்செய்து கலக்கமற்று நிச்சலமானதன்மையில்வீற்றிருக்கிறார். எப்பொழுது மிகக்கொடியதாகியகல்மாரியினாலும்மேகமுழக்கத்துடன் கூடி அடிக்கடி இடிவிழுவதாலும் பூமிக்குப்பெரியஆபத்துவந்துவிட்டதாகநினைக்கத்தக்கதாகவிருக்கிறதோ, மிகுதியும் அச்சத்தைத் தரத்தக்க அக்கினிமலைகளிலிருந்து தீ எழும்பி நாற்பக்கங்களிலுமுள்ள பசுக்கள் பறவைகள் மனிதர்கள் இவைகளுடன் கூடிய கிராமங்களையும் பட்டணங்களையும் தீக்கின்றதோ, அரசனாலும் குடிகளாலும் யுத்தங்களுண்டாகி மனிதர்களினதுகண்டங்களிலிருந்துவருகிறஇரக்தப்பிரவாகத்தினால் பூமிமூழ்கிப்போகிறதோ; அப்பொழுது அவர் தான் வெகுகாலமாக நிச்சக்கருதிய முடிவான நன்மையை நிறைவேற்றும் விஷயத்தில் பயமுடையவராகவிருந்துகொண்டு எப்பொழுதும்போல சாந்தராகவிருக்கின்றார்.

அவர் தனது ஸ்வப்பிரகாசமான மகிமையிலிருக்கின்றார். மற்றவையாவும் அவரைப் பற்றிக்கொண்டேயிருக்கின்றன, அவர் ஒன்றையும் பற்றிக்கொண்டிருக்கவில்லை; அவர் தனது மகிமையிலேயே இருக்கின்றார். அந்தப் பூரணபுருஷனால் இவ்வுலகம் யாவும் நிறைந்திருக்கிறது.

௧௦௨

யதா ஸௌம்ய வயாம்ஸி வாஸோவ்ருக்ஷம் ஸம்
ப்ரதிஷ்டந்தே; ஏவம் ஹவை தத்ஸர்வம் பர
ஆத்மநி ஸம்ப்ரதிஷ்டதே. ... (௨)

(ப - பி.) யதா, ஸௌம்ய வயாம்ஸி, வாஸோ, வ்ருக்ஷம், ஸம்ப்ரதிஷ்டந்தே; ஏவம், ஹ, வை, தத், ஸர்வம், பரே, ஆத்மநி, ஸம்ப்ரதிஷ்டதே.

(ப - உ.) ஸௌம்ய=ஓ! பிரியதரிசினனே!, யதா=எவ்விதமாக, வயாம்ஸி=பறவைகள், வாஸோவ்ருக்ஷம்=வசிக்கிறதற்காகவிருக்கிறமரத்தில், ஸம்ப்ரதிஷ்டந்தே=இருக்கின்றனவோ, ஏவம்=அவ்விதமாக, தத்ஸர்வம்=யாவும், பரே ஆத்மநி=பரப்பிரமத்தினிடத்தில், ஸம்ப்ரதிஷ்டதே=இருக்கின்றன.

(பொ - உ.) ஓ! பிரியதரிசனனே! எப்படி பறவைகள் யாவும் அவற்றினிருப்பிடமாகிய மரத்திலிருக்கின்றனவோ, அதைப்போல யாவும் பரமாத்துமாவினிடத்திலிருக்கின்றன.

(வி - உ.) எங்கும் நிறைந்தவரும், யாவற்றிற்கும் பற்றுக்கோடாகவிருப்பவருமானவரை எல்லாப்பொருள்களும்பற்றிக்கொண்டிருக்கின்றன. அசித்தாகிய உலகத்திற்கும் அவருக்கும் இருக்கிற ஸம்பந்தத்தைவிட நமக்கும் அவருக்குமிருக்கிற சம்பந்தம் பின்னொருவகையிற்சிறந்தது, நமக்கும் அவருக்கும் உள்ளது பிதா புத்திரசம்பந்தம்.

௧௩

ஏகோதேவஸ்ஸர்வபூதேஷு கூடஸ்ஸ
ர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா; கர்மா
த்யக்ஷஸ் ஸர்வபூதாதிவாஸஸ் ஸாக்ஷீசே
தாகேவலோ நிர்குணஶ்ச. ... (௩)



(ப - பி.) ஏகஃ, தேவஃ, ஸர்வபூதேஷு, கூடஃ, ஸர்வவ்யாபீ, ஸர்வபூதாந்தராத்மா, கர்மாத்யக்ஷஃ, ஸர்வபூதாதிவாஸஃ, ஸாக்ஷீ, சேதா, கேவலஃ, நிர்குணஃ, ச.

(ப - உ.) ஏகஃ=ஒன்றாகிய, தேவஃ=கடவுள், ஸர்வபூதேஷு=எல்லாப்பொருள்களிலும், கூடஃ=மறைந்திருக்கிறவர், ஸர்வவ்யாபீ=எங்குநிறைந்தவர், ஸர்வபூதாந்தராத்மா=எல்லா உயிர்களுக்குமுள்ளேயுமிருப்பவர், கர்மாத்யக்ஷஃ=(அவர்) சகல செய்கைகளுக்கும் தலைவர், ஸர்வபூதாதிவாஸஃ=எல்லாப்பொருள்களுக்கும் பற்றுக்கோடாகவிருப்பவர், ஸாக்ஷீ=யாவற்றையும் பார்ப்பவர், சேதா=ஞானஸ்வரூபி, கேவலஃ=ஸங்கரகிதர், நிர்குணஃ=(படைக்கப்பட்டபொருள்களுடைய) பண்பற்றவர்.

(பொ - உ.) கடவுள் ஒருவர், எல்லாப்பூதங்களிலும் மறைந்திருப்பவர், யாவற்றிலும்நிறைந்திருப்பவர், எல்லாப்பூதங்களிலும் உள்ளேயிருப்பவர், ஸகலசெய்கைகளுக்கும் தலைவர், எல்லாப்பூதங்களுக்கும் இருப்பிடமாகவிருப்பவர், யாவற்றிற்கும் ஸாக்ஷியாகவிருப்பவர், ஞானஸ்வரூபி, ஸங்கரகிதர், படைக்கப்பட்ட பொருள்களுடைய பண்புகளற்றவர்.

(வி - உ.) இவ்வுலகத்தின் ஈச்வரராகவிருப்பவரே கிரகசந்திர நக்ஷத்திராதி சகல உலகங்களுக்குமீச்வரர். யார் நம்மைப் படைத்து நமக்குப் பிரபுவாக வீற்றிருக்கின்றாரோ அவரே எல்லா உலகத்தையும் படைத்தவர் யாவற்றிற்கும் பிரபு. அவ்வொருகடவுளே எல்லாப்பூதங்களிலும் அதிசூக்குமமாக மறைந்திருந்துகொண்டு எல்லையற்ற சராசரங்களனைத்தையும் நியமித்துக்கொண்டிருக்கிறார். அவர் சருவவியாபி யாவற்றிற்கும்அந்தராத்மா ஒவ்வொருஜீவாத்துமாவிலேயும் அவர்நிறைந்திருக்கிறார். அவர்யாவற்றிற்கும் சாக்ஷி மேலும் செய்கைகளுக்குத்தலைவர். அவர் எல்லாவிடங்களிலுமிருந்துக்கொண்டு யாவற்றையும்பார்க்கிறார். அவர் கேவலம் சாக்ஷிமாத்

திரமாகவிருந்துகொண்டு நம்மீது விருப்பமில்லாது பார்த்துக்கொண்டிருக்கிறானென்பதில்லை; அவர் நமது செய்கைகளுக்குத் தலைவராகி வேண்டியபடி நம்மைத் தண்டித்தும் ஆதரித்தும் நாம் மென்மேலும் விருத்தியடைவதற்கு வழிதேடுகிறார். அவர் எங்கும் நிறைந்தவரும் யாவற்றிற்குப்பிரபுவுமாகியும் ஒருவிஷயத்திலும் ஆஸக்தியற்றவர், அவர் ஸங்காரஹிதர். சிருஷ்டிப்பொருள்களது உடலுக்குரிய பண்புகளாவது மனதிற்குரியபண்புகளாவது அவரிடத்தில்லை அவர் சுத்தஞானவடிவர்.

கா௪

ஸர்வா திஶ ஊர்த்வமதஶ்ச திர்யக் ப்ரகாஶய
ந்ப்ராஜதே யத்வநட்வாந் ; ஏவம் ஸ தேவோ பகவா
ந்வரேண்யோ யோநிஸ்வபாவாநதி
திஷ்டத்யேக:. ... ... ... (சு)

(ப - பி.) ஸர்வா: திஶ:, ஊர்த்வம், அத: ச, திர்யக், ப்ரகாஶயந், ப்ராஜதே; யத், உ, அநட்வாந், வரேண்ய:, யோநி:, ஸ்வபாவாந், அதிதிஷ்டதி, ஏக:.

(ப - உ.) அநட்வாந்=சூரியபிம்பம், யத்=எவ்விதமாக, ஊர்த்வம்=மேலும், அத: ச=கீழும், திர்யக்=பக்கத்திலும், ப்ரகாஶயந்=ஒளிகொடுத்துக்கொண்டே, ப்ராஜதே=பிரகாசிக்கிறதோ, ஏவம்=இவ்விதமாக, தேவ:=ஞானஒளியையே இயற்கையாக உடையவரும், பகவாந்=ஐசுவரியாதிகளுடன் கூடியவரும், வரேண்ய:=தொழத்தக்கவரும், யோநி:=யாவற்றிற்கும் காரணருமான, ஸ:=அவர், ஏவம்=இவ்விதமாகவே (விளங்குகிறார்), ஏக:=ஒருவராகவிருந்தும், ஸ்வபாவாந்=யாவற்றின் இயற்கைக்குணங்களையும், அதிதிஷ்டதி=நியமிக்கிறார்.

(பொ - உ.) சூரியபிம்பம் மேலும்கீழும் பக்கத்திலும் எல்லா விடங்களையும் பிரகாசிப்பித்துக்கொண்டே விளங்குகிற



தோ ஞான ஒளியையே இயற்கையாக உடையவரும் ஐசுவரியத்தோடுகூடியவரும் தொழத்தக்கவரும் யாவற்றிற்கும் காரணருமானவர் அவ்விதமாகவேவிளங்குகிறார். ஒருவராகவிருந்தும் அவர் எல்லாப்பூதங்களினது இயற்கைகளையும் நியமிக்கிறார்.

(வி - உ.) சூரியபிம்பம் எப்படி யாவற்றையும் விளக்கிக்கொண்டு தானும்விளங்குகிறதோ அத்துவிதீயராகிய பரமேசவரரும் அதுபோல அவருடையதாகிய இப்படைப்புக்கிடையில் விளங்குகிறார். அவரைப் பிரகாசிக்கச்செய்பவரும் ஒருவரில்லை ; அவரைப் படைத்தவரும் ஒருவரில்லை ; அவர் ஸ்வயம்பு, அவர் தாமாக விளங்குகிறவர். அவர் காற்றினிடத்தில்ஒலியையும், தீயினிடத்தில்சுடுகையையும், நீரினிடத்தில் தண்மையையும், வைரத்தினிடத்தில் வன்மையையும், பாதத்தினிடத்தில்நடக்குந்தன்மையையும், எல்லாப்பூதங்களிடத்தும் அவற்றின்ஸ்வபாவங்கள் யாவையும் நியமித்திருக்கிறார்.

கா௫

நைநமூர்த்வம் ந திர்யஞ்சம் ந மத்யே பரிஜ
க்ரபத் ; ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம ம
ஹத்யஶ:. ... ... ... (ரு)

(ப - பி.) ந, ஏநம், ஊர்த்வம், ந, திர்யஞ்சம், ந, மத்யே, பரிஜக்ரபத்; ந, தஸ்ய, ப்ரதிமா, அஸ்தி, யஸ்ய, நாம, மஹத்யஶ:.

(ப - உ.) ஏநம்=இவரை, ஊர்த்வம்=மேலுலகத்திலும், திர்யஞ்சம்=பக்கமாகிய லோகத்திலும், மத்யே=இடையிலுள்ளலோகத்திலும், ந பரிஜக்ரபத்=கிரகித்தல்கூடாது, யஸ்ய=யாருடைய, நாம=பெயர், மஹத்யஶ:=பெரும்புகழினதோ, தஸ்ய=அவருக்கு, ப்ரதிமா=பிரதிமை, ந அஸ்தி=இல்லை.

(பொ - உ.) மேலுலகத்திலும், பக்கமாகிய லோகத்திலும், இடையிலுள்ள லோகத்திலும் இவரைக்கிரகித்துமுடியாது. இவருக்குப்பிரதிமையில்லை. இவர்பெயர் பெரும்புகழினர்.

(வி - உ.) மிக உயர்வான மாநஸிக விருத்திகளுடன் கூடிய சிறந்த உயிர்களும் கறையற்ற ஞானக்கடலும், அழிவற்ற தன்மையையும் நன்மையையுமே வடிவாகவுடையவரும் ஆகிய அவரது பெருந்தன்மையை அளவுபடுத்தியறிய சக்தரல்லர், அவருக்குப் பிரதிமையில்லை, அவருக்குவப்பும் இல்லை, அவரைப்போன்றிருக்கிற ஒரு பொருளுங் கிடையாது. சூரியபிம்பத்தினது ஒளி அவரது ஒளிக்கு எவ்விதத்திலும் இணையாகமாட்டாது. வைரத்தினதுபலம் அவரது பலத்திற்குசிறிதும் ஒப்பாகமாட்டாது. தாய்தந்தையரது உண்மையான நட்பும், உள்ளங்கலந்த நேயர்களினது ஸ்வப்ரயோஜனமற்ற அன்பும், கற்புடைய மங்கையரது தூயமையான பிரேமையும் அவரது நல்லதன்மையின் நிழல்மாத்திரமாகவிருக்கிறது. அவருக்கு உடலில்லை, அவர் உடலைப் படைப்பவர், அவர் சிற்றறிவினரன்று, சிற்றறிவினரை உண்டுபண்ணுகிறவர், அவரது புகழ் ஆகாயத்தைப்போல எங்கும் வியாபித்திருக்கின்றது. அவரது மகிமை மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலுமுள்ள ஒவ்வொரு அணுவிலும் மிகவாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆனதால் அவர் பெயர் பெரும்புகழினர்.

க௦கூ

நஸந்த்ருஶே திஷ்டதிரூபமஸ்ய நசக்ஷுஷா
பஶ்யதி கஶ்சநைநம்; ஹ்ருதாமநீஷா மந
ஸாபிக்லுப்தோ யஏதத்விதுரம்ருதா
ஸ்தேபவந்தி. ... ... ... (கூ)

(ப - பி.) ந, ஸந்த்ருஶே, திஷ்டதி, ரூபம், அஸ்ய. ந, சக்ஷுஷா, பஶ்யதி, கஶ்சந, ஏநம்; ஹ்ருதா, மநீஷா, மநஸா, அபிக்லுப்த:, யே, ஏநம், ஏவம், விது:, அம்ருதா:, தே, பவந்தி.

(ப - உ.) அஸ்ய=இவரது, ரூபம்=உருவம், ஸந்த்ருஶே=பார்வையில், நதிஷ்டதி=இருப்பதில்லை, [ஆனதால்] ஏநம்=இவரை, கஶ்சந=ஒருவரும், சக்ஷுஷா=கண்களினால், நபஶ்யதி=பார்க்கலாகாது, ஹ்ருதா=உள்ளத்திலுள்ள, மநீஷா=ஐயமற்றபுத்தியினால், மநஸா=கருதப்படுவதினால், அபிக்லுப்த:=விளக்கப்படுகிறார், யே=யார், ஏநம்=இவரை, ஏவம்=இவ்வண்ணமாக, விது:=அறிகின்றனரோ, தே=அவர்கள், அம்ருதா:=அழிவற்ற பதவியுடையவர்கள், பவந்தி=ஆகின்றனர்.



(பொ - உ.) இவரது உருவம் பார்வைக்குப் புலப்படுவதில்லை, ஆனதால் இவரை ஒருவரும் கண்ணினால் பார்க்கலாகாது. உள்ளத்திலுள்ள ஐயமற்ற புத்திக்கு அவர் தியானத்தினால் விளங்குகிறார். இவ்விதமாக யார் அவரை அறிகின்றனரோ அவர்கள் அழிவற்றபதவியை யடைகின்றனர்.

(வி - உ.) பரமேச்வரர் கண்ணுக்குப் புலப்படுகிறவரல்லர், அவர் கேவலம் ஞானக்கண்ணுக்குமாத்திரம்புலப்படுகிறவர். யார் அவரிடத்திலுள்ள அன்பின் பெருக்கத்தினால் ஒருவழிப்பட்ட மனமுடையவர்களாகி தமது புத்தியைப் பரிசுத்தப்படுத்தி ஐயமற்றதாக்கிக்கொள்ளுகின்றனரோ அவர்கள் அந்த ஞானகோசரனாகிய ஸத்திய சுந்தர மங்களபுருஷனை பிரத்தியக்ஷத்திற்காண்கின்றனர். மேலும் அவரையடைந்து நித்தியபதவியைப்பெறுகின்றனர். அவருடன்கூடி என்றும் வாழ்வதினாலுண்டாகும் அழிவற்ற பிரமாநந்தத்தை யனுபவிக்கின்றனர்.

க௦எ

ஶ்ரவணாயாபி பஹுபிர்யோ நலப்ய: ஶ்ரு
ண்வந்தோபி பஹவோ யந்நவித்யு: ; ஆஶ்ச
ர்யோ வக்தா குஶலோஸ்ய லப்தா ஆஶ்ச
ர்யோ ஜ்ஞாதா குஶலாநுஶிஷ்ட:. .... (எ)

(ப - பி.) ஶ்ரவணாய, அபி, பஹுபி:, ய:, நலப்ய:, ஶ்ருண்வந்த:, அபி, பஹவ:, யம், நவித்யு:; ஆஶ்சர்ய:, வக்தா, குஶல:, அஸ்ய, லப்தா, ஆஶ்சர்ய:, ஜ்ஞாதா, குஶலாநுஶிஷ்ட:.

(ப - பி.) ஶ்ரவணாயஅபி=கேள்வியின்பொருட்டும் (கேள்வியில்லாததினாலும்), ய:=யார், பஹுபி:=அனேகரால், நலப்ய:=பெறப்படவில்லையோ, ஶ்ருண்வந்த:அபி=கேள்வியடைந்தவர்க

ளாகியும், பஹவ꞉=அநேகர், யம்=யாரை, ந வித்யு꞉=அறியவில்லையோ, அஸ்ய=இவருடைய, வக்தா=(ஞானத்தை) உபதேசிக்கிறவர், ஆஶ்சர்ய꞉=ஆச்சரியம், லப்தா=அடைபவர், குஶல꞉=நிபுணரோ, குஶலாநுஶிஷ்ட꞉=இதுவிஷயமாக நைபுண்ணியமாகக்கற்பிக்கப்பட்டு, ஜ்ஞாதா=அறிந்தவர், ஆஶ்சர்ய꞉=ஆச்சரியம்.

(பொ - உ.) கேள்வியில்லாததினாலும் யார் பலரால் அறியப்படவில்லையோ கேள்வியடைந்தும் யாரை அநேகர் அறியக்கூடாமலிருக்கின்றனரோ, அப்படிப்பட்டவர் விஷயமான ஞானத்தையுபதேசிக்கவல்லவர் மிகவுமரிது. அவரை அடைபவர் மிகநிபுணர், அவர் விஷயமாக விசேஷமாகக் கற்பிக்கப்பட்ட ஞானியும் மிகவரிது.

(வி - உ.) பலர் பரமேச்வரனது உண்மையான தன்மையைப் பற்றியும் அவரது உண்மையான கருத்தைப்பற்றியும் உபதேசத்தைப் பெறாததினால் அவ்விஷயமான ஞானத்தை யடையக்கூடாமற் போகின்றனர். புத்திவிருத்திகள் பரிசுத்தமாகாவிடின் பரமேச்வரனது தன்மையும் அவரது திருஉள்ளமும் நன்றாகவறிதல்கூடாது இதனாற்றான் பரமாத்தும தத்துவஞானிகள் எல்லாத்தேயங்களுள்ளு மெல்லாஜாதியாருள்ளு மிகச்சிறியவெண்ணினராகவிருக்கின்றனர். நல்லஞானமும் உள்ளன்புமிருப்பவர்களன்றி அவரை யொருவருமறிய வல்லவரல்லர். மேலும் பரிசுத்தமான உள்ளத்தையுடைய பரமாத்துமஞானிகளன்றி அவர்விஷயமாகவுபதேசிக்க யாரும் வல்லவரல்லர். அவரைப்பற்றிச் சொல்பவருமரிது; அவரை யடைபவரும்அரிது; ஆனதால் பரமாத்துமஞானம் விசேஷ ஞானத்தால்பெறக்கூடியது. அவரையறியவேண்டுமென்று உள்ளுறவிச்சையும் உண்மையான முயற்சியுமிராவிடின் அவரை யறியமுடியாது, அவரைக் கருத்தில்நிறுத்தும்சாதனை செய்யவும்முடியாது.

க௦அ

பராச꞉ காமாநநுயந்தி பாலாஸ்தே ம்ருத்யோர்
யந்தி விததஸ்ய பாஶம்; அத தீரா அம்ருத
த்வம் விதித்வா த்ருவமத்ருவேஷ்விஹ ந ப்ரா
ர்த்தயந்தே. ... ... ... (அ)



(ப - பி.) பராச꞉, காமாந், அநுயந்தி, பாலா꞉, தே, ம்ருத்யோ꞉, யந்தி, விததஸ்ய, பாஶம்; அத, தீரா꞉, அம்ருதத்வம், விதித்வா, த்ருவம், அத்ருவேஷு, இஹ, ந, ப்ரார்த்தயந்தே.

(ப - உ.) பாலா꞉=சிற்றறிவினர், பராச꞉=புறம்பேயுள்ள, காமாந்=விஷயங்களை, அநுயந்தி=தொடருகின்றனர், தே=அதனால், ம்ருத்யோ꞉=மரணத்தினது, விததஸ்ய=விஸ்தீரணமான, பாஶம்=பாசத்தை, யந்தி=சேருகின்றனர், அத=அதனால், தீரா꞉=விவேகிகள், த்ருவம்=நித்தியமாகிய, அம்ருதத்வம்=அழிவற்றபதவியை, விதித்வா=அறிந்து, இஹ=இம்மையில், ந ப்ரார்த்தயந்தே=ஒன்றையும் விரும்புவதில்லை.

(பொ - உ.) சிற்றறிவினரனைவரும் புறம்பான விஷயங்களில் விருப்பமுடையவர்களாகி மிருத்தியுவின் விஸ்தீரணமான பாசத்தில் கட்டுப்படுகின்றனர். விவேகிகள் நித்தியமாகிய அழிவற்றவஸ்துவை யறிந்து அநித்தியமான பதார்த்தங்களுக்குள் ஒன்றையும் விரும்புவதில்லை.

(வி - உ.) யார் வெளிவிஷயங்களைமாத்திரம் பார்க்கின்றனரோ, யார் தமதுஸ்வரூபத்தையும், தமதந்தராத்துமாவின் ஸ்வரூபத்தையும்அறியக்கூடாதவர்களாகவிருக்கின்றனரோ அவர்கள்வெளிவிஷயங்களில் விருப்பமுள்ளவர்களாகி தமது பிரவிருத்திகளுக்கே அடிமைகளாகி விஸ்தீரணமாகிய மிருத்தியுபாசத்தில் கட்டுப்படுகின்றனர். விஸ்தீரணமாகிய மிருத்தியுவென்பது இந்தச் சடஜகத்தும் சாரீரிகத்தன்மையுமாம். மேலும் மிருத்தியுவின் பாசமென்பது இந்தக் காரியகாரண தொடர்ச்சியுடன் கூடிய வியற்கைநியமங்கள். ஜடஜகத்தும் பசுத்தன்மையும், காரியகாரண தொடர்ச்சியுடன் கூடிய பிராகிருதிக நியமங்களாகிய மிருத்தியுபாசத்தில் கட்டுப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்டச் சிறந்தமானிடப்பிறவிபிறந்தும் யார் ஸம்ஸாரத்தினது விஷயவிச்சையில் மூழ்கி தம்மிஷ்டப்படி பிறவர்த்திக்கிற சிறுவர்களைப்போல வியவகரிக்கின்றனரோ அவர்களும்மிருத்தியுபாசத்தில்கட்டுப்பட்டவர்களாகி தமதுஸ்வாதீனதையை விட்டுப் பிரஷ்டர்களாகி பரமபதத்திற்கும் சாமகதிக்கும் வெகுதூரத்திலிருக்கின்றனர். அறிஞர்கள் அழிவற்ற தன்மையுடையவருடன் ஆன்மாவின் நித்தியமான செயற்கையை அறிந்து

இவ்வநித்தியமான ஸம்ஸாரத்திற்குள் ஒன்றையும் விரும்புவதில்லை. அவர்கள் தருமத்தின் நியமத்தை யனுசரித்து தமது பிரவிருத்திகளைத்தமது வசப்படுத்திக்கொண்டு உலகத்தர்தையினது திருவுள்ளத்திற்கு உகப்பான விஷயங்களை முடிக்கக் கூடுமானவரையில் முற்றும் திருத்தி யடைந்திருக்கின்றனர்.

௧௦௯

யேநாஹம் நாம்ருதா ஸ்யாம் கிமஹம் தேந குர்யாம்; அஸதோமா ஸத்கமய தமஸோமா ஜ்யோதிர்கமய ம்ருத்யோர்மாம்ருதம் கமய; ஆவிராவீர்ம ஏதி; ருத்ர யத்தே தக்ஷிணம் முகம் தேந மாம்பாஹி நித்யம். ... ... (௯)

(ப - பி.) யேந, அஹம், ந, அம்ருதா, ஸ்யாம், கிம், அஹம், தேந, குர்யாம்; அஸத:, மா, ஸத், கமய, தமஸ:, மா, ஜ்யோதி:, கமய, ம்ருத்யோ:, மா, அம்ருதம், கமய; ஆவி:, ஆவீ:, மே, ஏதி; ருத்ர, யத், தே, தக்ஷிணம், முகம், தேந, மாம், பாஹி, நித்யம்.

(ப - உ.) யேந=எதனால், அஹம்=நான், ந அம்ருதா ஸ்யாம்=அழிவற்றபதவியை யடையேனோ, தேந=அதனால், அஹம்=நான், கிம் குர்யாம்=என்னசெய்வேன், அஸத:=அசத்தானதைவிட்டு, மா=என்னை, ஸத்=சத்தானதை, கமய=அடையச்செய்யும், தமஸ:=இருளைவிட்டு, மா=என்னை, ஜ்யோதி:=ஒளியை, கமய=அடையச்செய்யும், ம்ருத்யோ:=அழிவான தன்மையை விட்டு, மா=என்னை, அம்ருதம்=அழிவற்றதன்மையை, கமய=அடையச்செய்யும், ஆவி:=ஓ! ஸ்வப்பிரகாசனே!, மே=என்பொருட்டு, ஆவீ: ஏதி=பிரகாசியும், ருத்ர=ஓ! ருத்திரனே!, யத்=எந்த, தே=உன்னுடைய, தக்ஷிணம்=மகிழ்ச்சியைத் தாத்தக்க, முகம்=முகமோ, தேந=அதனால், மாம்=என்னை, நித்யம்=எப்பொழுதும், பாஹி=காப்பாற்றும்.

(பொ - உ.) எதனால் நான் அழிவற்றபதவியை அடையேனோ அதனால் நான் என்னசெய்வேன்? அஸத்தானதை விட்டு



ஸத்தானதை என்னையடையச்செய்யும், இருளைவிட்டு என்னை ஒளியையடையச்செய்யும். அழிவுள்ள தன்மையை விட்டு அழிவற்ற தன்மையை யடையச்செய்யும். ஓ ஸ்வப்பிரகாசனே! எனக்காகப்பிரகாசியும். ஓருத்திரனே! உனதுமகிழ்ச்சியைத்தரத்தக்க முகமெதுவோ அதனால் என்னைக் காப்பாற்றும்.

(வி - உ.) எதனால் நித்தியபுருஷனோடு கூடும் வாழ்க்கைகிடைக்காமல் நித்தியபதவியைப் பெறேனோ அதையடைந்து நானென்னசெய்வேன்! விஷய விபவமும், பெருமையான புகழும், ஆமோதப் பிரமோதங்களும் யாவும் நிலையற்றவை; இவை நிலையுள்ளவைகளாகவிருக்கினும் பிரியதமனாகிய ஈச்வரனைவிட்டு இவையனைத்தையும் அடைந்து என்னசெய்வேன்? ஆனதால் ஓ! பரமேச்வரனே! எதனால் உம்மையடையும் வல்லமையைப்பெறுவேனோ அதை எமக்குத்தாரும். அஸத்தாகிய ஸம்ஸாரத்தைவிட்டு நீக்கி உமது ஸத்தாகிய மார்க்கத்தில் என்னைச் சேர்ப்பியும்; அஞ்ஞானமாகிய இருளை நசிக்கச்செய்து எமதுள்ளத்தில் ஞானஒளி விளங்கச்செய்யும். அமிருதஸ்வரூபனாகிய நீ என்னை உன்னிடத்திற்குக் கொண்டுபோம். ஓஸ்வப்பிரகாசனே! என்னருகில் எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிரும். ஏதேனும் விபத்தில் விழுந்து உனது ருத்திரமுகத்தைப்பாராமலிருப்பேனாக. எப்பொழுது உனது பிரஸன்னமுகத்தை நான் பாராமலிருக்கிறேனோ அப்பொழுது நான்குபக்கங்களிலும் இருளையேபார்க்கிறேன். நீர் எமது இருளுக்கு விளக்கைப்போன்றவர்; தாகத்திற்கு ஜலத்தைப்போன்றவர். மேலும் எமது இளைப்பாருமிடமும் நீரே.

---

## அத்தியாயம் - ௧௩.

௧௧௦

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்; ஸத்யேந லப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா ஸம்யக்ஜ்ஞாநேந; யேநாக்ரமந்த்ய்ருஷயோ ஹ்யாப்தகாமா யத்ர தத் ஸத்யஸ்ய பரமம் நிதாநம். ... ... (௧)

(ப - பி.) ஸத்யம், ஏவ, ஜயதே, ந, அந்ருதம்; ஸத்யேந, லப்ய:, தபஸா, ஹி, ஏஷ:, ஆத்மா, ஸம்யக், ஜ்ஞாநேந; யேந, ஆ

ஆக்ரமந்தி, ருஷய:, ஹி, ஆப்தகாமா:, யத்ர, தத், ஸத்யஸ்ய, பரமம், நிதாநம்.

(ப - உ.) ஸத்யம் ஏவ=மெய்யே, ஜயதே=வெல்லுகின்றது, ந அந்ருதம்=பொய்யன்று, ஸத்யேந=உண்மையினாலும், தபஸா=ஒருவழிப்பட்ட ஞானத்தினாலும், ஸம்யக் ஜ்ஞாநேந=நல்லஞானத்தினாலும், ஏஷ: ஆத்மா=இப்பரமாத்துமா, லப்ய:=அடையத்தகுந்தவர், யேந=எத (உண்மைமுதலியவைகளி) னால், ருஷய:=இருடிகள், ஆப்தகாமா:=திருத்தியான சித்தமுடையவர்களாகி, யத்ர=எவ்விடம், ஸத்யஸ்ய=ஸத்தியத்தினது, பரமம் நிதாநம்=மேலானயிருப்பிடமோ, தத்=அதை [பிரமத்தை], ஆக்ரமந்தி=அடைகின்றனர்.

(பொ - உ.) மெய்யே வெல்லும் பொய்யன்று; உண்மையினாலும், ஒரு வழிப்பட்ட கருத்தினாலும், நல்ல ஞானத்தினாலுமே இப்பரமாத்துமாவை யடையலாகும். இருடிகள் இவ்வனுஷ்டானத்தினால் திருத்தியுடையவர்களாகி ஸத்தியத்தின் மேலான இருப்பிடமாகிய பிரமத்தையடைகின்றனர்.

(வி - உ.) சாந்தசித்தர்களாகி உண்மையை யறியுங்கள், உண்மையையறிந்து உண்மையானவழியில் செல்லுங்கள்; அப்பொழுது உண்மைக்கு ஜய்ங்கிடைப்பதால் உமக்கும் ஜயங்கிடைக்கும். பரமேச்வரனை யடையவேண்டுமாயின் மெய்யை அடைக்கலஸ்தானமாகப்பற்றுங்கள், பொய்யையும் கபடத்தன்மையையும் விட்டுவிடுங்கள். உண்மையைப் பற்றுவதினாலும், கருத்தை ஒருவழிப்படுத்துவதினாலும், நல்லஞானத்தினாலும் அவ்வுண்மையின் மேலான இருப்பிடமாகிய பிரமத்தை யடையலாகும். முற்காலத்தில் திருத்தியான சித்தமுடையவர்களும் குற்றமற்றவர்களுமான இருடிகள் கேவலம் இவ்விதஉபாயங்களினாலேயே சித்திபெற்றனர்.

ககக

திவ்யோஹ்யமூர்த்த: புருஷ: ஸபாஹ்யா
ப்யந்தரோஹ்யஜ: அப்ராணோஹ்யமநா:; யம்
பஶ்யந்தியதய: க்ஷீணதோஷா:. ... (உ)





(ப - பி.) திவ்ய:, ஹி, அமூர்த்த:, புருஷ:, ஸபாஹ்யாப்யந்தர:, ஹி, அஜ:, அப்ராண:, ஹி, அமநா:; யம், பஶ்யந்தி, யதய:, க்ஷீணதோஷா:.

(ப - உ.) திவ்ய:=ஸ்வப்பிரகாசர், அமூர்த்த:=நிரவயவர், புருஷ:=பூரணர், ஸபாஹ்யாப்யந்தர:=உள்ளும் வெளியும் நிறைந்திருப்பவர், அஜ:=பிறப்பற்றவர், அப்ராண:=சாரீரிகப்பிராணமற்றவர், அமநா:=பரிமிதமான கருத்தற்றவர், யம்=யாரை (இவரை), க்ஷீணதோஷா:=தோஷங்களை நசிக்கச்செய்துகொண்ட, யதய:=தகுந்த முயற்சியுடையவர்கள், பஶ்யந்தி=பார்க்கின்றனர்.

(பொ - உ.) ஸ்வப்பிரகாசர், நிரவயவர், பூரணபுருஷர், யாவற்றிற்கும் உள்ளேயும் வெளியேயும் நிறைந்திருப்பவர், பிறப்பற்றவர், சாரீரிக பிராணமற்றவர், பரிமிதமான மனதற்றவர்; இவரை தோஷங்களை நசிக்கச்செய்துகொண்ட யத்தினசிலர்கள் பார்க்கின்றனர்.

(வி - உ.) அவர் ஸ்வப்பிரகாசர், எங்கும் விளங்கிக்கொண்டிருக்கிறார். இந்த அதிவிஸ்தீரணமான உலகத்தின் ஒவ்வொருபொருளும் அவரிருக்கிறாரென்பதற்குப் பிரமாணத்தைத்தருகிறது. இவற்றின் ஒவ்வொருசக்தியும் இவற்றிற்குக் காரணமாகிய அவரது மூலசக்தியைவிளக்குகிறது. அவருக்கு ஒருமூர்த்தியில்லை, அவர்பூரணபுருஷர்; அவர் எல்லாப்பொருள்களுக்கு வெளியேயும் எல்லாப் பொருள்களுக்கு உள்ளேயுமிருக்கிறார். அவர் பிறப்பற்றவர், அவர் என்றுமுள்ளவர் அழிவற்ற தன்மையுடையவர். அவர் மனிதர்கள் முதலியவர்களைப்போல பிராணவாயுவைப் பற்றிக்கொண்டு ஜீவித்திருப்பதில்லை; அவர்தானே பிராணஸ்வரூபி அவர்பிராணத்திற்குப் பிராணமானவர். மனது அவரால் படைக்கப்பட்ட பரிமிதப்பொருள்களிலொன்று, ஆனதால் அவருக்கு இப்படிப்பட்ட மனதிருக்குமென்று நினைப்பதற்கிடமில்லை. அவரதுஞானம் நமதுஞானத்தைப்போல மனோவிருத்தியன்று, அவரது ஞானக்கிரியை இயற்கையாகவுள்ளது. யார் பாபாசரணையை விட்டு வெறுப்புடனிருந்து பரிசுத்தர்களாகி அவரைத் தேடுகின்றனரோ அவர்கள் அவரைப்பார்க்கின்றனர்.

ககஉ

யோ தேவாநாமதிபோ யஸ்மிம்ல்லோகா அதி
ஶ்ரிதா: ; ய ஈஶே அஸ்ய த்விபதஶ்சதுஷ்பத:
ஸவா ஏஷ மஹாநஜ ஆத்மா. ... (ங)

(ப-பி.) ய:, தேவாநாம், அதிப:, யஸ்மிந், லோகா:, அதிஶ்ரிதா:, ய:, ஈஶே, அஸ்ய, த்விபத:, சதுஷ்பத:, ஸ:, வை, ஏஷ:, மஹாந், அஜ:, ஆத்மா.

(ப-உ.) ய:=யார், தேவாநாம்=தேவதைகளினுடைய, அதிப:=தலைவரோ, யஸ்மிந்=யாரிடத்தில், லோகா:=உலகங்கள், அதிஶ்ரிதா:=நிலைபெற்றிருக்கின்றனவோ, ய:=யார், அஸ்ய=இந்த, த்விபத:=இரண்டுகால் ஜந்துக்களினுடையவும், சதுஷ்பத:=நான்குகால் ஜந்துக்களினுடையவும், ஈஶே=நியந்தாவோ, ஸ:=அவர், ஏஷ:=இந்த, மஹாந்=பெரியவர், அஜ:=பிறப்பற்றவர், ஆத்மா=பரமாத்துமா.

(பொ-உ.) யார் தேவதைகளுக்கதிபதியோ யாரிடத்தில் உலகங்கள் நிலைபெற்றிருக்கிறனவோ யார் இரண்டுகால்ஜந்துக்களையும் நான்குகால்ஜந்துக்களையும் நியமத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாரோ அவர் பிறப்பற்ற இந்தமஹாத்துமா.

(வி-உ.) யார் கண்ணுக்குப்புலப்படாத கீடாணுக்கள்முதல், லோகாந்தரத்திலுள்ள தேவதைகள் ஈறாக சகல உயிர்களுக்கும் ஒன்றான ஆச்ரயஸ்தானமும் அதிபதியுமோ, யாருடைய நியமங்களுக்குள்ளாகி மனிதர்கள் பசுக்கள் முதலியவையாவும் எப்பொழுதும் காப்பாற்றப் படுகின்றனவோ அவர் பிறப்பற்ற இந்தமஹாத்துமா.

ககங

அத்ருஷ்டோ த்ரஷ்டா(அ)ஶ்ருத: ஶ்ரோதா(அ)
மதோ மந்தா(அ)விஜ்ஞாதோ விஜ்ஞாதா. ... (ச)

(ப-பி.) அத்ருஷ்ட:, த்ரஷ்டா, அஶ்ருத:, ஶ்ரோதா, அமத:, மந்தா, அவிஜ்ஞாத:, விஜ்ஞாதா.



(ப-உ.) அத்ருஷ்ட:=பார்க்கப்படாதவர், த்ரஷ்டா=பார்ப்பவர், அஶ்ருத:=கேட்கப்படாதவர், ஶ்ரோதா=கேட்பவர், அமத:=கருத்திலடங்காதவர், மந்தா=கருதுகிறவர், அவிஜ்ஞாத:=அறியப்படாதவர், விஜ்ஞாதா=அறிபவர்.

(பொ-உ.) அவர் பார்க்கப்படாதவர், பார்ப்பவர் ; அவர் கேழ்க்கப்படாதவர் கேழ்ப்பவர் ; அவர் கருதப்படாதவர் கருதுகிறவர் ; அவர் அறியப்படாதவர், யாவற்றையும் அறிபவர்.

(வி-உ.) பூரணபுருடனாகிய பரமேச்வரனுக்குக் கண் காது முதலிய ஒருபொறிகளும்மில்லை; ஆனால் நாம்கண் காதுமுதலியவைகளினால்எவற்றையறியக்கூடியவர்களாகவிருக்கின்றோமோ அவ்வவைத்தையும் இந்தச்சருவஞ்ஞராகியபுருஷன் அறிகிறார்; மேலும் எவற்றை நாம்அறியவில்லையோ அவற்றையும் அவரறிகிறார். அவர் குறைவற யாவருக்குள்ளயாவற்றையும் அறிகிறார், ஆனால் ஒருவரும் அவரதுஸ்வரூபத்தை முற்றும் அறியவல்லவரல்லர்.

ககச

ஸ ஏஷ நேதி நேத்யாத்மா(அ)க்ருஹ்யோ நஹி
க்ருஹ்யதே. ... ... ... (ரு)

(ப-பி.) ஸ:, ஏஷ:, ந, இதி, ந, இதி, ஆத்மா, அக்ருஹ்ய:, நஹி, க்ருஹ்யதே.

(ப-உ.) நஇதி=இதுவன்று, நஇதி=இதுவன்று, (என்று) ஸ: ஏஷ: ஆத்மா=அந்தப்பரமாத்துமா, [நிர்த்தேசிக்கப்படவேண்டும்], அக்ருஹ்ய:=(அவர்) இந்திரியங்களால் கவரப்படத்தக்கவரன்று, நஹி க்ருஹ்யதே=அவர் இந்திரியங்களால் கவரப்படமாட்டார்.

(பொ-உ.) அப்பரமாத்துமாவை இதுவன்று இதுவன்று என்று நிர்த்தேசித்தல் வேண்டும். அவர் ஒரு இந்திரியத்தினாலும் கிரகிக்கப் படத்தக்கவரன்று. அவர் ஒரு இந்திரியத்தினாலும் கிரகிக்கப்படமாட்டார்.

(வி-உ.) படைத்தளித்தழிக்கவல்ல பரம்பொருள் யாரோ அவர் படைப்புக்கு அப்புறப்பட்டபொருள் ; இவ்வளவுதான் அவரைப்பற்றிநிர்த்தேசிக்கலாம். கண்ணினால்எதைப்பார்க்கக்கூடுமோ

கருத்தினால் எதைமுற்றும் கருதக்கூடுமோ அது அவரன்று. அவர் இந்திரியத்தினாலும் மனதினாலும் கிரகிக்கப்படாதவர் கேவலம் பரிசுத்தமான ஞானத்தினால் அந்தச்சத்தியமான புருஷனைப் பார்க்கலாகும்.

ககரு

ஸவஷ ஸவஹுவெஶ்யாநஃ ஸவஹுஸ்யாயிவ
திஃ ஸவஹுமிடிஂவ்ராஶாஷிதயடிடிஂகிஞ்ச (சா)

(ப - பி.) ஸஃ, ஏஷஃ, ஸவஹுஸ்ய, ஈஶாநஃ, ஸவஹுஸ்ய, அயிவதிஃ, ஸவஹுஂ, இடிஂ, ப்ரஶாஷி, யத், இடிஂ, கிஞ்ச.

(ப - உ.) ஸஃ=அவர் (அப்படிப்பட்டவராகிய), ஏஷஃ=இவர் (இந்தப்பரமாத்துமா), ஸவஹுஸ்ய=யாவற்றினுடையவும், ஈஶாநஃ=நியந்தை, ஸவஹுஸ்ய=யாவற்றினுடையவும், அயிவதிஃ=தலைவர், யத்=எந்த, இடிஂ=இந்த, கிஞ்ச=சிறிதுபொருளிருக்கின்றதோ, ஸவஹுஂ இடிஂ=இதைஎல்லாம், ப்ரஶாஷி=நியமத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்.

(பொ - உ.) அப்படிப்பட்ட இப்பரமாத்துமாவே யாவற்றிற்கும் நியந்தை, யாவற்றிற்கும் தலைவர்; அவர் இவ்வுலகத்தில் எந்தப்பொருள்களிருக்கின்றனவோ அவையாவற்றையும் நியமத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்.

(வி - உ.) தேவர், மனிதர், விலங்கு, புள் யாவும் அவரது சாஸனத்திலேயே யிருக்கின்றன; யாரும் அவரது சாஸநத்தைக் கடக்கவல்லவரல்லர்.

ககசா

ஊதஂவிஷந்தௌ ஸுக்ருதஸ்யலொகெ மு
ஹாஂப்ரவிஷ்டௌபரமெபராயெ; சா
யாதவெள ப்ரஹ்மவிடொவடந்தி வஞ்சாம
யொயெச த்ரிணாசிகெதாஃ. ... (எ)

(ப - பி.) ஊதஂ, விஷந்தௌ, ஸுக்ருதஸ்ய, லொகெ, முஹாஂ, ப்ரவிஷ்டௌ, பரமெ, பராயெ; சாயாதவெள, ப்ரஹ்மவிடஃ, வ



டந்தி, வஞ்சாமயஃ, யெ, ச, த்ரிணாசிகெதாஃ.

(ப - உ.) லொகெ=சரீரத்தில், முஹாஂ=புத்தியில், பரமெ பராயெ=சிறந்த ஸ்தாநத்தில் [இருக்கிற ஜீவாத்துமா பரமாத்துமாக்களில் ஜீவாத்துமா], ஸுக்ருதஸ்ய=தான்செய்தசெய்கையினுடைய, ஊதஂ=பயனை, விஷந்தௌ=புசிக்கின்றது,[பரமாத்துமா அந்தப்பலனைத் தருகின்றது அவைகளை], ப்ரஹ்மவிடஃ=பிரமஞானிகளும், வஞ்சாமயஃ=ஐந்துஅக்கினிகளை வளர்ப்பவர்களும், யெ=யார் த்ரிணாசிகெதாஃ=திரிணாசிகேதர்களோ (அவர்களும்), சாயாதவெள=நிழலையும் ஒளியையும்போன்றவையென்று, வடந்தி=உரைக்கின்றனர்.

(பொ - உ.) சரீரத்தில் சிறந்த விடத்தில் இருவரிருக்கின்றனர்; அவர்களில் ஒருவர் தமது செய்கைகளுக்குரிய பயனை அநுபவிக்கிறார், மற்றொருவர் பலன்களைக்கொடுக்கிறார். பிரமஞானிகளும், ஐந்து அக்கினிகளை வளர்ப்பவர்களும், திரிணாசிகேதர்களும் அவர்களை நிழலும் ஒளியும்போல பரஸ்பரம் அதிஸமீப ஸம்பந்தமுடையவர்களென்றும் வேறுவேறானவர்களென்றும் உறைக்கின்றனர்.

(வி - உ.) ஜீவாத்துமாவும் அதற்கு ஆச்ரயஸ்தானமாகிய பரமாத்துமாவும் இரண்டும் சரீரத்திற்குள்ளேயிருக்கின்றன. அவைகளிரண்டும் ஐயமற்றபுத்தி பூர்வகமாக அடையப்படுகின்றன. நிழலும்ஒளியும் எப்படி ஒன்றுக்கொன்று வேறானபொருளோ அப்படியே ஜீவாத்துமா பரமாத்துமாக்களும் வேறுவேறான பொருள்கள். எப்படி ஒளியின்றி நிழலிருக்கமுடியாதோ அதுபோல பரமாத்துமாவின் ஸம்பந்தமில்லாமல் ஜீவாத்துமாயிருத்தல்கூடாது. பரமாத்துமா உயிர்களுக்கு அவரவரது செய்கைகளுக்குத் தக்கபலன்களைத்தருகின்றது, ஜீவாத்துமா அந்தப்பலன்களை அநுபவித்துக் கொண்டு வாழ்ந்திருக்கின்றது. கேவலம் தத்துவதரிசிகளாகிய பிரமஞானிகள்மாத்திரம் இவை இரண்டையும் இவ்விதமாக வேறுஇயற்கையையுடையனவாகநிச்சயஞ்செய்திருக்கிறார்களென்பதில்லை; அக்கினிஹோத்திரஞ் செய்பவர்களும் இவ்விதமாக உரைத்துக்கொண்டிருக்கின்றனர்.

——oo——

## அத்தியாயம் - கச.

ககஎ

யொவெஹ-ஏரா தசுஸுவம் நாபெ ஞஸுவ
உஸி; ஹ-ஏவெஸுவம் ஹ-ஏராபெஷவ வி
ஜிஜ்ஞாஸிதவ்யா:. ... ... (க)

(ப - பி.) ய:, வெ, ஹ-ஏரா, தசு, ஸுவம், ந, கஷெ, ஸுவம், சுஸி; ஹ-ஏரா, ஊவ, ஸுவம், ஹ-ஏரா, த, ஊவ, விஜிஜ்ஞாஸிதவ்ய:.

(ப - உ.) ய:=யார், ஹ-ஏரா=மஹானோ, தசு=அது(அவர்), ஸுவம்=சுகஸ்வரூபி, சுஷுவம்=அற்பசுகமாக, நசுஸி=இருக்கவில்லை, ஹ-ஏராஊவ=மஹானே, ஸுவம்=சுகஸ்வரூபி, [ஆனதால்], ஹ-ஏரா ஊவ=மஹானே, விஜிஜ்ஞாஸிதவ்ய:=அறியப்படத்தக்கவர்.

(பொ - உ) யார் மஹானோ அவர் சுகரூபி, அற்பசுகமுடையவரன்று. மஹானே சுகரூபி ஆனதால் சுகரூபியே அறியப்படத்தக்கவர்.

(வி - உ.) மனிதர்களினது கருத்து பரிமிதமாகிய அற்பப்பொருள்களில் ஒருபொழுதும் சுகத்தை யடையமாட்டாது. மஹானாகிய பரமாத்துமாவிடத்தே நமதுசுகம், அற்பவிஷயங்களில் சுகமில்லை. விஷயசுகங்களில் ஆன்மாதிருத்தியடையாது. விடயசுகமனைத்தும் ஒருகணப்பொழுதினது, மிகவும்அற்பமானது. சிறிதுகாலத்திலது தருமத்திற்கு அநுகூலமாம், சிறிதுகாலத்திலது பிரதிகூலம்; சிறிதுகாலத்திலது தள்ளத்தக்கது, சிறிதுகாலத்திலது கொள்ளத்தக்கது. மஹானாகிய ஈச்வரரே நமதுதிருத்திக்கு இடம், நமதுபரிசுத்தமாகியசாந்தி நிகேதநம். ஆனதால் அவரைத்தேடுங்கள், அவரையறியவிரும்புங்கள்.

ககஅ

ஸஹமவ:கஸ்மிந் ப்ரதிஷ்டித இதி ஸ்வெமஹிம்நி.

(ப - பி.) ஸ:, ஹமவ:, கஸ்மிந், ப்ரதிஷ்டித:, இதி, ஸ்வெ, மஹிம்நி.



(ப - உ.) [மாணாக்கன் கேட்கிறான்], ஹமவ:=ஓ! பகவானே! ஸ:=அவர் (பரமாத்துமா), கஸ்மிந்=எதனிடத்தில், ப்ரதிஷ்டித:=ஆதாரப்பட்டிருக்கிறார், இதி=என்று, [ஆசாரியர் சொல்லுகிறார்], ஸ்வெமஹிம்நி=தனதுமகிமையில்.

(பொ - உ.) [சிஷியன்வினவுகிறான்] பரமாத்துமாஎங்கே ஆதாரப்பட்டிருக்கிறாரென்று [ஆசரியர் விடையளிக்கிறார்] அவர் தனது மகிமையில் ஆதாரப்பட்டிருக்குறாரென்று.

(வி - உ.) பரமேச்வரர்நிராலம்பர், ஸ்வதந்திரர். வேறெல்லாப்பொருள்களும் எப்படி அவரைப் பற்றிக்கொண் டிருக்கின்றனவோ, அதுபோல அவர் ஒன்றையும் பற்றிக்கொண் டிருக்கவில்லை. இந்தஉலகரூபமாகிய அமைப்பு அவரிடத்தில் கட்டுப்பட்டு அவரைப்பற்றிக்கொண் டிருக்கின்றது, அவர் ஒரு ஆணியைப்போல யாவற்றையும் பற்றிக்கொண்டிருக்கிறார்; ஆனால் அவர் ஒன்றிலும் கட்டுப்பட்டிருக்கவில்லை, அவரைஒருவரும் தரித்துக்கொண்டிருக்கவில்லை. நிராலம்பரும் பூரணருமாகிய பிரமம் தமதுமஹிமையிலேயே நிலைப்பட்டிருக்கிறார், தன்னில்தானே நித்தியமாகவிருக்கிறார். அவருக்கு ஈன்றாருமில்லை ஆச்ரயமானவருமில்லை.

ககசூ

ஸஊவாயஸ்தாசு ஸஉபரிஷ்டாசு ஸபஸ்சாசு
ஸபுரஸ்தாசு ஸதக்ஷிணத: ஸஉத்தரத:;
ஸஏவெதம் ஸர்வம் ஹ-ஏதஸஹ்வ்யஸ்ய ஸஊவாத்ய
உஸ்வ:. ... ... ... (கூ)

(ப - பி.) ஸ:, ஊவ, அயஸ்தாசு, ஸ:, உபரிஷ்டாசு, ஸ:, பஸ்சாசு, ஸ:, புரஸ்தாசு, ஸ:, தக்ஷிணத:, ஸ:, உத்தரத:; ஸ:, ஹ-ஏதஸஹ்வ்யஸ்ய, ஸ:, ஊவ, அத்ய, ஸ:, உ, ஸ்வ:.

(ப - உ.) ஸ: ஊவ=அவரே, அயஸ்தாசு=அடியிலும், ஸ:=அவர், உபரிஷ்டாசு=மேலும், ஸ:=அவர், பஸ்சாசு=பின்புறத்திலும், ஸ:=அவர், புரஸ்தாசு=முன்புறத்திலும், ஸ:=அவர், தக்ஷிணத:=தென்றிசையிலும், ஸ:=அவர், உத்தரத:=வடதிசையிலும், ஹ-ஏதஸஹ்வ்யஸ்ய=இறந்தகாலத்தினுடையவும் வருங்காலத்தினுடைய

வும், 𑌈𑌶𑌾𑌨𑌃=நியந்தா, 𑌸 𑌏𑌵=அவரே, 𑌅𑌦𑍍𑌯=இன்றும், 𑌶𑍍𑌵𑌃 𑌉=நாளைக்கும்.

(பொ - உ.) அவர் அடியிலே, அவர் மேலே ; அவர் பின்புறத்திலே, அவர் முன்புறத்திலே ; அவர்தென்றிசையிலே, அவர் வடதிசையிலே. அவர் இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் நியந்தா. அவர் இன்றுமிருக்கிறார் நாளையுமிருப்பார்.

(வி - உ.) மேலிலென்ன, அடியிலென்ன ; பின்புறத்திலென்ன, முன்புறத்திலென்ன ; தென்றிசையிலென்ன, வடதிசையிலென்ன ; நமக்கு நான்குதிசைகளிலும் எல்லாவிடங்களிலும் அவர் விளங்கிக்கொண்டிருக்கிறார். நாம் மலையின் உச்சியிலேறினும் அவ்விடத்திலும் அவர் விளங்கிக்கொண்டிருக்கிறார். நாம் ஆழமாகிய கடலினுள்ளேசெல்லினும் அங்கும் அவர் வீற்றிருக்கிறார். சூரியபிம்பத்தினது நடுப்பகலிலுள்ள கிரணங்களில் அவரெப்படி தாமாக விளங்கிக்கொண்டிருக்கிறாரோ அதுபோல இருண்ட இரவின் மிகுதியான இருளிலும் மிகவாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். எல்லாவிடங்களிலும் அவரது அரசிருக்கின்றது, எல்லாயிடங்களிலும் அவரது பார்வையிருக்கின்றது. எப்படி அவர் எல்லாத்தேசங்களிலும் வியாபித்திருக்கிறாரோ அப்படி அவர் எல்லாக்காலங்களிலுமிருக்கிறார். அவரெப்படி யிக்காலத்திற்கு நியந்தாவோ அப்படியே பிற்காலத்திற்கும்நியந்தா. அவர் இன்றுமிருக்கிறார் நாளையுமிருப்பார்.

௧௨௦

𑌯𑌏𑌕𑍋𑌽𑌵𑌰𑍍𑌣𑍋𑌬𑌹𑍁𑌧𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌾
𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌨𑍇𑌕𑌾𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑍋𑌦𑌧𑌾𑌤𑌿 ; 𑌵𑌿
𑌚𑍈𑌤𑌿𑌚𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌦𑍌 𑌸𑌦𑍇𑌵𑌃 𑌸
𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌶𑍁𑌭𑌯𑌾𑌸𑌂𑌯𑍁𑌨𑌕𑍍𑌤𑍁. (௪)

(ப - பி.) 𑌯𑌃, 𑌏𑌕𑌃, 𑌅𑌵𑌰𑍍𑌣𑌃, 𑌬𑌹𑍁𑌧𑌾, 𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌾𑌤𑍍, 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍, 𑌅𑌨𑍇𑌕𑌾𑌨𑍍, 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌃, 𑌦𑌧𑌾𑌤𑌿, 𑌵𑌿, 𑌚, 𑌏𑌤𑌿, 𑌚, 𑌅𑌨𑍍𑌤𑍇, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂, 𑌆𑌦𑍌, 𑌸𑌃, 𑌦𑍇𑌵𑌃, 𑌸𑌃, 𑌨𑌃, 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾, 𑌶𑍁𑌭𑌯𑌾, 𑌸𑌂𑌯𑍁𑌨𑌕𑍍𑌤𑍁.

(ப - உ.) 𑌯𑌃=யார், 𑌏𑌕𑌃=ஒருவரோ, 𑌅𑌵𑌰𑍍𑌣𑌃=நிறமற்றவரோ, 𑌬𑌹𑍁𑌧𑌾=பலவிதங்களாகிய, 𑌶𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌾𑌤𑍍=வல்லமைக



ளுடைய சேர்க்கையால், 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌃=பிரயோஜனங்களையறிந்து, 𑌅𑌨𑍇𑌕𑌾𑌨𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍=பலவிதமான பலங்களை, 𑌦𑌧𑌾𑌤𑌿=பகர்ந்துதருகிறாரோ, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂=உலகத்தில், 𑌆𑌦𑍌=தலைப்பிலும், 𑌅𑌨𑍍𑌤𑍇 𑌚=இறுதியிலும், 𑌵𑌿 𑌏𑌤𑌿=வியாபித்திருக்கிறாரோ, 𑌸𑌃=அவர், 𑌦𑍇𑌵𑌃=தேவன், 𑌸𑌃=அவர், 𑌨𑌃=நம்மை, 𑌶𑍁𑌭𑌯𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾=நற்புத்தியோடு, 𑌸𑌂𑌯𑍁𑌨𑌕𑍍𑌤𑍁=சேர்ப்பாராக.

(பொ - உ.) யார் ஒருவரோ, நிறமற்றவரோ, யார் பிரஜைகளினது பிரயோஜனங்களை யறிந்து பலவிதமான வல்லமையுடன் கூடியவராகப் பல காம்மிய வஸ்துக்களைத் தருகிறாரோ, எல்லா வுலகத்தின் முதலிலும் முடிவிலும் யார் நிறைந்திருக்கிறாரோ, அவர் தேவன். அவர் நம்மை நல்ல புத்தியுடன் சேர்ப்பாராக.

(வி - உ.) பலநிறங்களைப்படைத்த எந்த ஒன்றாகியகடவுளோ அவர் தான் நிறமற்றவராகவிருந்தும் தூய்யதன்மையையுடைய ஞானிகளுக்கருகில் அவர்மிகவிளக்கமாக விளங்கிக்கொண்டிருக்கிறார். அவர்கள்அந்தச்சத்தியபுருடனைத்தருமத்தையும்,பொருளையும்,சுகசவுக்கியாதிகளையும் கொடுப்பவராகப் பாவித்து அவரை அதிஸமீபஸ்தராக வறிகின்றனர். மேலும் இம்மைசுகவிருப்பமற்றவராகி உள்ளத்தினிடத்துள்ள அன்புடன் அவரதுஉபாஸனை செய்கின்றனர். அவரிடத்தில் அவர்களுக்கு ஒருபிரார்த்தனையும் இல்லை. கேவலம் அவரை யடைதலின் நிமித்தமே நல்லபுத்தி கொடுக்கவேண்டுமென்னும் பிரார்த்தனை.

௧௨௧

𑌸𑌵𑍃𑌕𑍍𑌷𑌕𑌾𑌲𑌾𑌕𑍃𑌤𑌿𑌭𑌿𑌃𑌪𑌰𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌯𑌸𑍍𑌮𑌾
𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌽𑌯𑌂 ; 𑌧𑌰𑍍𑌮𑌾𑌵
𑌹𑌂𑌪𑌾𑌪𑌨𑍁𑌦𑌂𑌭𑌗𑍇𑌶𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌮𑌮𑍃𑌤𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑌧𑌾𑌮 ; 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌕𑌂𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌰𑌂
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌶𑌿𑌵𑌂𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌤𑌿. ... (௫)

(ப - பி.) 𑌸𑌃, 𑌵𑍃𑌕𑍍𑌷𑌕𑌾𑌲𑌾𑌕𑍃𑌤𑌿𑌭𑌿𑌃, 𑌪𑌰𑌃, 𑌅𑌨𑍍𑌯𑌃, 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌅𑌯𑌂; 𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌹𑌂, 𑌪𑌾𑌪𑌨𑍁𑌦𑌂, 𑌭𑌗𑍇𑌶𑌂,

ஜ்ஞாத்வா, ஆத்மஸ்தம், அம்ருதம், விச்வதாம; விச்வஸ்ய, ஏகம், பரிவேஷ்டிதாரம், ஜ்ஞாத்வா, சிவம், சாந்திம், அத்யந்தம், ஏதி.

(ப - உ.) யஸ்மாத்=யாரில், ப்ரபஞ்ச:=உலகம், பரிவர்த்ததே=சுழன்றுவருகின்றதோ, ஸ:=அவர், வ்ருக்ஷகாலாக்ருதிபி:=உலகம் காலம் உருவமுடையபொருள் யாவற்றையும்விட, பர:=சிறந்தவர், அந்ய:=வேறானவர், தர்மாவஹம்=தருமத்திற்கிருப்பிடமானவரும், பாபநுதம்=பாபத்தைப்போக்குகிறவரும், பகேசம்=செல்வத்திற்குத்தலைவரும், ஆத்மஸ்தம்=எல்லா உயிர்களினுமிருப்பவரும், அம்ருதம்=அழிவற்றவரும், விச்வதாம=யாவற்றிற்கும் இருப்பிடமாகவிருப்பவருமானவரை, ஜ்ஞாத்வா=அறிந்து, விச்வஸ்ய=உலகத்தினது, ஏகம்=ஒன்றாகிய, பரிவேஷ்டிதாரம்=சூழ்ந்திருப்பவரும், சிவம்=மங்களஸ்வரூபியுமானவரை, ஜ்ஞாத்வா=அறிந்து, அத்யந்தம்=மிகுதியாகிய, சாந்திம்=சாந்தியை, ஏதி=(ஜீவாத்துமா) அடைகிறது.

(பொ - உ.) யாரில் இந்தப் பிரபஞ்சம் சுழன்றுகொண்டிருக்கிறதோ அவர் உலகம் காலம் உருவமுடையபொருள்கள் இவைஎல்லாவற்றையும்விட சிறந்தவர், வேறானவர். அவர் தருமத்திற்குமூலமானவர், பாபத்தைப் போக்குகிறவர், செல்வத்திற்குத் தலைவர். அவர் எல்லாஉயிர்களுக்கும் உள்ளேயிருப்பவர், அழிவற்றவர், உலகத்திற்காதாரமானவர், அவர் நன்மையேவடிவாக உடையவர், உலகத்தைச் சூழ்ந்திருக்கிற ஒருவர். இவரைஅறிந்து உயிர்கள்மிகச்சாந்தியைப்பெறுகின்றனர்.

(வி - உ.) இவ்வுலக ஸம்ஸாரத்தில் எவ்வளவு சிறுபொருள்கள் இருக்கின்றனவோ, அவற்றில் ஒன்றைப்போலாவது அவரிருக்கவில்லை; அவர் வெளிவிஷயங்களைப்போல இருக்கவில்லை, அவர் உள்ளேயிருக்கிற சித்துப்பொருள்போலவும் இருக்கவில்லை. அவர் அசித்துப்பொருள் சித்துப்பொருள் இரண்டையும் படைத்தவர்; ஆனதால் அவர் எல்லாவற்றிற்கும் மேலானவர், மேலும் எல்லாவற்றிற்கும்வேறானவர். அவர் ஸத்தியஸ்வரூபி, ஞானஸ்வரூபி, ஆநந்தஸ்வரூபி; அவருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. அவர் எப்படிஇதயஆகாசத்தில் இருந்துகொண்டு நியந்தாவாக எல்லாஜடஜகத்தையும் பசுப்பிரகிருதியையும் நியமத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாரோ, அதுபோல அவர்மனிதஆன்மாக்களில் தருமத்திற்குக் காரணராகவிருந்துகொண்டு ஒவ்வொருநிமிஷத்திற்கும் நற்புத்தியைத்தருகிறார். ஜடஜகத்தும் பசுபக்ஷிகளும் நியமமறியாமலேநியமபலத்தில்கட்டுப்பட்டு காரியங்களைச்செய்கின்றன. ஆன்மா கடமைகளின் உணர்ச்சியாகிய ஒளியினால் தருமத்தின் நியமத்தை யறிந்து ஸ்வாதீநத்தன்மையுடன் தருமகாரியங்களைப் புரிகிறது. எப்பொழுது ஆன்மா மாநஸிகப் பிரவிருத்திகளுக்குள்ளாகி தருமநியமமான கடமை யுணர்ச்சியின் துகட்டளையை அசட்டைசெய்து பாபத்தினால் கவரப்படுகிறதோ, அப்பொழுது அது ஸ்வாதீனத்தன்மையைவிட்டு பிரஷ்டத்துவத்தைப்பெற்று, பிருத்தியுளன்னும்பாசத்தால் கட்டப்பட்டு ஆந்தரிகமான பொறுத்தமுடியாத மனவருத்தத்தை யநுபவித்துக்கொண்டிருக்கிறது. அப்பொழுது பாபத்தைப் போக்கத்தக்க ஈச்வரனன்றி அதற்குவேறுகதியில்லை. அப்பொழுது பாபத்தினால் கவரப்பட்ட ஆன்மா இயற்கையான துயரத்தினால் எரிக்கப்பட்டு இவ்விதமாக இனிசெய்யேனென்று அவரைச் சரணடைகின்றது, அப்பொழுது அவரதை பாபத்திலிருந்துவிடுவித்து மறுபடியும் தனதுஸன்மார்க்கத்தில் விருத்தியடையச்செய்கிறார். இதுஅவரது மகிமை, இதுஅவரதுகருணை. பாபத்தையும் துயரத்தையும் வடிவாக உடைய இதை ஸம்ஸாரத்திலொன்றானவரும், பரிசுத்தரும், பாபமற்றவரும், அழிவற்றவருமான ஈச்வரனை தமதுஉள்ளத்தின் வழியாக வடைந்து மேலும் அவரைப்பாபத்தைப்போக்குகிறவராகவும், அழிவற்றமுத்தியைத்தருபவராகவும் அறிந்து ஆன்மா மிகச்சாந்தியைப் பெறுகின்றது.



கஉஉ

ஸவிச்வக்ருத்விச்வவிதாத்மயோநிர்ஜ்ஞ:காலகாரோ
குணீஸர்வவித்ய:; ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞ
பதிர்குணேச: ஸம்ஸாரமோக்ஷஸ்திதிபந்த
ஹேது:. ... ... ... (கா)

(ப - பி.) ஸ:, விச்வக்ருத், விச்வவித், ஆத்மயோநி:, ஜ்ஞ:, காலகார:, குணீ, ஸர்வவித், ய:; ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதி:, குணேச:, ஸம்ஸாரமோக்ஷஸ்திதிபந்தஹேது:.

(ப - உ.) யஃ=யார், விஶ்வக்ருத்=உலகத்தைப்படைத்தவரோ, விஶ்வவித்=உலகத்தை யறிந்தவரோ, ஆத்மயோநிஃ=ஆன்மாவுக்குக் காரணமானவரோ, ஜ்ஞஃ=ஞானமுள்ளவரோ, காலகாலஃ=காலத்திற்குத்தலைவரோ, குணீ=குணமுடையவரோ, ஸர்வவித்=யாவற்றையுமறிந்தவரோ, ஸஃ=அவர், ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிஃ=அசித்து சித்து ஆகிய இருவகைப்பொருளையும் காப்பவர், குணேஶஃ=குணங்களுக்குத்தலைவர், ஸம்ஸாரமோக்ஷஸ்திதிபந்தஹேதுஃ=ஸம்ஸாரத்தினதுநிலைக்கும்பந்தமோக்ஷங்களுக்கும்காரணரானவர்.

(பொ - உ.) யார் உலகத்தைப் படைத்தவரோ, உலகத்தை யறிந்தவரோ, ஆன்மாக்களுக்குக் காரணரோ, ஞானமுள்ளவரோ, காலத்திற்குத் தலைவரோ, குணத்தை யுடையவரோ, யாவற்றையுமறிந்தவரோ, அவர் அசித்துப்பொருள் சித்துப் பொருள் இரண்டையும் காப்பவர் குணங்களுக்குத் தலைவர் ஸம்ஸாரத்தினது நிலைக்கும் பந்தமோக்ஷங்களுக்கும் காரணரானவர்.

(வி - உ.) அவர் யாவரையும் படைத்தவர், யாவரையும்காப்பவர், யாவருடையவும்நண்பர், யாவருக்குந்தலைவர் ஒருவரும்அவருடைய நியமத்தைக் கடக்கவல்லவரல்லர். அவரது நியமத்தினாலேயே ஜீவாத்துமா சரீரத்தோடுசேர்க்கப்பட்டிருந்துகொண்டு ஞானத்திலும் தருமத்திலும் ஸ்வாதீனத்தைப்பெற்று முத்திக்கு அதிகாரியாகின்றது. மேலும் கடைசியாக அவரது அருளால் அவரைப்பெற்று ஸம்ஸாரத்தளையினின்றுநீங்கி முத்தியடைகின்றது.

கஉஙு

ஸதந்மயோஹ்யம்ருதஈஶஸம்ஸ்தோஜ்ஞஃ ஸ
ர்வகோபுவநஸ்யாஸ்யகோப்தா; யஈஶே
ஸ்யஜகதோநித்யமேவநாந்யோஹே
துர்வித்யதஈஶநாய; தம்ஹதேவமா
த்மபுத்திப்ரகாஶம்முமுக்ஷுர்வைஶரண
மஹம்ப்ரபத்யே. ... ... (எ)

(ப - பி.) ஸஃ, தந்மயஃ, ஹி, அம்ருதஃ, ஈஶஸம்ஸ்தஃ, ஜ்ஞஃ, ஸ



ர்வகஃ, புவநஸ்ய, அஸ்ய, கோப்தா; யஃ, ஈஶே, அஸ்ய, ஜகதஃ நித்யம், ஏவ, ந, அந்யஃ, ஹேதுஃ, வித்யதே, ஈஶநாய, தம், ஹ, தேவம்; ஆத்மபுத்திப்ரகாஶம், முமுக்ஷுஃ, வை, ஶரணம், அஹம் ப்ரபத்யே.

(ப - உ.) ஸஃ=அவர், தந்மயஃ=ஞானத்தை வடிவாகஉடையவர், அம்ருதஃ=அழிவற்றவர், ஈஶஸம்ஸ்தஃ=யாவற்றிற்கும்தலைவராகி நன்றாகநிலைபெற்றிருப்பவர், ஜ்ஞஃ=ஞானமுடையவர், ஸர்வகஃ=எல்லாவிடத்திற்கும்போகிறவர், அஸ்ய புவநஸ்ய=இவ்வுலகத்தினது, கோப்தா=பாலகர், யஃ=யார், அஸ்ய ஜகதஃ=இவ்வுலகத்தை, நித்யமேவ=எப்பொழுதும், ஈஶே=நியமத்தில்வைத்துக்கொண்டிருக்கிறாரோ (அவருக்கு), அந்யஃ=வேறான, ஹேதுஃ=காரணம், ஈஶநாய=உலகத்தின்நியமத்திற்கு, நவித்யதே=இருக்கவில்லை, ஆத்மபுத்திப்ரகாஶம்=ஆத்துமபுத்திப்பிரகாசகனாகிய, தம்தேவம்=அந்தத்தேவனை, அஹம்=நான், முமுக்ஷுஃ=முமுக்ஷுவாகி, ஶரணம் ப்ரபத்யே=சரணடைகிறேன்.

(பொ - உ.) அவர் ஞானஸ்வரூபி, அழிவற்றவர், யாவற்றிற்கும் தலைவராகி நன்றாக விருப்பவர், ஞானமுடையவர், எல்லாவிடத்திற்கும்போகிறவர். இவ்வுலகத்தினதுபாலகர். யார் இவ்வுலகத்தை எப்பொழுதும் நியமத்தில் வைத்திருக்கிறாரோ அவர்தவிர இவ்வுலக நியமத்திற்கு வேறு காரணமில்லை. நான் முமுக்ஷுவாகி ஆத்துமபுத்திப் பிரகாசகனாகிய அப்பரமேசுவரனை சரணடைகிறேன்.

(வி - உ.) அவர் நமது உள்ளங்களில் நமது கடமைகளின் ஞானத்தையும், தருமபுத்தியையும் விளங்கச்செய்கிறார். அரசன் எப்படி தனதுகுடிகளுக்கு ஸ்வாதீனத்தைத் தந்து அரசின் நியமங்களனைத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறாரோ, தருமத்திற்குக் காரணராகி கடவுள் அவ்விதமாக மனிதஆன்மாக்களுக்கு ஸ்வாதீனத்தைத்தந்து அவைகளினது உள்ளங்களில் தருமநியமங்களனைத்தையும்பதித்துவைத்திருக்கிறார். நாம் நற்புத்தியுள்ளஆலோசனையினால் நமதுகடமைகள் இன்னவை என்னும் ஞானஒளியால் ஆன்மா வெ

ன்னும் படத்தில் தொன்றுதொட்டுப் பதித்துவைத்திருக்கின்ற தருமநியமங்களனைத்தையும்படிக்கிறோம், மேலும் அதன்படி ஆசரித்து நல்லவர்களாகிறோம், ஸாதுக்களாகிறோம், வினயமுள்ளவர்களாகிறோம், நல்லசீலமுள்ளவர்களாகிறோம், கடவுளிடத்தன்புள்ளவர்களாகிறோம். தருமானுஷ்டானத்தினால் புண்ணியமாகிய ஒளியில் உள்ளம் தூய்மையுடையதானால் நாம் அதிபரிசுத்தமாகிய ஆத்துமானந்தத்தைப் பெறுகிறோம், மேலும் அந்த ஆத்துமானந்தத்தினால் நமது கருத்திலுள்ள துயரங்களனைத்தும் நசித்துப்போகின்றது. நாம் தருமத்தினது கட்டளையின்படி கருத்தினது தீய்யநோக்கங்களுக்கும் உள்ளத்தினது கெட்டவிருப்பங்களுக்கும் மாறாகச்சென்று ஆத்துமானந்தத்தைஎவ்வளவுவிருத்திசெய்துகொள்ளுகிறோமோ எவ்வளவு பரிசுத்தப்படித்திக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கும் அந்தப் பவித்திரஸ்வரூபனிடத்தில் நமதுவிருப்பம் செல்லுகின்றது. மேலும் அவரை யடையும்நிமித்தம் ஸம்ஸாரத்தினது மரணமாகிய பாசத்திலிருந்து நீங்கி முத்திவிருப்பமுடையவர்களாகி அவரது சரணடைகிறோம்.

க௨௬

தஸ்யைவ வா ஏதஸ்ய ப்ரஹ்மணோ நாமைவ
ஸத்யம்; நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரம்
ஜநம்; அம்ருதஸ்ய பரம் ஸேதும் தக்தேந்தநமிவா
நலம். ... ... ... (அ)

(ப - பி.) தஸ்ய, ஏவ, வை, ஏதஸ்ய, ப்ரஹ்மண:, நாம, ஸத்யம்; நிஷ்கலம், நிஷ்க்ரியம், சாந்தம், நிரவத்யம், நிரஞ்ஜநம்; அம்ருதஸ்ய பரம், ஸேதும், தக்தேந்தநம், இவ, அநலம்.

(ப - உ.) தஸ்ய=அந்த, ஏதஸ்ய=இந்த, ப்ரஹ்மண:=பிரமத்தினது, நாம=பெயர், ஸத்யம்=உண்மை, நிஷ்கலம்=(அவர்) நிரவயவர், நிஷ்க்ரியம்=[அவர்] கிரியையற்றவர், சாந்தம்=சாந்தமானவர், நிரவத்யம்=நிந்தநீயரல்லர், நிரஞ்ஜநம்=நிர்லேபர், அம்ருதஸ்ய=அழிவற்றபதவியினது, பரம்ஸேதும்=சிறந்த ஸேதுவைப்போன்றவர், தக்தேந்தநம்=கொளுத்தப்பட்ட கட்டையினின்றுவருகிற, அநலம் இவ=தீயைப்போல ஸ்வப்பிரகாசர்.

(பொ - உ.) அப்படிப்பட்ட இந்தப்பிரமத்தின்பெயர் ஸத்தியம்; அவர் நிரவயவர் நிஷ்கிரியர் சாந்தர்; அவர் அநிந்தநீயர் நிர்லிப்தர் முத்திக்குச்சிறந்தஸேதுவைப்போன்றவர். மேலும்கொளுத்தப்பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற தீயைப் போல ஸ்வப்பிரகாசர்.

(வி - உ.) மிக்கதூரத்திலிருப்பவரும் மிகவருகிலிருப்பவரும் யாவற்றிலும் நிறைந்தவருமாகிய அப்படிப்பட்ட இந்தப் பிரமத்தினதுபெயர் ஸத்தியம்; ஆனதால் அவர் ஸத்தியஸ்வரூபி. அந்தஸத்தியஸ்வரூபனைப் பற்றிக்கொண்டே இவ்வுலகம் யாவும் ஸத்தியமாகவிருக்கின்றது. அவர்ஸத்தியத்திற்குஸத்தியம், பிராணத்திற்குப் பிராணம், ஞானத்திற்குஞானம், ஆன்மாவுக்கு ஆன்மா.

அவர் ஒன்றாகியபிரக்கியாநகநர்; அவருக்குஅவயவமில்லை, அவருக்குஓர்பிரிவுமில்லை, அவருக்குஓர்அளவுமில்லை. அவர் நன்றாக்கமுடைய மாற்றக்கூடாதநியமங்களனைத்தையும் ஏற்படித்திக்கொண்டு இவ்வுலகமாகியஅரசை நடத்திவருகிறார். எல்லாம்வல்லவரும், யாவற்றையுமறிந்தவருமாகிய அந்தப்பூரணர் இவ்வுலககாரியங்களைநிர்வஹித்தற்பொருட்டு யாரிடத்தில் அல்லது எதினிடத்தில் எந்தச்செய்கையின்பளுவைத்தந்தாரோ, அவர் அல்லதுஅது அவற்றைத்தானுள்ளளவும் நடத்திவருகின்றது; அவர் யாவற்றிற்குந்தலைவராகி நியந்தாவாக எங்கும் வியாபித்திருக்கின்றார். அவரது இயற்கை நியமங்களுக்குள்ளாகி காலத்தில் சூரியபிம்பம் உதயமாகின்றது மேகம் மழையைப்பொழிகின்றது, மரங்கள்பலனைத்தருகின்றன; மேலும் அவரது தருமநியமசாஸனத்தில் மனிதர்கள் ஸ்வாதீநர்களாகி, துர்மார்க்கத்திற்சென்றால் தருமதண்டனையாகிய பாபத்தினால் வரும் இயற்கையான அனுதாபத்தில் வருந்துகிறார்கள், அவரதுசரணடைந்து பாபத்தைவிட்டு நீங்கி காப்பைப்பெறுகின்றனர், புண்ணியானுஷ்டானத்தைச்செய்து தருமத்தின்பயனாகிய ஆத்துமானந்தத்தினால் பவித்திரர்களாகின்றனர், பவித்திரர்களாகி அந்தப் பவித்திரஸ்வரூபனை யடைந்து உலகக்கட்டுப்பாட்டைவிட்டு நீங்கி முத்திபெற்று மேலானபதவியையடைகின்றனர். அவர் தானாக ஒருகாரியத்தையும்செய்யவேண்டியதில்லை. அவர் தானாக ஒருவருத்தத்தையும் வாங்கிக்கொள்ளவேண்டியதில்லை; அவர்நிஷ்கிரியர் சாந்தர். அவரது இ

ச்சாமாத்திரத்தில் இவ்வுலகம் யாவும்உண்டாயிற்று. மேலும் அவர் ஒருவரது இச்சைக் குட்பட்டு யாவும் சேர்ந்து அசித்துப்பொருள்கள் கட்டுப்பட்ட தன்மையினுலும் சித்துப்பொருள்கள் ஸ்வாதீநத்தன்மையினுலும் அவரது ஆக்கியாகைங்கரியத்தைப்புரிகின்றன. அவர் இவ்வுலகத்தின் தலைவர், ஆனால் இவ்வுலகத்திற்கதீதர்; அவர் ஒரு உலகச்செய்கையிலும் ஸம்பந்தப்பட்டவரன்று; அவர் நிரஞ்சனர், நிர்லிப்தர். அவர் பூரணஸ்வரூபர், அவரதுஸ்வரூபத்தில் குற்றமில்லை; அவர் நிரவத்யர், அநிந்தநீயர். அந்த அழிவற்றவரது சரணடைந்தால்தான் அவரையடையலாகும் அவரை யடைந்தாற்றான் மிருத்தியுபயமில்லாது, அவர்அழிவற்றபதவிக்குச் சிறந்தஸேதுவு. யார் அவரை ஞானக்கண்ணினுல் பார்க்கப்பெறுகின்றனரோ அவர்கள் அவரைச் சுடர்விட்டெறிகிற தீயைப்போல அவர் எங்கும் விளங்குகிறதைக் காண்கிறுர்கள்.

## ௧௨௫

ஸஸேதுர்வித்ருதிரேஷாம்லோகாநாமஸம்
பேதாய; நைநம்ஸேதுமஹோராத்ரே
தரத: நஜராநம்ருத்யுர்நஶோக:. (௯)

(ப - பி.) ஸ:, ஸேது:, வித்ருதி:, ஏஷாம், லோகாநாம், அஸம்பேதாய; ந, ஏநம், ஸேதும், அஹோராத்ரே, தரத:, ந, ஜரா, ந, ம்ருத்யு:, ந, ஶோக:.

(ப - உ.) ஸ:=அவர், ஸேது:=ஸேதுவைப்போல, ஏஷாம் லோகாநாம்=இவ்வுலகங்களினது, அஸம்பேதாய=பங்கநிவாரணத்தின்பொருட்டு, வித்ருதி:=தாங்கிநிற்கிறவராகவிருக்கிறுர், ஏநம்ஸேதும்=இந்த ஸேதுஸ்வரூபியை, அஹோராத்ரே=இராப்பகல்களும், ந தரத:=கடக்கமாட்டா, ந ஜரா=மூப்பும் கடக்கமாட்டாது, ந ம்ருத்யு:=மரணமும்கடக்கமாட்டாது, ந ஶோக:=துயரமும்கடக்கமாட்டாது.

(பொ - உ.) அவர்உலகத்தின் பங்கநிவாரணத்தின்பொருட்டு ஸேதுஸ்வரூபியாகி யாவற்றையும் தாங்கிக்கொண்டிருக்கிறுர். இந்தஸேதுஸ்வரூபி இராப்பகல்களுக்கும், மூப்பு மரணம் துயரம் இவைகளுக்கும் உள்ளானவரன்று.



(வி - உ.) உலகங்களெல்லாம் பொடியாகிப் போகாதவண்ணம், அவர்இவைகளனைத்தையும் தாங்கிக்கொண்டிருக்கிறுர். அவர்நித்தியப்பொருள்; அவர் இன்னநாளில்உண்டானுர், இத்தனைநாள்வரையிலிருப்பார், இவ்விதமாக இராப்பகல்கள்மூலமாக அவரை அளக்கமுடியாது. அவர் நிர்விகாரர்; ஆனதால் மூப்பும் துயரமும் அவரை அதிகாரம்செய்யமுடியாது. யார்காலத்தைப் படைத்தவரோ, அதற்கிருப்பிடமானவரோ, அதன்நியந்தாவோ யாருடையசரணடைந்தால் மூப்பு சாவு துயரம் இவைகளைவிட்டுநீங்கி காப்பைப்பெறுவோமோ அந்த அமிருதஸ்வரூபனை ஜராமரணங்கள் எவ்விதமாக அதிகரிக்கும்.

## ௧௨௬

யஆத்மா(அ)பஹதபாப்மாவிஜரோவிம்ருத்யு
விஶோகோவிஜிகத்ஸோ(அ)பிபாஸ: ஸ
த்யகாம:ஸத்யஸங்கல்ப:; ஸோ(அ)ந்வேஷ்டவ்ய:ஸ
விஜிஜ்ஞாஸிதவ்ய:; ஸஸர்வாம்ஶ்சலோகாநா
ப்நோதிஸர்வாம்ஶ்சகாமாந் யஸ்தமாத்மாநமநு
வித்யவிஜாநாதி. ... ... (௧0)

(ப - பி.) ய:, ஆத்மா, அபஹதபாப்மா, விஜர:, விம்ருத்யு:, விஶோக:, விஜிகத்ஸ:, அபிபாஸ:, ஸத்யகாம:, ஸத்யஸங்கல்ப:, ஸ:, அந்வேஷ்டவ்ய:, ஸ:, விஜிஜ்ஞாஸிதவ்ய:, ஸ:, ஸர்வாந், ச, லோகாந், ஆப்நோதி, ஸர்வாந், ச, காமாந், ய:, தம், ஆத்மாநம், அநுவித்ய, விஜாநாதி.

(ப - உ.) ய: ஆத்மா=எந்தப்பரமாத்துமா, அபஹதபாப்மா=பாயமற்றவரோ, விஜர:=மூப்பற்றவரோ, விம்ருத்யு:=மரணமற்றவரோ, விஶோக:=துயரமற்றவரோ, விஜிகத்ஸ:=பசியற்றவரோ, அபிபாஸ:=தாகமற்றவரோ, ஸத்யகாம:=எண்ணியதைச்செய்கிறவரோ, ஸத்யஸங்கல்ப:=எண்ணியதைமுடிக்கிறவரோ, ஸ:=அவர், அந்வேஷ்டவ்ய:=தேடப்படத்தக்கவர், ஸ:=அவர், விஜிஜ்ஞாஸிதவ்ய:=விசேஷமாக வறியப்படத்தக்கவர், ய:=யார், தம்ஆத்மாநம்=அந்தப்பரமாத்துமாவை, அநுவித்ய=தேடி, விஜாநாதி=நன்

றாகவறிகிறாரோ, ஸ:=அவர், ஸர்வாம்ஶ்ச லோகாந்=எல்லாஉலகங்களையும், ஸர்வாம்ஶ்ச காமாந்=எல்லாவிருப்பங்களையும், ஆப்நோதி=பெறுகிறார்.

(பொ - உ.) எந்தப் பரமாத்துமா பாபமற்றவரோ, மூப்பற்றவரோ, சாவற்றவரோ, துயரமற்றவரோ, பசிதாகங்களற்றவரோ, ஸத்தியகாமரோ, ஸத்தியஸங்கல்பரோ, அவர்தேடப்படத் தக்கவர் விசேஷமாக வறியப்படத்தக்கவர். யார் அப்படிப்பட்ட பரமாத்துமாவைத் தேடியறிகிறாரோ, அவர் எல்லா உலகங்களையும் எல்லாவிருப்பங்களையும் அடைகிறார்.

(வி - உ.) நாம்பூரணத்தன்மையற்றவர்களும் திரிபானஉணர்ச்சியுடையவர்களும் பாபத்தினால் கவரப்பட்டவர்களுமான உயிர்களாகவிருந்தும் பாபமற்றவரும் பரிசுத்தரும், பரிபூரணரும், ஸத்தியமானவரும், அழிவற்றவருமானபுருஷனை அறியக்கூடியவர்களாகவிருப்பதுநமக்குச்சாதாரணமானபாக்கியமன்று. ஆனால் அவரைஅறியவேண்டுமாயின், நமது அந்தரங்கமானவிருப்பமும், முயற்சியும், நடக்கையும்ஆவசியகங்களாகவிருக்கின்றன. நீர்வேட்கைகொண்டமிருகம்எப்படிநீரைத்தேடுமோ அதுபோலஅந்தநித்தியரும், ஸத்தியரும் விகாரமற்றவரும், அழிவற்றவருமானவரை விரும்பித்தேடல்வேண்டும். மேலும் உள்ளங்கைக்கனி எவ்வளவுபிரத்தியக்ஷமாகவிருக்கின்றதோ அதுபோல அவரைத் தூய்மையான்ஞானத்தின்வழியாக ஐயமில்லாவண்ணம் அதிஸமீபஸ்தராக அறியவிரும்பல்வேண்டும். பொறிகளைவென்று விசேஷமாகத்தேடியபின்னர் அவரைக் குற்றமற்றஒளிவடிவாகிய தமக்குள் ஆன்மாவுக்கான்மாவாகவும் பிராணனுக்குப்பிராணனாகவும் யாவற்றிற்கும் காரணராகவும் பற்றுக்கோடானவராகவும் பிரத்தியக்ஷமாக வறியக்கூடுமாயின் நீர்வேட்கையினால் வருந்தியமிருகம் எப்படிநீரையடைந்து திருத்தியைப்பெறுமோ அதுபோல அவர்திருத்தியடைகிறார். அவரது எல்லாவிருப்பங்களும் ஸித்தியாகி பூமிமுதலிய சகல உலகங்களினுடைய சுகத்தையும் அடைகிறார்; அவர்பிரமாநந்தத்தைப் பெற்று சகல ஆனந்தங்களையும் அனுபவிக்கிறார்.

## கஉஎ

ஆகாஶோ வை நாம நாமரூபயோர் நிர்வ-
ஹிதா; தே யத³ந்தரா தத்³ ப்³ரஹ்ம தத³ம்ருதம் (கக)



(ப - பி.) ஆகாஶ:, வை, நாம, நாமரூபயோ:, நிர்வஹிதா; தே, யத், அந்தரா, தத், ப்³ரஹ்ம, தத், அம்ருதம்.

(ப - உ.) ஆகாஶ:=ஆகாயமென்று, நாம=பெயர், நாமரூபயோ:=பெயரும் உருவமும் உடையவைகளினது, நிர்வஹிதா=நிருவாககர், தே=அவைகளுக்கு (நாமரூபமுள்ளவைகளுக்கு), யத் அந்தரா=எது வேறானதோ, தத்=அது, ப்³ரஹ்ம=பிரமம், தத்=அது, அம்ருதம்=அழிவற்றது.

(பொ - உ.) பிரமத்தின்பெயர் ஆகாயம். அவர்பெயரும் உருவமுமுள்ள பொருள்களினுடைய நிர்வாககர். பெயரும் உருவமுமுள்ள பொருள்களைக் காட்டிலும் வேறானவர் யாரோ அவர் பிரமம். அவர் அழிவற்றவர்.

(வி - உ.) மனதெப்பொழுது பிரமத்தினது அந்தமுடிவற்ற தன்மையை அனுபவிக்கின்றதோ, அப்பொழுது வாக்கு அவரைவெளியிடச்சென்று அவருக்குஆகாயம்என்னும் பெயரைத்தருகின்றது. உண்மையில் அவருக்கு ஒருபெயருமில்லை மேலும் உருவமும்இல்லை. உருவத்துடனும் பெயருடனும்கூடிய எல்லாப்பொருள்களும் அவரிடத்திலிருந்து படைக்கப்பட்டு அவருடையஆசிரயத்தில் பாலிக்கப்பட்டிருக்கின்றன.

## கஉஅ

நைவ வாசா ந மநஸா ப்ராப்தும் ஶக்யோ ந
சக்ஷுஷா; அஸ்தீதி ப்³ருவதோ(அ)ந்யத்ர க
த²ம் தது³பலப்⁴யதே. ... ... (கஉ)

(ப - பி.) ந, ஏவ, வாசா, ந, மநஸா, ப்ராப்தும், ஶக்ய:, ந, சக்ஷுஷா; அஸ்தி, இதி, ப்³ருவத:, அந்யத்ர, கத²ம், தத், உபலப்⁴யதே.

(ப - உ.) ப்ராப்தும்=(பிரமத்தை) யடைவதற்கு, ஶக்ய:=கூடுமாகவிருப்பது, ந ஏவ வாசா=வாக்கினாலுமில்லை, ந மநஸா=மனதினாலுமில்லை, ந சக்ஷுஷா=கண்ணினாலுமில்லை, அஸ்தி இதி=கடவுள் உளரென்று, ப்³ருவத:=சொல்லுகிறவனைவிட, அந்யத்ர=

பிறரிடத்தில், 𑌤𑌤𑍍=அதை (கடவுளை), 𑌕𑌥𑌂=எவ்விதமாக, 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇=அடையப்படுவார்.

(பொ - உ.) பிரமத்தை யடைவதற்குக்கூடியதாகவிருக்க வாக்கினாலுமில்லை, மனதினாலு மில்லை, கண்ணினாலு மில்லை, கடவுள்உளரென்று சொல்லுகிறவர்களைவிட பிறர் அவரை எப்படி அடைவார்கள்.

(வி - உ.) பரமேச்வரரது ஸ்வரூபம் காணப்படாதது, சொல்லிமுடியாதது, கருதிமுடியாதது. அவரைக்கண்ணினாலாவது, வாக்கினாலாவது கருத்தினாலாவது அரியக்கூடாது; அவரைக்கேவலம் ஒருஆத்துமப் பிரத்தியயத்தினால்மாத்திரம்அடையலாகும். நாம்நம்மைஅபூர்ணரென்றும் பரதந்திரரென்றும் நம்புகிறோம், அதற்குள் பூரணமும் ஸ்வதந்திரமுமான பொருளொன்றுளதென்னும் நம்பிக்கையடங்கியிருக்கிறது; அந்தக்காரணத்தினால் பூரணமும்ஸ்வதந்திரமுமானபொருளொன்றின்றேல் நம்மைஅபூர்ணரென்றும் பரதந்திரரென்றும் நம்புவதற்கு ஒருஆதாரமுமில்லை. பரதந்திரமும் அபூரணமுமான ஒருபொருளின் இருப்பினால் ஒருஸ்வதந்திரமாகிய பூரணப்பொருளின்இருப்புவெளிப்படுகின்றது. இந்தநம்பிக்கை தானாகவுள்ளது இந்தஏதுவினால் இதைப்பரீக்ஷிக்கவேண்டிய ஆவசியகமில்லை. பரதந்திரமும் அபூரணமுமான பொருளைப்படைத்தவரும் அதன்ஆச்ரயருமான ஸ்வதந்திரராகியஒருபூரணபுருஷர் இருக்கிறாரென்னும் இயற்கையானஆத்துமப்பிரத்தியயமானது யாவருடைய உள்ளத்திலுமிருக்கிறது. பிறகு எப்பொழுது இவ்விஷயத்தில் ஐயமுண்டாகிறதோ அப்பொழுதுதான் யுக்திவிசாரணையுண்டாகிறது; ஆனால்அந்தவிசாரணையின் பின்னரும் வாக்குக்கும் கருத்திற்கும் புலப்படாதவரும் ஞானத்திற்குப்புலப்படுகிறவருமான ஸ்வதந்திராகிய ஒருபூரணபுருஷரிருக்கிறாரென்னும்ஸித்தாந்தமே உண்டாகின்றது. அக்காரணத்தினால் எப்பொழுது நமது நிர்மலமானஞானத்திற்கு அந்தஸத்தியஸுந்தர மங்களபுருஷர் விளங்குகிறாரோ அப்பொழுது ஆத்துமப்பிரத்தியயம் அவரது அஸ்தித்துவத்துள்ள நம்பிக்கையைஸ்திரப்படுத்துகின்றது. இந்தஆத்துமப்பிரத்தியயவிஷயமாக ஐயப்பட்டால் ஒரேதரத்தில் நியாயத்தின்வேர் அறுத்து விடுதல்ஆகின்றது. மேலும் விசேஷஐயமும் திரிபுமானஉணர்ச்சியுண்டாகின்றது. அப்படியாயின் நமதுஅஸ்தித்துவத்திலும் வெளிப்பொருள்களின் அஸ்தித்துவத்திலும் காரியகாரணங்களின் அஸ்தித்துவத்திலும் ஐயமுண்டாகி புத்திஒரேதரமாக நாசத்தையடைகின்



றது. யார் ஆத்துமப்பிரத்தியயத்தை ஆதாரமாகக் கொள்ளவில்லையோ அவர் ஒருபொழுதும் ஞானகோசரரான நித்தியஸத்திய மங்களஸ்வரூபரும் ஸர்வவியாபியும் சர்வாச்ரயரும் எல்லாம்வல்லவருமான பூரணபுருஷரை ஐயமின்றி நம்பக்கூடாதவராக இருக்கிறார். தருக்கதாங்கத்தினாலும் நிச்சயமற்றவராகி ஈச்வரஸஹவாஸத்தினாலுண்டாகும் அதிநிர்மலமாகிய சாந்தியை அவர் ஒருபொழுதும் அடையக்கூடாதவராக இருப்பார். ஆத்துமப்பிரத்தியயத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு யார் "அவருளர்" என்றுரைக்கிறாரோ அவரன்றி, பிறர் யாராலும் அவர் ஒருபொழுதும் அடையப்படுவதில்லை.

௧௨௯

𑌯𑌦𑍈𑌤𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌦𑍇𑌵𑌮𑌞𑍍𑌜𑌸𑌾;
𑌈𑌶𑌾𑌨𑌂 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌤𑌤𑍋𑌵𑌿𑌜𑍁-
𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇. ... ... ... (௧௫)

(ப - பி.) 𑌯𑌦𑌾, 𑌏𑌤𑌂, 𑌅𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂, 𑌦𑍇𑌵𑌂, 𑌅𑌞𑍍𑌜𑌸𑌾; 𑌈𑌶𑌾𑌨𑌂, 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌨, 𑌤𑌤𑌃, 𑌵𑌿𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇.

(ப - உ.) [யார்], 𑌯𑌦𑌾=எப்பொழுது, 𑌦𑍇𑌵𑌂=பிரகாசமுள்ளவரும், 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑍍𑌯=இறந்தகாலஎதிர்காலங்களினது, 𑌈𑌶𑌾𑌨𑌂=நியந்தாவுமான, 𑌏𑌤𑌂𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂=இந்தப்பரமாத்துமாவை, 𑌅𑌞𑍍𑌜𑌸𑌾=பிரத்தியக்ஷமாக, 𑌅𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿=தரிசிக்கிறாரோ, (அப்பொழுதுஅவர் தன்னை), 𑌤𑌤𑌃=அதைவிட்டு [பரமாத்துமாவைவிட்டு], 𑌵𑌿𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇=மறைத்துவைத்துக்கொண்டிருார்.

(பொ - உ.) ஸ்வப்பிரகாசமுள்ளவரும், இறந்தகால எதிர் காலங்களின் நியந்தாவுமான இந்தப்பரமாத்துமாவை யார் எப்பொழுது பிரத்தியக்ஷமாகத் தரிசிக்கிறாரோ அப்பொழுது அவர் தன்னை அப்பரமாத்துமாவினின்று மறைத்துவைத்துக் கொண்டிரார்.

(வி - உ.) யார் பாபகாரியங்களில் மூழ்கிக்கிடக்கின்றானோ, அவன் தன்னை மறைவாக வைத்துக்கொண்டிருக்க விரும்புகிறான்; ஆனால்பிறர்பாராமல் தன்னைமிகவாக மறைத்துவைத்துக் கொள்ளக்கூடுமாயினும், யாவருக்கும் அந்தராத்துமாவாக யாவற்றையும்

யார்க்கின்ற புருஷன் பாராமல் தன்னைமறைத்து வைத்துக்கொண்டிருக்கமுடியாது. யார்பிரகாசமுள்ளவரும், இறந்தகாலஎதிர்காலங்களின் நியந்தாவுமான பரமாத்துமாவை உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல சாதாரணமாய் பிரத்தியக்ஷமாகத்தரிசிக்கிருரோ, அவர் ஒருகுற்றமுள்ளசெய்கையிலும் சம்பந்தப்படவிரும்பார்; ஆனதால் தன்னை அவர்பாராமல் வைத்திருக்க விரும்புவதும்இல்லை. மோகவசத்தினுல் ஏதேனும் அவர்ஒருகுற்றத்தில் ஸம்பந்தப் படினும் தன்னை அவர்பாராமல்வைத்துவைக்க விரும்புவதில்லை; ஆனல் தான்குற்றத்திலிருந்து மீளுவதற்காக ஸரளமான உள்ளத்துடன் அநுதாபப்பட்டு அவரைப்பிரார்த்திக்கிருர். மேலும் அவர் அவரை அந்தப் பாபத்திலிருந்து விடுவிக்கிருர்.

---

## அத்தியாயம் - க௫.

க௨௦

நாவிரதோ து³ஶ்சரிதாந்நாஶாந்தோ நாஸ
மாஹித꞉; நாஶாந்தமாநஸோ வாபி ப்ரஜ்ஞா
நேநைநமாப்நுயாத். ... (க)

(ப - பி.) ந, அவிரத:, து³ஶ்சரிதாத், ந, அஶாந்த:, ந, அஸமாஹித:; ந, அஶாந்தமாநஸ:, வா, அபி, ப்ரஜ்ஞாநேந, ஏநம், ஆப்நுயாத்.

(ப - உ.) து³ஶ்சரிதாத்=கெட்டசெய்கையைவிட்டு, அவிரத: வெறுத்திராதவரும், அஶாந்த:=பொறிகளினது சஞ்சலத்தைவிட்டு சாந்தமாகவிராதவனும், அஸமாஹித:=நிச்சயசித்தமுடனிராதவனும், அஶாந்தமாநஸ: வா அபி=அமைதியான கருத்துடனுவ திராதவனும், ஏநம்=இவனை (பரமாத்துமாவை), ப்ரஜ்ஞாநேந=கேவலம் ஞானத்தினுல், ந ஆப்நுயாத்=அடையான.

(பொ - உ.) கெட்ட செய்கையை விட்டு வெறுத்திராதவனும், பொறிகளினது சஞ்சலத்தைவிட்டு சாந்தமாகவிராதவனும், நிச்சய சித்தமுட னிராதவனும், அமைதியான கருத்துடனுவ திராதவனும் கேவலம் ஞானத்தினுல் இப்பரமாத்துமாவை யடையான்.



(வி - உ.) பிரிய தமனுகிய பரமாத்துமாவை யறிந்தனம், ஆனுல் அவரிடத்தில் கருத்தை நிறுத்த இல்லை. மேலும் அவரிடத்தில் கருத்தை நிறுத்தி அவரோடு அத்தியான்ம யோகத்தில் சேருவதினுல் வரும் விமலாநந்தத்தை ஒருபொழுதும் அநுபவித்திலம்; அவரைமகானென்றும் பரிசுத்தரென்றும் அறிந்தும் நமது நடையை பெருமையுள்ளதாகவும் பரிசுத்தமானதாகவும் செய்துகொண்டு அவருடன் கூடிவாழத்தகுந்தவர்களாகவில்லை; நாமவரைநியந்தாவாகவும் விதாதாவாகவும் அறிந்தும், அவர் காட்டிய நல்வழியில் நாம் ஒருபொழுதும் செல்வதில்லை. கேவலம் இம்மையிலுள்ள ஸ்வப்பிரயோஜனத்தின்பொருட்டே பிறந்ததுமுதல் வேலைசெய்துக்கொண்டிருக்கின்ரேம்; அப்படியாயின் இன்னும் அவரையடைவது எப்படி ஸம்பவிக்கும்.

க௨க

ஶ்ரேயஶ்ச ப்ரேயஶ்ச மநுஷ்யமேதஸ்தௌ ஸம்
பரீத்ய விவிநக்தி தீ⁴ர꞉; தயோ꞉ ஶ்ரேய ஆத³
தா³நஸ்ய ஸாது⁴ ப⁴வதி ஹீயதே(அ)ர்தா²த்³ ய
உ ப்ரேயோ வ்ருணீதே. ... (உ)

(ப - பி.) ஶ்ரேய:, ச, ப்ரேய:, ச, மநுஷ்யம், ஏத:, தௌ, ஸம்பரீத்ய, விவிநக்தி, தீ⁴ர:; தயோ:, ஶ்ரேய:, ஆத³தா³நஸ்ய, ஸாது⁴, ப⁴வதி, ஹீயதே, அர்தா²த், ய:, உ, ப்ரேய:, வ்ருணீதே.

(ப - உ.) ஶ்ரேய:ச=சிரேயமானதும், ப்ரேய:ச=பிரியமானதும், மநுஷ்யம்=மனிதனை, ஏத:=அடைகின்றன, தீ⁴ர:=விவேகி, தௌ=அவ்விரண்டையும், ஸம்பரீத்ய=செவ்வையாகவாராய்ந்து, விவிநக்தி=வேறுவேருகப்பிரிக்கிருன், தயோ:=அவைகளில், ஶ்ரேய:=சிரேயமானதை, ஆத³தா³நஸ்ய=பற்றினவருக்கு, ஸாது⁴=நன்மை, ப⁴வதி=உண்டாகிறது, ய:து=யாரானல், ப்ரேய:=பிரியமானதை, வ்ருணீதே=பற்றுகிறுனே (அவன்), அர்தா²த்=பரமார்த்தத்திலிருந்து, ஹீயதே=பிரஷ்டனுகிருன்.

(பொ - உ.) சிரேயமும் பிரேயமும் மனிதனையடைகின்றன. விவேகி அவையிரண்டையும் நன்குக வாராய்ந்து வேறு வேருகப்பிரிக்கிருன். அவைகளுக்குள் சிரேயத்தைக் கிரகிக்கிறவருக்கு நன்மை யுண்டாகிறது. யார் பிரேயத்தைக் கிரகிக்கிருனே அவன் பரமார்த்தத்தைவிட்டுப் பிரஷ்டனுகிருன்.

(வி - உ.) கடவுளையடையும் மார்க்கத்தைப் பற்றுதல் சிரேயமானது, ஸம்ஸாரசுகத்தில் மூழ்கிக்கிடப்பது பிரேயமானது ஒவ்வொரு காலத்தில் கடவுளையடையும் வழியைப்பற்ற விருப்பமுண்டாகிறது. ஒவ்வொருசமயத்தில் ஸம்ஸாரசுகம் மனதைக்கவருகின்றது. இவைகளுக்குள் யார் ஈச்வரனையடையும் வழியைப்பற்றுகிருரோ அவருக்குச்சிறந்தநன்மையுண்டாகிறது. யார்ஸம்ஸாரசுகத்தில் முழுகிக் கிடக்கிருனே அவன் ஒருபொழுதும் பரமபவித்திரமாகிய பிரமாநந்தத்தை யடைவதற்குத் தக்கவனுகான். யார் ஈச்வரனிடத்தில் அன்பு செலுத்துகிருரோ அவர் அந்தப் பரமப் பிரேமாஸ்பதனுடைய திருப்பணி எனநினைத்து ஸம்ஸாரகாரியங்களைச் செய்கிருர் ; யார் ஸம்ஸாரத்தில் விருப்பமுடையவனுகவிருக்கிருனே அவன் ஸம்ஸாரத்தின் நன்மையைக்கருதியே மிகுந்த நன்மைகளுக்கு இருப்பிடமாகிய ஈச்வரனை உபாஸனைசெய்கிருன். ஸம்ஸாரத்தில் விருப்பமுள்ளவனுகி ஸ்வப்பிரயோஜனபரனுகவிருக்கிற எவனும் “ ஓ! பரமாத்துமாவே! உனதுகட்டளையின்படி உலகநன்மையின்நிமித்தத்தினுலும் உனக்கன்பானகாரியமென்னும் நிமித்தத்தினுலும்ஸம்ஸாரயாத்திரைநிர்வகிக்கும்பொருட்டுப்பிரவர்த்திக்கிறேன்” என்னும்வாக்கியத்தை ஒருபொழுதும் மனப்பூர்வமாகவாய்விட்டுச்சொல்லான். எப்பொழுதுஉள்ளக்கிளர்ச்சியுடன் இவ்வாக்கியத்தைச் சொல்லவல்லவர்களாவோமோ மேலும் நாம்செய்கிற காரியங்களி லனைத்திலும் இதையேலக்ஷியமாக வைத்துக்கொள்ளுவோமோ அப்பொழுது நாம் சிரேயமானதை நன்குகப் பற்றினேமென்று அறியக்கடவோம்.

கருஉ

யயாகாரீயயாசாரீ ததாபவதி ; ஸாது
காரீஸாதுர்பவதி பாபகாரீபாபோ
பவதி ; புண்ய:புண்யேந கர்மணாபவ
தி பாப:பாபேந. ... (ரு)



(ப - பி.) யயாகாரீ, யயாசாரீ, ததா, பவதி ; ஸாதுகாரீ, ஸாது:, பவதி, பாபகாரீ, பாப:, பவதி ; புண்ய:, புண்யேந, கர்மணா, பவதி, பாப:, பாபேந.

(ப - உ.) யயாகாரீ=யாரெப்படிசெய்கிருரோ அவர், யயாசாரீ=யாரெப்படிஆசரிக்கிருரோ அவர், ததா பவதி=அப்படி ஆகிருர், ஸாதுகாரீ=நல்லகாரியத்தைச்செய்கிறவர், ஸாது: பவதி=நல்லவராகிருர், பாபகாரீ=பாபத்தைச்செய்கிறவன், பாப: பவதி=பாபியாகிருன், புண்யேந கர்மணா=தருமகாரியங்களால், புண்ய: பவதி=ஆன்மா பரிசுத்தமுள்ளதாகிறது, பாபேந=பாபகாரியத்தினுல், பாப:=ஆன்மா பாபமுள்ளதாகின்றது.

(பொ - உ.) யாரெப்படி செய்கிருரோ யாரெப்படி யாசரிக்கிருரோ அவரப்படி யாகிருர், நல்ல காரியங்களைச் செய்கிறவர் நல்லவராகிருர், பாபகாரியங்களைச் செய்கிறவன் பாபியாகிருன். தருமகாரியங்களைச் செய்வதினுல் ஆன்மா பரிசுத்தமுள்ள தாகிறது பாபகாரியங்களைச் செய்வதினுல் ஆன்மா பாபமுள்ள தாகின்றது.

(வி - உ.) பாபகருமத்தை விடுத்து புண்ணியகருமத்தை அநுஷ்டிப்பதால் ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டு பரமாத்துமாவுடன் கூடி வாழ்தல்வேண்டும்.

கருங

யஸ்த்வவிஜ்ஞாநவாந் பவத்யயுக்தேந மநஸா ஸ
தா ; தஸ்யேந்த்ரியாண்யவஶ்யாநி துஷ்டாஶ்வா
இவஸாரதே:. ... ... (சு)

(ப - பி.) ய:, து, அவிஜ்ஞாநவாந், பவதி, அயுக்தேந, மநஸா, ஸதா, தஸ்ய, இந்த்ரியாணி, அவஶ்யாநி, துஷ்டாஶ்வா:, இவ, ஸாரதே:.

(ப - உ.) ய:து=யாரானுல், அவிஜ்ஞாநவாந்=விவேகமற்றவ

ஞக, ஹவதி=யிருக்கிறனே, ஸதா=எப்பொழுதும், அயுக்தேந=அடங்காத, மநஸா=மனதுடன் (இருக்கிறனே), தஸ்ய=அவனுடைய, இந்த்ரியாணி=இந்திரியங்கள், ஸாரதே:=தேர்ப்பாகனது, துஷ்டாஶ்வா: இவ=துஷ்டக்குதிரைகளைப்போல, அவஶ்யாநி=வசப்படாதவை.

(பொ - உ.) யார் அவிவேகியோ எப்பொழுதும் அடங்காத மனதுடையவனே அவனுடைய இந்திரியங்கள் தேர்ப்பாகனது துஷ்டக் குதிரைகளைப்போல வசப்படாதவை.

(வி - உ.) மனம் தன்வசப்பட்டிராவிடின் அது அந்த நிர்பாக்கியமான ஆன்மாவைத் தருமமார்க்கத்தைவிட்டு வேறுமார்க்கத்தில்செலுத்திக் கொண்டுபோய் பாபமென்னும் முள்நிறைந்தகாட்டில் தள்ளி, முடியாதவேதனை அதைப்பற்றும்படி செய்கின்றது. ஆனதால் ஒருவிதத்திலும் மனமும் இந்திரியங்களும் புத்திவிருத்திக்கு வசப்பட்டும் தருமநியமனத்திற்கும் புறம்பாகாமலும் இருப்பதாக.

கஙசா

யஸ்து விஜ்ஞாநவாந்ஹவதி யுக்தேந மநஸா
ஸதா ; தஸ்யேந்த்ரியாணிவஶ்யாநிஸதஶ்வா இவ
ஸாரதே:. ... ... ... (ரு)

(ப - பி.) ய:, து, விஜ்ஞாநவாந், ஹவதி, யுக்தேந, மநஸா, ஸதா ; தஸ்ய, இந்த்ரியாணி, வஶ்யாநி, ஸதஶ்வா:, இவ, ஸாரதே:

(ப - உ.) ய: து=யாரானல், விஜ்ஞாநவாந்=விவேகியாக, ஹவதி=இருக்கிறரோ, ஸதா=எப்பொழுதும், யுக்தேந=வசப்பட்ட, மநஸா=மநதுடன் (இருக்கிறரோ), தஸ்ய=அவருடைய, இந்த்ரியாணி=இந்திரியங்கள், ஸாரதே:=தேர்ப்பாகனது, ஸதஶ்வா: இவ=நல்லகுதிரைகளைப்போல, வஶ்யாநி=வசமாகவிருப்பவைகள்.

(பொ - உ.) யார் விவேகியாகவும் எப்பொழுதும் வசப்பட்ட மனதுடனும் இருக்கிறரோ அவருடைய இந்திரியங்கள் தேர்ப்பாகனது நல்ல குதிரைகளைப்போல வசமாகவிருப்பவைகள்.



(வி - உ.) யாருடையஇந்திரியங்களனைத்தும் புத்தியின் வசப்பட்டிருக்கின்றனவோ அவர் அவைகளைக் கடவுள்அருளியநன்மார்க்கத்தில்செல்லும்படி செய்கிறர். மேலும் இதனல் அவருக்கு விசேஷ நன்மை கிடைக்கிறது.

கஙரு

விஜ்ஞாநஸாரதிர்யஸ்து மந:ப்ரக்ரஹவாந்நர: ; ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்
விஷ்ணோ:பரமம்பதம். ... ... (அ)

(ப - பி.) விஜ்ஞாநஸாரதி:, ய:, து, மந:, ப்ரக்ரஹவாந், நர: ; ஸ:, அத்வந:, பாரம், ஆப்நோதி, தத், விஷ்ணோ:, பரமம், பதம்.

(ப - உ.) ய: நர: து=எந்தவிவேகியானல், விஜ்ஞாநஸாரதி:=ஞானத்தைத் தேர்ப்பாகனக உடையவரோ, மந: ப்ரக்ரஹவாந்=மனதிற்குக்கடிவாளமிட்டிருக்கிறவரோ, ஸ:=அவர், அத்வந: பாரம்=ஸம்ஸாரத்தினது எல்லையாகிய, தத் விஷ்ணோ:=அந்த ஸர்வவியாபகருடைய, பரமம்பதம்=பரமபதத்தை, ஆப்நோதி=அடைகிறர்.

(பொ - உ.) எந்த விவேகி ஞானத்தைத் தேர்ப்பாகனக உடையவரோ மனதிற்குக்கடிவாளமிட்டிருக்கிறவரோ அவர் ஸம்ஸாரத்தின் எல்லையாகிய அந்த ஸர்வ வியாபகருடைய பரம பதத்தை யடைகிறர்.

(வி - உ.) யார் தன்னுடைய மனதை ஞானத்திற்கும் தருமத்திற்கும் வசப்படுத்திவைத்திருக்கிறரோ, அவர் ஸம்ஸாரத்தினது வெல்லக்கூடாத மோகத்திலிருந்து நீங்கி ஸர்வவியாபியாகிய பிரமத்தை யடைகிறர்.

கஙசா

இந்த்ரியேப்ய: பரா ஹ்யர்தா அர்தேப்யஶ்ச பரம் மந: ; மநஸஸ்து பரா புத்திர்புத்தேராத்மா
மஹாந்பர:. ... ... (கo)

(ப - பி.) அநந்தா꞉, நாம, தே, லோகா꞉, அத்ருஶ்ய, தமஸா, ஆவ்ருதா꞉; தாந், தே, ப்ரேத்ய, அபிகச்சந்தி, அவித்வாம்ஸ꞉, அபுத꞉, ஜநா꞉.

(ப - உ.) அவித்வாம்ஸ꞉=அஞ்ஞானிகளும், அபுத꞉=துர்ப்புத்தியுடையவர்களுமான, தே ஜநா꞉=அந்தஜனங்கள், ப்ரேத்ய=இறந்துபோய், அநந்தா꞉=சந்தோஷமற்றதும், அத்ருஶ்ய=பார்க்கக்கூடாத, தமஸா=இருளினால், ஆவ்ருதா꞉=சூழப்பட்டவையுமான, நாம தே லோகா꞉=எந்தஉலகங்களுண்டோ, தாந்=அவைகளை, அபிகச்சந்தி=அடைகின்றனர்.

(பொ - உ.) அஞ்ஞானிகளும் துர்ப்புத்தி யுடையவர்களுமான ஜனங்கள் இறந்தபின், பார்க்கக்கூடாத இருள்மூடிய உலகங்களை யடைகின்றனர்.

(வி - உ.) யார் இவ்வுலகத்தில் ஞானத்தையும் தருமத்தையும் ஸம்பாதிப்பதை அவமதித்து பவித்திரமாகிய பிரமாநந்தத்தை யடையக்கூடாதவர்கள் ஆய்விடுகின்றனரோ அவர்கள் மரணாநந்தரம் அதைப்பெறுதற்கு அதிகாரிகளல்லர். எவ்வளவுதூரம் இவ்விடத்தில் ஞானத்துடனும் தருமத்துடனும் பிரமாநந்தத்தை யனுபவிக்கக்கூடுமோ அதற்குத்தக்கபடியே சிறந்தபதவிகிடைக்கும். ஆனதால் இவ்வுலகத்திலிருக்கையிலேயே மனதைஸ்வாதீனப்படுத்திக்கொண்டு பரிசுத்தராகி ஈச்வரனோடு நமது ஸம்பந்தத்தை நிச்சயப்படுத்திக்கொள்ளல்வேண்டும்; சிறந்த பதவியைப் பெறுதற்கு வேறு உபாயமில்லை.

---

## அத்தியாயம் - ௧௬.

௧௬௭

ஶாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு꞉ ஸமாஹிதோ
பூத்வாऽऽத்மந்யேவாத்மாநம் பஶ்யதி.

(ப - பி.) ஶாந்த꞉, தாந்த꞉, உபரத꞉, திதிக்ஷு꞉, ஸமாஹித꞉, பூத்வா, ஆத்மநி, ஏவ, ஆத்மாநம், பஶ்யதி.



(ப - உ.) ஶாந்த꞉=வெளியிந்திரியங்களை வசப்படுத்திக்கொண்ட சாந்தரும், தாந்த꞉=உள்ளிந்திரியங்களை யடக்கினவரும், உபரத꞉=பாபத்தை வெறுத்தவரும், திதிக்ஷு꞉=சுகதுக்கங்களைச் சகிக்கிறவரும், ஸமாஹித꞉=ஒருவழிப்பட்ட கருத்துடையவரும், பூத்வா=ஆகி, ஆத்மநி ஏவ=ஜீவாத்துமாவினிடத்திலேயே, ஆத்மாநம்=பரமாத்துமாவை, பஶ்யதி=பார்க்கிறார். (பிரமஞானி)

(பொ - உ.) பிரமஞானி வெளிஇந்திரியங்களையும் உள்ளிந்திரியங்களையும் வசப்படுத்திக்கொண்டு பாபத்தில் வெறுப்புற்று சுகதுக்கங்களைப்பொறுத்துக்கொண்டு தன்னிடத்திலேயே பரமாத்துமாவைத் தரிசிக்கிறார்.

(வி - உ.) ஒருபுறத்தில் ஸம்ஸாரசுகத்தில் விருப்பம். வேறொருபக்கத்தில் கடவுளை யடைய வேண்டுமென்னும்இச்சை. எவ்வளவுதூரம் ஸம்ஸார சுகத்திலுள்ள விருப்பம் குறைகிறதோ அவ்வளவுக்கும் கடவுளை யடையவேண்டுமென்னும் இச்சை எழுச்சியுறுகின்றது. கடவுளையடையவேண்டுமென்னும் விருப்பம் மிகுதியாக எழுச்சியுறின் அப்பொழுது அறிவு அவனைத்தேடுகின்றது. மேலும் எப்பொழுது அதுதேடி அந்தப்பூர்ணஸ்வரூபனை யடைகின்றதோ அப்பொழுது அவர்எங்கும் பரிபூரணராகவிருக்கிறாரெனப்பார்க்கிறது. மேலும் பார்த்து கிருதார்த்தத்தைப் பெற்று பவித்திரபிரமாநந்தத்தை யனுபவிக்கின்றது. பிரமஞானிகள் ஞானப்பிரஸாதத்தினால் பரிசுத்தர்களாகி ஸத்தியத்தினது ஸத்தியமும், பிராணத்தினது பிராணமும், அறிவினது அறிவுமான அந்தமங்களஸ்வரூபனை தமக்குள் ஆத்துமாவிலேயே தரிசித்து கிருதார்த்தர்களாகி மிகத்தூய்மையான பிரமாநந்தத்தை அநுபவிக்கின்றனர். அந்தப்பூரணபுருஷன் நம்மில்யாருக்கும் தூரத்திலிருக்கவில்லை; எங்கே ஜீவாத்மா உளதோ அங்கேயே அவரிருக்கிறார்; எல்லாப்பொருள்களும், எல்லா உலகங்களும், எல்லாஉயிர்களும் அவரது அருளென்னும் மார்பைப் பற்றிக்கொண்டிருக்கின்றன. எவ்வளவுநாள் ஞானக்கண்திறக்கவில்லையோ அவ்வளவுநாள்வரையிலும் கடவுள் தூரமாகவிருக்கிறாரென்று மனிதன் நினைக்கிறான்; ஆனால் திறக்கப்பட்ட ஞானநேத்திரத்தையுடையவர் வெளியிந்திரியங்களையும் உள்ளிந்திரியங்களையும் வசப்படுத்திக்கொண்டவராகி பாபத்தில் வெறுப்புற்று சுகதுக்கங்களில் வெறுப்பற்று ஒருவழிப்பட்ட கருத்தினால் தன்னுள்ளத்திலேயே கடவுளைத்தரிசிக்கிறார்.

௧௫௮

நைநம்பாப்மா தரதி ஸர்வம்பாப்மாநம் தரதி நைநம்பாப்மா தபதி ஸர்வம்பாப்மாநம் தபதி; விபாபோ விரஜோऽவிசிகித்ஸோ ப்ராஹ்மணோ பவதி. ... (௨)

(ப-பி.) ந, ஏநம், பாப்மா, தரதி, ஸர்வம், பாப்மாநம், தரதி, ந, ஏநம், பாப்மா, தபதி, ஸர்வம், பாப்மாநம், தபதி; விபாப:, விரஜ:, அவிசிகித்ஸ:, ப்ராஹ்மண:, பவதி.

(ப-உ.) ஏநம்=இவனை, பாப்மா=பாபம், ந தரதி=பற்றாது, [இவர்], ஸர்வம்பாப்மாநம்=எல்லாபாபங்களையும், தரதி=கடக்கிறார், ஏநம்=இவனை, பாப்மா=பாபம், ந தபதி=தபிக்கச்செய்யாது, (இவர்), ஸர்வம்பாப்மாநம்=எல்லாபாபங்களையும், தபதி=தபிக்கச்செய்கிறார், [இவர்], விபாப:=பாபமற்றவர், விரஜ:=நிர்மலமானசித்தமுடையவர், அவிசிகித்ஸ:=கடவுள் ஒருவருளரென்பதில் ஐயமற்றவர், ப்ராஹ்மண:=பிரமோபாஸகர், பவதி=ஆகிறார்.

(வி-உ.) இவரைப் பாபம்பற்றாது, இவர் எல்லாபாபத்தையும் கடக்கிறார்; இவரைப் பாபம்தபிக்கச்செய்யாது, இவர் எல்லாபாபத்தையும் தப்பிக்கச்செய்கிறார்; இவர்பாபமற்றவரும் நிச்சலமானசித்தமுடையவரும் கடவுள் ஒருவர் உளரென்பதில் ஐயமற்றவரும் பிரமோபாஸகரும் ஆகிறார்.

(வி-உ.) யார் ஞானக்கண்ணை பிரமமென்னும் லக்ஷியத்தினிடத்தில்வைத்து தருமமார்க்கத்தில் செல்லுகிறாரோ அவரை பாபம் வந்துபற்றமாட்டாது. அவர் பாபதாபங்களிலிருந்து நீங்கி பிரமோபாஸகராகிய பிராம்மணராகிறார்.

௧௫௯

ஸ ஆநந்ததே ஆநந்தநீயம் ஹி வ்யாப்ய; தரதி ஶோகம் தரதி பாப்மாநம் குஹாக்ரந்திப்யோ விமுக்தோऽம்ருதோ பவதி. ... (௩)



(ப-பி.) ஸ:, ஆநந்ததே, ஆநந்தநீயம், ஹி, வ்யாப்ய; தரதி, ஶோகம், தரதி, பாப்மாநம், குஹாக்ரந்திப்ய:, விமுக்த:, அம்ருத:, பவதி.

(ப-உ.) ஸ:=அவர், ஆநந்தநீயம்=ஆநந்திப்பிக்கிற பிரமத்தை, வ்யாப்ய=அடைந்து, ஆநந்ததே=ஆநந்திக்கிறார், ஶோகம்=துயரத்தை, தரதி=கடக்கிறார், பாப்மாநம்=பாபங்களை, தரதி=கடக்கிறார், குஹாக்ரந்திப்ய:=உள்ளத்திலுள்ளபாபமுடிச்சிகளிலிருந்து, விமுக்த:=நீங்கி, அம்ருத:=அழிவற்ற பதவியுடையவர், பவதி=ஆகிறார்.

(வி-உ.) அவர் ஆநந்திப்பிக்கிற பிரமத்தையடைந்து ஆநந்திக்கிறார். துயரத்தைக் கடக்கிறார் பாபத்தைக்கடக்கிறார் உள்ளத்திலுள்ள பாபமுடிச்சிகளிலிருந்து நீங்கி அழிவற்ற பதவியுடையவராகிறார்.

(வி-உ.) யாவற்றிலும் சிறந்தவரும் உள்ளத்திற்குத் திருத்தியை வரிவிக்கிற ஒன்றாகியபொருளுமான பிரமத்தை அடைந்து அவரில் பிராணனைவைத்த பிரமஞானிகள் வாய்விட்டு சொல்லிமுடியாத சுகத்தைஅநுபவிக்கின்றனர். யார்பிரமத்தையடைந்தாரோ அவர் பிரமத்தினது திருவுள்ளப்படி எல்லாக்காரியங்களையும் நடத்துகிறார். ஒருபலனையும்விரும்பாமல் அவரால் நியமிக்கப்பட்ட தருமமார்க்கத்தில் சரித்துக்கொண்டிருக்கிறார். மேலும் ஸ்வப்பிரயோஜநத்தைத்துறந்து அவருக்கு அன்பானகாரியங்களைச் செய்வதிலேயே முயற்சிசெய்துக்கொண்டிருக்கிறார். ஆனதால் அவர் துயரத்திலிருந்து நீங்குகிறார், பாபத்திலிருந்து நீங்குகிறார், இல்லாததினது மோஹபாசத்திலிருந்துவிடுபட்டு எப்பொழுதுமுள்ள பிரமத்தினிடத்தில் நித்தியமும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

௧௬௦

ஸத்யாந்ந ப்ரமதிதவ்யம் தர்மாந்ந ப்ரமதிதவ்யம் குஶலாந்ந ப்ரமதிதவ்யம். ... (௪)

(ப - பி.) ஸத்யாத், ந, ப்ரமதிதவ்யம், தர்மாத், ந, ப்ரமதிதவ்யம், குஶலாத், ந, ப்ரமதிதவ்யம்.

(ப - உ.) ஸத்யாத்=ஸத்தியத்தைவிட்டு, ந ப்ரமதிதவ்யம்=வழுவலாகாது, தர்மாத்=தருமத்திலிருந்து, ந ப்ரமதிதவ்யம்=வழுவலாகாது, குஶலாத்=நற்செய்கைகளை விட்டு, ந ப்ரமதிதவ்யம்=வழுவலாகாது.

(பொ - உ.) ஸத்தியத்தைவிட்டு வழுவலாகாது, தருமத்தைவிட்டுவழுவலாகாது, நற்செய்கையைவிட்டு வழுவலாகாது.

(வி - உ.) ஸத்தியம் சொல்லுதலும், ஸத்தியமாகநடத்தலும் பிராம்மசமயத்தின்உயிர். யார்ஸத்தியஸ்வரூபியாகியபிரமத்தை யடைய விரும்புகின்றனரோ, அவர்கள் ஒருபொழுதும் ஸத்தியம் தவறலாகாது. பிரமபராயணராகிய பிரமநிஷ்டர் நல்லதன்மையுடன் எப்பொழுதும் தருமத்திற்கு மூலமானவரும் நன்மைக்கே இருப்பிடமுமான கடவுளால் நியமிக்கப்பட்ட தருமானுட்டானத்திலேயேயிருக்கிறார். தருமானுட்டானமின்றி உள்ளம்பரிசுத்தமாவதில்லை, கடவுளுடைய அருளும் கிடைப்பதில்லை. பிரமஞானமும் விளங்குவதில்லை. ஆகையால் மோக்ஷத்தில் விருப்பமுடையவர் ஒருபொழும் தருமத்தைவிட்டு வழுவலாகாது. கடவுளினது நல்லநோக்கத்துடன் தமதுநல்ல விருப்பத்தையும் சேர்த்து, அவரால்நியமிக்கப்பட்ட ஸம்ஸாரத்தினது நன்மைக்குவேண்டிய காரியங்களில் செல்லாவிடின் அவரதுநல்லநோக்கத்தை யறிய வல்லோமல்லம். ஆனதுபற்றி நல்லகாரியங்களைவிட்டு நீங்கலாகாது.

கசுக

ஸத்யம்வத; ஸமூலோவா ஏஷ பரிஶுஷ்ய-
த்யோऽந்ருதமபிவததி. ... (ரு)

(ப - பி.) ஸத்யம், வத; ஸமூல:, வை, ஏஷ:, பரிஶுஷ்யதி, ய:, அந்ருதம், அபிவததி.

(ப - உ.) ஸத்யம்=மெய்யை, வத=சொல்லும், ய:=யார், அந்ருதம்=பொய்யை, அபிவததி=சொல்லுகிறானோ, ஏஷ:=(அப்படிப்பட்டவன்) இவன், ஸமூலோவை=வேருடன், பரிஶுஷ்யதி=தீய்ந்துபோகிறான்.



(பொ - உ.) மெய்யைச்சொல். பொய்யைச்சொல்லுகிறவன் வேருடன் தீய்ந்துபோகிறான்.

(வி - உ.) ஸத்தியரூபமே பிரமம், ஸத்தியமே தருமத்திற்குமூலம்; ஆனதால் பிரமபராயணர்களாகியசான்றோர் மெய்ந்நோன்புடையவர்களாகிமெய்யைச்சொல்லல்வேண்டும், மெய்யாகநடத்தல் வேண்டும்.

கசுஉ

தர்மம்சர; தர்மாத்பரம் நாஸ்தி; தர்ம: ஸர்வேஷாம் பூதாநாம் மது. ... (சா)

(ப - பி.) தர்மம், சர; தர்மாத், பரம், ந, அஸ்தி; தர்ம:, ஸர்வேஷாம், பூதாநாம், மது.

(ப - உ.) தர்மம்=தருமத்தை, சர=ஆசரியும், தர்மாத்=தருமத்தைவிட, பரம்=சிறந்தது, நாஸ்தி=இல்லை, தர்ம:=தருமம், ஸர்வேஷாம் பூதாநாம்=எல்லா உயிர்களுக்கும், மது=இனிமையானது.

(பொ - உ.) தருமத்தை அனுஷ்டியும், தருமத்தைவிடச்சிறந்ததொன்றுமில்லை. தருமம் எல்லாஉயிர்களுக்கும்இனிமையானது.

(வி - உ.) மானுடக்கடமையை முடித்தலின்பெயர்தருமம். தமதுவிஷயத்தில் தாம்செய்யவேண்டியகடமை, தாய்தந்தைகள் விஷயத்தில் தாம்செய்யவேண்டியகடமை, மனைவி விஷயமாயும் குழந்தைகள்விஷயமாயும்செய்யவேண்டியகடமை, அண்டைவீட்டார்விஷயமாயும் சுற்றத்தார்விஷயமாயும் செய்யவேண்டிய கடமை, செல்வவான்கள்விஷயமாகச்செய்யவேண்டியகடமை, ஏழைகள் வறுமையிலுள்ளோர் ஆதரவற்றவர் இவர்கள்விஷயமாகச்செய்யவேண்டியகடமை, ஸ்வதேசத்தைப்பற்றிச் செய்யவேண்டியகடமை கடவுள்விஷயமாகச் செய்யவேண்டியகடமை, இவையனைத்தையும் முடித்தலின்பெயர் தருமம். எவ்விடத்தில் எக்காலத்தில், எந்நிலையில் எக்காரியத்தைச் செய்யவேண்டியது நமதுகடமையோ, சரியாக அவ்விடத்தில், அக்காலத்தில் அந்நிலையில் அக்காரியத்தைச் செய்தல்வேண்டுமென்னும் கட்டளையை நமக்குள், ஒவ்வொருவருடைய நற்புத்தியின்மூலமாக அவர் ஒவ்வொருகணமும் வெளியி

டுகிறார்; நாம் அவரது அப்படிப்பட்ட எல்லாக்கட்டளைகளுக்குமே உள்ளாகி ஸத்தியமார்க்கத்திலும், தருமமார்க்கத்திலும், நன்மார்க்கத்திலும், நடப்போமாயின் நமக்குச்சிரச்சேதமுண்டாயினும் உண்மையான உயிர்ப்பைப்பெற்று அழிவற்ற பதவியை யடையவல்லோம்.

கசங

ஶ்ரத்தயா தேயம்; அஶ்ரத்தயா அதேயம். (எ)

(ப - பி.) ஶ்ரத்தயா, தேயம்; அஶ்ரத்தயா, அதேயம்.

(ப - உ.) ஶ்ரத்தயா=அன்புடன், தேயம்=தானம் செயல்வேண்டும், அஶ்ரத்தயா=அன்பின்மையுடன், அதேயம்=தானம் செய்யத்தக்கதில்லை.

(பொ - உ.) அன்புடன் தானம் செய்தல்வேண்டும் அன்பின்றி தானம் செய்யத்தக்கதில்லை.

(வி - உ.) அயரத்துடன் தானம் செய்யவேண்டுவதில்லை, ஆனால் அன்புடன் தானம்செய்தல்வேண்டும்.

கசச

மாத்ருதேவோ பவ பித்ருதேவோ பவ ஆசார்யதேவோ பவ. ... ... (அ)

(ப - பி.) மாத்ருதேவ:, பவ, பித்ருதேவ:, பவ, ஆசார்யதேவ:, பவ.

(ப - உ. மாத்ருதேவ:=தாயைத் தெய்வமாகஉடையவர், பவ=நீ ராகக்கடவீர், பித்ருதேவ:=தந்தையைத் தெய்வமாகஉடையவர், பவ=நீ ராகக்கடவீர், ஆசார்யதேவ:=ஆசானைத்தெய்வமாக உடையவர், பவ=நீ ராகக்கடவீர்.

(பொ - உ.) தாய் தந்தை ஆசான் இவர்கள்தெய்வத்தைப்போல மரியாதை செய்யப்படுவதற்கு உரியவர்களென்று அறியக்கடவீர்.

(வி - உ.) தாய்தந்தைகள் கடவுளினது நல்லதன்மைக்கு உலகத்தில் பிரதிரூபங்களாகி அவரதுபிரதி நிதிகளைப்போல நம்மைக்



காத்தவருகிறார்கள். சற்குருஉபதேசத்தினால் நாம் அஞ்ஞானஇருளைவிட்டு நீங்கி மூப்பும் சாவும் பயமுமற்ற நிரதிசயமாகிய பிரமத்தையடைகிறோம்; ஆனதால் அவர்களிடத்தில் அன்பும் உருக்கமும் வைத்தல்வேண்டும்.

கசரு

யாந்யநவத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி
நோ இதராணி. ... ... (கூ)

(ப - பி.) யாநி, அநவத்யாநி, கர்மாணி, தாநி, ஸேவிதவ்யாநி, நோ, இதராணி.

(ப - உ.) யாநி கர்மாணி=எந்தக்காரியங்கள், அநவத்யாநி=நிந்திக்கப்படத்தக்கவைகளல்லவோ, தாநி கர்மாணி=அந்தக்காரியங்கள், ஸேவிதவ்யாநி=அநுஷ்டிக்கப்படத்தக்கவைகள், இதராணி=வேறானவைகள், நோ=அன்று.

(பொ - உ.) எந்தக்காரியங்கள் நிந்திக்கப்படத் தக்கவைகளல்லவோ அந்தக்காரியங்கள் அநுஷ்டிக்கப்படத்தக்கவைகள். வேறுகாரியங்களன்று.

(வி - உ.) எல்லாநன்மைகளுக்கும் காரணராகிய பரமேசுவரரது நன்னோக்கத்தை லக்ஷியத்தில் வைத்துக்கொண்டு நன்மையைக்கருதி நற்காரியத்தை அனுஷ்டித்தல்வேண்டும்; தீயகாரியத்தை அனுஷ்டித்தல்வேண்டாம்.

கசசா

யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி தாநி த்வயோ
பாஸ்யாநி நோ இதராணி. ... (க0)

(ப - பி.) யாநி, அஸ்மாகம், ஸுசரிதாநி, தாநி, த்வயா, உபாஸ்யாநி, நோ, இதராணி.

(ப - உ.) அஸ்மாகம்=எங்கள்(ஆசாரியர்கள்) உடைய, ஸுசரிதாநி=நல்லொழுக்கங்கள், யாநி=எவையோ, தாநி=அவை, த்வயா=உம்மால், உபாஸ்யாநி=அநுஷ்டிக்கத்தக்கவை, இதராணி=வேறானவை, நோ=அன்று.

(பொ - உ.) எங்களுடைய நல்லொழுக்கங்கள் உம்மால் அனுஷ்டிக்கப்படத்தக்கவை; வேருனவை அனுஷ்டிக்கப்படத் தக்கவையன்று.

(வி - உ.) "நாங்கள் சொல்லுகிற எல்லா நல்லுபதேசங்களின்படிக்கும் எங்களுடைய எல்லா ஸதாசார அனுஷ்டானங்களின்படிக்கும் நீர்நடத்தல்வேண்டும்; துஷ்டர்களைப்பார்த்து அவர்கள து ர்மார்க்கத்தில் செல்லல்வேண்டாம்" என்று பிரமஞானிகளாகிய ஆசாரியர்கள் உபதேசிக்கின்றனர்.

கசஎ

ஸதெதாு வாயெயு ததெயஸ்ு விதா
நுதஸெஷ ஆதூவிஸதெ ப்ஹயாஃ. ()

(ப - பி.) ஸதைஃ, உவாயைஃ, யததெ, யஃ, தஂ, விதாநு, தஸ்ய, ஸஷ, ஆதூ, விஸதெ, ப்ஹயாஃ.

(ப - உ.) யஃ தஂ விதாநு=எந்த வித்துவான், ஸதைஃ உவாயைஃ=இந்த உபாயங்களினுல், யததெ=முயலுகிருரோ, தஸ்ய=அவருடைய, ஸஷஃ ஆதூஇந்த ஜீவாத்துமா, ப்ஹயாஃ=பிரமமென்னும் வீட்டை, விஸதெ=அடைகின்றது.

(பொ - உ.) எந்தப்பிரமஞானி இந்தஉபாயங்களால் பிரமத்தை யடைய மூயலுகிருரோ அவருடையஆன்மா பிரமமென்னும் வீட்டையடைகின்றது.

(வி - உ.) எந்தப்பிரமஞானிஸத்தியத்தைப்பற்றித்,தருமத்தைத்தொடர்ந்து, நற்கருமங்களை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவந்து, தாய் தந்தை ஆசாரியர் இவர்களிடத்தில்அன்புவைத்து, பிரமத்தை அடையும்நிமித்தம் முயற்சிசெய்கிருரோ அவர் பிரமமென்னும் வீட்டையடைகின்ருர். அவர் பிரமத்தையடைந்து அவருடன் நித்தியமாகக்கூடி வாழ்கையால் உண்டாகும் பேரானந்தத்தை யனுபவிக்கிருர்.

கசஅ

ஶ்ருண்வந்து விஶ்வெ அம்ருதஸ்ய புத்ரா ஆ
யெயாதாமிதிவ்யாநிதஸ்துஃ. ... (கஉ)



(ப - பி.) ஶ்ருண்வந்து, விஶ்வெ, அம்ருதஸ்ய, புத்ராஃ, ஆ, யெ, யாதாமி, திவ்யாநி, தஸ்துஃ.

(ப - உ.) யெ=யார், திவ்யாநி=ரமணீயமான, யாதாமி=வீடுகளில், ஆதஸ்துஃ=இருக்கிறவர்களும், அம்ருதஸ்ய=அழிவற்றவரது, புத்ராஃ=பிள்ளைகளுமாகிய, விஶ்வெ=ஓ! எல்லாஉயிர்களே!, ஶ்ருண்வந்து=செவியுற்றுக்கேளுங்கள்.

(பொ - உ.) ஓ! ரமணியமான வீடுகளில் வசிப்பவர்களும் நித்தியருடையபிள்ளைகளுமாகிய எல்லாஉயிர்களே! செவியுற்றுக் கேளுங்கள்.

(வி - உ.) நிர்விகாரரும் அழிவற்றவருமான பிரமத்தை உதயகாலத்தின் சூரியப்பிரகாசத்தைப்போல தம்முள்ளங்களின் வழியாக அடைந்து புதியஊக்கங்கொண்ட பிரமவாதிகள் "ஓ! அழிவற்ற புருஷருடைய பிள்ளைகளே! விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும்வஸிக்கிறதேவர்களே! மனிதர்களே! செவியுற்றுக்கேளுங்கள்; நாங்கள் இருளைக்கடந்த ஒளிவடிவாகிய மஹாபுருஷனை யறிகின்றனம்." என்று உரைக்கின்றனர்.

கசக

வெஹாஹமெதம்புருஷம் மஹாந்தமாதித்ய
வர்ணம் தமஸஃபரஸ்தாத்; தமெவவிதித்வாதி
ம்ருத்யுமெதி நாந்யஃபந்தா வித்யதெய
நாய. ... ... ... (கரு)

(ப - பி.) வெத, அஹம், ஏதம், புருஷம், மஹாந்தம், ஆதித்யவர்ணம், தமஸஃ, பரஸ்தாத்; தம், ஏவ, விதித்வா, அதி, ம்ருத்யும், ஏதி, ந, அந்யஃ, பந்தாஃ, வித்யதெ, அயநாய.

(ப - உ.) அஹம்=நான், மஹாந்தம்=மஹானும், ஆதித்யவர்ணம்=ஸ்வப்பிரகாசரும், தமஸஃ=இருளைவிட்டு, பரஸ்தாத்=கடந்தவருமான, ஏதம் புருஷம்=இந்தப்புருஷனை, வெத=அறிகின்றேன், தம் ஏவ=அவரையே, விதித்வா=அறிந்து, ம்ருத்யும்=மரணத்தை, அதி ஏதி=(சாதகர்) கடக்கிருர், அயநாய=பரமபதம் அடையும்பொருட்டு, அந்யஃ பந்தாஃ=வேறுவழி, நவித்யதெ=இல்லை.

(பொ - உ.) நான்மஹானும் ஸ்வப்பிரகாசரும் இருளைக் கடந்தவருமான இந்தப்புருஷரை அறிவேன். அவரையே அறிந்து சாதகர் மரணத்தைக் கடக்கிறார். பரமபதமடைவதற்கு வேறுவழியில்லை.

(வி - உ.) இந்த இருளைக்கடந்த ஒளிவடிவராகிய மகாபுருஷனை அறிந்து சாதகர் மரணத்தைக்கடக்கிறார், அவர் அளவற்றகாலம்வரையில் ஞானத்தையும் அன்பையும் வடிவாகக்கொண்ட புருஷனைத் தொடர்ந்து பேரானந்தத்தை அனுபவிக்கிறார். அவரை சரணமாகஅடைதலன்றி முத்தியைப்பெறுதற்கு வேறுஉபாயமில்லை.

கருo

ஏதஜ்ஜ்ஞேயம் நித்யமேவாத்மஸம்ஸ்தம் நாத:
பரம்வேதிதவ்யம்ஹிகிஞ்சித். ... (கச)

(ப - பி.) ஏதத், ஜ்ஞேயம், நித்யம், ஏவ, ஆத்மஸம்ஸ்தம், ந, அத:, பரம், வேதிதவ்யம், ஹி, கிஞ்சித்.

(ப - உ.) நித்யம்=எப்பொழுதும், ஆத்மஸம்ஸ்தம்=ஆன்மாவிலிருக்கிற, ஏதத் ஏவ=இதே (இந்தப்பரமாத்துமாவே), ஜ்ஞேயம்=அறியப்படத்தக்கது, அத:பரம்=அதன்பின்னர், வேதிதவ்யம்=அறியப்படத்தக்கது, கிஞ்சித்=சிறிதும், ந=இல்லை.

(பொ - உ.) எப்பொழுதும் ஆன்மாவிலிருக்கிற பரமாத்துமாவே அறியப்படத்தக்கது அதன்பின்னர் அறியப்படத்தக்கது சிறிதும் இல்லை.

(வி - உ.) யார் யாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கிறாரோ, அவரே எப்பொழுதும் நமக்குள்இருக்கிறார். அவரைத்தேடி அவரையே அறிதல்வேண்டும்; அவரையறிந்தால் யாவையும் அறிந்தபடியாகின்றது, அதற்கப்புறம் அறியப்படத்தக்கபொருள் சிறிதும் இல்லை.

கருக

ஸம்ப்ராப்யைநம்ருஷயோ ஜ்ஞாநத்ருப்தா: க்ரு
தாத்மாநோவீதராகா: ப்ரஶாந்தா:; தே
ஸர்வகம்ஸர்வத: ப்ராப்யதீரா யுக்தாத்மா
ந: ஸர்வமேவாவிஶந்தி. ... (கரு)



(ப - பி.) ஸம்ப்ராப்ய, ஏநம், ருஷய:, ஜ்ஞாநத்ருப்தா:, க்ருதாத்மாந:, வீதராகா:, ப்ரஶாந்தா:, தே, ஸர்வகம், ஸர்வத:, ப்ராப்ய, தீரா:, யுக்தாத்மாந:, ஸர்வம், ஏவ, ஆவிஶந்தி.

(ப - உ.) ருஷய:=இருடிகள், ஏநம்=இவனை, ஸம்ப்ராப்ய அடைந்து, ஜ்ஞாநத்ருப்தா:=ஞானத்தினால் திருத்தியடைகின்றனர், க்ருதாத்மாந:=பரிசுத்தமான உள்ளமுடையராகின்றனர், வீதராகா:=இராகாதி தோஷமற்றவராகின்றனர், ப்ரஶாந்தா:=இந்திரியசஞ்சலமற்றவராகின்றனர், யுக்தாத்மாந:=ஒருவழிப்பட்டகருத்துடையவர்களான, தே தீரா:=அந்தவிவேகிகள், ஸர்வகம்=யாவற்றிலும் நிறைந்திருக்கிறவனை, ஸர்வத:=எல்லா விடங்களிலும், ப்ராப்ய=அடைந்து, ஸர்வம் ஏவ=யாவற்றிலும், ஆவிஶந்தி=(ஞானத்தினால்)பிரவேசிக்கின்றனர்.

(பொ - உ.) இருடிகள் இவனை நன்றாகவடைந்து ஞானத்தினால் திருப்தியடைகின்றனர், பரிசுத்தமான உள்ளமுடையவராகின்றனர், இராகாதிதோஷமற்றவராகின்றனர், இந்திரியசஞ்சலமற்றவராகின்றனர். ஒருவழிப்பட்ட கருத்தையுடைய அந்தவிவேகிகள் யாவற்றிலும் நிறைந்திருக்கிறவனை எல்லாவிடங்களிலும் அடைந்து யாவற்றிலும் ஞானத்தினாற் பிரவேசிக்கின்றனர்.

(வி - உ.) எந்தவிவேகிகள் ஞானத்தினால் அந்தஸத்தியஸ்வரூபனை யறிந்து அன்பினால் அவரது மங்களஸ்வரூபத்தை பூஜித்து அவரது நல்லநோக்கத்துடன் தமது நல்லவிருப்பத்தைச் சேர்த்து ஒருவழிப்பட்ட கருத்துடையவராகின்றனரோ; அவர்கள்யாவற்றிலும் நிறைந்து எல்லாநன்மைகளுக்கும் காரணராயிருக்கிறவருடையசேர்க்கையைப்பெற்று யாவற்றிலும்பிரவேசித்து யாவற்றினுள்ளும் அன்பையேவடிவாகஉடைய அந்தநித்தியவஸ்துவைப்பார்க்கின்றனர்.

கருஉ

விஜ்ஞாநாத்மாஸஹதேவைஶ்சஸர்வை: ப்ரா
ணாபூதாநி ஸம்ப்ரதிஷ்டந்தியத்ர; தத்க்ஷ
ரம்வேதயதேயஸ்து ஸோம்ய ஸஸர்வஜ்ஞ: ஸ
ர்வமேவாவிவேஶ. ... ... (கசு)

(ப - பி.) விஜ்ஞாதா, ஸஹ, தேவை:, ச, ஸர்வை:, ப்ராணா:, பூதாநி, ஸம்ப்ரதிஷ்டந்தி, யத்ர ; தத், அக்ஷரம், வேதயதே, ய:, து, ஸௌம்ய, ஸ:, ஸர்வஜ்ஞ:, ஸர்வம், ஏவ, ஆவிவேச.

(ப - உ.) ஸௌம்ய=ஓ! பிரியதரிசனனே!, விஜ்ஞாதா=ஜீவாத்துமா, ஸர்வை: தேவை: ச ஸஹ=எல்லாஇந்திரியங்களுடனும், ப்ராணா:=பிராணிகள், பூதாநி=பூதங்கள், யத்ர=எவ்விடத்தில், ஸம்ப்ரதிஷ்டந்தி=நிலைபெற்றிருக்கின்றனவோ, தத் அக்ஷரம்=அந்த அழிவற்றபொருளை, ய: து=யாரானால், வேதயதே=அறிகிருரோ, ஸ:=அவர், ஸர்வஜ்ஞ:=யாவற்றையுமறிந்தவராகிருர், ஸர்வம் ஏவ=யாவற்றிலும், ஆவிவேச=பிரவேசிக்கிருர்.

(பொ - உ.) ஓபிரியதரிசனனுகிய சிஷியனே! ஜீவாத்துமா; எல்லாஇந்திரியங்கள், பிராணிகள், வேறுபொருள், யாரிடத்தில் நிலைபெற்றிருக்கின்றனவோ அந்த அழிவற்றபொருளை யார்அறிகிருரோ அவர் யாவற்றையும் அறிந்தவராகி யாவற்றிலும் பிரவேசிக்கிருர்.

(வி - உ.) ஜீவாத்துமா,இந்திரியங்கள்,பிராணன்,வேறுஎல்லாப்பொருள்கள் யார்நினைத்த மாத்திரத்தில் உண்டாகின்றனவோ, யாருடைய திருவுள்ளப்படி க்ஷேமமாகவிருக்கின்றனவோ, அந்த அழிவற்ற புருஷரை யார்அறிகிருரோ அவருக்குஎல்லாஐயங்களும் நீங்குகின்றன; மேலும் அவர் யாவற்றிலும் பிரவேசித்து எல்லாப் பொருள்களிடத்திலும் அவ்வழிவற்றமங்களபுருஷனைத்தரிசிக்கிருர்.

கருரு.

யஶ்சாயமஸ்மிந்நாகாஶே தேஜோமயோऽம்ருதமய:
புருஷ: ஸர்வாநுபூ: ; யஶ்சாயம
ஸ்மிந்நாத்மநி தேஜோமயோऽம்ருதமய: புரு
ஷ: ஸர்வாநுபூ: ; தமேவ விதித்வாதி
ம்ருத்யுமேதி நாந்ய: பந்தா வித்யதேऽய
நாய. ... ... ... (கஎ)

(ப - பி.) ய:, ச, அயம், அஸ்மிந், ஆகாஶே, தேஜோமய:, அம்ருதமய:, புருஷ:, ஸர்வாநுபூ:, ; ய:, ச, அயம், அஸ்மிந், ஆத்மநி, தேஜோமய:, அம்ருதமய:, புருஷ:, ஸர்வாநுபூ: ; தம், ஏவ, விதித்வா, அதி, ம்ருத்யும், ஏதி, ந, அந்ய:, பந்தா, வித்யதே, அயநாய.



(ப - உ.) அஸ்மிந் ஆகாஶே=இந்தவெளியில், ய: ச=யார், அயம்=இந்த, தேஜோமய:=ஞானஒளிவடிவானவரோ, அம்ருதமய:=அழிவற்றதன்மையுடையவரோ, புருஷ:=பூரணரோ, ஸர்வாநுபூ:=யாவற்றையுமனுபவிக்கிறவரோ, அஸ்மிந் ஆத்மநி=இந்த ஆத்துமாவினிடத்தில், ய: ச=யார், அயம்=இந்த, தேஜோமய:=ஞானஒளியையே வடிவாகஉடையவரோ, அம்ருதமய:=அழிவற்ற தன்மையுடையவரோ, புருஷ:=பூரணரோ, ஸர்வாநுபூ:=யாவற்றையுமனுபவிக்கிறவரோ, தம் ஏவ=அவரையே, விதித்வா=அறிந்து, அதி ஏதி=கடக்கிருர் (சாதகர்), ம்ருத்யும்=மரணத்தை, அயநாய=முத்தியின்பொருட்டு, அந்ய: பந்தா=வேறுவழி, ந வித்யதே=இல்லை.

(பொ - உ.) இந்தவெளியில் யார் இந்த ஞானவடிவுடையவரும், அழிவற்றதன்மையரும், பூரணரும், யாவற்றையும் அனுபவிக்கிறவருமாக விருக்கிருரோ; யார்இந்த ஆத்துமாவினிடத்தில் இந்தஞானவடிவரும், அழிவற்றதன்மையரும், பூரணரும் யாவற்றையும் அனுபவிக்கிறவருமாயிருக்கிருரோ அவரையறிந்து சாதகர் மரணத்தைக் கடக்கிருர். அதுதவிர முத்தி பெறுதற்கு வேறுவழியில்லை.

(வி - உ.) இவ்வெளி சூனியமாகஇருக்கவில்லை, ஞானமயனும் அமிருதமயனுமாகிய புருஷனால் நிறைந்திருக்கிறது. இந்தஆத்துமாவினிடதிலும் அவர் பூரணஸ்வரூபராக வீற்றிருக்கிருர். அவர் உள்ளும் புறமும் எல்லாஇடங்களிலும் இருந்துகொண்டு யாவற்றையும் அறிகிருர். யார் அந்தமஹானும் அமிருதமயனுமாகிய புருஷனை அறிந்து அவரிடத்தில் நிறைந்தஅன்புடையவராகி அவரதருளுக்கத்துடன் தன்னுடைய நல்விருப்பத்தைச் சேர்த்து அவரிடத்தில் ஆத்துமாவை ஸமர்ப்பிக்கிருரோ; அவர் அழிவற்ற அந்தப்புருஷனையடைந்து அழிவுள்ளநிலையைக் கடக்கிருர்.

கருசு

ஏஷ ஆதேஶ ஏஷ உபதேஶ ஏதத³நுஶா
ஸநம் ; ஏவமுபாஸிதவ்யமேவமுபாஸி
தவ்யம். ... ... ... (கஅ)

(ப - பி.) ஏஷ:, ஆதேஶ:, ஏஷ:, உபதேஶ:, ஏதத், அநுஶாஸநம் ; ஏவம், உபாஸிதவ்யம், ஏவம், உபாஸிதவ்யம்.

(ப - உ.) ஏஷ:=இது, ஆதேஶ:=கட்டளை, ஏஷ:=இது, உபதேஶ:=உபதேசம், ஏதத்=இது, அநுஶாஸநம்=பிரமாணவசனம், ஏவம்=இவ்விதமாக, உபாஸிதவ்யம்=அனுஷ்டித்தல்வேண்டும், ஏவம்=இவ்விதமாக, உபாஸிதவ்யம்=அனுஷ்டித்தல்வேண்டும்.

(பொ - உ.) இதுகட்டளை, இதுஉபதேசம், இதுபிரமாணவசனம் ; இவ்விதமாக கடவுளை உபாஸித்தல்வேண்டும்.

(வி - உ.) கடவுளிடத்தில் அன்புவைத்தல்வேண்டும் அவருக்கன்பான காரியங்களை முடித்தல்வேண்டுமென்பதே எல்லாஉபதேசங்களினுடையவும் ஸாரமாகியமர்மம்.

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ஹரி: ஓம்.

முதல்கண்டம் முற்றிற்று.

---

## ஓம் தத் ஸத்.

## கண்டம் - உ.

## அத்தியாயம்-க.

---

க

ஓமாசார்யோऽந்தேவாஸிநமநுஶாஸ்தி. (க)

(ப - பி.) ஓம், ஆசார்ய:, அந்தேவாஸிநம், அநுஶாஸ்தி.

(ப - உ.) ஓம்=ஓம், ஆசார்ய:=ஆசாரியர், அந்தேவாஸிநம்=சிஷியருக்கு, அநுஶாஸ்தி=மானுடதருமத்தைப்போதிக்கிறார்.

(பொ - உ.) ஆசாரியர் சிஷியருக்கு மானுடதருமத்தை உபதேசிக்கிறார்.

உ

ப்³ரஹ்மநிஷ்டோ² க்³ருஹஸ்த²ஸ்ஸ்யாத்தத்த்வஜ்ஞாநப
ராயண: ; யத்³யத்கர்ம ப்ரகுர்வீத தத்³ப்³ர
ஹ்மணி ஸமர்பயேத். ... ... (உ)

(ப - பி.) ப்³ரஹ்மநிஷ்ட²:, க்³ருஹஸ்த²:, ஸ்யாத், தத்த்வஜ்ஞாநபராயண: ; யத், யத், கர்ம, ப்ரகுர்வீத, தத், ப்³ரஹ்மணி, ஸமர்பயேத்.

(ப - உ.) க்³ருஹஸ்த²:=இல்லறத்தான், ப்³ரஹ்மநிஷ்ட²:=பிரமத்தினிடத்தில் நிறுத்தப்பட்ட கருத்துடையவராகவும், தத்த்வஜ்ஞாநபராயண:=தத்துவஞானம் மிகவாக உடையவராகவும், ஸ்யாத்=ஆதல்வேண்டும், யத் யத் கர்ம=எந்தெந்தக்கருமத்தை, ப்ரகுர்வீத=

செய்கிறாரோ, தத்=அதை, ப்ரஹ்மணி=பிரமத்தினிடத்தில், அர்ப்பயேத்=ஸமர்ப்பித்தல்வேண்டும்.

(பொ - உ.) இல்லறத்தார் பிரமத்தினிடத்தில் நிறுத்தப்பட்ட கருத்துடையவராகவும் மிகவாக தத்துவஞானமுடையராகவும் ஆதல்வேண்டும்; எந்தெந்த கருமம் புரிகிறாரோ, அதைப் பிரமத்தினிடத்தில் அர்ப்பிதம்செய்தல்வேண்டும்.

௩

மாதரம் பிதரஞ்சைவ ஸாக்ஷாத்ப்ரத்யக்ஷ
தேவதாம்; மத்வா க்ருஹீ நிஷேவேத ஸதா
ஸர்வப்ரயத்நத:. ... ... (௩)

(ப - பி. மாதரம், பிதரம், ச, ஏவ, ஸாக்ஷாத், ப்ரத்யக்ஷதேவதாம்; மத்வா, க்ருஹீ, நிஷேவேத, ஸதா, ஸர்வப்ரயத்நத:.

(ப - உ.) க்ருஹீ=இல்லறத்தார், மாதரம்=தாயையும், பிதரம்=தந்தையையும், ஸாக்ஷாத்=நேரான, ப்ரத்யக்ஷதேவதாம்=பிரத்தியக்ஷதேவதைகளாக, மத்வா=எண்ணி, ஸதா=எப்பொழுதும், ஸர்வப்ரயத்நத:=எல்லாமுயற்சியுடனும், நிஷேவேத=பணிவிடை செய்தல்வேண்டும்.

(பொ - உ.) இல்லறத்தார் தாயையும் தந்தையையும் நேரான பிரத்தியக்ஷதேவதைகளாக மதித்து எப்பொழுதும் எல்லாமுயற்சியுடனும் அவர்களுக்குப் பணிவிடை செய்தல்வேண்டும்.

௪

ச்ராவயேந்ம்ருதுலாம்வாணீம் ஸர்வதா ப்ரிய
மாசரேத்; பித்ரோராஜ்ஞாநுஸாரீ ஸ்யாத்
ஸத்புத்ர: குலபாவந:. ... (௪)

(ப - பி.) ச்ராவயேத், ம்ருதுலாம், வாணீம், ஸர்வதா, ப்ரியம், ஆசரேத்; பித்ரோ:, ஆஜ்ஞாநுஸாரீ, ஸ்யாத், ஸத்புத்ர:, குலபாவந:.



(ப - உ.) குலபாவந:=குலத்தைப்பரிசுத்தப்படுத்துகிறவனாகிய, ஸத்புத்ர:=நற்புதல்வன், பித்ரோ:=தாய்தந்தைகளுக்கு, ம்ருதுலாம்=மெதுவாகிய, வாணீம்=சொற்களை, ச்ராவயேத்=கேள்விப்படுத்தல்வேண்டும், ஸர்வதா=எப்பொழுதும், ப்ரியம்=(அவர்களுக்குப்) பிரியமானகாரியங்களை [நியாயமாகவிருக்கிறவையில்], ஆசரேத்=செய்தல்வேண்டும், ஆஜ்ஞாநுஸாரீ=(அவர்களுடைய நியாயமான) கட்டளையின்படி செல்கிறவனாக, ஸ்யாத்=ஆதல்வேண்டும்.

(பொ - உ.) குலத்தைப் பரிசுத்தப்படுத்துகிறவராகிய நற்புதல்வர் தாய்தந்தைகளிடத்தில் மெதுவாக வார்த்தைசொல்லல்வேண்டும்; அவர்களுக்குப் பிரியமான காரியங்கள் (நியாயமாக விருக்கிறவையில்) எப்பொழுதும் செய்தல்வேண்டும். அவர்களது கட்டளைகள் (நியாயமாகவிருக்கிறவையில்) அவற்றின்படி நடத்தல்வேண்டும்.

௫

குரூணாஞ்சைவ ஸர்வேஷாம் மாதா ப
ரமகோ குரு:; மாதா குருதரா பூ
மே:காத்பிதோச்சதரஸ்ததா. ... (௫)

(ப - பி.) குரூணாம், ச, ஏவ, ஸர்வேஷாம், மாதா, பரமக:, குரு:; மாதா, குருதரா, பூமே:, காத், பிதா, உச்சதர:, ததா.

(ப - உ.) குரூணாம்=கவுரவிக்கத் தக்கவர்களாகிய, ஸர்வேஷாம்ச=யாவருக்குள்ளும், மாதா ஏவ=தாயே, பரமக:=விசேஷமாக, குரு:=கவுரவிக்கத்தக்கவர், மாதா=தாய், பூமே:=பூமியைவிட, குருதரா=அதிககுருத்துவமுடையவர், ததா=அப்படியே, பிதா=தந்தை, காத்=வானத்தைவிட, உச்சதர:=அதிகஉயர்ந்தவர்.

(பொ - உ.) கவுரவத்துக்குரிய யாவருக்குள்ளும் தாயே

அதிக கவுரவத்துக்குரியவர், தாய் பூமியைவிட அதிக குருத்துவமுடையவர் அப்படியே தந்தை வானத்தைவிட அதிக உயர்ந்தவர்.

௬

யம் மாதாபிதரௌ க்லேசம் ஸஹேதே ஸம்
பவே ந்ருணாம்; ந தஸ்ய நிஷ்க்ருதி: சக்யா
கர்த்தும் வர்ஷசதைரபி. ... (௬)

(ப-பி.) யம், மாதாபிதரௌ, க்லேசம், ஸஹேதே, ஸம்பவே, ந்ருணாம்; ந, தஸ்ய, நிஷ்க்ருதி:, சக்யா, கர்த்தும், வர்ஷசதை:, அபி.

(ப-உ.) ந்ருணாம்=குழந்தைகளினது, ஸம்பவே=பிறப்பில், யம் க்லேசம்=எந்த வருத்தத்தை, மாதாபிதரௌ=தாய்தந்தைகள், ஸஹேதே=பொறுக்கின்றனரோ, தஸ்ய=அதின், நிஷ்க்ருதி:=தீர்த்தலை, கர்த்தும்=செய்வதற்கு, வர்ஷசதை: அபி=நூறுவருடமாயினும், ந சக்யா=கூடாது.

(பொ-உ.) குழந்தைகளைப் பெறுவதினால் தாய்தந்தைகள் அனுபவிக்கும் வருத்தத்தைத் தீர்ப்பதற்கு நூறுவருஷமும்போதாது.

௭

ப்ராதா ஜ்யேஷ்ட: ஸம: பித்ரா பார்யா பு
த்ர: ஸ்வகா தநு:; சாயா ஸ்வதாஸவர்கச்ச து
ஹிதா க்ருபணம் பரம்; தஸ்மாதேதைரதி
க்ஷிப்த: ஸஹேதாஸஞ்ஜ்வர: ஸதா. ... (௭)

(ப-பி.) ப்ராதா, ஜ்யேஷ்ட:, ஸம:, பித்ரா, பார்யா, புத்ர:, ஸ்வகா, தநு:; சாயா, ஸ்வதாஸவர்க:, ச, துஹிதா, க்ருபணம், பரம்; தஸ்மாத், ஏதை:, அதிக்ஷிப்த:, ஸஹேத, அஸஞ்ஜ்வர:, ஸதா.

(ப-உ.) ஜ்யேஷ்டோ ப்ராதா=தமயன், பித்ரா ஸம:=தந்தைக்குச் சமானர், பார்யாபுத்ரௌ=மனைவியும் புதல்வரும், ஸ்வகா தநு:=சொந்த உடல், ஸ்வதாஸவர்க:ச=தனதுவேலைக்காரர்களின் கூட்டம், சாயா=(தனது) நிழல், துஹிதா=புதல்வி, பரம் க்ருபணம்=மிகுந்த தயைக்குரியவள், தஸ்மாத்=ஆனதால், ஏதை:=இவர்களால், அதிக்ஷிப்த:=சங்கடப்பட்டபோதிலும், ஸதா=எப்பொழுதும், அஸஞ்ஜ்வர:=மனஸ்தாபமில்லாமல், ஸஹேத=பொறுத்துக்கொள்ளல்வேண்டும்.

(பொ-உ.) தமையன் தந்தைக்குச்சமானர், மனைவியும் புதல்வரும் தனதுடலுக்கொப்பாவர்; தன்வேலைக்காரரும் தனதுநிழலைப்போன்றவர், புதல்வி மிகுந்ததயைக்குரியவர்; ஆனதால் இவர்களால் ஸங்கடப்பட்டபோதிலும் எப்பொழுதும் மனஸ்தாபமில்லாமல் பொறுத்துக்கொள்ளல் வேண்டும்.



௮

அதிவாதாம்ஸ் திதிக்ஷேத நாவமந்யேத கஞ்சு
ந; நசேமம் தேஹமாச்ரித்ய வைரம் குர்வீ
த கேநசித். ... ... ... (௮)

(ப-பி.) அதிவாதாந், திதிக்ஷேத, ந, அவமந்யேத, கஞ்சந; ந, ச, இமம், தேஹம், ஆச்ரித்ய, வைரம், குர்வீத, கேநசித்.

(ப-உ.) அதிவாதாந்=(பிறருடைய) அதிக வார்த்தைகளை, திதிக்ஷேத=பொறுத்துக்கொள்ளல்வேண்டும், கஞ்சந=ஒருவனை, ந அவமந்யேத=அவமானித்தல்வேண்டாம், இமம் தேஹம்=இவ்வுடலை, ஆச்ரித்ய=பற்றிக்கொண்டு, கேநசித்=ஒருவருடனும், வைரம்=பகை, ந குர்வீத=செய்யவும்வேண்டாம்.

(பொ-உ.) பிறருடைய அதிகவார்த்தைகளைப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும். ஒருவனையும் அவமானித்தல் வேண்டாம். இவ்வுடலைப்பற்றிக்கொண்டு ஒருவருடனும் பகைசெய்யவேண்டாம்.

—o—

## அத்தியாயம் - ௨.

௯

ஸர்வாவயவஸம்பூர்ணாம் ஸுவ்ருத்தாமு
த்வஹேந்நர: ; க்ரயக்ரீதா ச யா கந்யா பத்நீ
ஸா ந விதீயதே. ... ... (௧)

(ப - பி.) ஸர்வாவயவஸம்பூர்ணாம், ஸுவ்ருத்தாம், உத்வஹேத், நர:, க்ரயக்ரீதா, ச, யா, கந்யா, ஸா, பத்நீ, ந, விதீயதே.

(ப - உ.) ஸர்வாவயவஸம்பூர்ணாம்=எல்லா அவயவங்களாலும் நிறைந்தவளும், ஸுவ்ருத்தாம்=நல்லொழுக்கமுடையவளுமாகிய, கந்யாம்=பெண்ணை, நர:=புருஷன், உத்வஹேத்=விவாகம் செய்துகொள்ளல்வேண்டும், யா கந்யா=எந்தப்பெண், க்ரயக்ரீதா=விலைக்குக்கொள்ளப்படுகிறாளோ, ஸா=அவள், பத்நீ=இல்லாள், ந விதீயதே=நியமப்படியாகாள்.

(பொ - உ.) புருஷன் எல்லா அவயங்களுடன் நிறைந்திருக்கிறவளும் நல்லொழுக்கமுள்ளவளுமாகிய பெண்ணை விவாஹம்செய்துகொள்ளல்வேண்டும். எந்தப்பெண் விலைக்குவாங்கப்படுகிறாளோ அவள் நியமப்படி இல்லாளாகாள்.

௧௦

அந்யோந்யஸ்யாவ்யபிசாரோ பவேதாமர
ணாந்திக: ; ஏஷ தர்ம: ஸமாஸேந ஜ்ஞேய:
ஸ்த்ரீபும்ஸயோ: பர:. ... (௨)

(ப - பி.) அந்யோந்யஸ்ய, அவ்யபிசார:, பவேத், ஆமரணாந்திக: ; ஏஷ:, தர்ம:, ஸமாஸேந, ஜ்ஞேய:, ஸ்த்ரீபும்ஸயோ:, பர:.

(ப - உ.) [கணவனும் மனைவியும்] அந்யோந்யஸ்ய=இருவருடையவும், ஆமரணாந்திக:=சாவளவும், அவ்யபிசார:=வியபிசாரமில்லாதவர்களாக, பவேத்=ஆதல்வேண்டும், ஸ்த்ரீபும்ஸயோ:=ஸ்திரீபுருஷர்களுடைய, ஏஷ:=இந்த, பர:=சிறந்த, தர்ம:=



தருமத்தை, ஸமாஸேந=சுருக்கமாக, ஜ்ஞேய:=அறியத்தக்கது.

(பொ - உ.) கணவனும் மனைவியும் சாவளவும் வியபிசாரமில்லாதவர்களாகவிருத்தல்வேண்டும். ஸ்திரீ புருஷர்களுடைய இந்தச்சிறந்த தருமத்தைச் சுருக்கமாக வறியத்தக்கது.

௧௧

ததா நித்யம் யதேயாதாம் ஸ்த்ரீபும்ஸௌ
து க்ருதக்ரியௌ ; யதா நாபிசரேதாம்
தௌ வியுக்தாவிதரேதரம். ... (௩)

(ப - பி.) ததா, நித்யம், யதேயாதாம், ஸ்த்ரீபும்ஸௌ, து, க்ருதக்ரியௌ, யதா, நாபிசரேதாம், தௌ, வியுக்தௌ, இதரேதரம்.

(ப - உ.) தௌ=அவர்கள் (ஸ்திரீபுருஷர்கள்) இதரேதரம்=ஒருவரையொருவர், வியுக்தௌ=பிரிந்திருக்கையில், யதா=எவ்விதத்தில், நாபிசரேதாம்=வியபிசரிக்காமலிருப்பார்களோ, ததா=அவ்விதமாக, க்ருதக்ரியௌ=விவாகஞ்செய்துகொண்ட, ஸ்த்ரீபும்ஸௌ=ஸ்திரீயும்புருஷனும், நித்யம்=எப்பொழுதும், யதேயாதாம்=முயற்சிசெய்தல்வேண்டும்.

(பொ - உ.) விவாகம் செய்துகொண்ட ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை யொருவர் பிரிந்திருக்கையில் எவ்விதத்தினால் வியபிசரிக்காம லிருப்பார்களோ அவ்விதமாக எப்பொழுதும் முயற்சி செய்தல் வேண்டும்.

௧௨

ஸந்துஷ்டோ பார்யயா பர்த்தா பர்த்ரா பா
ர்யா ததைவ ச ; யஸ்மிந்நேவ குலே நித்யம்
கல்யாணம் தத்ர வை த்ருவம். ... (௪)

(ப - பி.) ஸந்துஷ்ட:, பார்யயா, பர்த்தா, பர்த்ரா, பார்யா, ததா, ஏவ, ச ; யஸ்மிந், ஏவ, குலே, நித்யம், கல்யாணம், தத்ர, வை, த்ருவம்.

(ப - உ.) யஸ்மிந் ஏவ குலே=எந்தக் குடும்பத்தில், நித்யம்=எப்பொழுதும், பார்யயா=மனைவியுடன், பர்த்தா=கணவன், ஸந்துஷ்ட:=ஸந்தோஷமாகவிருக்கிறரோ, ததா ஏவ ச=அவ்விதமாகவே, பார்யா ச=மனைவியும், பர்த்ரா=கணவனிடத்திலிருக்கிறரோ, தத்ர=அவ்விடத்தில், த்ருவம்=நிச்சயமாகவே, கல்யாணம்=நன்மையுண்டாகிறது.

(பொ - உ.) எந்தக்குடும்பத்தில் மனையிவினிடத்தில் கணவனும் கணவனிடத்தில் மனைவியும் எப்பொழுதும் ஸந்தோஷமாகவிருக்கிறர்களோ அவ்விடத்தில் நிச்சயமாக நன்மையுண்டாகிறது.

கடு

சாயேவாநுகதா ஸ்வச்சா ஸகீவ ஹிதகர்மஸு
ஸதா ப்ரஹ்ருஷ்டயா பாவ்யம் க்ருஹகார்யேஷு தக்ஷயா. ... ... (ரு)

(ப - பி.) சாயா, இவ, அநுகதா, ஸ்வச்சா, ஸகீ, இவ, ஹித கர்மஸு, ஸதா, ப்ரஹ்ருஷ்டயா, பாவ்யம், க்ருஹகார்யேஷு, தக்ஷயா.

(ப - உ.) சாயா இவ=நிழலைப்போல, அநுகதா=கணவனைப்பின்செல்லுகிறவராகவும், ஹிதகர்மஸு=நல்லகாரியங்களைச்செய்வதில், ஸகீ இவ=தோழியைப்போலவும், ஸதா=எப்பொழுதும், ப்ரஹ்ருஷ்டயா=ஸந்தோஷ சித்தமுடையவராகவும், க்ருஹகார்யேஷு=வீட்டுக்காரியங்களை நடத்துவதில், தக்ஷயா=வல்லமையுடையவராகவும், பாவ்யம்=இருத்தல்வேண்டும்.

(பொ - உ.) மனைவிநிழலைப்போல கணவனைப் பின்செல்லுகிறவராகவும் நல்லகாரியங்களைச் செய்வதில் தோழியைப் போலவும், எப்பொழுதும் உகப்பானஉள்ளமுடையவராகவும், வீட்டுக் காரியங்களை நடத்துவதில் வல்லமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.



கசா

ந கேநசித் விவதேத துர்வசா ப்ரலாபிநீ;
ந சாதிவ்யயஶீலா ஸ்யாத் ந தர்மார்த்தவிரோதிநீ. ... ... (சா)

(ப - பி.) ந, கேநசித், விவதேத, ச, துர்வசா ப்ரலாபிநீ; ந, ச, அதிவ்யயஶீலா, ஸ்யாத், ந, தர்மார்த்தவிரோதிநீ.

(ப - உ.) [மனைவி], கேநசித்=ஒருவருடனும், ந விவதேத=சண்டைசெய்யலாகாது, துர்வசா ப்ரலாபிநீ=கெடுதியானவார்த்தைகளும் வீண்வார்த்தைகளும் பேசுகிறவளாகவிருத்தலாகாது; ந அதிவ்யயஶீலா=அதிகச்செலவுசெய்கிறவளாகவும், ந தர்மார்த்தவிரோதிநீ=அறத்தையும் பொருளையும் பற்றினதுமான விஷயங்களில் விரோதியாகவிருத்தலாகாது.

(பொ - உ.) மனைவி ஒருவருடனும் சண்டைசெய்யலாகாது, கெடுதியானவும் வீணானவுமானவார்த்தைகளைப்பேசலாகாது, அதிகச்செலவு செய்கிறவளாகவிருத்தலாகாது; அறத்தையும் பொருளையும்பற்றினவிஷயங்களில் விரோதியாகவிருத்தலாகாது.

கஎ

பதிப்ரியஹிதே யுக்தா ஸ்வாசாரா ஸம்யதேந்த்ரியா;
இஹ கீர்த்திமவாப்நோதி ப்ரேத்ய சாநுத்தமம் ஸுகம். ... ... (எ)

(ப - பி.) பதிப்ரியஹிதே, யுக்தா, ஸ்வாசாரா, ஸம்யதேந்த்ரியா; இஹ, கீர்த்திம், அவாப்நோதி, ப்ரேத்ய, ச, அநுத்தமம், ஸுகம்.

(ப - உ.) பதிப்ரியஹிதே யுக்தா=கணவனிடத் தன்புள்ளவரும் அவருக்கன்பான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறவரும், ஸ்வாசாரா=ஸதாசாரமுடையவரும், ஸம்யதேந்த்ரியா=இந்திரியங்களை வசப்படுத்தியிருக்கிறவரும், [ஆனமனைவி], இஹ=இம்மையில், கீர்த்திம்=புகழை, அவாப்நோதி=அடைகிறர், ப்ரேத்ய

=உடலைவிட்டபின், 𑌅𑌨𑍁𑌪𑌮𑌂=ஒப்பற்ற, 𑌸𑍁𑌖𑌂=சுகத்தையும் (பெறுகிறாள்.)

(பொ - உ.) கணவனிடத் தன்புள்ளவரும் அவருக்கன்பான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறவரும், நல்லொழுக்கமுடையவரும் இந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டிருக்கிறவருமாகிய மனைவி இம்மையில் புகழைப்பெறுகிறாள் மறுமையில் ஒப்பற்றசுகத்தை யனுபவிக்கிறாள்.

கசு

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌰𑍍𑌭𑌰𑍍𑌤𑍃𑌵𑌚𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍇𑌷 𑌧𑌰𑍍𑌮𑌃
𑌪𑌰𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃; 𑌸𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌾𑌰𑌿𑌣𑍀𑌂 𑌪𑌤𑍍𑌨𑍀𑌂
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌤𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌤𑌃. ... (அ)

(ப - பி.) 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌃, 𑌭𑌰𑍍𑌤𑍃𑌵𑌚𑌃, 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂, 𑌏𑌷𑌃, 𑌧𑌰𑍍𑌮𑌃, 𑌪𑌰𑌃, 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃; 𑌸𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌾𑌰𑌿𑌣𑍀𑌂, 𑌪𑌤𑍍𑌨𑍀𑌂, 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌪𑌤𑌤𑌿, 𑌧𑌰𑍍𑌮𑌤𑌃.

(ப - உ.) 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌃=பெண்களால், 𑌭𑌰𑍍𑌤𑍃𑌵𑌚𑌃=கணவன் வாக்கியப்படி, 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂=செய்யப்படவேண்டும், 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃=பெண்களுக்கு, 𑌏𑌷𑌃=இது, 𑌪𑌰𑌃 𑌧𑌰𑍍𑌮𑌃=சிறந்த தருமம், 𑌸𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌾𑌰𑌿𑌣𑍀𑌂=நல்லொழுக்கமுடையவராகிய, 𑌪𑌤𑍍𑌨𑍀𑌂=மனைவியை, 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾=தள்ளிவிட்டு, 𑌧𑌰𑍍𑌮𑌤𑌃=தருமத்திலிருந்து, 𑌪𑌤𑌤𑌿=பதிதனாகிறான் [கணவன்.]

(பொ - உ.) பெண்கள் கணவன்சொற்படி நடத்தல்வேண்டும், இது அவர்களுக்குச் சிறந்த தருமம். நல்லொழுக்கமுடைய மனைவியை விட்டு கணவன் தருமத்திலிருந்து பதிதனாகிறான்.

கஎ

𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿
𑌯𑍋 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃; 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌹𑌿 𑌕𑍁𑌲
𑌯𑍋𑌃 𑌶𑍋𑌕𑌮𑌾𑌵𑌹𑍇𑌯𑍁𑌰𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃. (கூ)



(ப - பி.) 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑍇𑌭𑍍𑌯𑌃, 𑌅𑌪𑌿, 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍇𑌭𑍍𑌯𑌃, 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃, 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌃, 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃; 𑌦𑍍𑌵𑌯𑍋𑌃, 𑌹𑌿, 𑌕𑍁𑌲𑌯𑍋𑌃, 𑌶𑍋𑌕𑌂, 𑌆𑌵𑌹𑍇𑌯𑍁𑌃, 𑌅𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃.

(ப - உ.) 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃=பெண்கள், 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌪𑌿=சிறிதாம், 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍇𑌭𑍍𑌯𑌃=கெட்டஸகவாஸத்தைவிட்டு, 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃=விசேஷமாக, 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌃=காக்கப்படவேண்டியவர்கள்; 𑌅𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃𑌹𑌿=காக்கப்படாவிடின், 𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 𑌕𑍁𑌲𑌯𑍋𑌃=இரண்டு குலங்களுக்கும், 𑌶𑍋𑌕𑌂=துயரத்தை, 𑌆𑌵𑌹𑍇𑌯𑍁𑌃=தருகிறார்.

(பொ - உ.) பெண்கள் மிக அற்பமாகிய செட்டஸகவாஸத்தைவிட்டும் விசேஷமாக காக்கப்படவேண்டியவர்கள்; காக்கப்படாவிடின் பிறந்ததும் புகுந்ததுமாகிய இரண்டு குடும்பங்களுக்கும் அவர்களால் துயருண்டாகும்.

கஅ

𑌅𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌗𑍃𑌹𑍇 𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌰𑌾𑌪𑍍𑌤
𑌕𑌾𑌰𑌿𑌭𑌿𑌃; 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌰𑌕𑍍𑌷𑍇
𑌯𑍁𑌸𑍍𑌤𑌾𑌃 𑌸𑍁𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃. ... (கo)

(ப - பி.) 𑌅𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃, 𑌗𑍃𑌹𑍇, 𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌃, 𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌃, 𑌆𑌪𑍍𑌤𑌕𑌾𑌰𑌿𑌭𑌿𑌃; 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂, 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾, 𑌯𑌾𑌃, 𑌤𑍁, 𑌰𑌕𑍍𑌷𑍇𑌯𑍁𑌃, 𑌤𑌾𑌃, 𑌸𑍁𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃.

(ப - உ.) 𑌆𑌪𑍍𑌤𑌕𑌾𑌰𑌿𑌭𑌿𑌃=ஆப்தர்களாகிய, 𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌃=மனிதர்களால், 𑌗𑍃𑌹𑍇=வீட்டில், 𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌃=காவலில்வைக்கப்பட்டிருக்கிறபெண்கள், 𑌅𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃=காக்கப்படாதவர்களே, 𑌯𑌾𑌃 𑌤𑍁=யாரானால், 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂=தம்மை, 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾=தம்மாலேயே, 𑌰𑌕𑍍𑌷𑍇𑌯𑍁𑌃=காத்துக்கொள்ளுகிறார்களோ, 𑌤𑌾𑌃=அவர்கள், 𑌸𑍁𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃=நன்றாகக்காக்கப்படுகிறவர்கள்,

(பொ - உ.) நம்பத்தக்க காவலாளிகளால் வீட்டில் காக்கப்படுகிற பெண்கள் காக்கப்படாதவர்களே. யாரானால் தம்மைத்தம்மாலேயே காத்துக்கொள்ளுகிறார்களோ அவர்கள் நன்றாகக்காக்கப்படுகிறவர்கள்.

கக

ப்ராத்ருஜ்யேஷ்டஸ்ய பார்யாயா குருபத்ந்யநுஜஸ்ய ஸா; யவீயஸஸ்து யா பார்யா ஸ்நுஷா ஜ்யேஷ்டஸ்ய ஸா ஸ்ம்ருதா. ... (கக)

(ப - பி.) ப்ராத்ரு:, ஜ்யேஷ்டஸ்ய, பார்யா, யா, குருபத்நீ, அநுஜஸ்ய, ஸா; யவீயஸ:, து, யா, பார்யா, ஸ்நுஷா, ஜ்யேஷ்டஸ்ய, ஸா, ஸ்ம்ருதா.

(ப - உ.) ஜ்யேஷ்டஸ்ய ப்ராத்ரு:=மூத்தஸோதரனுடைய, பார்யா=மனைவி, யா=யாரோ, ஸா=அவள், அநுஜஸ்ய=இளையவனுடைய, குருபத்நீ=ஆசான்மனைவியென்றும், யவீயஸ:=இளையவனுடைய, பார்யா=மனைவி, யா=யாரோ, ஸா=அவள், ஜ்யேஷ்டஸ்ய=மூத்தவனுடைய, ஸ்நுஷா=புத்திரன்மனைவியென்றும், ஸ்ம்ருதா=ஞாபகம்வைத்தல்வேண்டும்.

(பொ - உ.) மூத்தஸோதரனுடைய மனைவி இளையவனுடைய ஆசான்மனைவியென்றும், இளையோனுடையமனைவி மூத்தவனது புத்திரன்மனைவியென்றும் நினைத்தல்வேண்டும்.

—o—

## அத்தியாயம் - ௩.

உ0

க்ருஹஸ்த: போஷயேத்தாராந் வித்யாமப்யாஸயேத்ஸுதாந்; பாலயேத்ஸ்வஜநாந் பந்தூநேஷ தர்ம: ஸநாதந:. ... (க)

(ப - பி.) க்ருஹஸ்த:, போஷயேத், தாராந், வித்யாம், அப்யாஸயேத், ஸுதாந்; பாலயேத், ஸ்வஜநாந், பந்தூந், ஏஷ:, தர்ம:, ஸநாதந:.

(ப - உ.) க்ருஹஸ்த:=இல்லறத்தான், தாராந்=மனைவியை, போஷயேத்=போஷித்தல்வேண்டும், ஸுதாந்=புதல்வருக்கு, வித்யாம்=கல்வியை, அப்யாஸயேத்=கற்பித்தல்வேண்டும், ஸ்வஜநாந்=தன்ஜநங்களையும், பந்தூந்=உறவினரையும், பாலயேத்=காப்பாற்றல்வேண்டும், ஏஷ: தர்ம:=இந்தத்தருமம், ஸநாதந:=பழமையானது.



(பொ - உ.) இல்லறத்தான் மனைவியைப் போஷித்தல் வேண்டும்; புதல்வருக்குக் கல்விகற்பித்தல்வேண்டும்; தன்ஜனங்களையும் உறவினரையும் காப்பாற்றல்வேண்டும். இந்தத்தருமம் ஆதியானது.

உக

கந்யாப்யேவம் பாலநீயா சிக்ஷணீயாதியத்நத:; தேயா வராய விதுஷே தநரத்நஸமந்விதா. ... (உ)

(ப - பி.) கந்யா, அபி, ஏவம், பாலநீயா, சிக்ஷணீயா, அதியத்நத:; தேயா, வராய, விதுஷே, தநரத்நஸமந்விதா.

(ப - உ.) கந்யா அபி=கன்னிகையும், ஏவம்=இவ்விதமாக, பாலநீயா=போஷிக்கப்படவேண்டியவர், அதியத்நத:=மிக முயற்சியுடன், சிக்ஷணீயா=கல்வி கற்பிக்கப்பட வேண்டியவர், தநரத்நஸமந்விதா=திரவியத்துடனும் இரத்தினங்களுடனும் கூடினவராக, விதுஷே=கல்வியுள்ளவராகிய, வராய=கணவனுக்கு, தேயா=கொடுக்கப்படவேண்டியவர்.

(பொ - உ.) கன்னிகையும் இவ்விதமாக போஷிக்கப்பட வேண்டியவர்; மிக முயற்சியுடன் கல்விகற்பிக்கப்படவேண்டியவர்; திரவியத்துடனும் இரத்தினங்களுடனும் கூடியவராகக் கல்வியுள்ளவராகிய கணவனுக்குக் கொடுக்கப்பட வேண்டியவர்.

உஉ

யாத்ருக் குலே நஹ்யத்ர ஸ்த்ரீஸம்ப ஜ்யதயாவிபு:; தாத்ருக் குணாஸாஹவ திஸந்தோஷேணவர்த்ததா. ... (௩)

(ப-பி.) 𑌯𑌾𑌦𑍃𑌗𑍍𑌗𑍁𑌣𑍇𑌨, 𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾, 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀, 𑌸𑌂𑌯𑍁𑌜𑍍𑌯𑍇𑌤, 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿; 𑌤𑌾𑌦𑍃𑌗𑍍𑌗𑍁𑌣𑌾, 𑌸𑌾, 𑌭𑌵𑌤𑌿, 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇𑌣, 𑌇𑌵, 𑌨𑌿𑌮𑍍𑌨𑌗𑌾.

(ப-உ.) 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿=நியமப்படி, 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀=பெண், 𑌯𑌾𑌦𑍃𑌗𑍍𑌗𑍁𑌣𑍇𑌨=எப்படிப்பட்ட குணத்தையுடைய, 𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾=கணவனுடன், 𑌸𑌂𑌯𑍁𑌜𑍍𑌯𑍇𑌤=சேர்க்கப்படுகிறாளோ, 𑌸𑌾=அவள், 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇𑌣𑌇𑌵=கடலுடன்கூடிய, 𑌨𑌿𑌮𑍍𑌨𑌗𑌾𑌇𑌵=ஆற்றைப்போல, 𑌤𑌾𑌦𑍃𑌗𑍍𑌗𑍁𑌣𑌾=அப்படிப்பட்ட குணத்தை யுடையவள், 𑌭𑌵𑌤𑌿=ஆகிறாள்.

(பொ-உ.) பெண் நியமப்படி எப்படிப்பட்ட பண்பை யுடைய கணவனுடன் சேர்க்கப்படுகிறாளோ அவள் கடலுடன் கூடிய நதியைப்போல அப்படிப்பட்ட குணத்தையுடையவளாகிறாள்.

௨௩

𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌪𑌤𑌿𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌮𑌜𑍍𑌞𑌾𑌤𑌪𑌤𑌿𑌸𑍇𑌵𑌨𑌾𑌂;
𑌨𑍋𑌦𑍍𑌵𑌾𑌹𑌯𑍇𑌤𑍍𑌪𑌿𑌤𑌾𑌬𑌾𑌲𑌾𑌮𑌜𑍍𑌞𑌾𑌤𑌧𑌰𑍍𑌮
𑌶𑌾𑌸𑌨𑌾𑌂. ... ... ... (௪)

(ப-பி.) 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌪𑌤𑌿𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌂, 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌪𑌤𑌿𑌸𑍇𑌵𑌨𑌾𑌂; 𑌨, 𑌉𑌦𑍍𑌵𑌾𑌹𑌯𑍇𑌤𑍍, 𑌪𑌿𑌤𑌾, 𑌬𑌾𑌲𑌾𑌂, 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑌨𑌾𑌂.

(ப-உ.) 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌪𑌤𑌿𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌂=கணவனிடத்தில்நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கங்களையறியாதவளும், 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌪𑌤𑌿𑌸𑍇𑌵𑌨𑌾𑌂=கணவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை யறியாதவளும், 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑌨𑌾𑌂=தருமநியமங்களையறியாதவளுமாகிய, 𑌬𑌾𑌲𑌾𑌂=கன்னிகையை, 𑌪𑌿𑌤𑌾=தந்தை, 𑌨 𑌉𑌦𑍍𑌵𑌾𑌹𑌯𑍇𑌤𑍍=விவாகம் செய்து கொடுக்கக்கூடாது.

(பொ-உ.) கணவனிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய ஒழுக்கங்களை யறியாதவளும், கணவனுக்குச் செய்யவேண்டியவுபசாரங்களை யறியாதவளும் தருமநியமங்களை உணராதவளுமாகிய கன்னிகையை தந்தை விவாகம் செய்து கொடுக்கக்கூடாது.



௨௪

𑌨𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌃𑌪𑌿𑌤𑌾𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌚𑍍𑌛𑍁𑌲𑍍𑌕𑌮
𑌣𑍍𑌵𑌪𑌿; 𑌗𑍃𑌹𑍍𑌣𑌞𑍍𑌛𑍁𑌲𑍍𑌕𑌂 𑌹𑌿𑌲𑍋𑌭𑍇𑌨𑌸𑍍𑌯𑌾
𑌨𑍍𑌨𑌰𑍋𑌽𑌪𑌤𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍀. ... (௫)

(ப-பி.) 𑌨, 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌃, 𑌪𑌿𑌤𑌾, 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍, 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍, 𑌶𑍁𑌲𑍍𑌕𑌂, 𑌅𑌣𑍁, 𑌅𑌪𑌿; 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍, 𑌶𑍁𑌲𑍍𑌕𑌂, 𑌹𑌿, 𑌲𑍋𑌭𑍇𑌨, 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌨𑌰𑌃, 𑌅𑌪𑌤𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍀.

(ப-உ.) 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍=அறிவுடையவனாகிய, 𑌪𑌿𑌤𑌾=தந்தை, 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌃=கன்னிகையின்பொருட்டு, 𑌶𑍁𑌲𑍍𑌕𑌂=பொருளை, 𑌅𑌣𑍍𑌵𑌪𑌿=சிறிதும், 𑌨𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍=பெற்றுக்கொள்ளலாகாது, 𑌲𑍋𑌭𑍇𑌨=பொருளாசையினால், 𑌶𑍁𑌲𑍍𑌕𑌂=பொருளை, 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍=பெற்றுக்கொண்டால், 𑌹𑌿=அந்தக்காரணத்தால், 𑌨𑌰𑌃=மனிதன், 𑌅𑌪𑌤𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑍀=ஸந்தானத்தைவிற்பவன், 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍=ஆகிறான்.

(பொ-உ.) அறிவுடையவனாகிய தந்தை கன்னிகையைக் கொடுப்பதின் பொருட்டு பொருளைச் சிறிதும் பெற்றுக் கொள்ளலாகாது; பொருளைப் பெற்றுக்கொண்டால் அதனால் ஸந்தானத்தை விற்பவன் ஆகிறான்.

——00——

## அத்தியாயம் - ௪.

௨௫

𑌨𑌤𑍇𑌨𑌵𑍃𑌦𑍍𑌧𑍋𑌭𑌵𑌤𑌿𑌯𑍇𑌨𑌾𑌸𑍍𑌯𑌪𑌲𑌿𑌤𑌂𑌶𑌿
𑌰𑌃; 𑌯𑍋𑌵𑍈𑌯𑍁𑌵𑌾𑌪𑍍𑌯𑌧𑍀𑌯𑌾𑌨𑌸𑍍𑌤𑌂𑌦𑍇𑌵𑌾𑌃
𑌸𑍍𑌥𑌵𑌿𑌰𑌂𑌵𑌿𑌦𑍁𑌃. ... ... (௧)

(ப-பி.) 𑌨, 𑌤𑍇𑌨, 𑌵𑍃𑌦𑍍𑌧𑌃, 𑌭𑌵𑌤𑌿, 𑌯𑍇𑌨, 𑌅𑌸𑍍𑌯, 𑌪𑌲𑌿𑌤𑌂, 𑌶𑌿𑌰𑌃; 𑌯𑌃, 𑌵𑍈, 𑌯𑍁𑌵𑌾, 𑌅𑌪𑌿, 𑌅𑌧𑍀𑌯𑌾𑌨𑌃, 𑌤𑌂, 𑌦𑍇𑌵𑌾𑌃, 𑌸𑍍𑌥𑌵𑌿𑌰𑌂, 𑌵𑌿𑌦𑍁𑌃.

(ப-உ.) 𑌅𑌸𑍍𑌯=இவனுடைய, 𑌶𑌿𑌰𑌃=தலை, 𑌯𑍇𑌨=எதனால்,

த

பலிதம்=வெளுத்துப்போகின்றதோ, தேந=அதனால், வ்ருத்த꞉=கிழவன், ந பவதி=ஆகான், ய꞉=யார், யுவாபி=வாலிபரானாலும், அதீயாந꞉=அறிவுள்ளவராகிறாரோ, தம்=அவரை, தேவா꞉=தேவதைகள், ஸ்தவிரம்=கிழவனென்று, விது꞉=அறிகின்றனர்.

(பொ - உ.) மனிதனுடைய தலை எதனால் வெளுத்துப் போகின்றதோ அதனால் பெரியவன் ஆகான்; யார் வாலிபரானாலும் அறிவுள்ளவராகிறாரோ அவரைத் தேவர்கள் பெரியவனென்று அறிகின்றனர்.

௨௬

மௌநாந்ந ஸ முநிர்பவதி நாரண்யவஸநாந்
முநி꞉; ஸ்வலக்ஷணம் து யோ வேத ஸ முநி꞉
ஶ்ரேஷ்ட உச்யதே. ... ... (௨௬)

(ப - பி.) மௌநாத், ந, ஸ꞉, முநி꞉, பவதி, ந, அரண்யவஸநாத், முநி꞉; ஸ்வலக்ஷணம், து, ய꞉, வேத, ஸ꞉, முநி꞉, ஶ்ரேஷ்ட꞉, உச்யதே.

(ப - உ.) மௌநாத்=வார்த்தை சொல்லாமலிருப்பதினால், ஸ꞉=அவன் (மனிதன்), முநி꞉=முனி, ந பவதி=ஆகான், அரண்யவஸநாத்=காட்டிலிருப்பதால், ந முநி꞉=முனியாகான், ய꞉=யார், ஸ்வலக்ஷணம்=ஜீவாத்மஸ்வரூபத்தை, வேத=அறிகிறாரோ, ஸ꞉=அவர், முநி꞉ஶ்ரேஷ்ட꞉=சிறந்தமுனியென்று, உச்யதே=சொல்லப்படுகிறார்.

(பொ - உ.) வார்த்தைச் சொல்லாததினாலும் முனியாகான், காட்டில்வசிப்பதினாலும் முனியாகான்; யார் ஆத்துமஸ்வரூபத்தை யறிகிறாரோ அவர் சிறந்த முனியென்று சொல்லப்படுகிறார்.

௨௭

நாத்மாநமவமந்யேத பூர்வாபிரஸம்ருத்
திபி꞉; ஆம்ருத்யோ꞉ ஶ்ரியமந்விச்சேந் நைநாம்
மந்யேத துர்லபாம். ... ... (௨௭)



(ப - பி.) ந, ஆத்மாநம், அவமந்யேத, பூர்வாபி꞉, அஸம்ருத்திபி꞉; ஆம்ருத்யோ꞉, ஶ்ரியம், அந்விச்சேத், ந, ஏநாம், மந்யேத, துர்லபாம்.

(ப - உ.) பூர்வாபி꞉=முன்தொழில்களினால், அஸம்ருத்திபி꞉=செல்வப்பொருளில்லாததினால், ஆத்மாநம்=தன்னை, ந அவமந்யேத=அவமதித்தலாகாது, ஆம்ருத்யோ꞉=சாவளவும், ஶ்ரியம்=செல்வத்தை, அந்விச்சேத்=அடையும்பொருட்டு முயலவேண்டும், ஏநாம்=இதை, துர்லபாம்=பெறுதற்கரியதென்று, ந மந்யேத=நினைக்கலாகாது.

(பொ - உ.) முன்தொழில்களினால் செல்வப் பொருள் சேரவில்லையென்று தன்னை அவமதித்தலாகாது; சாவளவும்செல்வத்தை அடையும்பொருட்டு முயலல்வேண்டும்; இதைப் பெறுதற்கரியதென்று நினைக்கலாகாது.

௨௮

ஸர்வம் பரவஶம் து꞉கம் ஸர்வமாத்மவஶம்
ஸுகம்; ஏதத்வித்யாத்ஸமாஸேந லக்ஷணம்
ஸுகது꞉கயோ꞉. ... ... (௨௮)

(ப - பி.) ஸர்வம், பரவஶம், து꞉கம், ஸர்வம், ஆத்மவஶம், ஸுகம்; ஏதத், வித்யாத், ஸமாஸேந, லக்ஷணம், ஸுகது꞉கயோ꞉.

(ப - உ.) ஸர்வம்=யாவும், பரவஶம்=பிறர்வசமாகவிருப்பது, து꞉கம்=துக்கம், ஸர்வம்=யாவும், ஆத்மவஶம்=தன்வசமாகவிருப்பது, ஸுகம்=சுகம், ஏதத்=இதை, ஸமாஸேந=சுருக்கமாக, ஸுகது꞉கயோ꞉=சுகதுக்கங்களினது, லக்ஷணம்=இலக்கணமென்று, வித்யாத்=அறியத்தக்கது.

(பொ - உ.) யாவும் பிறர்வசமாகவிருப்பது துக்கம்; யாவும் தன்வசமாகவிருப்பது சுகம்; சுகதுக்கங்களின் இலக்கணச்சுருக்கம் இதென்று அறியத்தக்கது.

௨௯

நோச்சிந்த்யாதாத்மனோ மூலம் பரேஷாஞ்சாபி
த்ருஷ்ணயா ; உச்சிந்த்ய ஹ்யாத்மனோ மூலமா
த்மாநம் தாம்ஶ்ச பீடயேத். ... (௫)

(ப - பி.) ந, உச்சிந்த்யாத், ஆத்மந:, மூலம், பரேஷாம், ச, த்ருஷ்ணயா ; உச்சிந்த்ய, ஹி, ஆத்மந:, மூலம், ஆத்மாநம், தாந், ச, பீடயேத்.

(ப - உ.) ஆத்மந:=தன்னுடைய, மூலம்=பொருளையும், த்ருஷ்ணயா=அதிக பொருளாசையினால், பரேஷாம்=பிறருடையதையும், ந உச்சிந்த்யாத்=அழிக்கலாகாது, ஆத்மந:=தம்முடையதும், [பிறருடையதுமான], மூலம்=பொருளை, உச்சிந்த்ய=அழித்தால், ஹி=அதனால், ஆத்மாநம்=தன்னையும், தாந்=அவரையும், பீடயேத்=துன்பப்படுத்தலாகின்றது.

(பொ - உ.) தன்னுடைய பொருளையும், அதிக பொருளாசையால் பிறருடையபொருளையும், அழிக்கலாகாது ; தம்முடையதும் பிறருடையதுமான பொருளை அழித்தால் அதனால் தன்னையும் பிறரையும் துன்பப்படுத்தலாகின்றது.

௩௦

யாவதேவ யஶ:ஶ்ரேய: ஸ்யாதநித்யம் த்ருவம்
ஜீவிதம் ; கோ ஹி ஜாநாதி கஸ்யாத்ய ம்ருத்யு
காலோ பவிஷ்யதி. ... ... (௬)

(ப - பி.) யாவத், ஏவ, யஶ:ஶ்ரேய:, ஸ்யாத், அநித்யம், த்ருவம், ஜீவிதம் ; க:, ஹி, ஜாநாதி, கஸ்ய, அத்ய, ம்ருத்யுகால:, பவிஷ்யதி.

(ப - உ.) யாவத் ஏவ=இளைஞனும், யஶ:ஶ்ரேய:=தருமசீலனுக, ஸ்யாத்=இருத்தல்வேண்டும், ஜீவிதம்=ஆயுள், த்ருவம்=நிச்சயமாகவே, அநித்யம்=அழிவுள்ளது, கஸ்ய=யாருடைய, ம்ருத்யுகால:=சாகுங்காலம், அத்ய=இன்று, பவிஷ்யதி=உண்டாகுமென்று, க:=யார், ஜாநாதி=அறிகிறார்.



(பொ - உ.) இளைஞனும் தருமசீலனுகவேயிருத்தல்வேண்டும் ; ஆயுள்நிச்சயமாகவே அழிவுள்ளது ; யாருடைய சாகுங்காலம் இன்றுஉண்டாகுமென்று யார்அறிகிறார்.

௩௧

ஸுவ்ருத்த: ஶீலஸம்பந்ந: ப்ரஸந்நாத்மாத்மவி
த்புத: ; ப்ராப்யேஹ லோகே ஸம்மாநம் ஸு
கதிம் ப்ரேத்ய கச்சதி. ... ... (௭)

(ப - பி.) ஸுவ்ருத்த:, ஶீலஸம்பந்ந:, ப்ரஸந்நாத்மா, ஆத்மவித், புத: ; ப்ராப்ய, இஹ, லோகே, ஸம்மாநம், ஸுகதிம், ப்ரேத்ய, கச்சதி.

(ப - உ.) ஸுவ்ருத்த:=நல்லநடத்தையுடையவரும், ஶீலஸம்பந்ந:=நற்குணமாகியசெல்வமுடையவரும், ப்ரஸந்நாத்மா=நல்ல உள்ளமுடையவரும், ஆத்மவித்=பிரமஞானியும், புத:=பண்டிதருமானவர், இஹலோகே=இவ்வுலகத்தில், ஸம்மாநம்=நல்லமதிப்பை, ப்ராப்ய=பெற்று, ப்ரேத்ய=இவ்வுலகத்தைவிட்டபின், ஸுகதிம்=நற்கதிக்கு, கச்சதி=செல்லுகிறார்.

(பொ - உ.) நல்லநடத்தையுடையவரும், நற்குணமாகிய செல்வமுடையவரும், நல்லஉள்ளமுடையவரும், பிரமஞானியும், பண்டிதருமானவர் இவ்வுலகத்தில் நல்ல மதிப்பைப் பெற்று இவ்வுலகத்தை விட்டபின் நற்கதிக்குச் செல்லுகிறார்.

௩௨

யஸ்ய வாங்மநஸீ ஸ்யாதாம் ஸம்யக் ப்ரணிஹி
தே ஸதா ; தபஸ்த்யாகஶ்ச ஸத்யஞ்ச ஸ வை
ஸர்வமவாப்நுயாத். ... ... (௮)

(ப - பி.) யஸ்ய, வாங்மநஸீ, ஸ்யாதாம், ஸம்யக், ப்ரணிஹிதே, ஸதா ; தப:, த்யாக:, ச, ஸத்யம், ச, ஸ:, வை, ஸர்வம், அவாப்நுயாத்.

(ப - உ.) யஸ்ய=யாருடைய, வாங்மநஸீ=வாக்கும் மனதும், ஸதா=எப்பொழுதும், ஸம்யக்=நன்றாக, ப்ரணிஹிதே=ஸ்வ

வசத்தில், ஸ்யாதாம்=இருக்கின்றனவோ, தப:=தவமும், த்யாக:=ஈகையும், ஸத்யம் ச=உண்மையும், [யாருக்கிருக்கின்றனவோ], ஸ ஏவ=அவரே, பரம்=பரமபதத்தை, ஆப்நுயாத்=அடைகிறார்.

(பொ - உ.) யாருக்கு வாக்கும் மனதும் எப்பொழுதும் ஸ்வாதீனப்பட்டிருக்கின்றனவோ, யாரிடத்தில் தவமும் ஈகையும் உண்மையும் இருக்கின்றனவோ, அவரே பரமபதத்தை யடைகிறார்.

௯

தர்மநித்ய: ப்ரஶாந்தாத்மா கார்யயோகவஹ: ஸதா ; நாதர்மே குருதே புத்திம் ந பாபே ப்ரவர்த்ததே. ... (௯)

(ப - பி.) தர்மநித்ய:, ப்ரஶாந்தாத்மா, கார்யயோகவஹ:, ஸதா ; ந, அதர்மே, குருதே, புத்திம், ந, பாபே, ப்ரவர்த்ததே.

(ப - உ.) தர்மநித்ய:=தருமத்தில் எப்பொழுதும் விருப்பமுள்ள, ப்ரஶாந்தாத்மா=பொறிவழிச்செல்லாதகருத்தையுடைய ஆத்துமா, ஸதா=எப்பொழுதும், கார்யயோகவஹ:=நற்காரியங்களை முடிக்கும் உபாயங்களைத் தேடிக்கொண்டேயிருக்கும், அதர்மே=அதருமத்தில், ந புத்திம் குருதே=கருத்தைவைப்பதில்லை, பாபே=பாபத்தில், ந ப்ரவர்த்ததே=செல்வதுமில்லை.

(பொ - உ.) தருமத்தில் எப்பொழுதும் விருப்பமுள்ள பொறிவழிச்செல்லாத கருத்தையுடைய ஆத்துமா எப்பொழுதும் நற்காரியங்களை முடிக்கும் உபாயங்களைத் தேடிக்கொண்டிருக்கும். அதருமத்தில் கருத்தைவைப்பதில்லை, பாபத்தில் செல்வதில்லை.

௧௦

தர்மார்தௌ ய: பரித்யஜ்ய ஸ்யாதிந்த்ரியவஶாநுக: ; ஶ்ரீப்ராணதநதாரேப்ய: க்ஷிப்ரம் ஸ பரிஹீயதே. ... ... (௧௦)



(ப - பி.) தர்மார்தௌ, ய:, பரித்யஜ்ய, ஸ்யாத், இந்த்ரியவஶாநுக: ; ஶ்ரீப்ராணதநதாரேப்ய:, க்ஷிப்ரம், ஸ:, பரிஹீயதே.

(ப - உ.) ய:=யார், தர்மார்தௌ=அறத்தையும் பொருளையும், பரித்யஜ்ய=விட்டு, இந்த்ரியவஶாநுக:=பொறிகளுக்கு வசப்பட்டவன், ஸ்யாத்=ஆகிறானோ, ஸ:=அவன், க்ஷிப்ரம்=விரைவில், ஶ்ரீப்ராணதநதாரேப்ய:=செல்வம் உயிர் பொருள் மனைவி இவைகளிலிருந்து, பரிஹீயதே=நீக்கப்படுகிறான்.

(பொ - உ.) அறத்தையும் பொருளையும் விட்டு பொறிகளின் வசப்பட்டிருக்கிறவன் யாரோ அவன் செல்வம், உயிர், பொருள், மனைவி இவைகளிலிருந்துவிரைவில்நீக்கப்படுகிறான்.

௧௧

பந்துராத்மாத்மநஸ்தஸ்ய யேநைவாத்மாத்மநா ஜித: ; ஸ ஏவ நியத: பந்து: ஸ ஏவ நியதோ ரிபு:. ... ... (௧௧)

(ப - பி.) பந்து:, ஆத்மா, ஆத்மந:, தஸ்ய, யேந, ஏவ, ஆத்மா, ஆத்மநா, ஜித: ; ஸ:, ஏவ, நியத:, பந்து:, ஸ:, ஏவ, நியத:, ரிபு:.

(ப - உ.) யேந ஆத்மநா=எந்தஆத்துமாவினால், ஜித:=வெல்லப்பட்ட, தஸ்ய ஆத்மந:=அந்தஆத்துமாவுக்கு, ஆத்மா பந்து:=உயிருக்குயிரான நண்பன், ஆத்மா ஏவ=ஆத்துமாவே, ஸ: ஏவ=அ (ஆத்துமா) வே, நியத:=எப்பொழுதும், பந்து:=நட்பாகவிருப்பது, ஸ: ஏவ=அதுவே, நியத:=எப்பொழுதும், ரிபு:=பகையுள்ளது.

(பொ - உ.) தன்வசப்பட்டதனக்குத் தானே உயிருக்குயிரானநண்பன் ; தானே தனக்கு எப்பொழுதும் நண்பன் ; தானே தனக்கு எப்பொழுதும் பகைஞன்.

௬௬

ப்ராப்யாவாப்யுத்தமம் ஜந்ம லப்³த்⁴வா சேந்த்³ரிய
ஸௌஷ்ட²வம்; ந வேத்த்யாத்மஹிதம் யஸ்து ஸ
ப⁴வேதா³த்மகா⁴தக:. ... ... (௧௨)

(ப - பி.) ப்ராப்ய, வா, அபி, உத்தமம், ஜந்ம, லப்³த்⁴வா, ச, இந்த்³ரியஸௌஷ்ட²வம்; ந, வேத்தி, ஆத்மஹிதம், ய:, து, ஸ:, ப⁴வேத், ஆத்மகா⁴தக:

(ப - உ.) ய: து=யாரானால், உத்தமம் ஜந்ம=சிறந்ததாகிய (மானிட) ப்பிறப்பை, ப்ராப்ய அபி=அடைந்தும், இந்த்³ரியஸௌஷ்ட²வம்=நல்லநிலைமையிலுள்ள பொறிகளை, லப்³த்⁴வா=பெற்றிருந்தும், ஆத்மஹிதம்=ஆன்மாவுக்கு நன்மையானகாரியத்தை, ந வேத்தி=அறியவில்லையோ, ஸ:=அவன், ஆத்மகா⁴தக:=ஆன்மப்பகைஞன், ப⁴வேத்=ஆகிறான்.

(பொ - உ.) சிறந்ததாகிய மானிடப்பிறப்பை யடைந்தும், நல்லநிலைமையிலுள்ள பொறிகளைப்பெற்றிருந்தும், யார் ஆன்மாவுக்கு நன்மையானகாரியத்தை யறியவில்லையோ அவன் ஆன்மப்பகைஞனாகிறான்.

௬௭

பூர்வே வயஸி தத்குர்யாத்³ யேந வ்ருத்³த⁴:
ஸுக²ம் வஸேத்; யாவஜ்ஜீவேந தத்குர்யாத்³
யேநாமுத்ர ஸுக²ம் வஸேத். ... (௧௩)

(ப - பி.) பூர்வே வயஸி, தத், குர்யாத், யேந, வ்ருத்³த⁴:, ஸுக²ம், வஸேத்; யாவஜ்ஜீவேந, தத், குர்யாத், யேந, அமுத்ர, ஸுக²ம், வஸேத்.

(ப - உ.) யேந=எதனால், வ்ருத்³த⁴:=கிழவன், ஸுக²ம்=சுகமாக, வஸேத்=வாழலாமோ, தத்=அதை, பூர்வே வயஸி=முன்வயதில், குர்யாத்=செய்தல்வேண்டும், யேந=எதனால், அமுத்ர=மறுமையில், ஸுக²ம்=சுகமாக, வஸேத்=வாழலாமோ, தத்=அதை, யாவஜ்ஜீவேந=உயிருள்ளளவும், குர்யாத்=செய்தல்வேண்டும்.



(பொ - உ.) முதுமைப்பருவத்தில் எதனால் சுகமாகவாழலாமோ அதை முற்பருவத்தில் செய்தல்வேண்டும்; மறுமையில் எதனால் சுகமாக வாழலாமோ அதை உயிருள்ளளவும்செய்தல்வேண்டும்.

௬௮

நாபி⁴நந்தே³த மரணம் நாபி⁴நந்தே³த ஜீவிதம்;
காலமேவ ப்ரதீக்ஷேத நிர்தே³ஶம் ப்⁴ருதகோ
யதா². ... ... ... (௧௪)

(ப - பி.) ந, அபி⁴நந்தே³த, மரணம், ந, அபி⁴நந்தே³த, ஜீவிதம்; காலம், ஏவ, ப்ரதீக்ஷேத, நிர்தே³ஶம், ப்⁴ருதக:, யதா².

(ப - உ.) மரணம்=சாவை, ந அபி⁴நந்தே³த=விரும்பலாகாது, ஜீவிதம்=வாழ்வை, ந அபி⁴நந்தே³த=விரும்பலாகாது, ப்⁴ருதக:=கூலிக்காரன், நிர்தே³ஶம்=கூலி கொடுபடுவதற்கு நிச்சயிக்கப்படுங்காலத்தை, யதா²=எப்படி (எதிர்பார்ப்பானே), [அதுபோல], காலம் ஏவ=அதனுநேரிடும்காலத்தையே, ப்ரதீக்ஷேத=எதிர்பார்த்தல்வேண்டும்.

(பொ - உ.) சாவையும் விரும்பலாகாது, வாழ்வையும்விரும்பலாகாது; கூலிக்காரன் கூலிக்கெதிர்பார்ப்பதுபோல அதனு நேரிடும் காலத்தை எதிர்பார்த்தல்வேண்டும்.

—o—

## அத்தியாயம் - ௫

௬௯

ஸந்தோஷம் பரமாஸ்தா²ய ஸுகா²ர்தீ² ஸம்
யதோ ப⁴வேத்; ஸந்தோஷமூலம் ஹி ஸு
க²ம் து³:க²மூலம் விபர்யய:. ... (௧)

(ப - பி.) ஸந்தோஷம், பரம், ஆஸ்தா²ய, ஸுகா²ர்தீ², ஸம்யத:, ப⁴வேத்; ஸந்தோஷமூலம், ஹி, ஸுக²ம், து³:க²மூலம், விபர்யய:

(ப - உ.) ஸுகா²ர்தீ²=சுகத்தை விரும்பியவன், பரம்

ஸந்தோஷம்=மிகவும் ஸந்தோஷத்தை, ஆஸ்தாய=பெற்று, ஸம்யத:=உள்ளமட்டும் திருத்தியடைந்தவனாக, பவேத்=ஆதல்வேண்டும், ஸுகம்=சுகத்திற்கு, ஸந்தோஷமூலம் ஹி=சந்தோஷமே காரணம், விபர்யய:=அதற்குமாறுகிய ஸந்தோஷமின்மை, து:கமூலம்=துயரத்திற்குக்காரணம்.

(பொ - உ.) சுகத்தை விரும்பியவன் மிகவும் சந்தோஷத்தைப்பெற்று உள்ளமட்டும் திருத்தி யடைந்தவனுதல்வேண்டும். சுகத்திற்கு சந்தோஷமேகாரணம், அதற்கு மாறுகிய சந்தோஷமின்மையே துயரத்திற்குக் காரணம்.

௪௦

அஸந்தோஷபரா மூடா: ஸந்தோஷம் யாந்தி
பண்டிதா: ; அந்தோ நாஸ்தி பிபாஸாயா: ஸ
ந்தோஷ: பரமம் ஸுகம். ... (௨)

(ப - பி.) அஸந்தோஷபரா:, மூடா:, ஸந்தோஷம், யாந்தி, பண்டிதா: ; அந்த:, ந, அஸ்தி, பிபாஸாயா:, ஸந்தோஷ:, பரமம், ஸுகம்.

(ப - உ.) மூடா:=மூடர்கள், அஸந்தோஷபரா:=சந்தோஷமற்றவர்கள், பண்டிதா:=பண்டிதர்கள், ஸந்தோஷம்=சந்தோஷத்தை, யாந்தி=அடைகின்றனர், பிபாஸாயா:=விஷயசுகத்தில் ஆவலுக்கு, அந்த: ந அஸ்தி=முடிவில்லை, ஸந்தோஷ:=சந்தோஷமே, பரமம்=சிறந்த, ஸுகம்=சுகம்.

(பொ - உ.) சந்தோஷமற்றவர்கள் மூடர்கள், ஸந்தோஷத்தைப் பெற்றவர்கள் பண்டிதர்கள். விடயசுகத்திலுள்ள ஆவலுக்கு அளவில்லை. ஸந்தோஷமே சிறந்தசுகம்.

௪௧

ஸுகது:கம் ஹி புருஷ: பர்யாயே
ணோபஸேவதே ; ஸுகமாபதிதம் ஸே
வேத்து:கமாபதிதம் ஸஹேத். ... (௩)



(ப - பி.) ஸுகது:கம், ஹி, புருஷ:, பர்யாயேண, உபஸேவதே ; ஸுகம், ஆபதிதம், ஸேவேத், து:கம், ஆபதிதம், ஸஹேத்.

(ப - உ.) புருஷ:=மனிதன், பர்யாயேண=ஒன்றின்பின் ஒன்றாக, ஸுகது:கம் ஹி=சுகதுக்கங்களை, உபஸேவதே=அநுபவிக்கிறான், ஆபதிதம்=வந்த, ஸுகம்=சுகத்தையும், ஸேவேத்=அநுபவித்தல்வேண்டும், ஆபதிதம்=வந்த, து:கம்=துயரத்தையும், ஸஹேத்=பொறுத்துக்கொள்ளல்வேண்டும்.

(பொ - உ.) மனிதன் சுகத்தையும் துக்கத்தையும் ஒன்றின்பின் ஒன்றாக அடைகிறான் ; வந்தசுகத்தையும் அநுபவித்தல்வேண்டும் ; வந்ததுயரத்தையும் பொறுத்தல்வேண்டும்.

௪௨

ந நித்யம் லபதே து:கம் ந நித்யம் லபதே
ஸுகம் ; சரீரமேவாயதனம் து:கஸ்ய
ஸுகஸ்ய ச. ... ... ... (௪)

(ப - பி.) ந, நித்யம், லபதே, து:கம், ந, நித்யம், லபதே, ஸுகம் ; சரீரம், ஏவ, ஆயதனம், து:கஸ்ய, ச, ஸுகஸ்ய, ச.

(ப - உ.) நித்யம்=எப்பொழுதும், து:கம்=துயரம், ந லபதே=கிடைப்பதில்லை, நித்யம்=எப்பொழுதும், ஸுகம்=சுகம், ந லபதே=கிடைப்பதில்லை, து:கஸ்ய ச=துக்கத்திற்கும், ஸுகஸ்ய ச=சுகத்திற்கும், சரீரம் ஏவ=சரீரமே, ஆயதனம்=இருப்பிடம்.

(பொ - உ.) துக்கமும் எப்பொழுதும் கிடைப்பதில்லை, சுகமும் எப்பொழுதும்கிடைப்பதில்லை ; சுகத்திற்கும் துக்கத்திற்கும் சரீரமேஇருப்பிடம்.

௪௩

ஸுகம் வா யதி வா து:கம் ப்ரியம் வா யதி வா
ப்ரியம் ; ப்ராப்தம் ப்ராப்தமுபாஸீத ஹ்ருத
யேநாபராஜிதா. ... ... (௫)

(ப - பி.) ஸுகம், வா, யதி, வா, து:கம், ப்ரியம், வா, யதி, வா, அப்ரியம்; ப்ராப்தம், ப்ராப்தம், உபாஸீத, ஹ்ருதயேந, அபராஜிதா.

(ப - உ.) ஸுகம்வா=சுகமாயினும், யதிவாது:கம்=துக்கமாயினும், ப்ரியம்வா=இன்பமுள்ளதாயினும், யதிவா அப்ரியம்=இன்பமல்லாததாயினும், ப்ராப்தம் ப்ராப்தம்=கிடைத்ததை, அபராஜிதா=பின்வாங்காத, ஹ்ருதயேந=உள்ளத்துடன், உபாஸீத=அனுபவித்தல்வேண்டும்.

(பொ - உ.) சுகமாயினும் துக்கமாயினும் இன்பமுள்ளதாயினும் இன்பமற்றதாயினும் கிடைத்ததைப்பின்வாங்காத உள்ளத்துடன் அனுபவித்தல்வேண்டும்.

சச

ப்ரியே நாதிப்ருசம் ஹ்ருஷ்யேதப்ரியே ந ச
ஸம்ஜ்வரேத்; ந முஹ்யேதர்த்தக்ருச்ச்ரேஷு
ந ச தர்மம் பரித்யஜேத். ... (சா)

(ப - பி.) ப்ரியே, ந, அதிப்ருசம், ஹ்ருஷ்யேத், அப்ரியே, ந, ச, ஸம்ஜ்வரேத்; ந, முஹ்யேத், அர்த்தக்ருச்ச்ரேஷு, ந, ச, தர்மம், பரித்யஜேத்.

(ப - உ.) ப்ரியே=இன்பமான காரியமுண்டாயின், அதிப்ருசம்=விசேஷமாக, நஹ்ருஷ்யேத்=ஸந்தோஷிக்கலாகாது, அப்ரியே=இன்பமற்றகாரியமுண்டாயினும், நஸம்ஜ்வரேத்=துயரப்படலாகாது, அர்த்தக்ருச்ச்ரேஷு=பொருளின்மையில், நமுஹ்யேத்=மூடனாகக்கூடாது, தர்மம்=தருமத்தையும், நபரித்யஜேத்=விடலாகாது.

(பொ - உ.) இன்பமானகாரிய முண்டாயின் அதிகமாகச் சந்தோஷிக்கலாகாது; இன்பமற்றகாரியமுண்டாயினும் துயரப்படலாகாது; பொருளின்மையால்மூடனாகக்கூடாது, தருமத்தையும் விடலாகாது.



சரு

ஸந்தாபாத்ப்ரச்யதே ரூபம் ஸந்தாபாத்ப்ரச்யதே
பலம்; ஸந்தாபாத்ப்ரச்யதே ஜ்ஞானம்
ஸந்தாபாத்வ்யாதிம்ருச்சதி. ... (எ)

(ப - பி.) ஸந்தாபாத், ப்ரச்யதே, ரூபம், ஸந்தாபாத், ப்ரச்யதே, பலம்; ஸந்தாபாத், ப்ரச்யதே, ஜ்ஞானம், ஸந்தாபாத், வ்யாதிம், ருச்சதி.

(ப - உ.) ஸந்தாபாத்=துயரத்தினால், ரூபம்=வடிவம், ப்ரச்யதே=கெடுகின்றது, ஸந்தாபாத்=துயரத்தினால், பலம்=வன்மை, ப்ரச்யதே=கெடுகின்றது, ஸந்தாபாத்=துயரத்தினால், ஜ்ஞானம்=அறிவு, ப்ரச்யதே=கெடுகின்றது, ஸந்தாபாத்=துயரத்தினால், வ்யாதிம்=பிணியை, ருச்சதி=பெறுகின்றனர்.

(பொ - உ.) துயரத்தினால் வடிவங்கெடுகின்றது; துயரத்தினால் வல்லமைகெடுகின்றது; துயரத்தினால் அறிவுகெடுகின்றது துயரத்தினால் பிணியைப்பெறுகின்றனர்.

---

## அத்தியாயம் - சா.

சசா

ஸ்வம் யச: பௌருஷம் சைவ ப்ரச்சன்னே கதிதம்
ச யத்; க்ருதம் யதுபகாராய பரக்ஞோ ந
ப்ரகாசயேத். ... ... ... (க)

(ப - பி.) ஸ்வம், யச:, பௌருஷம், ச, ப்ரச்சன்னே, கதிதம், ச, யத்; க்ருதம், யத், உபகாராய, பரக்ஞ:, ந, ப்ரகாசயேத்.

(ப - உ.) ஸ்வம்=தன்னுடைய, யச:=புகழையும், பௌருஷம்=புருஷத்தன்மையையும், ப்ரச்சன்னே=அந்தரங்கமாகவிருக்கும்படி, யத்=எது, கதிதம்=சொல்லப்பட்டதோ [அதையும்], உபகாராய=உபகாரமாக, யத்=எது, க்ருதம்=செய்யப்பட்டதோ,

(அதையும்), தர்மஜ்ஞ:=தருமத்தையறிந்தவர், ந ப்ரகாஶயேத்=வெளியிடுவதில்லை.

(பொ - உ.) தன்னுடையபுகழையும், வல்லமையையும், அந்தரங்கமாகவிருக்கும்படி தன்னிடத்தில் சொன்னவார்த்தையையும், தான்செய்த உபகாரத்தையும் தருமத்தையறிந்தவர்கள் வெளியிடுவதில்லை.

௪௭

ஸத்யம் ஹ்ருத்யம் ப்ரியம் வாக்யம் தீரோ ஹிதகரம்
வதேத்; ஆத்மோத்கர்ஷம் ததா நிந்தாம் பரே
ஷாம் பரிவர்ஜயேத். ... ... (௨)

(ப - பி.) ஸத்யம், ஹ்ருத்யம், ப்ரியம், வாக்யம், தீர:, ஹிதகரம், வதேத்; ஆத்மோத்கர்ஷம், ததா, நிந்தாம், பரேஷாம், பரிவர்ஜயேத்.

(ப - உ.) ஸத்யம்=உண்மையானதும், ஹ்ருத்யம்=மெதுவானதும், ப்ரியம்=இன்பமானதும், ஹிதகரம்=நன்மையைத்தருவதுமான, வாக்யம்=வாக்கியத்தை, தீர:=விவேகி, வதேத்=சொல்லுகிறார், ஆத்மோத்கர்ஷம்=தன்பெருமையையும், ததா=அப்படியே, பரேஷாம்=பிறருடைய, நிந்தாம்=நிந்தையையும், பரிவர்ஜயேத்=நீக்குகிறார்.

(பொ - உ.) விவேகி உண்மையும் மெதுவும் இன்பமும் நன்மையைச் செய்வதுமான சொற்களைச்சொல்லுகிறார். தற்புகழ்ச்சியையும் பிறரிகழ்ச்சியையும் செய்வதில்லை.

௪௮

ஸத்யமேவ வ்ரதம் யஸ்ய தயா தீனேஷு ஸர்வ
தா; காமக்ரோதௌ வஶே யஸ்ய தேன லோ
கத்ரயம் ஜிதம். ... ... (௩)

(ப - பி.) ஸத்யம், ஏவ, வ்ரதம், யஸ்ய, தயா, தீனேஷு, ஸர்வதா; காமக்ரோதௌ, வஶே, யஸ்ய, தேன, லோகத்ரயம், ஜிதம்.

(ப - உ.) ஸத்யமேவ=உண்மையே, யஸ்ய=யாருடைய, வ்ரதம்=நோன்போ, (யாருடைய), தயா=தயை, ஸர்வதா=எப்பொழுதும், தீனேஷு=ஏழைகளிடத்திலுள்ளதோ, காமக்ரோதௌ=காமக்குரோதங்கள், யஸ்ய=யாருடைய, வஶே=வசப்பட்டிருக்கின்றனவோ, தேன=அவரால், லோகத்ரயம்=மூவ்வுலகங்களும், ஜிதம்=ஜயிக்கப்பட்டன.

(பொ - உ.) உண்மையே யாருடையவிரதமோ யாருடைய தயை எப்பொழுதும் ஏழைகளிடத்திலுளதோ காமக்குரோதங்கள் யார்வசப்பட்டிருக்கின்றனவோ அவரால் மூவ்வுலகமும் ஜயிக்கப்பட்டன.

௪௯

விரக்த: பரதாரேஷு நிஸ்ப்ருஹ: பரவஸ்து
ஷு; தம்பாஸூயாவிஹீனோ யஸ்தேன லோக
த்ரயம் ஜிதம். ... ... ... (௪)

(ப - பி.) விரக்த:, பரதாரேஷு, நிஸ்ப்ருஹ:, பரவஸ்துஷு; தம்பாஸூயாவிஹீன:, ய:, தேன, லோகத்ரயம், ஜிதம்.

(ப - உ.) ய:=யார், பரதாரேஷு=பிறர்மனைவியரிடத்தில், விரக்த:=விருப்பமற்றவரோ, பரவஸ்துஷு=பிறருடையபொருள்களில், நிஸ்ப்ருஹ:=ஆசையற்றவரோ, தம்பாஸூயாவிஹீன:=செருக்கும் பொறாமையும் அற்றவரோ, தேன=அவரால், லோகத்ரயம்=மூவ்வுலகமும், ஜிதம்=ஜயிக்கப்பட்டன.

(பொ - உ.) யார் பிறர்மனைவியரிடத்தில் விருப்பமில்லாமலிருக்கிறாரோ, பிறரது பொருளில் ஆசையற்றிருக்கிறாரோ, செருக்கும் பொறாமையுமற்றிருக்கிறாரோ அவரால் மூவ்வுலகமும் ஜயிக்கப்பட்டன.

௫௦

நபிபேதி ரணாத்யோவை ஸாம்க்ராமே(அ)
ப்யபராங்முக:; தர்மயுத்தே ம்ருதோ வாபி
தேன லோகத்ரயம் ஜிதம். .... (௫)

(ப - பி.) ந, விஹந்தி, ரணாஸு, ய꞉, வை, ஸம்க்ராமே, ஷு, ஸவாராஜவ꞉, யஸ்ய யுத்யே, ம்ருத꞉, வா, ஹவி, தேந, லோகத்ரயம், ஜிதம்.

(ப - உ.) ய꞉=யார், ரணாஸு=போருக்கு, ந விஹந்தி=பயப்படவில்லையோ, ஸம்க்ராமேஷு=போர்க்களத்திலும், ஸவாராஜவ꞉=சளைத்தோடவில்லையோ, யஸ்ய யுத்யே=நியாயமான போரில், ம்ருத꞉ வா ஹவி=மாண்டவராயினும் ஆகிவிடுகிறாரோ, தேந=அவரால், லோகத்ரயம்=மூவ்வுலகமும், ஜிதம்=ஜயிக்கப்பட்டன.

(பொ - உ.) யார்போருக்கு அஞ்சவில்லையோ, நியாயத்திற்காகச் செய்யவேண்டிய அப்படிப்பட்ட போர்க்களத்திலும் சளைத்தோடவில்லையோ, அப்படிப்பட்ட போரில் மாண்டவராயினும் ஆய்விடுகிறாரோ அவரால்மூவ்வுலகமும் ஜயிக்கப்பட்டன.

௫௧

அத்பிர்காத்ராணி ஶுத்யந்தி மநஸ்ஸத்யேந ஶுத்
யதி ; வித்யாதபோப்யாம் பூதாத்மா புத்
திர்ஜ்ஞாநேந ஶுத்யதி. ... (௬)

(ப - பி.) அத்பி꞉, காத்ராணி, ஶுத்யந்தி, மந꞉, ஸத்யேந, ஶுத்யதி ; வித்யாதபோப்யாம், பூதாத்மா, புத்தி꞉, ஜ்ஞாநேந, ஶுத்யதி.

(ப - உ.) அத்பி꞉=நீரினல், காத்ராணி=உடல்கள், ஶுத்யந்தி=சுத்தியாகின்றன, மந꞉=கருத்து, ஸத்யேந=மெய்யால், ஶுத்யதி=சுத்தியாகின்றது, பூதாத்மா=ஜீவாத்தமா, வித்யாதபோப்யாம்=பிரமஞானத்தினும் தவஙினும் சுத்தியாகின்றது, புத்தி꞉=புத்தி, ஜ்ஞாநேந=ஞானத்தினல், ஶுத்யதி=சுத்தியாகின்றது.

(பொ - உ.) நீரினல் உடல்கள் சுத்தியாகின்றன ; கருத்து ஸத்தியத்தினல் சுத்தியாகின்றது ; ஜீவாத்துமா பிரமஞானத்தினும் தபஸினும் சுத்தியாகின்றது ; புத்தி ஞானத்தினல் சுத்தியாகின்றது.



௫௨

யோऽந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிப
த்யதே ; கிம் தேந ந க்ருதம் பாபம் சோரே
ணாத்மாபஹாரிணா. ... ... (௭)

(ப - பி.) ய꞉, அந்யதா, ஸந்தம், ஆத்மாநம், அந்யதா, ப்ரதிபத்யதே ; கிம், தேந, ந க்ருதம், பாபம், சோரேண, ஆத்மாபஹாரிணா.

(ப - உ.) ய꞉=யார், அந்யதா=வேறுவகையாக, ஸந்தம்=இருக்கிற, ஆத்மாநம்=தன்னை, அந்யதா=வேறுவகையாக, ப்ரதிபத்யதே=விளங்கச்செய்கிருனே, ஆத்மாபஹாரிணா=தன்னைத்திருடி, சோரேண=அந்தத் திருடனல், கிம் பாபம்=என்னபாபம், ந க்ருதம்=செய்யப்படாது.

(பொ - உ.) வேறுவகையாகவிருக்கிற தன்னை வேறுவகையாக யார் விளங்கச்செய்கிருனே தன்னைத்திருடின அந்தத்திருடனல் என்னபாபம் செய்யப்படமாட்டாது.

௫௩

நாஸ்தி ஸத்யஸமோ தர்மோ ந ஸத்யாத்வித்ய
தே பரம் ; நஹி தீவ்ரதரம் கிஞ்சிதந்ருதாதிஹ
வித்யதே. ... ... ... (௮)

(ப - பி.) ந, அஸ்தி, ஸத்யஸம꞉, தர்ம꞉, ந, ஸத்யாத், வித்யதே, பரம் ; நஹி, தீவ்ரதரம், கிஞ்சித், அந்ருதாத், இஹ, வித்யதே.

(ப - உ.) ஸத்யஸம꞉=மெய்க்குச்சமானமான, தர்ம꞉=தருமம், ந அஸ்தி=இல்லை, ஸத்யாத்=மெய்யைவிட, பரம்=சிறந்ததும், ந வித்யதே=இல்லை, அந்ருதாத்=பொய்யைவிட, தீவ்ரதரம்=அதிகமாகவெறுக்கத்தக்கது, இஹ=இம்மையில், கிஞ்சித்=சிறிதும், ந வித்யதே=இல்லை.

(பொ - உ.) மெய்க்குச்சமானமான தருமமில்லை ; மெய்யைவிட சிறந்ததும் இருக்கவில்லை ; இம்மையில்பொய்யைவிட அதிகமாக வெறுக்கத்தக்கது சிறிதும்இல்லை.

௫௪

ப்ரியோ ஭வதி தாநேந ப்ரியவாதேந வா
பர꞉ ; அப்ரியஸ்ய ச பத்யஸ்ய வக்தா ஶ்ரோதா
ச து³ர்லப⁴꞉. ... ... (கூ).

(ப - பி.) ப்ரிய꞉, ஭வதி, தாநேந, ப்ரியவாதேந, வா, பர꞉ ; அப்ரியஸ்ய, ச, பத்யஸ்ய, வக்தா, ஶ்ரோதா, ச, து³ர்லப⁴꞉.

(ப - உ.) தாநேந=கொடையினால், ப்ரிய꞉ ஭வதி=ஒருவன் பிரியமானவனாகிறான், பர꞉=வேறொருவன், ப்ரியவாதேந=பிரியமானவார்த்தை சொல்வதினாலும் (பிரியமானவனாகிறான்), ச=ஆனால், அப்ரியஸ்ய=பிரியமற்ற, பத்யஸ்ய=இதமான வார்த்தையினுடைய, வக்தா=சொல்பவனும், ஶ்ரோதா ச=கேட்பவனும், து³ர்லப⁴꞉=அரிது.

(பொ - உ.) ஒருவன் கொடையினாலும் மற்றொருவன்பிரியமாக வார்த்தைசொல்லுவதினாலும் பிரியமானவனாகிறான் ; ஆனால் பிரியமற்ற இதமான வார்த்தையைச் சொல்பவரும் கேட்பவரும் அரிது.

———o———

## அத்தியாயம் - எ.

௫௫

ஸமக்ஷத³ர்ஶநாத் ஸாக்ஷ்யம் ஶ்ரவணாச்சைவ ஸி
த்⁴யதி ; தத்ர ஸத்யம் ப்³ருவந் ஸாக்ஷீ த⁴ர்மா
ர்த²ாப்⁴யாம் ந ஹீயதே. ... (க)

(ப - பி.) ஸமக்ஷத³ர்ஶநாத், ஸாக்ஷ்யம், ஶ்ரவணாத், ச, ஏவ, ஸித்⁴யதி ; தத்ர, ஸத்யம், ப்³ருவந், ஸாக்ஷீ, த⁴ர்மார்தா²ப்⁴யாம், ந ஹீயதே.

(ப - உ.) ஸமக்ஷத³ர்ஶநாத்=நேராகப் பார்ப்பதிலிருந்தும், ஶ்ரவணாத் ச ஏவ=கேள்வியிலிருந்துமே, ஸாக்ஷ்யம்=சாக்ஷியத்தன்மை, ஸித்⁴யதி=உண்டாகின்றது, தத்ர=அவ்விடத்தில் (ஸாக்ஷியத்தில்), ஸத்யம்=மெய்யை, ப்³ருவந்=சொல்லின், த⁴ர்மார்தா²ப்⁴யாம்=தருமார்த்தங்களிலிருந்து, ந ஹீயதே=புறம்பாவதில்லை.



(பொ - உ.) நேராகப் பார்ப்பதிலிருந்தும், கேள்வியிலிருந்துமே சாக்ஷியத்தன்மை யுண்டாகின்றது ; சாக்ஷியத்தில்சாக்ஷி மெய்யைச் சொல்லின் தருமார்த்தங்களை விட்டுப் புறம்பாவதில்லை.

௫௬

யதா²ஶ்ருதம் யதா²த்³ருஷ்டம் ஸர்வமேவாஞ்ஜ
ஸா வத³ ; ஸத்யேந முச்யதே ஸாக்ஷீ த⁴ர்ம꞉
ஸத்யேந ரக்ஷ்யதே. ... ... (உ)

(ப - பி.) யதா²ஶ்ருதம், யதா²த்³ருஷ்டம், ஸர்வம், ஏவ, அஞ்ஜஸா, வத³ ; ஸத்யேந, முச்யதே, ஸாக்ஷீ, த⁴ர்ம꞉, ஸத்யேந, ரக்ஷ்யதே.

(ப - உ.) யதா²ஶ்ருதம்=கேட்டபடியும், யதா²த்³ருஷ்டம்=பார்த்தபடியும், ஸர்வம்=யாவும், அஞ்ஜஸா ஏவ=உள்ளபடியாகவே, வத³=சொல்லும், ஸத்யேந=மெய்சொல்வதினால், ஸாக்ஷீ=சாக்ஷி, முச்யதே=(பாபத்தைவிட்டு) நீக்கப்படுகிறார், த⁴ர்ம꞉=தருமம், ஸத்யேந=மெய்யினால், ரக்ஷ்யதே=காக்கப்படுகின்றது.

(பொ - உ.) கேள்விப்பட்டபடியும் பார்த்தபடியும் யாவும் உள்ளபடியாகவே சொல்லல் வேண்டும் ; மெய்சொல்வதினால் சாக்ஷி பாபத்தைவிட்டு நீக்கப்படுகிறார், தருமம் ஸத்தியத்தினால் காக்கப்படுகின்றது.

௫௭

யஸ்ய வித்³வாந் ஹி வத³த꞉ க்ஷேத்ரஜ்ஞோ நாபி⁴
ஶங்கதே ; தஸ்மாந்ந தே³வா꞉ ஶ்ரேயாம்ஸம்
லோகேऽந்யம் புருஷம் விது³꞉. ... (ந)

(ப - பி.) யஸ்ய, வித்³வாந், ஹி, வத³த꞉, க்ஷேத்ரஜ்ஞ꞉, ந, அபி⁴ஶங்கதே ; தஸ்மாத், ந, தே³வா꞉, ஶ்ரேயாம்ஸம், லோகே, அந்யம், புருஷம், விது³꞉.

(ப - உ.) யஸ்ய விதுஷ: வத: = எந்த அறிவுள்ள ஆத்துமா, வத: = (தான்) சொல்லும் வாக்கியங்களில், ந ஸங்கதே = பொய்யிருக்குமென்று சந்தேகிக்கவுமில்லையோ, தஸ்மாத் = அவனைவிட, ப்ருதிவ்யாம் = உலகத்தில், ஸ்ரேயாம்ஸம் = சிறந்தவனை, ஸந்த: = சான்றோர், ந விது: = அறியார்.

(பொ - உ.) எந்த அறிவுள்ள ஆத்துமா தான் சொல்லும் வாக்கியங்களில் பொய்யிருக்குமென்று சந்தேகிக்கவுமில்லையோ அவனைவிட உலகத்தில் சிறந்தவனை சான்றோர் அறியார்.

௫அ

ஏகோஹமஸ்மீத்யாத்மானம் யத்த்வம் கல்யாண மன்யஸே ; நித்யம் ஸ்தித: தே ஹ்ருத்யேஷ புண்யபாபேக்ஷிதா முனி: ... (௬)

(ப - பி.) ஏக:, அஹம், அஸ்மி, இதி, ஆத்மானம், யத், த்வம், கல்யாண, மன்யஸே ; நித்யம், ஸ்தித:, தே, ஹ்ருதி, ஏஷ:, புண்யபாபேக்ஷிதா, முனி:.

(ப - உ.) கல்யாண = ஓ! நல்லவனே, த்வம் = நீ, ஆத்மானம் = தன்னை, ஏக: = ஒருவனாக, அஹம் = நான், அஸ்மி = இருக்கிறேன், இதி = என்று, மன்யஸே = நினைக்கிறாய், புண்யபாபேக்ஷிதா = புண்ணியபாபங்களைப்பார்த்துக்கொண்டிருக்கிற, ஏஷ: முனி: = இந்த ஸர்வக்கியர், தே = உன்னுடைய, ஹ்ருதி = உள்ளத்தில், நித்யம் = எப்பொழுதும், ஸ்தித: = இருக்கிறார்.

(பொ - உ.) ஓ! நல்லவனே! நீ உன்னை நான் ஒருவனாக இருக்கிறேன் என்று நினைத்திருக்கிறாய் புண்ணியபாபங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிற இந்த ஸர்வக்கியர் உன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும் இருக்கிறார்.

———0———



## அத்தியாயம் - அ.

௫௯

யச்ச கல்யாண மன்யேத தத்ராத்மானம் நியோஜயேத் ; ந பாபே ப்ரதிபாப: ஸ்யாத் ஸாதுரேவ ஸதா பவேத். ... (௧)

(ப - பி.) யத், கல்யாணம், மன்யேத, தத்ர, ஆத்மானம், நியோஜயேத் ; ந, பாபே, ப்ரதிபாப:, ஸ்யாத், ஸாது:, ஏவ, ஸதா, பவேத்.

(ப - உ.) யத் = எதனிடத்தில், கல்யாணம் = நன்மையுளதென்று, மன்யேத = நினைக்கிறாயோ, தத்ர = அதனிடத்தில், ஆத்மானம் = தன்னை, நியோஜயேத் = நியோகிக்கக்கடவாய், பாபே = பாபியின்பொருட்டு, ப்ரதிபாப: = பிரதியாக பாபம்செய்பவன், ந ஸ்யாத் = ஆகவேண்டாம், ஸதா = எப்பொழுதும், ஸாது: ஏவ = நல்லொழுக்கமுடையவனாகவே, பவேத் = இருக்கக்கடவாய்.

(பொ - உ.) எதை நன்மையானதாக நினைக்கிறாயோ அதனிடத்தில் உன்னை நியோகிக்கக்கடவாய் ; பாபியின்பொருட்டும் பதிலாகப் பாபம்செய்யாதே ; எப்பொழுதும் நல்லொழுக்கமுள்ளவனாகவே இருக்கக்கடவாய்.

௬0

க்ஷமாவான் ஸர்வபூதேஷு ஸாதூனப்யுபவேதயே ; ஸத்யஸாதுஸமாசாரான் பண்டிதான் ப்ரஜ்ஞாபயேத். ... (௨)

(ப - பி.) க்ஷமாவான், ஸர்வபூதேஷு, ஸாதூன், அபி, உபவேதயே ; ஸத்யஸாதுஸமாசாரான், பண்டிதான், ப்ரஜ்ஞாபயேத்.

(ப - உ.) ஸர்வபூதேஷு = சகதுக்கங்களில், க்ஷமாவான் = சலிக்காததன்மையுடையவர், ஸாதூன் அபி = சான்றோரையும், உபவேதயே = காத்துவருகிறார், ஸத்யஸாதுஸமாசாரான் = உண்

மையும் நன்மையுமான காரியங்களைச் செய்வதினால், பு³த்³தி⁴꞉=புத்தி, த⁴ர்மே=தருமத்தில், ராஜதே=பிரகாசிக்கின்றது.

(பொ - உ.) சுகதுக்கங்களில் சலிக்காததன்மையுடையவர் சான்றோரையும் காத்துவருகிறார்; உண்மையும் நன்மையுமானகாரியங்களைச் செய்வதினால் புத்தி தருமத்தில் பிரகாசிக்கின்றது.

ஸ்லோ ௧

தௌ³ர்ஜந்யஸ்ய யோநிர்ஹி மூர்கை²ரேவ
ஸமாக³ம꞉ ; அஹந்யஹநி த⁴ர்மஸ்ய யோநி꞉ஸா
து⁴ஸமாக³ம꞉. ... ... ... (௩)

(ப - பி.) தௌ³ர்ஜந்யஸ்ய, யோநி꞉, ஹி, மூர்கை²꞉, ஏவ, ஸமாக³ம꞉, அஹநி, அஹநி, த⁴ர்மஸ்ய, யோநி꞉, ஸாது⁴ஸமாக³ம꞉.

(ப - உ.) தௌ³ர்ஜந்யஸ்ய=துர்க்குணஸமுதாயத்திற்கு; யோநி꞉=பிறப்பிடம், மூர்கை²꞉=மூடர்களுடன், ஸமாக³ம꞉ ஏவ=சேர்க்கையே ; அஹநி அஹநி=நாள்தோறும், ஸாது⁴ஸமாக³ம꞉=சான்றோருடன்சேர்வதே, த⁴ர்மஸ்ய=தருமத்தினது, யோநி꞉=பிறப்பிடம்.

(பொ - உ.) துர்க்குணத்தொகுப்பிற்குப் பிறப்பிடம் மூடர்களுடன் சேர்க்கையே; நாள்தோறும் சான்றோருடன்சேருவதே தருமத்தினது பிறப்பிடம்.

ஸ்லோ உ

யஸ்து நி꞉ஶ்ரேயஸம் வாக்யம் மோஹாந்ந ப்ரதி
பத்³யதே ; ஸ தீ³ர்க⁴ஸூத்ரோ ஹீநார்த²꞉
பஶ்சாத்தாபேந யுஜ்யதே. ... (௪)

(ப - பி.) ய꞉, து, நி꞉ஶ்ரேயஸம், வாக்யம், மோஹாத், ந, ப்ரதிபத்³யதே ; ஸ꞉, தீ³ர்க⁴ஸூத்ர꞉, ஹீநார்த²꞉, பஶ்சாத், தாபேந, யுஜ்யதே.

(ப - உ.) ய꞉து=யாரானால், நி꞉ஶ்ரேயஸம்=ஹிதமான, வாக்யம்=வாக்கியத்தை, மோஹாத்=மூடத்தன்மையால், ந ப்ரதிப³த்³யதே=கிரகிக்கவில்லையோ, ஸ꞉=அவன், தீ³ர்க⁴ஸூத்ர꞉=சோம்பேறி, ஹீநார்த²꞉=புருஷார்த்தத்திற்குப்புறம்பானவன், பஶ்சாத்=பிறகு, தாபேந=வியசனத்துடன், யுஜ்யதே=சேர்க்கப்படுகிறான்.



(பொ - உ.) யாரானால் ஹிதமானவார்த்தையை மூடத்தன்மையில் கிரகிக்கவில்லையோ அவன் சோம்பேறி; புருஷார்த்தத்திற்குப் புறம்பானவன்; பிறகு வியசனத்துடன் சேர்க்கப்படுகிறான்.

ஸ்லோ ௩

ஸதாம் மதமதிக்ரம்ய யோ(அ)ஸதாம் வர்த்ததே மதே ; ஶோசந்தி வ்யஸநே தஸ்ய ஸுஹ்ருதோ³ ந சிராதி³வ. ... ... (௫)

(ப - பி.) ஸதாம், மதம், அதிக்ரம்ய, ய꞉, அஸதாம், வர்த்ததே, மதே ; ஶோசந்தி, வ்யஸநே, தஸ்ய, ஸுஹ்ருத³꞉, ந, சிராதி³வ.

(ப - உ.) ய꞉=யார், ஸதாம்=சான்றோருடைய, மதம்=கருத்தை, அதிக்ரம்ய=மீறி, அஸதாம்=தீயோரது, மதே=கருத்தின்படி, வர்த்ததே=இருக்கிறாரோ, தஸ்ய வ்யஸநே=அவனுடைய விபத்தில், ஸுஹ்ருத³꞉=அவனுடையநண்பர், ந சிராதி³வ=விரைவில், ஶோசந்தி=துயரப்படுகிறார்.

(பொ - உ.) யார் நல்லோருடையகருத்தைமீறி தீயோருடையகருத்தின்படியிருக்கிறாரோ அவனுடைய நண்பர் அவனது விபத்தில் விரைவில் துயரப்படுகின்றனர்.

ஸ்லோ ௪

அவிஸம்வாத³கோ த³க்ஷ꞉ க்ருதஜ்ஞோ மதிமாந்ருஜு꞉ ; க்ஷீணம் ச லப⁴தே கோஶே ந வா ந வியுஜ்யதே. ... ... ... (௬)

(ப - பி.) அவிஸம்வாத³க꞉, த³க்ஷ꞉, க்ருதஜ்ஞ꞉, மதிமாந், ருஜு꞉ ; க்ஷீணம், ச, லப⁴தே, கோஶே, ந, ச, ஸஹாயேந, யுஜ்யதே.

(ப - உ.) அவிஸம்வாத³க꞉=சச்சரவு செய்யாதவரும், த³க்ஷ꞉

==பொறுமையுடையவரும், க்ருதஜ்ஞ:==நன்றியறிவுடையவரும், மேதாவீ==அறிவுடையவரும், ருஜு:==ஸரளமான தன்மையுடையவரும், லோகே==இவ்வுலகத்தில், கீர்த்திம்==புகழையும், லபதே==அடைகிறார், கஷ்டேந ச==கெட்டகாரியத்துடனும், ந யுஜ்யதே==சேர்க்கப்படுவதில்லை.

(பொ - உ.) சச்சரவுசெய்யாதவரும், பொறுமையுடையவரும், நன்றியறிவுடையவரும், அறிவுடையவரும், ஸரளமான தன்மையுடையவரும் இவ்வுலகத்தில் புகழையும்அடைகிறார். கெட்டகாரியத்துடனும் சேர்க்கப்படுவதில்லை.

கூரு

குத: க்ருதக்நஸ்ய யச: குத: ஸ்தாநம் குத: ஸுகம்;
அச்ரத்தேய: க்ருதக்நோ ஹி க்ருதக்நே நாஸ்தி நிஷ்க்ருதி:. ... ... (எ)

(ப - பி.) குத:, க்ருதக்நஸ்ய, யச:, குத:, ஸ்தாநம், குத:, ஸுகம்; அச்ரத்தேய:, க்ருதக்ந:, ஹி, க்ருதக்நே, நாஸ்தி, நிஷ்க்ருதி:.

(ப - உ.) க்ருதக்நஸ்ய==செய்நன்றிமறந்தவனது, யச:==புகழ், குத:==எங்கே; ஸ்தாநம்==இடம், குத:==எவ்விடத்தில்; ஸுகம்==சுகம், குத:==யாங்கு; க்ருதக்ந:==நன்றிமறந்தவன், அச்ரத்தேய:==சிரத்தைக்குரியவனன்று, க்ருதக்நே==நன்றிமறந்தவனுக்கு, நிஷ்க்ருதி:==மோக்ஷம், ந அஸ்தி==இல்லை.

(பொ - உ.) செய்நன்றிமறந்தவனது புகழ் எங்கே? இடம் எவ்விடத்தில்? சுகம் யாங்கு? நன்றிமறந்தவன் சிரத்தைக்குரியவனன்று, நன்றிமறந்தவனுக்கு மோக்ஷமில்லை.

---

## அத்தியாயம் - கூ.

கூகூ

ஸம்விபக்தா ச தாதா ச போகவாந் ஸுகவாந் நர:;
பவத்யஹிம்ஸகச்சைவ பராம் ஸௌக்யம் ஸமச்நுதே. ... ... ... (க)



(ப - பி.) ஸம்விபக்தா, ச, தாதா, ச, போகவாந், ஸுகவாந், நர:; பவதி, அஹிம்ஸக:, ச, ஏவ, பராம், ஸௌக்யம், ஸமச்நுதே.

(ப - உ.) ஸம்விபக்தா ச==தின்பண்டங்களைப் பலருக்குப்பகர்ந்து தாமும் அவர்களுடன் தின்பவர் யாரோ அவரும், தாதா ச==கொடையாளியாகவிருப்பவரும், போகவாந்==குற்றமற்றஅனுபவத்தைச் செய்கிறவரும், ஸுகவாந் நர:==பழிப்பற்ற சுகத்தையடைகிறவரும், அஹிம்ஸக: ச ஏவ பவதி==பிறருக்குத் தீங்கு செய்யாதவராக இருப்பவரும், பராம்==சிறந்த, ஸௌக்யம்==சவுக்கியத்தை, ஸமச்நுதே==அடைகிறார்.

(பொ - உ.) தின்பண்டங்களைப் பிறருக்குப்பகர்ந்து தாமும் அவர்களுடன் தின்பவர் யாரோ அவரும், கொடையாளியாகவிருப்பவரும், குற்றமற்ற அனுபவத்தைச் செய்கிறவரும், பழிப்பற்றசுகத்தையடைகிறவரும், பிறருக்குத்தீங்குசெய்யாதவராக இருப்பவரும், சிறந்தசவுக்கியத்தை யடைகிறார்.

கூஎ

பாத்ரஸ்ய ஹி விசேஷேண ச்ரத்ததாநதயைவ ச;
அல்பம் வா பஹு வா ப்ரேத்ய தாநஸ்யாவாப்யதே பலம். ... ... (உ)

(ப - பி.) பாத்ரஸ்ய, ஹி, விசேஷேண, ச்ரத்ததாநதயா, ஏவ, ச; அல்பம், வா, பஹு, வா, ப்ரேத்ய, தாநஸ்ய, அவாப்யதே, பலம்.

(ப - உ.) பாத்ரஸ்ய==கொடுக்கும்பாத்திரனது, விசேஷேண==தன்மைக்குத் தக்கபடியும், ச்ரத்ததாநதயா ஏவ ச==கொடுக்கிறவர்களது சிரத்தைக்குத்தக்கபடியும், தாநஸ்ய==ஈகையினது, பலம்==பயனை, அல்பம் வா==சிறிதாகவாவது, பஹு வா==பெரிதாகவாவது, ப்ரேத்ய==லோகாந்தரத்திற்சென்று, அவாப்யதே==அடையப்படுகின்றது.

(பொ - உ.) கொடுக்கும்பாத்திரனதுதன்மைக்குத் தக்கபடியும் கொடுக்கிறவர்களது சிரத்தைக்குத் தக்கபடியும் ஈகையினது பயன் சிறிதாகவாவது பெரிதாகவாவது லோகாந்தரத்திற்சென்று அடையப்படுகின்றது.

கூஅ

தானாந்நதுஷ்கரம் தாத ப்ருதிவ்யாமஸ்தி கிஞ்சன; அர்த்தே ச மஹதீ த்ருஷ்ணா ஸ ச து:கேந லப்யதே. ... ... ... (ங)

(ப - பி.) தானாத், ந, துஷ்கரம், தாத, ப்ருதிவ்யாம், ந, அஸ்தி, கிஞ்சன; அர்த்தே ச, மஹதீ, த்ருஷ்ணா, ஸ:, ச, து:கேந, லப்யதே.

(ப - உ.) தாத=ஓ! தந்தையே, தானாத்=ஈகையைவிட, துஷ்கரம்=செய்வதற்கு வருத்தமானது, ப்ருதிவ்யாம்=பூமியில், கிஞ்சன=சிறிதும், ந அஸ்தி=இல்லை, அர்த்தே ச=பொருளினிடத்தில், மஹதீ=மிகுதியான, த்ருஷ்ணா=ஆவல் (இருக்கிறது), ஸ: ச=அதுவும் [பொருளும்], து:கேந=வருத்தத்தினால், லப்யதே=அடையப்படுகின்றது.

(பொ - உ.) ஓ தந்தையே! ஈகையைவிட செய்வதற்கு வருத்தமானது பூமியில் சிறிதும் இல்லை. பொருளினிடத்தில் மிகுதியான ஆவலிருக்கிறது; பொருளும் வருத்தத்தினால் அடையப்படுகின்றது.

கூகூ

அந்யாயஸமுபாத்தேந தானதர்மோ தநேந ய:; க்ரியதே ந ஸ கர்த்தாரம் த்ராயதே மஹதோ பயாத். ... ... (ச)

(ப - பி.) அந்யாயாத், ஸமுபாத்தேந, தானதர்ம:, தநேந, ய:; க்ரியதே, ந, ஸ:, கர்த்தாரம், த்ராயதே, மஹத:, பயாத்.

(ப - உ.) அந்யாயாத்=அநியாயத்தினால், ஸமுபாத்தேந=சம்பாதித்த, தநேந=பொருளினால், தானதர்ம:=தானதருமம், ய:=யார், க்ரியதே=செய்கிறானோ, ஸ:=அது (அந்தத்தானதருமம்), கர்த்தாரம்=செய்தவனை, மஹத: பயாத்=பெரியபயத்திலிருந்து, ந த்ராயதே=மீட்கமாட்டாது.

(பொ - உ.) அநியாயமாய் சம்பாதித்தபொருளினால் தானதருமம்செய்கிறவனை அந்தத்தானதருமம் பெரியபயத்தைவிட்டு மீட்கமாட்டாது.

எ०

ந்யாயோபார்ஜிதவித்தேந கர்த்தவ்யம் ஜ்ஞாநரக்ஷணம்; அந்யாயேந து யோ ஜீவேத் ஸர்வதர்மபஹிஷ்க்ருத:. ... ... (ரு)

(ப - பி.) ந்யாயோபார்ஜிதவித்தேந, கர்த்தவ்யம், ஜ்ஞாநரக்ஷணம்; அந்யாயேந, து, ய:, ஜீவேத், ஸர்வதர்மபஹிஷ்க்ருத:.

(ப - உ.) ந்யாயோபார்ஜிதவித்தேந=நியாயமாகச்சம்பாதித்தபொருளினால், ஜ்ஞாநரக்ஷணம்=ஞானத்தைக் காப்பதற்குரியகாரியங்களை, கர்த்தவ்யம்=செய்தல்வேண்டும், அந்யாயேந=அநியாயமானகாரியங்களினால், ய:=யார், ஜீவேத்=ஜீவிக்கிறானோ (அவன்), ஸர்வதர்மபஹிஷ்க்ருத:=எல்லாதருமங்களுக்கும்புறம்பானவன்.

(பொ - உ.) நியாயமாகச் சம்பாதித்தபொருளினால் ஞானத்தைக்காப்பதற்குரிய காரியங்களைச் செய்தல்வேண்டும்; அநியாயமானகாரியங்களினால் ஜீவிக்கிறவன் எல்லாதருமங்களுக்கும் புறம்பானவன்.

எக

ஶக்த்யாந்நதாநம் ஸததம் திதிக்ஷா தர்மநித்யதா; யதார்ஹம் ப்ரதிபூஜா ச ஸர்வபூதேஷு வை ஸதா. ... ... (சா)

(ப - பி.) ஶக்த்யா, அந்நதாநம், ஸததம், திதிக்ஷா, தர்மநித்யதா, யதார்ஹம், ப்ரதிபூஜா, ச, ஸர்வபூதேஷு, வை, ஸதா.

(ப - உ.) ஶக்த்யா=வல்லமைக்குத் தக்கபடி, ஸததம்=எப்

பொழுதும், அந்நதாநம்=அந்நதானம், திதிக்ஷா=பொறுமை, யஜ்ஞ நித்யதா=நாள்தோறும் தருமானுட்டானத்தன்மை, யதாஹம்= =தக்கபடி, ஸர்வபூதேஷுவெ=எல்லாபூதங்களிடத்திலுமே, ஸதா=எப்பொழுதும், ப்ரதிபூஜா ச=பிரதிபூதாரணையும், (இருத்தல்வேண்டும்.)

(பொ - உ.) வல்லமைக்குத்தக்கபடி எப்பொழுதும் அந்நதானமும், பொறுமையும், நித்தியமும் தருமானுட்டானத்தன்மையும், எல்லாஉயிர்களிடத்திலும் தக்கபடி எப்பொழுதும் ஆதாரணையும் இருத்தல்வேண்டும்.

எ௨

தெயமார்த்தஸ்ய ஶயநம் ஶ்ரமார்த்தஸ்ய சாஸ
நம்; த்ருஷிதஸ்ய ச பாநீயம் க்ஷுதிதஸ்ய ச
போஜநம். ... ... ... (எ)

(ப - பி.) தெயம், ஆர்தஸ்ய, ஶயநம், ஶ்ரமார்தஸ்ய, ச, ஆஸநம்; த்ருஷிதஸ்ய, ச, பாநீயம், க்ஷுதிதஸ்ய, ச, போஜநம்.

(ப - உ.) ஆர்தஸ்ய=நோயாளிக்கு, ஶயநம்=படுக்கையும், ஶ்ரமார்தஸ்ய=களைத்தவருக்கு, ஆஸநம்=ஆஸனமும், த்ருஷிதஸ்ய ச=தாகமெடுத்தவருக்கு, பாநீயம்=பானயோக்கியமானதையும், க்ஷுதிதஸ்ய ச=பசித்தவருக்கு, போஜநம்=உணவும், தெயம்= கொடுத்தல்வேண்டும்.

(பொ - உ.) நோயாளிக்குப் படுக்கையும், களைத்தவருக்கு ஆஸனமும், தாகமெடுத்தவருக்கு பானயோக்கியமானதும், பசித்தவருக்குஉணவும் கொடுத்தல்வேண்டும்.

எ௩

அந்நதஃஸுபவாப்நோதி ஸுத்ருப்தஸ்ஸர்வ
வஸ்துஷு; பூமிதாநாச்ச பரம் நாஸ்தி வித்யா
தாநந்ததோதிகம். ... ... (அ)

(ப - பி.) அந்நதஃ, ஸுகம், ஆப்நோதி, ஸுத்ருப்தஃ, ஸர்வ வஸ்துஷு, பூமிதாநாத், பரம், ந, அஸ்தி, வித்யாதாநம், ததஃ, அதிகம்.



(ப - உ.) ஸர்வவஸ்துஷு=எல்லாவஸ்துக்களுக்குள்ளும், அந்நதஃ=அந்நத்தைக் கொடுப்பவர், ஸுத்ருப்தஃ=மிகவும் திருப்தியுடையவராகி, ஸுகம்=சுகத்தை, ஆப்நோதி=அடைகிறார், பூமிதாநாத்=பூமிதானத்தைவிட, பரம்=சிறந்தது, ந அஸ்தி=இல்லை, வித்யாதாநம்=வித்தியர்தானம், ததஃ=அதைவிட, அதிகம்=மேலானது.

(பொ - உ.) எல்லாவஸ்துக்களுக்குள்ளும் அந்நத்தைத் தானம்செய்பவர் மிகவும் திருப்தியுடையவராகி சுகத்தைப்பெறுகிறார்; பூமி தானத்தைவிட சிறந்ததில்லை. வித்தியாதானம் அதைவிட மேலானது.

எச

ஔஷதம் பத்யமாஹாரம் ஸ்நேஹாப்யங்கம் ப்ர
திஶ்ரயம்; தாநாநி ச ப்ரதாதவ்யாநி ஸு
விஶேஷதஃ; தீநாந்த க்ருபணார்தேப்யஃ
ஶ்ரேயஸ்காமேந தீமதா. ... (கூ)

(ப - பி.) ஔஷதம், பத்யம், ஆஹாரம், ஸ்நேஹாப்யங்கம்; ப்ரதிஶ்ரயம்; தாநாநி, தாதாநி, தெயாநி, ஹி, அந்யாநி, ச, விஶேஷதஃ; தீநாந்த க்ருபணார்தேப்யஃ, ஶ்ரேயஸ்காமேந, தீமதா.

(ப - உ.) ஶ்ரேயஸ்காமேந=நன்மையைக் கருதுகிற, தீமதா =அறிஞரால், தீநாந்த க்ருபணார்தேப்யஃ=ஏழைகள் குருடர் இரக்கத்துக்குரியவர் முதலியவர்களின்பொருட்டு, ஔஷதம்=மருந்து, பத்யம்=பத்தியம், ஆஹாரம்=உணவு, ஸ்நேஹாப்யங்கம்=தலைக்குஎண்ணெய், ப்ரதிஶ்ரயம்=இருக்கஇடம், தாதாநி தாநாநி=இந்தத்தானங்கள், விஶேஷதஃ=விசேஷமாக, அந்யாநி ச=பிறவும், தெயாநி =கொடுக்கப்படத்தக்கவை.

(பொ - உ.) நன்மையைக்கருதுகிற அறிஞரால் ஏழைகள், குருடர், இரக்கத்துக்குரியவர் முதலியவர்களின்பொருட்டு மருந்து, பத்தியம், உணவு, தலைக்கு எண்ணெய், இருப்பிடம்

இந்தத்தானங்களும் விசேஷமாகப் பிறவும். கொடுக்கப்பட்டத் தக்கவை.

௭௫

ஶக்த: பரஜநே தாதா ஸ்வஜநே து:கஜீவிநி ;
ஆபாதஸ்வாதுர்விஷாஸ்வாதோ ஸ தர்மப்ரதிரூ
பக:. ... ... ... (௧0)

(ப - பி.) ஶக்த:, பரஜநே, தாதா, ஸ்வஜநே, து:கஜீவிநி ; ஆபாதஸ்வாது:, விஷாஸ்வாத:, ஸ:, தர்மப்ரதிரூபக:.

(ப - உ.) ஸ்வஜநே=தன்னவர், து:கஜீவிநி=துயரத்துடன் வாழ்ந்துக்கொண்டிருக்கையிலும், ஶக்த:=(பொருளினது) வல்லமையுடையவன், பரஜநே=பிறர்பொருட்டு, தாதா=கொடுப்பவன்ஆகிறுன், ஸ:=அது [அந்தத்தானம்], தர்மப்ரதிரூபக:=தருமத்திற்குமாறுனதாகிறது, ஆபாதஸ்வாது:=முதலில தேனைப்போன்றதாகவிருக்கிறது, விஷாஸ்வாத:=பிறகு விஷத்திற்குச்சமானமாகிறது.

(பொ - உ.) தன்னவர் துயரத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கையிலும் பொருளுடையவன் பிறர்பொருட்டுத் தானம் கொடுக்கிறுன். அது தருமத்திற்குமாறுனது ; அது முதலில் தேனைப்போன்றும் பிறகு விஷத்தைப்போன்றும் இருக்கும்.

——00——

## அத்தியாயம் - ௧0.

௭௬

ப்ரஜ்ஞயா மாநஸம் து:கம் ஹந்யாச்சாரீரமௌ
ஷதை: ; நஶோசந்தி க்ருதப்ரஜ்ஞா: பஶ்ய
ஜ: பரமாம் கதிம். ... ... (௧)

(ப - பி.) ப்ரஜ்ஞயா, மாநஸம், து:கம், ஹந்யாத், ஶாரீரம், ஔஷதை: ; ந, ஶோசந்தி, க்ருதப்ரஜ்ஞா:, பஶ்யஜ:, பரமாம், கதிம்.

(ப - உ.) ப்ரஜ்ஞயா=ஞானத்தினுல், மாநஸம் து:கம்=மனதைச்சேர்ந்தத்துயரத்தையும், ஔஷதை:=மருந்தினுல், ஶாரீரம்=உடல்ஸம்பந்தமாகியதையும், ஹந்யாத்=அழித்தல்வேண்டும், க்ருதப்ரஜ்ஞா:=ஞானத்தையடைந்தவர்கள், பரமாம் கதிம்=சிறந்தபதவியை, பஶ்யஜ:—அநுபவிப்பவர்களாகி, ந ஶோசந்தி=துயரப்படுகிறதில்லை.



(பொ - உ.) ஞானத்தினுல் மனத்துயரத்தையும் மருந்தினுல் உடலைப்பற்றிய துயரத்தையும் அழித்தல்வேண்டும் ; ஞானத்தையடைந்தவர்கள் சிறந்தபதவியை யனுபவிப்பவர்களாகி அப்புறம் துயரப்படுகிறதில்லை.

௭௭

மாநம் ஹித்வா ப்ரியோ பவதி க்ரோதம் ஹி
த்வா நஶோசதி ; காமம் ஹித்வார்த்தவாந் பவ
தி லோபம் ஹித்வா ஸுகீ பவேத். ... (௨)

(ப - பி.) மாநம், ஹித்வா, ப்ரிய:, பவதி, க்ரோதம், ஹித்வா, ந, ஶோசதி ; காமம், ஹித்வா, அர்த்தவாந், பவதி, லோபம், ஹித்வா, ஸுகீ, பவேத்.

(ப - உ.) மாநம்=ஸ்வாபிமானத்தை, ஹித்வா=விட்டு, ப்ரிய:=(யாவருக்கும்) அன்பர், பவதி=ஆகிருர், க்ரோதம்=குரோதத்தை, ஹித்வா=விட்டு, ந ஶோசதி=துயரப்படுகிறதில்லை, காமம்=பொருளாசையை, ஹித்வா=விட்டு, அர்த்தவாந்=பொருளுள்ளவர் ஆகிருர், லோபம்=லோபத்தன்மையை, ஹித்வா=விட்டு, ஸுகீ=சுகி, பவேத்=ஆதல்வேண்டும்.

(பொ - உ.) ஸ்வாபிமானத்தைவிட்டு யாவருக்கும் அன்பராகிருர், குரோதத்தைவிட்டுத் துயரப்படுகிறதில்லை ; பொருளாசையைவிட்டுப் பொருளுள்ளவராகிருர். லோபத்தன்மையைவிட்டு சுகியாதல்வேண்டும்.

௭அ

க்ரோத: ஸந்தாபஜநக: ஶத்ருர்தேஹே ஸோ
வ்யாதிரநந்தக: ; ஸர்வஸம்பத்ஹித: ஸா
ந்தஸ்ஸாந்திஸ்திஷ்டதிஸ்ம்ருத:. ... (௩)

(ப-பி.) க்ரோத⁴:, ஸுது³ர்ஜய:, ஶத்ரு:, லோப⁴:, வ்யாதி⁴:, அநந்தக:; ஸர்வபூ⁴தஹித:, ஸாது⁴:, அஸாது⁴:, நிர்த³ய:, ஸ்ம்ருத:.

(ப-உ.) க்ரோத⁴:=குரோதம், ஸுது³ர்ஜய:=மிகவருத்தத்துடன் வெல்லத்தக்க, ஶத்ரு:=பகைஞன், லோப⁴:=உலோபத்தன்மை, அநந்தக:=முடிவற்ற, வ்யாதி⁴:=பிணி, ஸர்வபூ⁴தஹித:=எல்லாஉயிர்களுக்கும் இதம்செய்பவர், ஸாது⁴:=சாது, நிர்த³ய:=தயையற்றவன், அஸாது⁴:=சாதுவல்லன்என்று, ஸ்ம்ருத:=சொல்லப்பட்டது.

(பொ-உ.) குரோதம் மிகவருத்தத்துடன் வெல்லத்தக்கபகைஞன், உலோபத்தன்மை முடிவற்றபிணி; எல்லாஉயிர்களுக்கும் இதம்செய்பவர் ஸாது. தயையற்றவன் சாதுவல்லன் என்று சொல்லப்பட்டது.

௭௯

தா³ந்த: ஶமபர: ஶஶ்வத்பரிக்லேஶம் ந விந்த³தி;
ந ச தப்யதி தா³ந்தாத்மா த்³ருஷ்ட்வா பரக³தாம்
ஶ்ரியம். ... ... ... (௪)

(ப-பி.) தா³ந்த:, ஶமபர:, ஶஶ்வத், பரிக்லேஶம், ந, விந்த³தி, ந, ச, தப்யதி, தா³ந்தாத்மா, த்³ருஷ்ட்வா, பரக³தாம், ஶ்ரியம்.

(ப-உ.) தா³ந்த:=பொறிகளையடக்கியவரும், ஶமபர:=கருத்தையடக்கியவரும், ஶஶ்வத்=அடிக்கடி, பரிக்லேஶம்=துயரத்தை, ந விந்த³தி=அடைகிறதில்லை, பரக³தாம்=பிறரிடத்திலிருக்கும், ஶ்ரியம்=செல்வத்தை, த்³ருஷ்ட்வா=கண்டு, தா³ந்தாத்மா=ஸ்வாதீனப்பட்டிருக்கிற ஆத்துமா, ந தப்யதி=துயரப்படாது.

(பொ-உ.) பொறிகளையடக்கியவரும் கருத்தையடக்கியவரும் அடிக்கடி துயரத்தை அடைகிறதில்லை; ஸ்வாதீனப்பட்ட ஆத்துமா பிறரிடத்துள்ள செல்வத்தைக்கண்டு துயரப்படாது.



௮௦

ய: ஸம்ஸ்ருஷ்ட: பரவித்தேஷு ரூபே வீர்யே
குலாந்வயே; ஸுக²ஸௌபா⁴க்³யஸத்காரே
தஸ்ய வ்யாதி⁴ரநந்தக:. ... (௫)

(ப-பி.) ய:, ஸம்ஸ்ருஷ்ட:, பரவித்தேஷு, ரூபே, வீர்யே, குலாந்வயே; ஸுக²ஸௌபா⁴க்³யஸத்காரே, தஸ்ய, வ்யாதி⁴:, அநந்தக:.

(ப-உ.) ய:=யார், பரவித்தேஷு=பிறருடையசெல்வத்திலும், ரூபே=உருவத்திலும், வீர்யே=வீரியத்திலும், குலாந்வயே=குலஸந்தானங்களிலும், ஸுக²ஸௌபா⁴க்³யஸத்காரே=சுகம் செல்வவளர்ச்சி நற்காரியம் இவைகளிடத்தில், ஸம்ஸ்ருஷ்ட:=பொறுமையுடனிருக்கிறானோ, தஸ்ய=அவனுடைய, வ்யாதி⁴:=பிணி, அநந்தக:=முடிவற்றது.

(பொ-உ.) பிறருடையசெல்வத்திலும், உருவத்திலும், வீரியத்திலும், குலஸந்தானங்களிலும், சுகம், செல்வவளர்ச்சி, நற்காரியம் இவைகளிடத்தில் பொறுமையுடனிருக்கிறானோ அவனுடைய பிணிமுடிவற்றது.

௮௧

மித்ரத்ருக்³து³ஷ்டஸ்வபா⁴வஶ்ச நாஸ்திகோ(அ)த²
அந்ருஜு: ஶட²:; கு³ணவந்தம் ச யோ த்³வேஷ்டி
தம் ஸாத⁴வ: பரிஷாயதே. ... (௬)

(ப-பி.) மித்ரத்ருக், து³ஷ்டஸ்வபா⁴வ:, ச, நாஸ்திக:, அத², அந்ருஜு:, ஶட²:; கு³ணவந்தம், ச, ய:, த்³வேஷ்டி, தம், ஸாத⁴வ:, பரிஷாயதே.

(ப-உ.) ய:=யார், மித்ரத்ருக்=மித்திரத்துரோகியோ, து³ஷ்டஸ்வபா⁴வ:ச=துட்டத்தன்மையுடையவனோ, நாஸ்திக:=கடவுளில்லை என்பவனோ, அத²=பிறகு, அந்ருஜு:=ஸரளமானதன்மையற்றவனோ, ஶட²:=மோசக்காரனோ, கு³ணவந்தம்=நற்குணமுடை

யவனாயும், த்வேஷ்டி=பகைக்கிறவனோ, தம்=அவனை, நராதமம்=மனிதரில் தாழ்ந்தவனென்று, ப்ராஹு:=உரைக்கின்றனர்.

(பொ - உ.) யார்மித்திரத்துரோகியோ, துட்டத்தன்மையுடையவனோ, கடவுளில்லையென்பவனோ, ஸரளமானதன்மையற்றவனோ, மோசக்காரனோ, நற்குணமுடையவனாயும் நகைக்கிறவனோ அவனை மனிதரில் தாழ்ந்தவனென்று உரைக்கின்றனர்.

௮௨

அகார்யம் கார்யவத்பஶ்யந் கார்யஞ்சாப்யகார்யவத் ;
இந்த்ரியைரஜிதைர்பாலோ து:கம் ஸுகவதீக்ஷதே. ... ... (௭)

(ப - பி.) அகார்யம், கார்யவத், பஶ்யந், கார்யம், ச, அபி, அகார்யவத்; இந்த்ரியை:, அஜிதை:, பால:, து:கம், ஸுகவத், ஈக்ஷதே.

(ப - உ.) இந்த்ரியை: அஜிதை:=பொறிகளை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளாத, பால:=சிற்றறிவினன், அகார்யம்=காரியமற்றதை, கார்யவத்=காரியமாகவும், கார்யம் ச அபி=காரியமானதையும், அகார்யவத்=காரியமற்றதாகவும், பஶ்யந்=பாவித்து, து:கம்=நல்லதுக்கத்தையும், ஸுகவத்=சுகமாக, ஈக்ஷதே=நினைக்கிறான்.

(பொ - உ.) பொறிகளை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளாத சிற்றறிவினன் காரியமற்றதைக்காரியமாகவும் காரியமாகாததைக்காரியமாகவும் பாவித்து நல்லதுக்கத்தையும் சுகமாக நினைக்கிறான்.

---

## அத்தியாயம் - ௧௧.

௮௧

த்ருதி: க்ஷமா தமோऽஸ்தேயம் ஶௌசமிந்த்ரியநிக்ரஹ: ;
தீர்வித்யா ஸத்யமக்ரோதோ தஶகம் தர்மலக்ஷணம். ... ... (௧)



(ப - பி.) த்ருதி:, க்ஷமா, தம:, அஸ்தேயம், ஶௌசம், இந்த்ரியநிக்ரஹ: ; தீ:, வித்யா, ஸத்யம், அக்ரோத:, தஶகம், தர்மலக்ஷணம்.

(ப - உ.) த்ருதி:=தைரியம், க்ஷமா=இரக்கத்துடன் கூடிய பொறுமை, தம:=கருத்தைஸ்வாதீனப்படுத்தல், அஸ்தேயம்=அநியாயமாகப் பிறர்பொருள்முதலியவற்றைக்கவராமை, ஶௌசம்=உடலையும் உயிரையும் தூய்மையாகவைத்திருத்தல், இந்த்ரியநிக்ரஹ:=பொறிகளையடக்கல், தீ:=ஸாமானியதத்துவஉணர்வு, வித்யா=பரமாத்மஞானம், ஸத்யம்=உண்மை, அக்ரோத:=குரோதமின்மை, தஶகம்=இந்தப்பத்தும், தர்மலக்ஷணம்=தருமத்தினது இலக்கணம்.

(பொ - உ.) தைரியம், கருத்தை ஸ்வாதீனப்படுத்தல், அநியாயமாகப் பிறர்பொருள் முதலியவற்றைக் கவராமை, உடலையும் உயிரையும் தூய்மையாக வைத்திருத்தல், பொறிகளையடக்கல், உண்மை, குரோதமின்மை இந்தப்பத்தும் தருமத்தின் இலக்கணம்.

௮௪

ஹ்ரீமாந்ஹி பாபம் ப்ரத்வேஷ்டி தஸ்ய ஶ்ரீரபி
வர்த்ததே ; ஹ்ரீர்ஹதா பாத்யதே தர்மம்
தர்மோ ஹந்தி ஹத: ஶ்ரியம். ... (௨)

(ப - பி.) ஹ்ரீமாந், ஹி, பாபம், ப்ரத்வேஷ்டி, தஸ்ய, ஶ்ரீ:, அபிவர்த்ததே ; ஹ்ரீ:, ஹதா, பாத்யதே, தர்மம், தர்ம:, ஹந்தி, ஹத:, ஶ்ரியம்.

(ப - உ.) ஹ்ரீமாந்=இலச்சையுடையவர், பாபம்=பாபத்தைத், ப்ரத்வேஷ்டி=பகைக்கிறார், தஸ்ய=அவரது, ஶ்ரீ:=செல்வம், அபிவர்த்ததே=வளருகிறது, ஹ்ரீ:=இலச்சை, ஹதா=போய்விடின், தர்மம்=தருமம், பாத்யதே=பாதிக்கப்படுகிறது, தர்ம:=தருமம், ஹத:=கெடுக்கப்பட்டதாகி, ஶ்ரியம்=செல்வத்தை, ஹந்தி=கெடுக்கின்றது.

(பொ - உ.) இலச்சையுடையவர், பாபத்தைப் பகைக்கிறார், அவரதுசெல்வம்வளருகின்றது, இலச்சைபோய்விடின் த

ருமம் பாதிக்கப்படுகிறது. தருமம் கெடுக்கப்பட்டதாகி செல்வத்தைக் கெடுக்கிறது.

அரு

அநஸூயு: க்ருதப்ரஜ்ஞ: கல்யாணாநி ச ஸேவதே; ஸுகாநி தர்மமர்த்தம் ச ஸ்வர்கம் சாதிகச்சதி நர:. ... ... ... (கூ)

(ப - பி) அநஸூயு:, க்ருதப்ரஜ்ஞ:, ச, கல்யாணாநி, ச, ஸேவதே; ஸுகாநி, தர்மம், அர்த்தம், ச, ஸ்வர்கம், ச, அதிகச்சதி, நர:.

(ப - உ) [யார்] அநஸூயு:=அசூயையற்றவரோ, க்ருதப்ரஜ்ஞ:=நன்றியறிவுடையவரோ, கல்யாணாநி=நல்லகாரியங்களை, ஸேவதே=செய்கிறாரோ, (அந்த) நர:=மனிதர், ஸுகாநி=சுகங்களையும், தர்மம்=தருமத்தையும், அர்த்தம்=பொருளையும், ஸ்வர்கம்=மேலானபதவியையும், அதிகச்சதி=அடைகிறார்.

(பொ - உ.) யார் அசூயையற்றவரோ, நன்றியறிவுடையவரோ, நல்லகாரியங்களைச் செய்கிறவரோ அந்தமனிதர் சுகத்தையும் தருமத்தையும் பொருளையும், மேலானபதவியையும் அடைகிறார்.

அசு

ஸர்வோ தண்டஜிதோ லோகோ துர்லபோ ஹி ஶுசிர்நர:; தண்டஸ்ய ஹி பயாத்ஸர்வம் ஜகத்போகாய கல்பதே. ... (சா)

(ப - பி) ஸர்வ:, தண்டஜித:, லோக:; துர்லப:, ஹி, ஶுசி:, நர:; தண்டஸ்ய, ஹி, பயாத், ஸர்வம், ஜகத், போகாய, கல்பதே.

(ப - உ) ஸர்வ:லோக:=உலகமும், தண்டஜித:=தண்டனையினால் நியமிக்கப்பட்டிருக்கின்றது, ஶுசி: நர:=முற்றும் தூய்மைகுணமுடையவர், துர்லப:=கிடைப்பதரிது, தண்டஸ்ய=தண்டனையின், பயாத்=பயத்தினால், ஸர்வம் ஜகத்=எல்லாஉலகமும், போகாய=அநுபவத்தின்பொருட்டு, கல்பதே=தாங்கப்பட்டிருக்கின்றது.



(பொ - உ.) யாவரும் தண்டனையினால் நியமத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள், தூய்மையான நடையுடையவர் கிடைப்பதரிது; தண்டனையின் பயத்தினாலேயே எல்லா உலகமும் காக்கப்பட்டிருக்கிறது.

அஎ

அதர்மதண்டனம் லோகே யஶோக்நம் கீர்த்திநாஶநம்; அஸ்வர்க்யம் ச பரத்ராபி தஸ்மாத்தத் பரிவர்ஜயேத். ... ... ... (ரு)

(ப - பி.) அதர்மதண்டனம், லோகே, யஶோக்நம், கீர்த்திநாஶநம்; அஸ்வர்க்யம், ச, பரத்ர, அபி, தஸ்மாத், தத், பரிவர்ஜயேத்.

(ப - உ.) அதர்மதண்டனம்=அநியாயமாகத்தண்டிப்பது, லோகே=இம்மையில், யஶோக்நம்=உயிருள்ளபொழுது புகழுக்குக்கெடுதி, கீர்த்திநாஶநம்=இறந்தபின்னும்புகழுக்குக்கெடுதி, பரத்ர=மறுமையிலும், அஸ்வர்க்யம்=பேரின்பத்திற்குத்தடை, தஸ்மாத்=ஆனதால், தத்=அதை, பரிவர்ஜயேத்=விலக்கல்வேண்டும்.

(பொ - உ) அநியாயமாகத்தண்டிப்பது இம்மையில் உயிருள்ளபொழுதும் புகழுக்குக்கெடுதி, இறந்தபின்னும் புகழுக்குக் கெடுதி; மறுமையிலும் பேரின்பத்திற்குத்தடை ஆனதால் அதை விலக்கல்வேண்டும்.

அஅ

க்ஷமா வஶீக்ருதிர்லோகே க்ஷமா ஹி பரமம் தனம்; க்ஷமா குணோ ஹ்யஶக்தாநாம் ஶக்தாநாம் பூஷணம் க்ஷமா. ... ... (கா)

(ப - பி.) க்ஷமா, வஶீக்ருதி:, லோகே, க்ஷமா, ஹி, பரம், தனம்; க்ஷமா, குண:, ஹி, அஶக்தாநாம், ஶக்தாநாம், பூஷணம், க்ஷமா.

(ப - உ.) க்ஷமா=பொறுமை, லோகே=உலகத்தில், வஶீக்ருதி:=வசீகரப்படுத்துவது, க்ஷமா=பொறுமை, பரம்=சிறந்த, தனம்=செல்வம், க்ஷமா=பொறுமை, அஶக்தாநாம்=வல்லமையற்ற

வர்களுக்கு, ஶுணஃ=குணம், ஶக்தாநாம்=வல்லமையுள்ளவர்களுக்கு, பூஷணம்=பணி.

(பொ - உ.) பொறுமை உலகத்தில்வசீகரப்படுத்துவது, பொறுமை சிறந்தசெல்வம்; பொறுமை வல்லமையற்றவர்களுக்குக் குணம், வல்லமையுள்ளவர்க்குப் பணி.

அ௧

யதைவாத்மா ததாऽந்யஸ்ய த்ரஷ்டவ்ய: ஶுபமிச்சதா ; ஸுகது:கானி துல்யானி யதாத்மனி ததா பரே. ... ... (எ)

(ப - பி.) யதா, ஏவ, ஆத்மா, ததா, அந்யஸ்ய, த்ரஷ்டவ்ய:, ஶுபம், இச்சதா; ஸுகது:கானி, துல்யானி, யதா, ஆத்மனி, ததா, பரே.

(ப - உ.) ஶுபம் இச்சதா=நன்மையைக்கருதுகிறவர், ஆத்மா=தான், யதாஏவ=எப்படியோ, ததா=அப்படி, அந்ய:=பிறர் என்று, த்ரஷ்டவ்ய:=பார்க்கத்தக்கது, ஸுகது:கானி=சுகதுக்கங்கள், யதா=எப்படி, ஆத்மனி=தன்னிடத்திலோ, ததா=அப்படி, பரே=பிறரிடத்தில்.

(பொ - உ.) நன்மையைக்கருதுகிறவர் தான்எப்படியோ பிறர் அப்படியென்று பார்க்கத்தக்கது. சுகதுக்கங்கள் எப்படி தன்னிடத்திலோ அப்படி பிறரிடத்தில்.

௧௦

மாத்ருவத்பரதாரேஷு பரத்ரவ்யாணி லோஷ்டவத் ; ஆத்மவத்ஸர்வபூதானி ய: பஶ்யதி ஸ பஶ்யதி. ... ... (அ)

(ப - பி.) மாத்ருவத், பரதாரேஷு, ச, பரத்ரவ்யாணி, லோஷ்டவத்; ஆத்மவத், ஸர்வபூதானி, ய:, பஶ்யதி, ஸ:, பஶ்யதி.

(ப - உ.) ய:=யார், பரதாரேஷு=பிறரது மனைவியரை, மாத்ருவத்=தாயைப்போலவும், பரத்ரவ்யாணி=பிறரதுபொருளை, லோஷ்டவத்=மண்கட்டியைப்போலவும், ஸர்வபூதானி=எல்லாஉயிர்



களையும், ஆத்மவத்=தன்னைப்போலவும், பஶ்யதி=பார்க்கிறரோ, ஸ:=அவர், பஶ்யதி=பார்க்கிறர்.

(பொ - உ.) பிறரது மனைவியரைத் தாயைப்போலவும் பிறரதுபொருளை மண்கட்டியைப்போலவும் எல்லாஉயிர்களையும் தன்னைப்போலவும் யார்பார்க்கிறரோ அவர் உண்மையாகப் பார்க்கிறர்.

---

## அத்தியாயம் - ௧உ.

௧௧

அன்யான்பரிவதன் ஸாதுர்யதா ஹி பரிதப்யதே ; ததா பரிவதந்நன்யாம்ஸ்துஷ்டோ பவதி துர்ஜன:. ... ... (௧)

(ப - உ.) அன்யான்=பிறரை, பரிவதன்=குற்றஞ்சாட்டி, யதா=எவ்விதமாக, ஸாது:=நல்லோர், பரிதப்யதே=வியசனப்படுகிறரோ, ததா=அவ்விதமாக, துர்ஜன:=துட்டன், அன்யான்=பிறரை, பரிவதன்=குற்றஞ்சாட்டி, துஷ்டோபவதி=சந்தோஷிக்கிறன்.

(பொ - உ.) பிறரைக் குற்றஞ்சாட்டி எவ்விதமாக நல்லோர் வியசனப்படுகிறரோ அவ்விதமாகத் துஷ்டன் பிறரைக் குற்றஞ்சாட்டி சந்தோஷிக்கிறன்.

௧உ

விபத்திஷ்வவ்யதோ தக்ஷோ நித்யமுத்தானவான் நர: ; அப்ரமத்தோ விநீதாத்மா நித்யம் பத்ராணி பஶ்யதி. ... ... (உ)

(ப - உ.) [யார்] விபத்திஷு=ஆபத்காலத்தில், அவ்யத:=பயப்படாமலும், தக்ஷ:=காரியம்நடத்தக்கூடியவராகவும், நித்யம்=எப்பொழுதும், உத்தானவான் நர:=முயற்சியுடையவராகவும், அப்ரமத்த:=திரிபுணர்ச்சியற்றவராகவும், விநீதாத்மா=அன்பானதன்மையுடையவராகவும் (இருக்கிறரோ), [அவர்] நித்யம்=எப்பொழுதும், பத்ராணி=நன்மைகளையே, பஶ்யதி=பார்க்கிறர்.

(பொ - உ.) யார் ஆபத்காலத்தில் பயப்படாமலும் காரியம் நடத்தக்கூடியவராகவும் எப்பொழுதும் முயற்சியுடையவராகவும் திரிபுணர்ச்சியற்றவராகவும் அன்பானதன்மையுடையவராகவு மிருக்கிறாரோ அவர் எப்பொழுதும் நன்மைகளையே பார்க்கிறார்.

௬௩.

பஹவோऽவிநயாந்நஷ்டா ராஜாந: ஸபரி
ச்சதா: ; வநஸ்தா அபி ராஜ்யாநி விநயாத் ப்ர
திபேதிரே. ... ... ... (ரு)

(ப - உ.) பஹவ: ராஜாந:=வெகுஅரசர்கள், அவிநயாத்=விநயகுணமின்மையால், ஸபரிச்சதா:=சதுரங்கபலத்துடன், நஷ்டா:=மாண்டனர், வநஸ்தா: அபி=காட்டில்வசிப்பவராகவிருந்தும், (பலர்) விநயாத்=விநயகுணத்தினால், ராஜ்யாநி=அரசுகளை, ப்ரதிபேதிரே=பெற்றனர்.

(பொ - உ.) விநயகுணமின்மையால் சதுரங்கபலத்துடன்கூடி வெகு அரசர்கள் மாண்டனர்; காட்டில்வசிப்பவராகவிருந்தும் பலர் விநயகுணத்தினால் அரசுகளைப்பெற்றனர்.

௬௪

யத்கர்ம குர்வதோऽஸ்ய ஸ்யாத் பரிதோ
ஷோऽந்தராத்மந: ; தத்ப்ரயத்நேந குர்வீத
விபரீதம் து வர்ஜயேத். ... (ச)

(ப - உ.) யத்=எந்த, கர்ம=காரியத்தை, குர்வத:=செய்யின், அஸ்ய=செய்கிறவனுடைய, அந்தராத்மந:=உள்ளத்திற்கு, பரிதோஷ:=குற்றமற்றஆநந்தம், ஸ்யாத்=உண்டாகிறதோ, தத்=அதை, ப்ரயத்நேந=முயற்சியோடு, குர்வீத=செய்தல்வேண்டும், விபரீதம் து=அதற்குமாறானதை, வர்ஜயேத்=விலக்கல்வேண்டும்.

(பொ - உ) எந்தக்காரியத்தைச் செய்யின் செய்கிறவரது உள்ளத்திற்குக் குற்றமற்றஆநந்தம் உண்டாகிறதோ அதைச் செய்தல்வேண்டும், அதற்குமாறானதை விலக்கல்வேண்டும்.



௬௫.

தர்மகார்யம் யதந் ஶக்த்யா நோ சேத் ப்ரா
ப்நோதி மாநவ: ; ப்ராப்தோ பவதி தத்புண்யம்
அத்ர மே நாஸ்தி ஸம்ஶய:. ... (ரு)

(ப - உ.) மாநவ:=மனிதன், தர்மகார்யம்=தருமகாரியத்தை, யதந்=செய்ய முயன்று, ஶக்த்யா=தனக்குவல்லமையுள்ளவனாயில், நோ ப்ராப்நோதி சேத்=அந்தக்காரியம் முடிவைப்பெறுவிடினும், தத்புண்யம்=அதன்புண்ணியத்தை, ப்ராப்த:=பெற்றவன், பவதி=ஆகிறான், அத்ர=இதில், மே=எனக்கு, ஸம்ஶய:=ஐயம், ந அஸ்தி=இல்லை.

(பொ - உ.) மனிதன் தருமகாரியத்தைத் தனக்கு வல்லமையுள்ளவனாயில் செய்ய முயன்று அந்தக்காரியம் முடிவுபெறுவிடினும், அவன் அதன்புண்ணியத்தைப்பெற்றவனாகிறான். இதில் எனக்கு ஐயம் இல்லை.

---o---

## அத்தியாயம் - கங.

௧

இந்த்ரியாணாம் விசரதாம் விஷயேஷ்வபஹா
ரிஷு ; ஸம்யமே யத்நமாதிஷ்டேத் வித்வாந் ய
ந்தேவ வாஜிநாம். ... ... (க)

(ப - உ.) வாஜிநாம்=தேரில்கட்டப்பட்டகுதிரைகளுடைய, யந்தேவ=தேர்ப்பாகனைப்போல, வித்வாந்=ஞானி, விஷயேஷு=விடயங்களில், அபஹாரிஷு=பற்றுவதில், விசரதாம்=சென்றுக்கொண்டிருக்கிற, இந்த்ரியாணாம்=பொறிகளுடைய, ஸம்யமே=அடக்குதலில், யத்நம்=முயற்சி, ஆதிஷ்டேத்=செய்தல்வேண்டும்.

(பொ - உ) தேர்ப்பாகன் தேரில்கட்டப்பட்ட குதிரைகளை அடக்குதல்போல ஞானி விஷயப்பற்றில் செல்லும் பொறிகளையடக்க முயலல்வேண்டும்.

௯௭

இந்த்ரியாணாம்ஹி சரதாம் யந்மனோऽநுவிதீ
யதே ; ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவ
மிவாம்பஸி. ... ... ... (௨)

(ப - உ.) சரதாம்=தருமநெறிக்கடங்காமல்சென்றுகொண்டிருக்கிற, இந்த்ரியாணாம்=பொறிகளுக்கு, மந:=மனதும், யத்அநுவிதீயதே=அநுகூலப்படுமாயின், அம்பஸி=கடலில், நாவம்=கப்பலை (அமிழ்த்தும்) வாயு:இவ=காற்றைப்போல, தத்=அது [மனது], அஸ்ய=அவ (ஜீவ) னுடைய, ப்ரஜ்ஞாம்=அறிவை, ஹரதி=அழிக்கின்றது.

(பொ - உ.) தருமநெறிக் கடங்காமல் சென்றுகொண்டிருக்கிற பொறிகளுக்கு மனதும் அநுகூலப்படுமாயின் கப்பலைக் கடலில் அமிழ்த்தும் காற்றைப்போல மனது மனிதனது அறிவை அழிக்கின்றது.

௯௮

ந ஜாது காம: காமாநாமுபபோகேந ஶாம்ய
தி ; ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபி
வர்த்ததே. ... ... ... (௩)

(ப - உ.) காமாநாம்=விடயங்களினது, காம:=விருப்பம், உபபோகேந=அநுபவத்தினால், ந ஶாம்யதி=தணிவதில்லை, ஹவிஷா=நெய்யினால் (விருத்தியாகும்), க்ருஷ்ணவர்த்மா இவ=தீயைப்போல, பூய ஏவ=மேலுமேலும், அபிவர்த்ததே=பெருகுகின்றது.

(பொ - உ.) விடயங்களினது விருப்பம் அநுபவிப்பதினால் தணிவதில்லை ; நெய்யினால் வளருகிற தீயைப்போல மேலும் மேலும் பெருகுகின்றது.

௯௯

இந்த்ரியாணாந்து ஸர்வேஷாம் யத்யேகம் க்ஷ
ரதீந்த்ரியம் ; தேநாஸ்ய க்ஷரதி ப்ரஜ்ஞா த்ரு
தே: பாத்ராதிவோதகம். ... (௪)



(ப - உ.) ஸர்வேஷாம் இந்த்ரியாணாம் து=எல்லாப் பொறிகளுள்ளும், ஏகம் இந்த்ரியம்=ஒருபொறி, யதி க்ஷரதி=வழுவின், தேந=அதனால், த்ருதே: பாத்ராத்=சில்லியிருக்கிற தோல்பாத்திரத்திலிருந்து, உதகம் இவ=வரும்நீரைப்போல, அஸ்ய=இவனுடைய, ப்ரஜ்ஞா=அறிவு, க்ஷரதி=வழுவுகின்றது.

(பொ - உ.) எல்லாப்பொறிகளுள்ளும் ஒருபொறி வழுவின் அதனால் சில்லியிருக்கிற தோல்பாத்திரத்திலிருந்து நீர் ஒழுகிவிடுவதைப்போல இவனுடைய அறிவு வழுவுகின்றது.

௧௦௦

ந ததைதாநி ஶக்யந்தே ஸந்நியந்துமஸே
வயா ; விஷயேஷு ப்ரஜுஷ்டாநி யதா ஜ்ஞா
நேந நித்யஶ:. ... ... (௫)

(ப - உ.) விஷயேஷு ப்ரஜுஷ்டாநி=விடயவிருப்பமுள்ள, ஏதாநி=இவைகளை (பொறிகளை), ஜ்ஞாநேந=அறிவினால், யதா=எப்படியோ, ததா=அப்படி, அஸேவயா=விஷயானுபவத்தை நீக்குவதினால், நித்யஶ:=எப்பொழுதும், ஸந்நியந்தும்=ஸ்வாதீனத்தில் வைத்திருத்தல், ந ஶக்யந்தே=கூடாது.

(பொ - உ.) விடயவிருப்பமுள்ள பொறிகளை அறிவினால் எப்படியோ அப்படி விடயானுபவத்தை நீக்குவதினால் எப்பொழுதும் ஸ்வாதீனத்தில் வைத்திருத்தல் கூடாது.

௧௦௧

வஶே க்ருத்வேந்த்ரியக்ராமம் ஸம்யம்ய ச மநஸ்
ததா ; ஸர்வாந்ஸம்ஸாதயேதர்தாநக்ஷிண்வந்
யோகதஸ்தநும். ... ... (௬)

(ப - உ.) தநும்=உடல், அக்ஷிண்வந்=கெடாத, யோகத:=உபாயத்தினால், இந்த்ரியக்ராமம்=வெளியிந்திரியக்கூட்டத்தை, வஶே க்ருத்வா=வசப்படுத்தி, ததா=அப்படியே, மந: ச=மனதையும்,

𑌸𑌂𑌯𑌮𑍍𑌯=அடக்கி, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑌾𑌨𑍍=எல்லாபுருஷார்த்தங்களை, 𑌸𑌂𑌸𑌾𑌧𑌯𑍇𑌤𑍍=அடையவேண்டும்.

(பொ - உ.) உடல் கெடாத உபாயத்தினால் வெளியிந்திரியக்கூட்டத்தை வசப்படுத்தி அப்படியே மனதையடக்கி எல்லா புருஷார்த்தங்களையும் அடைதல்வேண்டும்.

---

## அத்தியாயம் - ௧௪.

௧௦௨

𑌯𑌦𑌾 𑌨𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌪𑌾𑌪𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇
𑌷𑍁 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍; 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌮𑌨𑌸𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌤𑌦𑌾. ... ... (௧)

(ப - உ.) 𑌯𑌦𑌾=எப்பொழுது, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁=எல்லாஉயிர்களிடத்திலும், 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍=ஒருக்காலும், 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾=செய்கையினால், 𑌮𑌨𑌸𑌾=கருத்தினால், 𑌵𑌾𑌚𑌾=வார்த்தையினால், 𑌨𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌪𑌾𑌪𑌂=பாபம்செய்யவில்லையோ, 𑌤𑌦𑌾=அப்பொழுது, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮=பிரமத்தை, 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇=அடைகிறார்.

(பொ - உ.) எப்பொழுது எல்லாஉயிர்களிடத்திலும் ஒருக்காலும் செய்கையினாலாவது கருத்தினாலாவது வார்த்தையினாலாவது பாபம் செய்யவில்லையோ அப்பொழுது பிரமத்தையடைகிறார்.

௧௦௩

𑌪𑌾𑌪𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑍇 𑌚𑍈𑌵 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑌿 𑌚 𑌕𑌰𑍋
𑌤𑌿 𑌚; 𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌗𑍁𑌣𑌾 𑌨
𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌾𑌧𑌵𑌃. ... ... (௩)

(ப - உ.) [யார்] 𑌪𑌾𑌪𑌂=பாபத்தை, 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑍇=கருதுகிறானோ, 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑌿=வார்த்தைசொல்லுகிறானோ, 𑌕𑌰𑍋𑌤𑌿=செய்கிறானோ, 𑌅𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯=அதருமத்தில்செல்லுகிற, 𑌤𑌸𑍍𑌯=அவனது, 𑌸𑌾𑌧𑌵𑍋𑌗𑍁𑌣𑌾𑌃=நற்குணங்களும், 𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿=கெடுகின்றன.



(பொ - உ.) பாபத்தைக்கருதுகிறவனும் சொல்லுகிறவனும் செய்கிறவனுமாகிய அதருமத்தில் செல்லுகிறவனது நற்குணங்களும் கெடுகின்றன.

௧௦௪

𑌯𑍇 𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌨𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿
𑌭𑌿𑌃; 𑌤𑍇 𑌤𑌪𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋 𑌨𑌶𑌰𑍀𑌰
𑌸𑍍𑌯𑌶𑍋𑌷𑌣𑌂. ... ... (௪)

(ப - உ.) 𑌯𑍇=யார், 𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑌿𑌃=கருத்து வார்த்தை செய்கை அறிவு இவைகளால், 𑌪𑌾𑌪𑌾𑌨𑌿=பாபங்களை, 𑌨𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿=செய்யவில்லையோ, 𑌤𑍇𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃=அந்த மஹாத்துமாக்கள், 𑌤𑌪𑌨𑍍𑌤𑌿=தவம்செய்கின்றனர், 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯𑌶𑍋𑌷𑌣𑌂=உடலைக்குன்றவைத்தல், 𑌨=(தவம்) அன்று.

(பொ - உ) யார் கருத்து வார்த்தை செய்கை அறிவு இவைகளால் பாபம்செய்யவில்லையோ அந்தமஹாத்துமாக்களே தவம்செய்கின்றனர்; உடலைக்குன்றவைத்தல் தவமன்று.

௧௦௫

𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌤𑍁𑌷𑍍𑌯𑍇𑌤 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌂 𑌚𑍈𑌵𑍋
𑌪𑌜𑍀𑌵𑌤𑌿; 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌹𑍍𑌯𑍇𑌵𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌚𑌾
𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿. ... ... (௫)

(ப - உ.) 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃=அறிஞர், 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣=தருமத்தினால், 𑌤𑍁𑌷𑍍𑌯𑍇𑌤=சந்தோஷிக்கிறார், 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌂=தருமமான (தொழிலேயே), 𑌉𑌪𑌜𑍀𑌵𑌤𑌿=ஜீவனம் செய்கிறார், 𑌏𑌵𑌂𑌹𑌿=இவ்விதத்தினால், 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾=தருமாத்துமா, 𑌭𑌵𑌤𑌿=ஆகிறார், 𑌅𑌸𑍍𑌯=அவர (தருமவான)து, 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂=கருத்தும், 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿=திருப்தியை அடைகின்றது.

(பொ - உ.) அறிஞர் தருமத்தினால்ஸந்தோஷிக்கிறார், தருமமானதொழிலினாலேயே ஜீவனம்செய்கிறார்; இவ்விதத்தினால் தருமாத்துமாவாகிறார். தருமவானது கருத்தும் திருப்தியை யடைகின்றது.

க௦சு

யஸ்யார்த்தா விரத꞉ பாபாத் கல்யாணே ச நி
வேசித꞉; தேந ஸர்வமிதம் புத்தம் ப்ரக்ருதி
விக்ருதிஶ்ச யா. ... ... (சு)

(ப - உ.) யஸ்யார்த்தா=யாருடையகருத்து, பாபாத்=பாபத்தினிடத்தில், விரத꞉=வெறுப்புடையதாக விருக்கிறதோ, கல்யாணே=நல்லகாரியத்தில், நிவேசித꞉=செல்லுகிறதோ, தேந=அவரால், ஸர்வமிதம்=இவையாவும், யா=எது, ப்ரக்ருதிஶ்ச=இயற்கையானதோ, விக்ருதிஶ்ச=இயற்கைக்குமாறானதோ, புத்தம்=அறியப்படுகின்றது.

(பொ - உ.) யாருடையகருத்து பாபத்தினிடத்தில் வெறுப்புடனும் நற்காரியத்தினிடத்தில்விருப்புடனுமிருக்கிறதோ இவையாவற்றிலும் இயற்கையானதிதுவென்றும் இயற்கைக்கு மாறானது இதுவென்றும் அவரால் அறியப்படுகின்றது.

க௦எ

ப்ரஜ்ஞாசக்ஷுர்நர இஹ தோஷைர்நைவாநு
பத்யதே; விரஜ்யதே யதாகாமம் ந ச தர்மம்
விஸ்ருஜதி. ... ... ... (எ)

(ப - உ.) ப்ரஜ்ஞாசக்ஷு꞉=அறிவாகியகண்ணையுடைய, நர꞉=மனிதர், இஹ=இம்மையில், தோஷைர்நைவாநுபத்யதே=தோஷத்தினால் கட்டப்பட்டவர் ஆகார், யதாகாமம்=தமதுகருத்தின்படி, விரஜ்யதே=உலகவிஷயத்திலுள்ள வீண்பற்றுதலை ஒழிக்கிறார், தர்மம் ச=தருமத்தையும், ந த்யஜதி=விடுவதில்லை.

(பொ - உ.) அறிவாகியகண்ணையுடையமனிதர் இம்மையில் தோஷத்தினால் கட்டுப்பட்டவராகார், உலகவிஷயத்திலுள்ள வீண்பற்றுதலை ஒழிக்கிறார்; தருமத்தைவிடுவதில்லை.



க௦அ

தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ர
க்ஷித꞉; தஸ்மாத்தர்மோ ந ஹந்தவ்யோ மா நோ
தர்மோ ஹதோऽவதீத். ... ... (அ)

(ப - உ.) தர்ம꞉=தருமம், ஹத꞉=கெடுக்கப்பட்டு, ஹந்தி=கெடுக்கின்றது, தர்ம꞉=தருமம், ரக்ஷித꞉=காக்கப்பட்டு, ரக்ஷதி=காக்கின்றது, தஸ்மாத்=ஆகையால், தர்ம꞉=தருமம், ந ஹந்தவ்ய꞉=கெடுக்கப்படத்தக்கதன்று, தர்ம꞉=தருமம், ஹத꞉=கெடுக்கப்பட்டு, ந꞉=நம்மை, மாவதீத்=கெடுக்காமலிருப்பதாக.

(பொ - உ.) தருமத்தை யார்கெடுக்கிறார்களோ அது அவர்களைக்கெடுக்கின்றது, ஆனதால் தருமம்கெடுக்கப்படத்தக்கதன்று; தருமம்கெடுக்கப்பட்டுநம்மைக்கெடுக்காமலிருப்பதாக.

க௦கூ

ஏக ஏவ ஸுஹ்ருத்தர்மோ நிதநேऽப்யநு
யாதி ய꞉; ஶரீரேண ஸமம் நாஶம் ஸர்வமந்யத்து
கச்சதி. ... ... ... (கூ)

(ப - உ.) தர்ம ஏவ=தருமமே, ஏக꞉=ஒன்றான, ஸுஹ்ருத்=நண்பன், நிதநேऽபி=இறந்தும், அநுயாதி=பின்செல்லுகின்றது, ஶரீரேண ஸமம்=உடலுடன், நாஶம்=கேட்டில், ஸர்வமந்யத்=மற்றயாவும், கச்சதி=செல்லுகின்றது.

(பொ - உ.) தருமமே ஒன்றாகியநண்பன், இறந்தபின்னும் பின்செல்லுகின்றது; மற்றயாவும் உடலுடன் கெடுகின்றது.

கக௦

ந யே தர்மோऽஸ்தீதி ஜாநாநா꞉ ஶாஶ்வதாநவஹஸந்தி
யே; தேஷாம் ஶ்ரத்தயா நாஶோ ந ஸம்ஶ்லிஷ்யதே ந
ஸம்ஶய꞉. ... ... ... (க௦)

(ப - உ.) யே=யார், தர்ம꞉=தருமம், நாஸ்தீதி=இல்லையென்று, ஜாநாநா꞉=நினைத்து, ஶாஶ்வதாந்=சுத்தாத்மாக்களை, அவஹஸந்தி

=அவமதிக்கின்றனரோ, யம்ஸ்ய=தருமத்தினது, கம்யுயாநா:=விருப்பமில்லாதயர்களாகிய, தெ=அவர்கள், நமூதி=கெட்டுப்போகின்றனர், நஸம்மய:=ஐயமில்லை,

(பொ - உ) யார் தருமமென்பதில்லையென்று நினைத்து சுத்தாத்துமாக்களை அவமதிக்கின்றனரோ தருமத்தில் விருப்பமில்லாதவர்களாகிய அவர்கள் கெட்டுப்போகிறார்களென்பதற்கையமில்லை.

கககூ

வாவம்கூவ-நு வாவகீ திரு வாவஹெவா
மூ-தெஹம்; வு-ண்யம்கூவ-நுவு-ண்யகீ
திருவு-ண்யமெத்யூ ஹுவெமூ-தெ. ... (கக)

(ப - உ.) வாவம்கூவ-நு=பாபம்செய்யின், வாவகீதிர=பாபமான கீர்த்தியுடையவனாகிறான், வாவஹெவாமூதெஹம்=பாபமாகியபயனையே அனுபவிக்கிறான், வு-ண்யம்கூவ-நு=புண்ணியம்செய்யின், வு-ண்யகீதிர=புண்ணியமாகிய கீர்த்தியுடையவராகிறார், அத்யூஹம்வு-ண்யம்=மிகுதியும் புண்ணியத்தையே, மூ-தெ=அனுபவிக்கிறார்.

(பொ - உ.) பாபம்செய்யின் பாபமானகீர்த்தியுடையவனாகிறான், பாபமாகியபயனையே அனுபவிக்கிறான்; புண்ணியம் செய்யின் புண்ணியமாகிய கீர்த்தியுடையவனாகிறான், மிகுதியும் புண்ணியத்தையே அனுபவிக்கிறான்.

ககஉ

தஸ்மாகவாவம் நகூ-வீத வு-ரூஷ: ஸம்
மிதவ்ரத:; வாவம்வ்ரஜ்ஞாம் நாமயதிக்ரிய
மாணம்வு-நவு-ந:. ... (கஉ)

(ப - உ.) தஸ்மாத்=ஆகையால், வு-ரூஷ:=மனிதன், ஸம்மிதவ்ரத:=பிரதிக்கினைசெய்துகொண்டவனாகி, வாவம்=பாபத்தை, நகூ-வீத=செய்யலாகாது, வாவம்=பாபம், வு-நவு-ந:=அடிக்கடி, க்ரியமாணம்=செய்யப்படின், வ்ரஜ்ஞாம்=அறிவை, நாமயதி=கெடுக்கின்றது.



(பொ - உ.) ஆகையால் மனிதன்பிரதிக்கினைசெய்துகொண்டவனாகி பாபத்தைச்செய்யலாகாது. பாபம் அடிக்கடிசெய்யப்பட்டதாகி அறிவைக்கெடுக்கின்றது.

---

## அத்தியாயம் - கரு.

ககங

நிஷெவதெ வ்ரமஸ்தாநி நிநிதாநி நஸெவதெ;
அநாஸ்திகம்மூத்யுயாந ஏதத்வம்டிதலக்ஷணம். ... ... ... (க)

(ப - உ.) வ்ரமஸ்தாநி=நற்காரியங்களை, நிஷெவதெ=செய்கிறார், நிநிதாநி=நியாயமாய் நிந்திக்கப்படத்தக்கவற்றை, நஸெவதெ=செய்வதில்லை, அநாஸ்திக:=நாஸ்திகரல்லர், மூத்யுயாந:=நற்காரியத்தில் விருப்பமுடையவர், ஏதத்=இது, வம்டிதலக்ஷணம்=அறிஞனுக்குரியஇலக்கணம்.

(பொ - உ.) நற்காரியங்களைச்செய்கிறார் நியாயமாகநிந்திக்கப்படத்தக்கவற்றைச்செய்வதில்லை; நாஸ்திகரல்லர், நற்காரியத்தில்விருப்பமுடையவர்; இது அறிஞருக்குரியஇலக்கணம்.

ககச

ஏகொயமெ: வரம்மெயஃ க்ஷமைகாமா
திரூ-த்தமா; விஹெய்காவரமாத்ருவ்திரஹிம்
ஸெகாஸுவாஹா. ... (உ)

(ப - உ.) யம்மைக:=தருமம்ஒன்றே, வரம்=சிறந்த, மெயு:=நன்மையைத்தருவது, க்ஷமைகா=பொறுமைஒன்றே, உத்தமா=சிறந்த, மாதி:=சாந்தி, விஷ்யாவைகா=ஞானம்ஒன்றே, வரமா=சிறந்த, த்ருவ்தி:=திருப்தியைத்தருவது, அஹிம்ஸைகா=துன்பம்செய்யாமைஒன்றே, ஸுவாஹா=சுகத்திற்குக்காரணம்.

(பொ - உ.) தருமம் ஒன்றே சிறந்த நன்மையைத்தருவது, பொறுமை ஒன்றே சிறந்தசாந்தி, ஞானம் ஒன்றே சிறந்த திருப்தியைத்தருவது; துன்பம்செய்யாமைஒன்றே சுகத்திற்குக்காரணமானது.

௧௧௫

பரத்ரவ்யேஷ்வபித்யாநம் மநஸாநிஷ்டசிந்த
நம்; விததாபிநிவேசஸ்ச த்ரிவிதம் கர்ம மா
நஸம். ... ... ... (௫)

(ப - உ.) பரத்ரவ்யேஷு=பிறருடையபொருளில், அபித்யா
நம்=அடையவேண்டுமென்னும்விருப்பம், மநஸா=கருத்தில், அநி
ஷ்டசிந்தநம்=பிறரதுகேட்டைக்கருதல், விததாபிநிவேசஸ்ச=பர
மபதமும் கடவுளும் இல்லையென்னும்கருத்து, மாநஸம்=கருத்தின்
ஸம்பந்தமான, த்ரிவிதம்=மூன்றுவிதமாகிய, கர்ம=தீயகருமம்.

(பொ - உ.) பிறரதுபொருளை அடையவேண்டுமென்னு
ம் விருப்பம், பிறரதுகேட்டைக்கருதல், பரமபதமும் கடவுளு
ம் இல்லையென்னும் கருத்து இம்மூன்றும் மானஸமாகிய தீய
கருமம்.

௧௧௬

பாருஷ்யமந்ருதஞ்சைவ பைசுந்யஞ்சா
பி ஸர்வச: ; அஸம்பத்தப்ரலாபஸ்ச வாங்மயம்
ஸ்யாச்சதுர்விதம். ... ... (௬)

(ப - உ.) பாருஷ்யம்=கடுஞ்சொல்லும், அந்ருதம் சைவ=
பொய்யும், பைசுந்யம் அபி=புறங்கூறுதலும், அஸம்பத்த
ப்ரலாபஸ்ச=பயனற்றவார்த்தையும், ஸர்வச:=இவையாயும், வாங்
மயம்=வாக்கின்ஸம்பந்தமாகிய, சதுர்விதம்=நான்குகருமங்களாக
விருக்கின்றன.

(பொ - உ.) கடுஞ்சொல், பொய், புறங்கூறுதல், பயனி
ல்சொல், இந்நான்கும் வாக்கின்ஸம்பந்தமாகிய தீயகருமம்.

௧௧௭

அதத்தாநாமுபாதாநம் ஹிம்ஸா சைவா வி
தாநத: ; பரதாரோபஸேவா ச சாரீரம்
த்ரிவிதம் ஸ்ம்ருதம். ... ... (௭)



(ப - உ.) அதத்தாநாம் உபாதாநம்=கொடாதபொருளைக்கவ
ர்தல், அவிதாநத:=அநியாயமான, ஹிம்ஸா சைவ=கொல்லுதல்,
பரதாரோபஸேவா ச=பிறர்மனையாளோடுசேருதல், த்ரிவிதம்=
மூவ்வகையாகிய, சாரீரம்=காயசம்பந்தமாகிய தீயகருமமென
று, ஸ்ம்ருதம்=நினைக்கப்படுகின்றன.

(பொ - உ.) கொடாதபொருளைக் கவர்தல், அநியாயமா
கக்கொல்லுதல், பிறர்மனைவியோடுசேருதல், இம்மூன்றும் உ
டல்சம்பந்தமாகிய தீயகருமம்.

௧௧௮

த்ரிதண்டமேதந்நிக்ஷிப்ய ஸர்வபூதேஷு
மாநவ: ; காமக்ரோதௌ து ஸம்யம்ய தத:
ஸித்திம் நியச்சதி. ... ... (௮)

(ப - உ.) மாநவ:=மனிதர், ஸர்வபூதேஷு=எல்லாபூத
ங்களின்விஷயமாகவும், ஏதத்த்ரிதண்டம் நிக்ஷிப்ய=காயம் வாக்கு
மனது இம்மூன்றுஸம்பந்தமான தீயகருமங்களை நீக்கிவைத்து,
காமக்ரோதௌ=காமத்தையும் குரோதத்தையும், ஸம்யம்ய=அ
டக்கி, தத:=பிறகு, ஸித்திம்=மோக்ஷத்திற்குரியவழியை, நியச்ச
தி=அடைகிறார்.

(பொ - உ.) மனிதர் எல்லாபூதங்களின் விஷயமாகவும்
காயம் வாக்கு மனசு இம்மூன்றின் ஸம்பந்தமாகிய தீயகரும
ங்களை நீக்கிவைத்து, காமத்தையும் குரோதத்தையும் அடக்கி
பிறகு மோக்ஷத்திற்குரியமார்க்கத்தை அடைகிறார்.

௧௧௯

க்ருத்வா பாபம் ஹி ஸந்தப்ய தஸ்மாத்பாபா
த்ப்ரமுச்யதே; நைவம் குர்யாம் புந
ரிதி நிவ்ருத்த்யா பூயதே து ஸ:. ... (௯)

(ப - உ.) பாபம்=பாபத்தை, க்ருத்வா=செய்து, ஸந்தப்ய
=அனுதாபப்பட்டு, தஸ்மாத்=அதனால், பாபாத்=பாபத்தைவிட்
டு, ப்ரமுச்யதே=நீக்கப்படுகிறான், ஏவம்=இவ்விதமாக, பூந:

=மறுபடியும், ந கரிஷ்யே=செய்யேன், இதி=என்று, நிவ்ருத்யா= நிவர்த்திப்பதினால், ஸ:=அவன், பூயதே=பரிசுத்தப்படுகிறான்.

(பொ - உ) பாபம்செய்து அநுதாபப்படுவதினால் பாபத்தைவிட்டு நீக்கப்படுகிறான்; இவ்விதமாக மறுபடியும் செய்யேனென்று நிவர்த்திப்பதால் அவன் பரிசுத்தப்படுகிறான்.

——oo——

## அத்தியாயம் - கசு.

கஉ0

தர்மம் ஶநை: ஸஞ்சிநுயாத் வல்மீகமிவ புத்
திகா: ; பரலோகஸஹாயார்த்தம் ஸர்வ
பூதாந்யபீடயந். ... ... (ங)

(ப. - உ.) புத்திகா=செல், [சேர்க்கும்], வல்மீகமிவ=புத்தைப்போல, பரலோகஸஹாயார்த்தம்=மறுமைத்துணையின்பொருட்டு, ஸர்வபூதாநி=எல்லாஉயிர்களையும், அபீடயந்=துன்பப்படுத்தாமல், தர்மம்=தருமத்தை, ஶநை:=சிறிது சிறிதாக, ஸஞ்சிநுயாத்=சேர்த்தல்வேண்டும்.

(பொ - உ.) செல் புத்தைச்சேர்ப்பதுபோல மறுமைத்துணையின்பொருட்டு எந்த உயிரையும் துன்பப்படுத்தாமல் தருமத்தைச் சிறிதுசிறிதாகச் சேர்த்தல்வேண்டும்.

கஉக

நாமுத்ர ஹி ஸஹாயார்த்தம் பிதா மாதா ச தி
ஷ்டத: ; ந புத்ரதாரம் ந ஜ்ஞாதிர் தர்மஸ்தி
ஷ்டதி கேவல:. ... ... ... (ச)

(ப - உ.) அமுத்ர ஹி ஸஹாயார்த்தம்=மறுமைத் துணையின்பொருட்டு, பிதா மாதா ச=தந்தையும்தாயும், ந திஷ்டத:=இருக்கவில்லை, ந புத்ரதாரம்=புதல்வரும் மனைவியும் இல்லை, ந ஜ்ஞாதி:=உறவினரும்இல்லை, கேவல: தர்ம:=தருமம்ஒன்றே, திஷ்டதி=இருக்கின்றது.

(பொ - உ.) மறுமைத்துணையாக தந்தை தாய் புதல்வர் மனைவி உறவினர் ஒருவரும் இருப்பதில்லை; தருமம் ஒன்றே இருக்கும்.



கஉஉ

ஏக: ப்ரஜாயதே ஜந்துரேக ஏவ ப்ரலீய
தே ; ஏகோऽநுபுங்க்தே ஸுக்ருதமேக
ஏவ ச துஷ்க்ருதம். ... ... (ரு)

(ப - உ.) ஜந்து=பிராணி, ஏக:=ஒன்றாக, ப்ரஜாயதே=பிறக்கின்றது, ஏக:ஏவ=ஒன்றாகவே, ப்ரலீயதே=இறக்கின்றது, ஏக:=ஒன்றே, ஸுக்ருதம்=நற்செய்கையின்பயனை, அநுபுங்க்தே=அநுபவிக்கின்றது, ஏக:ஏவ ச=ஒன்றாகவே, துஷ்க்ருதம்=தீயசெய்கையின்பயனையும்.

(பொ - உ.) பிராணி ஒன்றாகவே பிறக்கின்றது, ஒன்றாகவே இறக்கின்றது, ஒன்றாகவே நற்செய்கையின்பயனையும் அநுபவிக்கின்றது; ஒன்றாகவே தீயசெய்கையின்பயனையும் அநுபவிக்கின்றது.

கஉங

ம்ருதம் ஶரீரமுத்ஸ்ருஜ்ய காஷ்டலோஷ்டஸமம் க்ஷி
தௌ ; விமுகா பாந்தவா யாந்தி தர்மஸ்தம
நுகச்சதி. ... ... ... (சு)

(ப - உ.) ம்ருதம் ஶரீரம்=உயிர்நீங்கியஉடலை, காஷ்டலோஷ்டஸமம்=மரத்துண்டையும் மண்கட்டியையும்போல, க்ஷிதௌ=பூமியின்மேல், உத்ஸ்ருஜ்ய=விட்டு, விமுகா:=முகம்திரும்பி, பாந்தவா:=உறவினர், யாந்தி=செல்கின்றனர், தர்ம:=தருமம், தம்=அந்த ஆத்துமாவை, அநுகச்சதி=பின்செல்லுகின்றது.

(பொ - உ.) உயிர்நீங்கியஉடலை மரத்துண்டையும் மண்கட்டியையும்போலபூமியில்விட்டு முகம்திரும்பி உறவினர் செல்கின்றனர்; தருமம்அந்தஆத்துமாவைப்பின்தொடருகின்றது.

கஉச

தஸ்மாத் தர்மம் ஸஹாயார்த்தம் நித்யம் ஸஞ்சிநுயா
ச்சநை: ; தர்மேண ஹி ஸஹாயேந தம
ஸ்தரதி துஸ்தரம். ... ... (எ)

—மறுப (ப-உ.) தஸ்மாத்=ஆகையால், ஸஹாயார்த்தம்=துணையின் பொருட்டு, தர்மம்=தருமத்தை, நித்யம்=தினமும், ஶனை:=சிறிது சிறிதாக, ஸஞ்சினுயாத்=சேர்த்தல் வேண்டும், தர்மேண ஹி ஸஹாயேன=தருமத்தின் உதவியால், துஸ்தரம்=நீக்கக்கூடாத, தம:=ஸம்ஸாரத்தின அஞ்ஞான இருளைவிட்டு, தரதி=நீங்குகிறார்.

(பொ-உ.) ஆகையால் துணையின்பொருட்டு தருமத்தைத்தினமும் சிறிதுசிறிதாகச்சேர்த்தல்வேண்டும்; தருமத்தி னுதவியால் நீக்கக்கூடாத அஞ்ஞானவிருளைவிட்டு நீங்குகிறார்.

௨௨௫

ஏஷ ஆதே³ஶ ஏஷ உபதே³ஶ ஏதத³நுஶா
ஸநம்; ஏவமுபாஸிதவ்யமேவமுபாஸி
தவ்யம். ... ... ... (௮)

(ப-உ.) ஏஷ:=இது, ஆதே³ஶ:=கட்டளை, ஏஷ: உபதே³ஶ:=இது உபதேசம், ஏதத³நுஶாஸநம்=இது பிரமாணவசனம், ஏவம் உபாஸிதவ்யம் ஏவம் உபாஸிதவ்யம்=இவ்விதமாக வழிபடுதல்வேண்டும் இவ்விதமாக வழிபடுதல்வேண்டும்.

(பொ-உ) இது கட்டளை, இது உபதேசம், இது பிரமாணவசனம், இவ்விதமாக வழிபடுதல்வேண்டும்; இவ்விதமாக வழிபடுதல்வேண்டும்.

---

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ஹரி: ஓம்.

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

---

## பிராமதருமம் முடிவுபெற்றது

---

R 65
1120
22549